26467
26467

ஸ்ரீ

ஆழ்வார் எம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.



பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்யர் இயற்றிய

தத்வப்ரதிஷ்டா விஜயத்வஜம்.

ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ உ. வே. ஆஸூரி சின்னராமாநுஜா
சாரியர் ஸ்வாமி இயற்றியருளின பூர்வ நிர்வாஹ
பரித்ராணக்ரந்தத்தில் எழுதப்பட்டுள்ள விஷ
யங்கள் யாவும் மருளே வடிவெடுத்தவை
என்பதைப் பரக்க நிரூபிப்பது.

காமகோடி பிரஸ், காஞ்சீபுரம்.


ஈச்வர௵ சீராரும் சித்திரையில் சித்திரை நாள்.

25—4—1937.

விலை 0—8—0

ஸ்ரீ

ஆழ்வார் எம்பெருமானுர்ஜீயர் திருவடிகளேசரணம்.



பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசார்யர் இயற்றிய

தத்வப்ரதிஷ்டா விஜயத்வஜம்.

ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ உ வே. ஆஸூரி சின்னராமாநுஜா
சாரியர் ஸ்வாமி இயற்றியருளின பூர்வ நிர்வாஹ
பரித்ராணக்ரந்தத்தில் எழுதப்பட்டுள்ள விஷ
யங்கள் யாவும் மருளே வடிவெடுத்தவை
என்பதைப் பரக்க நிரூபிப்பது.

காமகோடி பிரஸ், காஞ்சீபுரம்.

ஈச்வரஹு சீராரும் சித்திரையில் சித்திரை நாள்.

25—4—1937.

விலை 0—8—0

ஸ்ரீ:

அடியேன் செய்யும் விண்ணப்பம்.

*அத்யமேச்லோகார்த்த விசாரபரமான ப்ரஸங்கம் மிகவும் பெருகிவிட்டது. இங்ஙனே ஒரு பகவத் ஸங்கல்பம் போலும் என்றே மஹான்கள் திருவுள்ளம் பற்றவேண்டியதாகும். ப்ராமாணிகர்களும் தத்வஜிஜ்ஞாஸுக்களுமான மஹான்களின் உகப்புக்காக மாத்திரம் நாம் வெளியிட்டுவரும் பலபல ஆராய்ச்சி விஷயங்களில் பிறர் தங்களுடைய ஆத்மகுண விசேஷமடியாகவே குற்றம் குறைகள் கூறத் தலைப்பட்டால் அவற்றை நாம் பொருள்படுத்தாமலே யிருந்திருக்கை அழகியது. ஆயினும் விசித்ர பகவத் ஸங்கல்பவசமாக வசன ப்ரதிவசனங்கள் வளர்ந்துவிட்டன. இந்த விவாத க்ரந்தங்களில் கண் செலுத்துவதும் ரஸிக வித்வான்கட்கு ஸத்காலக்ஷேபமேயாகும். ஆச்சரியமான மனோ விநோதமுமாம்.

இரண்டு மத்தகஜங்கள் அமர் புரிவதைக் காண்பதினும் ஒரு மசகமும் ஒரு மத்தகஜமும் போர் புரிவதைக் காண்பதே ரஸவத்தரம். ஸ்ரீ ஆஸுரி ஸ்வாமி வஸ்துத: மத்தகஜம். அடியேன் மசகத்தினும் மஹாநீசனே யென்பது ஸத்யமான அபிஸந்தி. எம்மிருவர்க்கும் விஷமமாக விளைந்த வாதப்போரை ரஸிகசிகாமணிகள் அவசியம் கடாக்ஷித்துக் களிக்கவேணும்.

அத்ய மே மரணம் வா என்கிற ச்லோகஆநுபூர்வியைச் செவியுறும் பண்டிதர்கள் ஸாகரஸ்யமரணமென்கிற அந்வயத்தைப்பற்றி என்ன நினைப்பார்களென்பதை யாம் எடுத்துக்கூறவேண்டுமோ? அந்த அந்வயந்தான் பொருந்துமென்று ஸமர்த்திக்க மிகப் பெரிய க்ரந்தமெழுதப் புகுந்த ஆஸுரி ஸ்வாமிகள் 'தமது கொள்கை தவறு' என்பதைத் தாமே ஸ்பஷ்டமாகத் தமது நூலில் நிரூபித்துவிட்டு மிகவும் வீணாகவே பல ஏடுகளைப் பெருக்கியிருக்கிறாரென்பதை அடியேன் இந்நூலில் முந்துற முன்னம் கண்ணாடிபோல் காட்டியிருக்கிறேன். ஆஸுரிஸ்வாமி இனிமேல் இதுவிஷயமாக க்ரந்தமெழுதுவதில்லை யென்று தாம் ப்ரதிஜ்ஞை செய்துகொண்டிருப்பதாகத் தமது நூலின் முடிவில் வெளியிட்டிருப்பதால் *யாவொ ஷ்வ ந-ஙாஸிஹாஷதெபோலே வயஉவி ஷ்வ ந-ஙாஸிஹாஷாஉஹெ என்றிருக்குமிவர்கள் அந்த ப்ரதிஜ்ஞைக்கு மாறாக மறுமொழி கூறகில்லோம் என்று சொல்லி ஔதாஸீந்யம் பாவித்து வாழ்வரேல் அதுவொரு அழகிய வாழ்ச்சியேயாகும்.

*ஸுநாஸம்ஹொ உநுஷ்யாணமில் உத்தரார்த்தத்தில் கூறியதை நோக்கி ப்ரதிவசனம் பண்ண ப்ராப்தமே என்று இந்த ஸ்வாமி திருவுள்ளம் பற்றி ப்ரவர்த்திக்கலாயிருந்தால், "ஸாகரஸ்யமரணமென்று நம்பூருவாசாரியர்கள் அருளிச்செய்திருக்க ப்ரஸக்திகிடையாதென்று ஆஸுரிஸ்வாமி திருவாக்கினாலேயே தீர்ந்துவிட்டது" என்று இந்நூலில் (இரண்டொரு பக்கங்களில்) நாம் நிரூபித்து நிலைநாட்டியிருப்பதை மாத்திரமாவது ஸஜ்ஜவான ஸரணியில் ப்ரத்யவஸ்தானம் பண்ணிவிட்டால் இத்தை முடித்தல் கடத்தலேதான் நம்பிள்ளை திருவாக்கு என்று நாடு நகரமும் நன்கு கொள்ளலாம். *உதயதி யதி பாநு: பச்சிமே திக்விபாகே தஜிஉஜிஹ வடெதெதூவ வஸ்தொவஉஜி.*

சில விஷயங்களில் ஸர்வஸம்வரையென்று நிஸ்ஸந்தேஹமாகவே தெரிந்திருந்தாலும் அதை மாற்றிக்கொள்வது விவேகிகளுக்கும் மிக அரிதேயாதலால் ப்ரக்ருத விவாதவிஷயத்தில் எம்முடைய வாதத்தை இசையகில்லாதவர்கள் சிலரோ பலரோ இருக்கலாம். அதுபற்றி நமக்கு விசாரமேயில்லை. ஆஸூரி ஸ்வாமிபோல்வார் சிலபெரியோர்கட்கு நம்மீது வெறுப்பைப் பிறப்பிக்க விரும்பி ஒரு மாயச்செயல் செய்கிறார்கள்,— நாம் பூருவாசாரியர்களின் அருமருந்தான திவ்யஸூக்தியைப் பழிப்பதாகவும், நம்பிள்ளைபோல்வாருடைய திவ்ய ஸூக்திகளைக் கண்டித்தே நாம் க்ரந்தமெழுதுவதாகவும் வாதஸாஹஸகவிதண்டாவாதங்களைச் செய்துவருகிறார்கள். இத்தகைய அஸத்கீர்த்தனங்களினால் சிலர் வஞ்சிதராவரேல் அது பற்றியும் நமக்கு விசாரமில்லை. அந்த ஸ்வாமியைப்போல் மிகவும் ஆடம்பரமான சப்தராசிகளையிட்டு மயங்கவைக்கும் வழியில் நமக்குப் பரிசயமில்லை. நாம் இன்னது சொல்லுகிறோமென்பதை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளவேணுமென்னும் கருத்துடனேயே நாம் நெடுநாளாகப் பல நூல்களை இயற்றிவரும் வழியிலேயே இச் சிறு நூலையும் அமைத்திருக்கின்றோம். அனைவரும் இதை வாசித்து ஸரளமாகவே விஷயவுண்மையைக் கண்டு களிப்பர்கள். பூர்வபக்ஷிகள் தமது வாதத்தைப்பற்றி இனி வாய்திறக்க நாணியே நிற்பர்களென்பது திண்ணம்.

ஆஸூரி ஸ்வாமி தமது நூல் எழுதிவருகையில் பல விஷயங்களில் நமக்கு விபரீத க்ரஹணம் அதிகரித்திருப்பதாகவும் அஸமஞ்ஜஸங்களான பதங்களை நாம் ஆங்காங்கு ப்ரயோகித்திருப்பதாகவும் இங்ஙனே பல தூஷணங்களை நம் திறத்து எழுதியுள்ளார். உண்மையில் அஜ்ஞானமும் அந்யதாஜ்ஞானமும் மலிந்திருக்கப்பெற்ற அடியேனது வாசகங்களில் மேற்குறித்த தூஷணங்கள் அவகாசம் பெறக்கூடியவையேயாயினும், அருளிச்செயல் ரஹஸ்ய வியாக்கியானங்களிலும் ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகா தீபோபநிஷத் பாஷ்யாதிகளிலும் விசுவஸி அயம்பண்ணி அவ்வோ விஷயங்களை ஆழ்ந்து அறியும் மஹாப்ராஜ்ஞர்களால் நிரூபிக்கப்படவேண்டிய அந்த தோஷங்களை ஸர்வஜ்ஞனான ஆசார்யனையொழிய வேறில்லாத வித்வஜ்ஜனர்கள் நிரூபிக்கப் புகுவது வைஷாசேவ வஸிஷ்டவாயவாகுமென்பதை ஸதஸ்ஸஜ்ஜனை அடியேன் விஜ்ஞாபியாமலிருக்க முடியவில்லை. ப்ரக்ருதத்தில் ஆஸூரிஸ்வாமி அடியேன் வாசகங்களில் குற்றங்குறைகள் காட்டியிருப்பதெல்லாம் அவருடைய ஸ்வஜ்ஞாநவைசாரத்யமடியாகவே விளைந்ததென்பதை இந்நூலில்மேலே ப்ரத்யக்ஷம் மிகவிரிவாகவே உபபாதித்திருக்கிறேன். பன்னியுரைக்குமந்தப் பெரும் பாரதத்தை ஊன்றிப் பரிசீலிக்க அவகாசமில்லாதார்க்கு ஸம்க்ஷேபமாகச் சில விஷயங்களை ஈண்டு நிரூபித்துக்காட்டி நம் ஆஸூரி ஸ்வாமிக்கு ஸ்ரீபாஷ்யச்ருதப்ரகாசிகாதிகளிலுள்ள ஆழங்காலின் அதிசயத்தை ஆவிஷ்கரிக்கிறேன்.

தத்வப்ரதிஷ்டையில் (பாரா 54-ல்) விவக்ஷிதம் என்றொரு பதம் நாம் பிரயோகித்திருக்கிறோம். (வக்துமிஷ்டம்) என்னும் வ்யுத்பத்தியிலே விவக்ஷித சப்தம் நிஷ்பந்நமாகிறது. வக்த்ருவ்யக்தஸ்வாபிப்ராயவிஷயீபூதம் என்று அதற்கு அர்த்தம் தேறுகிறது. ஆனால் இவ்வர்த்தத்தில் நாம் ப்ரயோகிக்கவில்லை. 'தாத்பர்ய விஷயபூதம்' என்கிற பொருளில் ப்ரயோகித்திருக்கிறோம். அச்சொல்லுக்கு இப்பொருள் கிடையாதென்றும், அல்பஜ்ஞர்கூட இப்படி வ்யவஹரிக்கமாட்டாரென்றும் (பக்கம் 140-ல்) வெகு கோலாஹலமாய் எழுதுகிறார். இந்த விவக்ஷித சப்தத்தை தாத்பர்யவிஷயார்த்தத்தில் நம் ஆசாரியர்கள் மணிப்ரவாள கிரந்தங்களில் பலவிடங்களில் ப்ரயோகித்தருளியுள்ளார்கள். அவ்விடங்களை யெடுத்துக்காட்டுவது கிடக்கட்டும். இது சுத்த ஸம்ஸ்க்ருத பதமாகையாலே ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களில் இதைப்பற்றியுள்ள நிரூபணமே முக்கியம்.

* விவக்ஷிதகுணோபபத்தேஶ்ச * என்பது ஒரு ப்ரஹ்ம ஸூத்ரம். (1—2—2.) இங்கே விவக்ஷித சப்தத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரர் வக்துமிஷ்டமென்னும் பொருளைக்கொள்ளவில்லை. இங்கு ச்ருத ப்ரகாசிகையையும் ஸேவிப்பது. சாரீரக சாஸ்த்ரார்த்த தீபிகையில் (பக்கம் 52ல்) இந்த ஸூத்திரத்தின் விவரணத்திலேயே "விவக்ஷிதத்வம்—தாத்பர்யவிஷயத்வம்" என்றும், "தாத்பர்ய விஷயத்வலக்ஷணம் விவக்ஷிதத்வமவஸீயதே" என்றும் உபநிஷத்பாஷ்யகாரரால் வரையப்பட்டுளது. * அஞ்சிறையமடநாராய் ஈட்டு ப்ரவேசத்தில் "அல்பம் விவக்ஷிதனையிருப்பானொருவன்" என்று ஸ்ரீஸூக்தியுளது. அவ்விடத்து அர்த்தம் வேறு. ஒரு க்ரந்தத்தையும் கேளாமலும் காணாமலும் வீணாக ஆரவாரிக்கின்றாரே! என்று வருந்துகிறோம். நாம் கொண்ட பொருளில் வ்யோமவ்யாதாய்யமுண்டாயிருக்க அதையடியொற்றிப் பேசும் நம்மைப் பழிக்க இவரார்கொல்?

அன்றியும், "இங்கு ஸமாதானம் சொல்லவருவதும் ஸ்வபக்ஷம்வசீகவாக்ஷெளரக்ஷ்யம்கனேதியேயாம்" என்று அப்பாராவை இவர் தலைக்கட்டியுள்ளார். ஷெளரக்ஷ்யமென்னும் பதத்திற்கு இன்னது பொருளென்றே இவர் அறிந்திலரந்தோ! தப்பாக ஆக்ஷேபம் செய்பவர்களை நோக்கிக் கூறவேண்டியதாக ஏற்பட்டுள்ள உபாலம்பமொழி இது. ஸமாதாநாநுவாதம் செய்யுமிடத்திலே இவர் இந்தப் பழமொழியைக் காட்டுவது என்ன வ்யுத்பத்தியோ? *ஏகாதசீக்ரஹண த்தை ஏகாதசீக்ரஹணமென்று வாசித்துவிட்டு 'ஏகாதசியில் க்ரஹணமுண்டோ?' என்று ஆக்ஷேபிப்பார்போல்வாரான ஆக்ஷேபகர் திறத்திலே உபயோகிக்க வேண்டிய பழமொழி இது என்பதை பாலிசனும் அறிவன். இந்த ஸ்வாமியும் அதை அறிந்து வைத்தும் அந்தப் பழமொழியை இங்கிவர் காட்டினது ப்ராக்ருதத்தில் க்ஷெளரக்ஷ்யகாரரான தம்மிடத்திலேயே அந்த மொழி ஸார்த்தகமாகிறதென்று ஸ்பஷ்டீகரிக்கத் திருவுள்ளத்தினாலேபோலும்.

* ஒவாத்துயர்ப்பிறவி யீட்டில் "ஜந்மம் தொடக்கமாக மற்றுமுண்டான வற்றுக்கும்...... அத்விதீயகாரணமாய்" என்ற ஸ்ரீஸூக்தியில் மற்றுமுண்டான

வைந்துக்கும் என்று காணப்படும் பாடம் [illegible] ஸம்மதம் என்பதை நாம் பரிசிஷ்டத்தில் பரக்க நிரூபித்தோம். அதற்கு மறுப்பெழுதப் புகுந்தவிவர் [ஐந்துக்கும் என்றே யிருக்கவேணும் என்று ஸமர்த்தித்துவருமடைவில்] பக்கம் **211**-ல்—"ஜந்மஸ்திதிலயங்கள் வேறு என்றும், பாவவிகாரங்கள் வேறு என்றும் நாம் தவருக ஸித்தாந்தித்துக்கொண்டு ஸ்ரீஸூக்தி சித்ரவதம் செய்வதாக" அதிகமான ப்ரஸங்கம் காட்டியுள்ளார்.

ஸ்ரீபாஷ்யச்ருதப்ரகாசிகைகளில் இவ்விஷயமாக ஸாதித்தருளியிருக்கும் ஸ்ரீஸூக்திகளை எடுத்துக்காட்ட இந்த ஸ்வாமிக்கு ஶக்தியில்லையெனினும் அடியேன் எடுத்துக்காட்டுகிறேன். ஜிஜ்ஞாஸாதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் ※ அபக்ஷயவிநாஶாப்⁴யாம் பரிணாமர்த்³தி⁴ஜந்மபி⁴꞉। வர்ஜித꞉ ※ என்ற ஸ்ரீ விஷ்ணுபுராண ச்லோகத்தை உபாதானம் பண்ணியிருக்குமிடத்தில் ச்ருதப்ரகாசிகையில் "ஜாயதே அஸ்தீத்யேவமாத்³யம் ஜந்மஷட்கம் ந விவக்ஷிதம். உத்பத்திஸ்தி²திநாஶாநாம் அநேகத்³ரவ்யாணாம் ந விகாரஷட்கவிதி⁴꞉" என்றருளியிருப்பதை நாம் ஸதாசார்ய ஸந்நிதியில் ஸேவித்திருக்கிறோம். (ஸ்ரீபாஷ்யத்தில்) மஹா பூர்வபக்ஷத்தில் "உத்பத்திஸ்தி²திஸம்ப³ந்தா⁴ஶ்ச அநந்தரம் பா⁴வவிகாரா꞉" என்று ஸ்வாமி தாம் அருளியிருப்பதையும் ஸேவித்திருக்கிறோம். இவற்றுக்கெல்லாம் அநுகுணமாகவே நாம் ஸித்தாந்தம் செய்துகொண்டிருக்கிறோம். இவ்விஷயத்திலும் இவர் மருண்ட மருள்கள் மேலே ஸுவ்யக்தமாகும். நாம் எழுதியிருக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றிப் பிறர் கேட்டவுடனே ஸ்ரீபாஷ்யத்திலும் ச்ருதப்ரகாசிகையிலும் மற்றும் பல க்ரந்தங்களிலும் நாம் ஆதாரம் எடுத்துக்காட்டச் சிறிதும் இருய்க்கமாட்டோம் என்பதை இந்த ஸ்வாமி அறிந்துவைத்தும் தமக்குள்ள [illegible] த்தை நன்கு நிலைநிறுத்திக்கொள்வதற்கா இங்ஙனே ப்ரஸங்கங்கள் பரப்புவது? ஸூக்திகளிலிருந்து அடியேன் [illegible] விடுபட்டவனென்று கனவிலும் நினைவுடையேனல்லேன். பஹுஜல்பம் பண்ணிவருமடியேனது நூல்களில் அவை பலபல இருக்கலாம். ஆனாலும் இந்த ஸ்வாமி எடுத்துக்காட்டக்கூடிய நிலைமையில் அவை ஒரு சிறிதும் இருக்கமாட்டா என்பதுதான் [illegible].

இவரது நூலில் (பக்கம் **185**-ல்) "திராக்ஷைப் பழங்களை க்ரஹிக்கக் கருதின குள்ளநரி" என்று சில ஹாஸ்ய வார்த்தைகளை எழுதியுள்ளார். எது திராக்ஷைப்பழம்? யார் குள்ளநரி? என்பதைப்பற்றி மேலே பரக்க நிரூபித்திருக்கும் விஷயங்களை வித்வான்கள் ஊன்றி நோக்கவேணுமென்று இங்கு ஸூசனை மாத்திரம் செய்யப்படுகிறது.

※அத்யமே ச்லோகத்தில் மேமரணமென்று அந்வயிக்கவே கூடாதென்று பேசப்புகுந்தவிவர் ※ மாஸோபவாஸிந்யுபோஷிதே ※ என்பதொன்றையே பெரிய ஸித்தியாகக்கொண்டார். இதில் வேறு உபஷ்டம்பகலேசமும் இவர்க்கில்லையென்

பது ஸுப்ரஸித்தம். ராஜாஜி ந்யாயநிஷ்டேயின் கருத்தை இவர் உள்ளபடி க்ரஹித்திலர் என்பதை நாம் தத்வப்ரதிஷ்டையில் பரக்க நிரூபித்துவருமடைவில் சில விஷயங்கள் எழுதினோம். பெருமாள் காட்டுக்குப் புறப்படும்போது பிராட்டியை அழைத்துக்கொண்டு போகமாட்டேனென்று முன்பு உறுதியாகச் சொல்லிவிட்டுப் பிறகு அந்த வார்த்தைக்கு மாருக உடனழைத்துக்கொண்டெழுந்தருளினது என்னே? இராவண வதத்திற்குப்பிறகு பிராட்டியை நோக்கி "பரக்ருஹவாஸம் நெடுநாள் பண்ணிப்போந்த நீ கெடுதல் அடையாமலிருந்திருக்க மாட்டாய்; நான் ஸத்குல ப்ரஸூதனுயிருந்து வைத்து ஸத்யமாய் உன்னை ஒரு நாளும் ஸ்வீகரிக்கவேமாட்டேன்" என்று உறுதியாக அருளிச்செய்த பெருமாள் பிறகு ஸ்வீகரித்தது எங்ஙனே?—என்று சில கேள்விகள் கேட்டிருந்தோம். இவற்றுக்கு மறுப்பு எழுதிவருகின்ற ஆஸூரி ஸ்வாமி, பெருமாள் பிராட்டியை நோக்கி 'உன்னைக் காட்டுக்கு அழைத்துச்செல்ல எனக்கு மனமில்லை' என்று கூறினரேயன்றி 'காட்டுக்கு அழைத்துக்கொண்டு செல்லமாட்டேன்' என்று ஸங்கல்பிக்கவுமில்லை, வாய்திறந்து பணிக்கவுமில்லை—என்றெழுதுகிருர். இதுவொரு அசட்டு வாக்யார்த்தம். இது மேலே மிக விரிவாகக் கண்டிக்கப்படும் பரிசு பாரீர். இங்கு நாம் சுருக்கமாகத் தெரிவிப்பதாவது —

ஸ்ரீராமாயண அயோத்யாகாண்டத்தில் (29 ஆம் ஸர்க்கத்தில்) *ஏவம் பஹுவிதம் தீநம் யாசமாநா புந: புந:। நாநுமேநே மஹாபாஹு: தாம் நேதும் விஜநம் வநம்॥ ஏவமுக்தா து ஸா சிந்தாம் மைதிலீ ஸமுபாகதா* என்றுள்ளது. இங்கு ஏவமுக்தா என்றதே, கயோக்தா? என்று கேட்டால் இந்த ஸ்வாமி என்ன ஸாதிப்பரோ? "விஜநம் வநம் த்வாம் நநேஷ்யாமீத்யுக்தா" என்று ஸ்பஷ்டமாக வியாக்கியானமும் பண்ணினர்கள். (த்வாம் வநம் நேதும் நேச்சாமீதி யாவத்) என்று சொன்னரென்றே கொண்டாலும் பிறகு வநநயநாநுகூலமான மதியை ஏற்றுக்கொண்டது முரண்பாடுதானே. இரண்டாவது விஷயத்திலும் "பரக்ருஹவாஸம் நெடுநாள் பண்ணிப்போந்த நீ கெடுதல் அடையாமலிருந்திருக்கமாட்டாய்" என்று பெருமாள் கூறியதாக நாம் எழுதியிருக்கும் வார்த்தை ஸ்ரீராமாயணத்தில் கிடையவே கிடையாதென்று (பக்கம் 88ல்) கனக்கப் பழிக்கிருர். அங்கு ஸ்ரீராமாயணத்திலிருந்து பல ச்லோகங்களையும் எடுத்துக்காட்டி விவரிக்கிருர். அந்தோ! *நஹி த்வாம் ராவணோ த்ருஷ்ட்வா திவ்யரூபாம் மநோரமாம்। மர்ஷயேத சிரம் ஸீதே ஸ்வக்ருஹே பரிவர்திநீம்* (**119-24**) என்கிற ஸ்ரீராமாயண ச்லோகம் இவர் திருக்கண்களிற் படவில்லையா? இதற்கு முன்புள்ள சுலோகங்களையெல்லாம் நெடுக எழுதியுரைத்திருக்கின்றவிவர் இந்தச்லோகத்தை மாத்திரம் தொடாது விட்டிட்டது தகுதியோ? அந்த ச்லோகத்திற்கு என்ன அர்த்தம்? அது ரூஷகர்களின் அபிப்ராயத்தாலே பெருமாள் சொன்ன வார்த்தையே யல்லது ஸ்வாபிப்ராயமன்று என்றே கொள்வோம். அதில் இப்போது என்ன விசாரம். பெருமாள் பேசாத பேச்சை நாம் ஸ்வச்சந்தமாக எழுதினேமென்று இவர் தூஷிக்குமது நிற்குமோ?

ஸாதோ வி ந-ராஹிஹாஷதே என்பதைக்கொண்டு இவர்க்கு ஸமீஹிதலே ஶமும் ஸித்திக்கமாட்டாது. "பிறருடைய நியமநத்தாலோ ஸ்வயமாகவோ பிறர்க்கு நன்மையாகச் செய்கிறேனென்று ஒன்று சொல்லி அதற்குமாறாக நடந்து கொள்வதில்லை" என்னுமிவ்வளவே அந்த சுலோகத்தின் கருத்தென்பதையுணராது, பெருமாள் திருவாக்கில் ஒருவார்த்தை எந்த ஹேதுவினால் வந்துவிட்டாலும் அது தவறாது நடந்தே தீரவேணுமென்று கொண்டு ஆரவாரிப்பது வடிக்கட்டின அஸாமஞ்ஜஸ்யமேயாகும். *ஸாமபம்ஶோஷயிஷ்யாமி* என்று சொல்லி அதை என் செய்யாதுவிட்டார். பிராட்டியைப் பரிக்ரஹிக்கமாட்டேனென்று சொல்லிப் பிறகு என் பரிக்ரஹித்தார்? இவற்றுக்கு அழகான காரணங்கள் சொல்ல நமக்கும் தெரியும். அவற்றைப்பற்றி நாற்றுக்கணக்கான உபந்யாஸங்கள் செய்துள்ளோம். காரண விசாரத்தில் இப்போது நாம் புகவில்லை. 'சொன்னபடி செய்யவில்லைதானே' என்றுவினவினால் ஆமாம் என்று இவர் தலை தூக்க வேண்டுவது தவிர வேறில்லையென்பது பேர்க்கவும் பேராவே.

இங்ஙனேயாக இவரது நூலிலுள்ள விஷயங்களை ஸூக்திகோடியில் சேர்ப்பதா? விப்ரலம்பகோடியில் சேர்ப்பதா? மற்று எந்த கோடியில் சேர்ப்பது? என்று நமக்கு விளங்கவில்லை. உலகில் பிறர்மீது தூஷணாஸாஸங்களை எழுதுமவர்கள் தாங்கள் மிகவும் ஜாக்ருகராயிருந்து எழுதவேண்டும். இந்த ஸ்வாமியின் வழிவாடியைப் பராமர்சித்தாலோ 'இவர் க்ரந்தமியற்றவும் எழுந்தாரே! என்று 'ஐயோ பாவம்' பாடவேண்டியதாகவே நேர்ந்திருக்கின்றதென்பதையும் இங்குச் சிறிது மூதலிக்கிறேன்.

நமது தத்வப்ரதிஷ்டையில் **15**-ஆம் பாராவுக்கு மறுப்பு எழுதாநின்றவிவர் *நஹ்யஸம்ஶ்ருதி தஃ வசநா யதே வாஞ்சீ ஹிதாமதஃ* என்று (**68—70** பக்கங்களில்) பலதடவை எழுதியுள்ளார். இது ஸ்ரீராமாயணச்லோகம். (நஹ்யஸம் ஶ்ருதி தஃ) என்பது உள்ளது. அதை இவர் (நஹிஸம்ஶ்ருதி தஃ) என்று எழுதினாலும் குற்றமில்லை. நஹ்யஸம்ஶ்ருதி தஃ என்கிறார். ஒரு தடவை யெழுதினாலும் அச்சுப்பிழை யென்னலாம். ஒன்பது தடவை யெழுதியுள்ளார். அர்த்தமோ மிக விபரீதம். இவர் தமக்கு நெஞ்சில் ஒன்று, எழுத்தில் வேறொன்று. அந்தச்லோகத்தை உள்ளபடியே நாம் நமது ப்ரதிஷ்டையில் (பாரா **15**-ல்) ஸ்பஷ்டமாக எழுதியிருந்தும் இவர்க்கு அபரிக்ஷீதமான ஸுவாஸத்தின் வாஸநாபலமும் தலையெடுத்து நிற்கிறது. இங்ஙனேயானவிவர் வாஸவஸிஷ்கரணப்ரணாளியிலே புகுந்து பரிதபிப்பது எனோ? இத்தை முடித்தலுக்கு ஸுவேதாஜீநர்களால் அரும்பதவுரை ஏற்பட்டதுபோலவே இவருடைய *நஹ்யஸம்ஶ்ருதி*தவுக்கும் ஓர் அரும்பதவுரை ஏற்படுமேல் அதையும் ஸார்த்திக்க இவருடைய அடியார்கள் ஆக்ரஹித்துவருவர் போலும்.

அன்றியும், பதப்ரயோகசைலியில் அடியேன்மீது ஆங்காங்கு பரிஹஸிணம் செய்தருளாநின்ற விவர்தாம் செய்தருளும் ப்ரயோகங்கள் மொநா-ஹிபத்தி

விருந்த [illegible]ங்கள் போலும். பெருமாள் காட்டுக்குப் புறப்பட்டருளும் போது பிராட்டியை நோக்கி "இப்படிச் சொன்னரேயன்றி அப்படிச் சொல்லவில்லை" என்று எதையோ எழுதாநின்றவிவர். "ந வ[illegible] நவிஷ்யாமி" என்று ஸங்கல்பிக்கவில்லை என்பதாக (பக்கம் **76, 77** களில்) [illegible] எழுதியுள்ளார். நேஷ்யாமி என்று வியாகரணத்தில் தேறுமேயல்லது நவிஷ்யாமி என்றொரு பதம் [illegible]மாயிருப்பதாக இதுவரை நாம் [illegible]ஸாஸ்த்ரங்களிற் கண்டதில்லை, கேட்டதுமில்லை. ஸ்ரீ[illegible] ஸம்ஸ்க்ருத கலாசாலைக்கென்று அபூர்வ வ்யாகரணம் வந்திருக்கின்றது போலும். (நவிஷ்யாமி) என்ற விதனையும் இவர் ஒரு தடவை யெழுதியிருந்தால் அதைப்பற்றி நாம் பேசவாரோம். [illegible] எழுதியுள்ளாரே. [illegible] வசிவாடீ[illegible]மிருந்தபடி.

நாம் பரிசிஷ்டத்தில் ஒரு வியாகரணவிசாரம் (**53, 54** பக்கங்களில்) செய்திருக்கிறோம். இவர் அதையே தமது நூலில் எடுத்தாளுகிறார். சப்தங்களை மாற்றியிருக்கிறார். (இதைப்பற்றி மேலே விசதமாகும்.) அங்கு நாம் "உதாஹரண சரீரத்தில் அவ்வளவு நோக்கு வேண்டாவென்று கொண்டு" என்றெழுதியிருப்பதையும் இந்த ஸ்வாமி தாம் அபூர்வமாகக் கண்டறிந்த விஷயமாகக் காட்டிக்கொள்ள விரும்பி *[illegible] என்று பாஷ்யகாரரே பேசியுள்ளாரென்று (பக்கம் **128, 204**-களில்) எழுதுகிறார். ஸங்கரபாஷ்யமா, நீலகண்டபாஷ்யமா, மத்வபாஷ்யமா, ஸ்தோத்ரபாஷ்யமா? எந்த பாஷ்யத்தில் இவர் ஸேவித்தாரென்பது தெரியவேண்டும். அது மஹாபாஷ்யத்திலிருப்பதாக இவருடைய நினைவு. அதில் இந்த ஸூக்தி எவ்விடத்துள்ளதென்று எடுத்துக் காட்டுவரா? தம்முடைய *[illegible]த்தை இப்படியும் பிரசுரப்படுத்திக்கொள்ளவேணுமோ? இப்படிப்பட்ட [illegible]ங்களை ச்ரவணபதஞ்ஜலிபக்கலிலேயே இவர் ஸாக்ஷாத்தாகப் பெற்றார் போலும். [illegible] விஷயங்களில் அதிகரிக்க ஆசைப்படுவதன் பலன் கைகண்டதாயிற்று.

ஆரியர்காள்! ஆ[illegible]ஸ்வாமியின் [illegible]ங்களின் பரிசு இருக்கும்படியை இங்கு ஸம்க்ஷேபமாகக் காட்டினோம். மேல் க்ரந்தத்தில் விரிவு காணத்தக்கது. பலகாலமாகப் பலவித்வான்களோடு கூடி யெழுதிப் பல [illegible]ர்கட்குப் படித்துக் காட்டிப் பலரிடத்து [illegible] பண்ணி [illegible]மான மஹாப்ரபந்தத்தின் அதிசயங்களைக்காண ஆசைப்படாதிருக்கமாட்டார்கள். *[illegible] என்னப்பிறந்த [illegible]த்தின் அதிஸயங்களைக் காண விரும்பாதாருமுண்டோ?

[illegible]
[illegible]

ஸ்ரீ:
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராச்சாரியர் இயற்றிய

தத்வ ப்ரதிஷ்டா விஜயத்வஜம்.

[ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீஉ. வே. ஆஸூரி சின்ன ராமா
நுஜாசாரியர் ஸ்வாமி இயற்றியருளின பூர்வ
நிர்வாஹ பரித்ராணக்ரந்தத்திற்கு ப்ரத்யுத்தரம்.]

நிர்வ்யாஜநிஹிதஸ்வஹ்ருதயாம் நிகமாந்தஸித்தயதீந்த்ரதேசிகாநாம்।
ஸஹஸ்ராம்ஸுப்ராணாம் ஸந்ததம் ஹ்ருதயே ஸாந்த்ரஸஹிதஸ்மிதேக்ஷிதைஃ॥
ஸ்ரீமத்ராமாநுஜமுநிவரப்ரஸாதாத் ஸம்ஸாரஸந்தாபநிவ்ருத்திகோப்யா।
தத்த்வப்ரதிஷ்டாவிஜயத்வஜாக்யா க்ருதிர்மதீயா ஜீயாத்ஸமாஸ்ஸஹஸ்ரம்॥

ஸ்ரீஸூக்தஸூக்தவசோவசம் த்ரய்யந்தபாஷ்யஜிதவிதி
ப்ருவந்தி தேஷு ஸஹாஸ்யேஷு ஸந்தோ வா அவிவா கதம்।
ஸாஹஸிகஸ்ஸ்வஜநஸ்ய ப்ரளயகணிகா வேதார்த்தஸாரம்
ஸாயாஹ்நஸம்வ்யாப்தவ்ருத்திர், ஸந்தாம் க்ஷாந்திர்வரம் ஸேவதி॥

ஸ்ரீராமாயணத்திலுள்ள *ஸமுத்ரஶரண ச்லோகார்த்தத்தில் விசேஷ அஜ்ஞதை விளைந்திருக்கும் விஷயம் ஜகத்ப்ரஸித்தமே. இவ்விஷயமாக அடியேன் வெளியிட்டுள்ளவற்றில் சிலவற்றிற்கு மறுப்பென்று ஸ்ரீமதுபயவே. ஆஸூரி சின்ன ராமாநுஜாசாரியர்ஸ்வாமி அநுக்ரஹித்த பூர்வநிர்வாஹபரித்ராணம் என்னும் க்ரந்தம் இப்போது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இந்த ஸ்வாமியின் பாண்டித்யப்ரகர்ஷம் பெரும்பாலும் ஸ்ரீவைஷ்ணவர்களறிந்ததே, உண்மையாகவே சாஸ்த்ரஸம்ப்ரதாயங்களில் நிஷ்ணாதரான இந்த ஸ்வாமி ஏதோவொரு அபிநிவேசாதிசயத்தினால் மிகவும் அநாவச்யகமான விவாதத்தில் தலையிட்டு 215 பக்கங்கள் கொண்டதொரு ஸ்ரீகோசத்தை வெளியிட்டுள்ளார். இதிலுள்ள திவ்யஸ்ரீஸூக்திகள் "அஜ்ஞாந விஜ்ரும்பிதம்—அந்யதாஜ்ஞாநவிலஸிதம்—உந்மத்தப்ரலபிதம்" இத்யாதிகளேயல்லாது வேறில்லையென்பதை விவேகிகள் உணர்வார்கள். உண்மையில் மஹாப்ராஜ்ஞரான அந்த ஸ்வாமி நீசனேன் நிறையொன்றுமிலேனை நோக்கிப்ரயோகித்தருளும் இத்தகைய ஸ்ரீஸூக்திகள் சாலவும் தகுதியுடையனவேயென்பது அடியேனுடைய கொள்

கையாம். "க்ருதக்நே திக்ருதம் ஸர்வேஷாம் த்ருஷ்டமேதத்* என்கிற கணக்கிலும் இத்தகைய வாசகங்கள் இந்த ஸ்வாமி விஷயமாக அடியேன் வாக்கில் விளையாதபடிக்கு பகவத் பாகவதாநுக்ரஹம் பொலியவேணும்.

ப்ரக்ருத பரித்ராண க்ரந்தத்தை நோக்கி விடையளிப்பது வேணுமோ வென்று அடியேன் மிகவும் ஆலோசித்தேன். வீணை மாத்ஸர்யாபிவ்ருத்தி யொன்றிலேயே பர்யவஸிக்குமதான இந்த விவாதம் வளரவேண்டாவென்பதே அடியேனுடைய கருத்து. **215** பக்கங்கள் கொண்ட புத்தகத்தை இயற்றி வெளியிட்டுவிட்டோமென்கிற பெருமகிழ்ச்சியை அந்த ஸ்வாமி தாமே அடைந்திடுமாறு அடியேன் விச்ராந்தி கொள்ளலாமென்றே எண்ணினேன். ஆயினும், அடியேனுடைய ப்ரலபிதங்களினால் பரமத்ருப்தியடைகின்ற வ்யக்தி விசேஷங்களின் உகப்புக்காகவும் இவ்விஷயத்தின் உண்மைப் போக்கை உலகமறிகைக்காகவும் ப்ரக்ருதாநுபந்தியான விஷயங்களைச் சுருங்க விஜ்ஞாபிக்கப் புகுகின்றேன்.

இந்த ஸ்வாமியின் வசனங்கள் முற்றிலும் அஸமஞ்ஜஸதமங்கள் என்பது அடைவே வெளியிடலாகும். புஸ்தகங்களை யெழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் உரிய உபகரணங்கள் நமக்கு ஸ்வாயத்தங்களாயிருப்பதாக இந்த ஸ்வாமி தாமே அநுக்ரஹித்தருளுகிறார். எழுதுவதற்கான உபகரண ஸம்பத்திகளிலும் ஏகதேசமும் தமக்கு வாய்க்காததுபற்றி இனி வருந்திப் பயனென்னே! அழுக்காறுகொண்டு அடையும் பேறு ஏதுவோ? ஒரு ஸவ்யஸசிஸூரின் பக்கலிலே இதற்காக ஹாஹாகாரம் பண்ணின இவர்கள் அந்த அவலம்பத்தையுமிழந்தமையாலே இனி மௌநத்தையே தாங்கள் சரணம் பற்றுவதாக நிச்சயித்ததையும் வெளியிடலானார்கள். இவை கிடக்க.— முதலில், இந்த அத்யமே ச்லோகார்த்த விசாரம் ஆராய்ச்சி முறையில் அடியேனால் எடுத்துக்கொள்ளப்பட்டது. பூர்வாசார்யர்களின் திவ்ய ஸ்ரீஸூக்திகளில் பலவகையான ப்ரக்ஷேப உத்க்ஷேபங்கள் நேர்ந்திருக்கிறபடியைப் பல மஹான்களின் க்ருபையினால் அறியப்பெற்ற அடியேன் *யதார்த்தவாதீ பஹுஜநத்வேஷீ* என்பதையும் நோக்காது ஸமயவிசேஷங்களில் சில ஆராய்ச்சிகளை வெளியிட்டுவருகின்றேன். இந்த ஸ்வாமியினுடைய சைலிக்கும் அடியேனுடைய சைலிக்கும் நெடுவாசியுள்ளதனால் தம்முடைய போதுபோக்குக்ரமங்களிலேயே இவர் தாம் கண்செலுத்திக் கொண்டு அடியேனது ப்ரவ்ருத்திகளில் உதாஸீநராயிருக்கை இவர்க்கு உரியது.

மேலே குறிப்பிட்ட நெடுவாசியைச் சிறிது விவரித்துக்காட்டுகிறேன். பாண்டித்யத்திற்கும் ஆராய்ச்சிக்கும் ஸம்பந்தம் நியதமன்று. இந்த ஸ்வாமி மஹாபண்டிதராகவே யிருக்கலாம்; ஆராய்ச்சி விஷயத்தில் இவர் போராடவருவது உசிதமன்று என்பதை உறுதியாக விஜ்ஞாபிக்கின்றேன். இப்போது இந்த ஸ்வாமி வெளியிட்டிருக்கின்ற பரித்ராணக்ரந்தத்தில் முதல்வரி *ஸோமநாபிஹாயநஃ* என்பது. அதை தேவநாகரலிபியிலும் க்ரந்தலிபியிலும் அஸக்ருத் நிவேசித்திருக்கிறார். "ஸிஹ்மாய என்று எழுதுகிறோமே, இந்தப்பதத்தின் உண்மை

ஸ்வரூபம் இதுதானோ" என்கிற ஆராய்ச்சி இவர்க்கு உண்டாகப்ரஸக்தியே கிடையாது. 'ஸிம்ஹ' என்பது சொல்வடிவமேயல்லாது 'ஸிஹ்ம' என்பது அல்ல என்று நாம் உணர்த்தினாலும் இதுவொருவிஷயமோ என்பர். 'அச்சுப் பிழையன்றோ இது' என்றும் சொல்லுவர். இவர் ஸிம்ஹ என்று எழுதிக்கொடுத்திருந்தால் (ஸிஹ்ம) என்று ஒருகாலும் அச்சியற்றியிரார்கள். இதன் உண்மை இவரது உள்ளத்திற்கே தெரியவரும். 'வ்யஉக்ஷவதெ உக்ஷிகாவாத:' என்கிற கணக்கிலே இதனை அடியேன் காட்டினேன். இங்ஙனே வரிதோறும் காட்ட அடியேனுக்கு விஷயங்கள் பல பலவுண்டு. ஶப்தஸ்வரூபங்களில் ஆராய்ச்சி செல்லப் பெறாதவர்கள் அர்த்த ஸ்வரூபங்களில் ஆராய்ச்சி செய்யப்புகுவது விவேகிகட்குப் பாராட்டத் தக்கதாக இராது.

ஒரு சிறுவிஷயம் கேண்மின்; இந்த ஸ்வாமி கச்சியில் வைகாசித் திருநாளுக்கு எழுந்தருளியிருந்தபோது திருப்பல்லாண்டு ஸேவித்து வருகையில் *எந்நாளெம்பெருமான்* என்கிற பாசுரத்தில் "உன்தனுக்கு" என்று ஸேவித்து வந்தார். இந்த ஸ்வாமியை அணுகியிருந்த அடியேன் இப்படியே இவர்ஸேவித்து வருவதை ஐந்தாறு தடவையும் செவியுற்று வாளா இருந்துவிட முடியாமல் 'ஸ்வாமிந்! தேவரீர்கூட இப்படி ஸேவிக்கலாமோ?' என்றேன்; என்ன? என்றார். "உன்தனுக்கு என்கிறதே; இந்த னகரத்தின்மேல் உகரம் அவசியமோ?" என்றேன். அதைக் கேட்டவிவர் சற்று ஆலோசித்துவிட்டு, புன்முறுவல் செய்துகொண்டே "ஆபால்யஸித்தங்களாய் அவிசாரித ரமணீயங்களான ஸந்வஶம்வணைகளை இப்போதாக அகற்றுவது அரிதே" என்று ஸாதித்தார். மறுவேளையில் ஜாகரூகராய் "உன்தனக்கு" என்றே ஸேவித்தார். அதற்கு அடுத்தவேளைமுதல் பழையபாடத்தையே பாங்காகப் பரிபாலித்தருளி வருகிறார். 'இராமனுக்கு—கண்ணனுக்கு—அனுமனுக்கு' என்று வருவதனால் இங்கும் 'உன்தனுக்கு' என்றுதான்வரவேண்டும் என்று பலரும் நினைக்கிறபடியே தான் இந்த மஹானும்நினைக்க நேர்கின்றது.

'இது இப்போதாக ஆரோபித்து எழுதுகிற ஐதிஹ்யம்' என்று ஸஹஸா இந்தஸ்வாமி ஸாதிக்க நினையார். அப்படியே ஸாதித்துவிட்டாலும் விடுக. உண்மையை இவர்தம் திருவுள்ளம் மறந்திடுமோ? அதுவும் நிற்க. ஏதேனுமொரு பாசுரத்தையோ மற்று எதையோ இன்று நாளையில் இந்த ஸ்வாமி ஸேவிக்கத் திருச்செவிசாத்தலாமே. இத்தகைய விபர்யாஸங்கள் வேண்டியவளவு விவேசநகுசலர்களால் க்ரஹிக்கக் குறையில்லையாகும். அந்தப் பரீக்ஷைதானும் இனி வேண்டா; இப்போதிவர் வெளியிட்டிருக்கும் பரித்ராணத்தில் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை ஆங்காங்கு உதாஹரித்தருளுகிறாரே, அதனை நோக்கினாலே போதுமானது. ஸ்தாலீபுலாகந்யாயேந ஒன்றே எடுத்துக்காட்டுவோம்; முதல் பரிச்சேதத்தில் "கல்லுங்கனைகடலும்" என்கிற பெரியதிருவந்தாதிப் பாசுரத்தை உதாஹரித்தவிடத்து "புல்லென் றொழிந்தன" என்கிறதை "புல்லென்

மெழுந்தன" என்றெழுதினர். கோஷ்டிகளில் ஸேவிக்கும்போதுதான் சொல்வடிவங்களை விகாரப்படுத்தவேணும்; எழுதும்போதாவது ஆராய்ச்சி செய்யலாகாதா? அழகியபாடங்களை விகாரப்படுத்துவதை நித்யகர்மாநுஷ்டானத்தோடொப்ப நியத கைங்கர்யமாகக் கொண்டவர்கள் பாடபரிஷ்கரண விஷயத்திலே தலையிட்டுக்கொண்டு எழுதும் நூல் எவ்வளவு சிறப்புடைத்தாயிருக்குமென்பதை மஹான்கள் ஊஹிக்கலாம். *ஶிம்ஸபராஜநேந்த்ரானேஹாஸ்ய: களபீநவாஹ:* என்கிற ச்லோகத்திலே இத்தகையாரிடையே ஹாஸ்யனாகவே பிறந்திருக்குமடியேன் *உங்களோடெங்களிடையில்லையே என்றாற்போலே ஒதுங்கி வர்த்திக்கவுரியவனேயல்லது இத்தகையாருடைய உக்திகளையும் ஸிவிதங்களையும் பற்றிக்கொண்டு ஸ்ரீஸூக்திஸங்கள் செய்து ஸம்ப்ரதாயத்தை அழிப்பது அழகியதன்றுதான். ஸதா தயாவி ஸ்வயவதீ ஸவிதவ்யதா. இவருடைய ப்ராமாண்யவைசிஷ்ட்யங்கள் விளங்க விதிவாய்த்ததே.

இனி இவருடைய பரித்ராணக்ரந்தத்தை ப்ரதிவசந்தி ஆராய்வதற்கு முன்னே ப்ரக்ருத விஷயத்தில் இந்த ஸ்வாமியின் ப்ராமாணிகத்வம் எத்தகைத்து என்பதை மத்யஸ்தர்கள் அறியச் சில விஷயங்களை விஜ்ஞாபிக்கிறேன். சென்ற சித்ராபௌர்ணமியன்று அடியேன் வெளியிட்டிருந்த தத்வப்ரதிஷ்டாபரிசிஷ்டத்தில் ஒரு முக்கிய அறிவிப்பென்று வெளியிட்டதில்— "ஏற்கனவே இவர்கள் நமக்கனுப்பியிருந்த ஸ்ரீஉபநிராஸமென்னும் சிறுக்ரந்தம் ஒன்று மாத்திரமாவது மாறுகோலமடையாமல் அப்படியே வெளிவருமாயின் அன்றைக்கே இவர்கட்கு நாம் தர்க்கபிக்ஷையளிக்கத் தடையிராது. பெருமாள் கடற்கரையிலே ப்ராயோபவேசம்பண்ணினரென்று அந்த க்ரந்தத்தில் இவர்கள் பலகாலும் எழுதியுள்ளார்கள். அதை இவர்கள் மாற்றிக்கொண்டார்களா? அல்லது அப்படியே வைத்துப்பேசுகிறார்களா? என்பது நமக்கு எழுத்துமூலமாகவே தெரியவேண்டியது ஆவச்யகம்" என்று விஜ்ஞாபித்திருக்கிறேன். இவ்வொன்றுக்குமாத்திரம் இவர் உத்தரமுரைத்து விச்ராந்திபெற்றிருக்கலாம். இப்போது இதற்கு என்ன உத்தரமுரைத்திருக்கிறாரென்று பார்க்க. (பக்கம் 56 முதல் இரண்டு மூன்று பக்கங்களில்) இவர் எழுதியுள்ளவை பரமவிசித்திரம். பெருமாள் கடற்கரையிலே செய்தருளின சயிஸயநத்தை ப்ராயோபவேசமென்று ஒருகாலும் சொல்லப்போகாதென்று இப்போது கண்விழித்து வலிதாக எழுதுமிவர் முன்பு ப்ரமநிராஸத்தில் ப்ராயோபவேசமென்று பலகாலும் எழுதியுள்ளார். அங்ஙனம் தாம் எழுதிற்றிலராகில், அந்த மாத்ருகையைக் கடாக்ஷித்த மஹான்கள் ஸ்ரீபூதபுரியில் பலருளரே; அவர்கள் திருமுன்பே அதைக்காட்டி 'அங்ஙனே நாம் எழுதிற்றிலோமே' என்று நிரூபித்தருளலாமே. தம்முடைய வாக்கைத் தாமே கண்டித்துக்கொள்ளவேண்டிய நிலைமை இவர்க்கு நேர்ந்திட்டதுகாண்மின். ப்ராயோபவேசமென்கிறவர்கள் மே மரணமென்றுதான் அங்வயித்துத் தீரவேணுமென்று அடியேன் நிரூபித்திருப்பது கண்ட ஸ்வாமி ப்ராமா

ணிகதமராகவிருந்து என்ன உத்தரமுரைத்திருக்கவேணுமென்னில், "ப்ராயோபவேசமென்று எதோ ப்ரமித்து எழுதிவிட்டேன்; உண்மை அங்ஙனமில்லையென்று இப்போது விமர்சித்து உணர்ந்தேன்" என்றிவ்வளவே அருளிச்செய்திருக்கவேண்டும். அதை விட்டு, ப்ராயோபவேசமென்று தாம் எழுதாதவர் போலநின்று அதைக்கண்டிக்கவும் புகுந்தவிவர் தம்முடைய ப்ராமாணிகத்வத்தை ப்ராஜ்ஞர்கள் விமர்சிக்க.

ஸம்வாதங்கள் மநுஷ்யதர்மங்களாகையாலே அவற்றை உள்ளபடி இசைந்துபோந்தால் வெகு அழகாக இருக்குமே. ப்ராமாணிகத்வ விஷயத்தில் மற்றொரு விஷயமும் காட்டுகிறேன். தத்வப்ரதிஷ்டையில் (பாரா 97-ல்) "ஸ்ரீபாஷ்யத்தில் *வ்யதிவ்யஸ்தாவஸ்தாவாத்* என்றிருந்தபாடம் வ்யதிவ்யஸ்தஸம்பவாத் என்று மாறிவிட்ட" தென்று அடியேன் எழுதியிருந்ததற்கு மறுப்புரைக்கப் புகுந்தவிவர் (பக்கம் 185-ல்) "ஸம்பவபாடமொழிய ஸ்தாவ பாடம் ஒருநாளும் அழகியதாகாது" என்று நிகமித்தருளுகிறார். வ்யதிவ்யஸ்தஸ்வத்திற்கு கர்மணிவ்யுத்பத்திபோலே பாவவ்யுத்பத்தியும் கொள்ளக்கூடுமாகையாலே முந்தின வ்யுத்பத்திகொண்டால் அபவாதாபவாதசாஸ்த்ரத்தைச்சொல்லிற்றாகி ஸ்தாவாத் என்கிறபாடத்தையே அபேக்ஷித்திருக்குமென்றும், பிந்தின வ்யுத்பத்திகொண்டால் ஸம்பவாத் என்கிற பாடமே பொருந்துமென்றும், இந்த வ்யுத்பத்தியும் தத்ஸித்தமான பாத்யபாதகபாவ மென்கிற பொருளுமே இங்கு யுக்தமாகையாலே ஸம்பவாத் என்கிற பாடமே யுக்தமென்பது இத்தஸ்வாமியின் நிரூபணம். இவ்விடத்தில் ச்ருதப்ரகாசிகையிலும் ச்ருதப்ரதீபிகையிலும் *வ்யதிவ்யஸ்த:— அபவாதாபவாத:* என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்பட்டுளது. அபவாதஶாஸ்த்ரஸ்யாபவாதஶாஸ்த்ர மென்பதே இதன்பொருள் என்பது சாஸ்த்ரஜ்ஞர்களுக்கு எளிதாகத் தெரியும். வையாகரணர்களின் கொள்கையுமிதுவே. இப்படியிருக்க, வ்யதிவ்யஸ்தஸ்வம் பாத்யபாதகபாவலக்ஷண ஶாஸ்த்ரக்ருத்யத்திலே தத்பரமென்று ஒரு விச்வாமித்ரஸ்ருஷ்டி செய்வதற்கு என்ன காரணம்? ஸம்ப்ரதாயமான அபவாதத்தையே ஸர்வஸம்மதமாக ஆதரித்துப் போரத் தமக்குத் திருவுள்ளமாயின் இதனைத் தடுப்பாராருமில்லையே. ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தியை புத்திபூர்வகமாகவே திரஸ்கரித்து எலாத பொருளை ஏறிடப்பார்ப்பது ப்ராமாணிகர்களுக்குத்தகுதியோ? ஸ்தாவாத் என்கிறபாடத்தை ஸ்பஷ்டமாக காட்டியிருக்கிற தத்வடீகையும் இவர்க்கு அஜ்ஞாதசரமாயிருக்க, அதிலுள்ள 'அபவாத நிராஸ:' என்கிற ஸ்ரீஸூக்தியின் பொருளையுணராது ஆரோபிப்பது என்னே? ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தியில் "ப்ருந்தாவனத்தில் அச்சிட்ட ஸ்ரீபாஷ்ய புஸ்தகத்தில் வ்யதிவ்யஸ்தாவஸ்தாவாத் என்றே மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. இது விஷயம் ஸ்ரீ அனந்தாண் பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமியிடம் ப்ரஸ்தாவித்த காலத்தில் 'மேற்சொன்ன பாடம் பழைய தாளகோசங்களில் மாத்ரமல்ல, அச்சுப் புஸ்தகங்களிலும் முன்னமேயே அச்சிடப்பட்டிருக்

கின்ற' தென்பதைச் சொல்லி ஷ க்ரந்தத்தையும் எடுத்துக்காட்டினர். இத்தால் ஸ்ரீ அண்ணங்கராசாரியாரநுக்ரஹித்த பாடமே பெரியோர்கள் திருவுள்ளமாகக் காணப்படுகிறது. இவ்வாறிருக்க அபத்த பாடத்தை ஆதரித்து அதை ஸமர்த்திக்க முன்வருவது ஆரியர்கட்கு அழகன்று என்பதை ஸவிநயம் தெரிவித்துக் கொள்கிறேன்—இங்ஙனம், பத்ராதிபர்." என்று சென்ற ஆவணி மாதத்திலேயே வெளிவந்திருப்பதைக் கடாக்ஷித்துவைத்தும் மநஸ்ஸாக்ஷ்யத்திற்குச் சிறிதும் பொருந்தாத இவ்விஷயத்தில் இன்னமும் வீண் க்ரந்த விஸ்தாரம் செய்து கொண்டிருக்குமிவர் "அண்ணங்கராசாரியர் எடுத்துக்காட்டுவதையா நாம் அங்கீகரிப்பது" என்கிற ஒரு ஆக்ர ஹத்தைமாத்திரம் கைப்பற்றினவரென்பதை அனைவரும் எளிதில் அறியலாமாதலால் *அத்யமே மரண விஷயத்தில் இவர் செய்தருளும் ப்ரஸங்கங்களும் இதற்குத்தோள்தீண்டிகளே யென்னத் தடையுண்டோ?

ஶாஸ்த்ரத்தில் ஶாஜமானவ்யுத்பத்தியும் ப்ராமாணிகத்வமும் பரிக்ஷிக்கப் படவேண்டில் இந்த ப்ரதிப்ரஸவ விஷயமொன்றையே எடுத்துக்கொண்டு நிர்த்தாரணம் செய்யப்போதும். தத்வடீகையில் "அபவாதநிராஸ:" என்று ஸாதித்திருக்கையாலே பாயகபாய நமே பொருளாக வேண்டுமென்கிற இந்த ஸ்வாமியைக் கேட்போம். நிராஸ: என்பதற்குமுன்னே அபவாத: என்றுள்ள பதத்திற்கு என்ன அர்த்தம் க்ரஹித்தருளியிருக்கிறது? அந்த சப்தத்தின் நிஷ்பத்திஸ்வரூபம் எங்ஙனே? பாயகமென்னும் பொருளில் நிஷ்பத்தியா? பாயநமென்னும் பொருளில் நிஷ்பத்தியா? இரண்டிலும் நிஷ்பத்தியாக யோக்யதையுண்டென்னில்; நிக்ஷேபரக்ஷாஶாஸ்த்ரத்திற்கு எப்பொருளில் ஸ்வரஸப்ரவ்ருத்தி? ஆராய்ந்து அருளிச்செய்யவேணும்.

பாயகம், பாயநம் என்கிற ஶப்தபேதத்தினுல் ப்ரக்ருதஸ்தலத்தில் இவர்க்கு ஸித்திக்கும் லாபம் அணுமாத்திரமும் தேருது. பாயக பாயக ஶாஸ்த்ரத்திலும் தத்பரமாகையன்றிக்கே பாயக பாய நலக்ஷண ஶாஸ்த்ரகூடத்தில் மாத்திரமே தத்பரமாகவல்ல ஶப்தவைஷம்ய மிருந்தாலும் அது பாயக பாயக ஶாஸ்த்ரவசனமாகவே வஹித்து நிற்குமென்பது ஶாஸ்த்ரவாஸஜ்ஞ மஹான்களுக்குத்தான் தெரியும். இவர்தாம் தம்முடைய முதல் க்ரந்தத்திற்கு ப்ரம நிராஸ: என்று பெயரிட்டுள்ளார். நிராஸ: என்பதற்கு நிராவஸ்கரம் என்றுதான் பொருள்தேறிநிற்கும். இவ்விஷயத்தைப் பிறகு யதாவகாஶம் ஶாஸ்த்ரநிதர்ஶநங்களுடனே பண்டிதர்களுக்குப் பரமத்ருப்திகரமாக நிரூபிப்போம். ச்ருதப்ரகாசிகா ஸ்ரீஸூக்தி ஸந்நிவேஶ விருத்தமாகவும் தத்வடீகா கண்ணோக்கிவிபரீதமாகவும் எழுதியுள்ளாரிவர் என்பதை மாத்திரம் இங்குக் காட்டவந்தோம்.

ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயஸ்தர்களான வித்வான்கள் அடியேனுடைய உக்தி ஏதுவாயினும் அதை மறுத்தே தீரவேணுமென்கிற நிர்ப்பந்தமுடையவர்களாயிருந்தும் இவ்விஷயத்தில்மாத்திரம் யாதும் மறுப்புக் கூறமாட்டாமல் ப்ராமாணிகஸரணியை அவலம்பித்து அடியேனது உத்போதநத்தை முடிமேல் எற்றூர்களென்பது வேதாந்த தீபிகாதிகளில் ப்ரஸித்தமே. அன்னார்க்குள்ள ப்ராமாணிகத்வமும் இந்த ஸ்வாமிக்கு அமையாதது அதிசயமே.

இந்த வ்யுத்பத்திவிஷயத்திற்குமுன்னே அடியேன் *ஸம்ஸ்காரவநாமஸம்கா* என்கிற ஸம்ஸ்கார விஷயத்தையும் ப்ரஸ்தாவித்திருக்கிறேன். அவ்விஷயத்திலும் இவர் தமது வாக்ஜாலவிஜம்பணங்களைக் காட்டியருளாதுவிட்டது ஸ்ரீபாஷ்யத்திற்குண்டான ஸாமர்த்ய விசேஷமே போலும். அடியேன் ஸ்வதந்திரனாய்த் திருத்தாமல், ஏற்கனவே உள்ளதாய் மறைந்து கிடப்பதான பாடங்களையெடுத்துக்காட்டுமவற்றிலும் அஸூயாதிகளாலே வீணான ஆரவாரங்களைச் செய்தருளாநின்றாரிவர் என்று மஹான்கள் கண்டு கொள்ள இவ்வளவு போதாதா?

அடியேன் ஸம்ப்ரதாய விஷயங்களையெல்லாம் எழுதிவிட்டு அவற்றை மஹநீயர்திறத்திலே ஆரோபணம்பண்ணி விடுவதாக இந்த ஸ்வாமி நிரூபிக்கிறார். இங்குக் கேண்மின் ;— *புரிவதுவும் புகைபூவே என்றவிடத்து ஈட்டில்— "அகிற்புகை கருமுகைப் பூ என்று விசேஷியாமையாலே ஏதேனும் புகையும் ஏதேனும் பூவும் அமையும். செதுகையிட்டுப் புகைக்கவமையும், கண்டகாலியிடவுமமையும் — என்று பட்டர் அருளிச்செய்யும்படி : இத்தை பட்டர் அருளிச் செய்தவாறே *நகுணகாலிகாவதூஷம் தைவாயவிநிவேதயேத்* என்னாநின்றதேயென்று நஞ்சீயர்கேட்க, அவனுக்கு ஆகாதது என்கிறதல்ல ; பறிக்கிற ஆச்ரிதன் கையிலே முட்பாயும் என்றதுக்காகத் தவிர்த்ததுகாணும் என்றருளிச் செய்தார்." என்கிற ஸ்ரீஸூக்திகள் உள்ளன. இதைக்கண்ட ஸ்ரீ பரகாலஸ்வாமி தமது பன்னிரண்டாயிரப்படியில் — "ஸமுத்ரஸமுத்ராதி நிஷேதகங்களான *நகுணகாலிகேத்யாதி வசநவிரோதத்தாலும் மூலவிரோதத்தாலும் இங்கு முப்பத்தாறாயிரத்திலுள்ள அதிவாதம் அநாதரணீயம்" என்றெழுதிவைத்தார். இதனால் நம்பிள்ளை தாமாகவே ஒரு அபார்த்தத்தைப் பேசிவிட்டு அதை பட்டர்மேல் ஆரோபித்து விட்டார் என்கிற தூஷணமே பலித்துநிற்கும். இத்தகைய தூஷணங்களுக்குப் பூருவாசாரியர்களை இலக்காகுங்போது அடியேனும் இலக்காவதில் என்ன வியப்பு?

இத்தகைய புராணங்களெல்லாம் கிடக்கட்டும். ப்ரஸ்துதமான *அத்யயே விஷயத்தில் விபுலதமமான வாதங்கள் பறனற்றவை. **215** பக்கமல்லாமல் **2150000** பக்கம் இவர் எழுதினாலும் இவருடைய வாதம் அஸமஞ்ஜஸமென்

பதை அடியேன் சுருக்கமாகவே காட்டுவேன். இந்தச்லோகத்தின் ஸந்நிவேசம் 'அத்ய மே மரணம் வா' என்றா? 'அத்ய மே தரணம் வா' என்றா? உண்மையான பாடம் எது? என்று ஆராய்ந்து நிஷ்கர்ஷிக்கவேண்டுவது முதற்காரியம். அத்ய மே மரணம் வா என்கிற பாடம் தவிர வேறு விதமான பாடம் கிடையாது. பூருவர்கள் கையாண்டபாடமும் இதுவே; இந்தஸ்வாமிதாமும் பரித்ராணத்தில் அஸக்ருத் காட்டியிருக்கும் பாடமிதுவே. வடதேசத்துப் புத்தகமொன்றில் அத்ய மே தரணம் வா என்கிற பாடமும் காண்பதாக இவர் எழுதியிருந்தாலும், நம் ஆசார்யர்கள் கோஷ்டியில் அது சிறிதும் தலைகாட்டாத பாடமென்பதை இவர் தாமே அங்கீகரித்தருளுகிறார். பல பல விடங்களில் மயொவமும் பல பல பாடபேதங்களையும் விடாமல் பதிப்பித்திருக்கின்ற மஹான்கள் (நமது நாட்டில்) ஒரு புத்தகத்திலும் அத்யமே தரணம் வா என்கிற பாடமொன்று இருப்பதாகச் சிறிதும் காட்டாமை யாலே அந்தப் பாடம் *இத்தை முடித்தல் போலவே இடையிலே வந்ததத்தனே. வால்மீகி அருளிய பாடம் அப்படியாகவேயிருந்து, அத்ய மே மரணம் வா என்கிற பாடந்தான் இடையிலே வந்து புகுந்தது என்று ஸாதிக்கப் பூர்வ பக்ஷிகளுக்குத் திருவுள்ளமாகில் அப்படியேஸாதிப்பது. வால்மீகி வாக்கில் ஏதேனுமொரு பாடம் வெளிவந்திருக்குமேயல்லது இரண்டும் வெளிவந்திருக்கமாட்டாதே. இற்றை முடிதலா, இத்தை முடித்தலா என்று நிஷ்கர்ஷிப்பதற்கு முன்னமே இந்தப் பாட நிஷ்கர்ஷம் அத்யாவச்யகம். அத்ய மே தரணம் வா என்றுதான் வால்மீகி வாக்கில் வந்தது என்று உறுதி செய்துவிடில் உடனே அடியேனுக்கு இங்குக் கைகூப்பி நிற்பது தவிர வேறுபணியில்லை. அப்போதும் மரணம் ஸாகரஸ்ய வா என்கிற ஸ்தானத்தில் சோஷணம் ஸாகரஸ்ய வா என்று இருந்திருக்கவேணுமேயல்லது மரணபதம் விழுந்திருக்கத்தகுதியேயில்லை இத்தியாதிவாதங்கள் ஸஹ்ருதயரக்ஷங்க ளேயாயினும் அவற்றை அடியேன் விட்டிட்டுத் தலைவணங்கி நிற்கத்தடையே கிடையாது. ஈட்டு ஸ்ரீகோசம் முதலிய பலவற்றில் காண்கிற அத்ய மே மரணம் வா என்கிற பாடம் தவறுதான் என்று இவர்தாமே ப்ரசுரம் செய்துவிடுக.

அங்ஙனன்றிக்கே, அத்ய மே மரணம் என்பதுதான் உள்ளபாடம் என்னில்; பூர்வபக்ஷிகள் கூறும் பொருள் எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் தலைமடிந்தே நிற்குமென்பது திண்ணம். இந்தப் பாட நிர்த்தாரணம் எமக்கு அநாவச்யகம் என்றும், பாடம் எப்படியிருந்தாலும் மரணபதத்திற்கு ஸாகரத்தோடேதான் அந்வயம் என்றும், இது ஸம்பந்தமான நிர்த்தாரணத்தில் மாத்திரமே எமக்கு நோக்கு என்றும் இந்த ஸ்வாமி ஸாதிப்பரேல், அத்ய மே மரணம் வா என்கிற பாடத்திற்கு இவர் கூறும் அந்வயமும் பொருளும் அஸங்கதம், அத்யந்தமஸங்க தம், அதிதராமஸங்கதம் என்பது எற்றைக்கும் வெற்றி பெற்றே நிற்குங்கிடீர். பூர்வபக்ஷப்பொருள் பெருமாள் ப்ரக்ருதிக்குச் சேருமா? பிரகரணத்திற்குச் சேருமா? என்கிற கேள்விகளை அடியோடு மறந்திடுவோம். வால்மீகி முனிவரின்

கவித்திறமைக்குச் சேராது என்பதொன்றையேகொண்டு பூர்வபக்ஷிகளின் வாதத்தை அடியறுப்போம்.

இதை நாம் இப்போது புதிதாக ப்ரஸ்தாவிக்கின்றோமல்லோம். முன் க்ரந்தங்களில் பலகாலும் பன்னிப் பன்னிப் பேசியேயிருக்கிறோம். அவற்றுக்கெல்லாம் ஆஸூரிஸ்வாமி வெகு அவலீலையாக உத்தரம் எழுதியுள்ளார். பக்கம் 68ல்—"வாளா பேயர்தாம் பேசும் பேச்சேயாம்" என்று நிகமித்துள்ளார். வால்மீகிமுனிவர் ஸ்ரீராமாயணமியற்றும்போது அத்ய மே மரணம் வா என்கிற ஆநுபூர்வியையே அமைத்தாரென்று அடியேன் ஸித்தாந்தம் செய்துகொண்டதாகவும், அது அடியாகவே இற்றைமுடிதல் என்று அடியேன் திருத்தப் புகுந்ததாகவும் எழுதி, இது உன்மத்தப்ரலபிதம் என்று முடித்து விட்டார். இங்கு அவருடைய வாக்கியங்களையும் காட்டுகிறோம்;—"வால்மீகி ஸ்ரீராமாயணமியற்றும் போது *அத்ய மே மரணம் வாத தரணம் ஸாகரஸ்யவா* என்றே இயற்றினராக ஸித்தாந்தித்துக்கொண்டு அதடியாக *அத்ய மே தரணம்* இத்யாதியாக மஹர்ஷி சொல்லாமையை ப்ரதானஸாதனமாக்கி..............பேசுவதும் வாளா பேயர்தாம் பேசும் பேச்சேயாம்." என்றவிவை ஆஸூரிஸ்வாமியின் திவ்யஸ்ரீ ஸூக்திகளாம். இவற்றால் என்ன தேறிற்று என்பதை விவேகிகள் ஊன்றி நோக்கவேணும். வால்மீகிமுனிவர் *அத்ய மே மரணம்வா* என்கிற ஆநுபூர்வியாகவே இயற்றினரென்று ஸித்தாந்தம் செய்துகொள்வது கூடாது என்றும், *அத்ய மே தரணம் வா *என்றும் அவர் இயற்றியிருக்கக் கூடுமாதலால் அந்தப்பாடத்தைப் பற்றிக்கொண்டே ஆசாரியர்கள் "இத்தை முடித்தல் கடத்தல்" என்று அருளிச் செய்திருப்பர்கள் என்றும் இந்தஸ்வாமி திருவுள்ளம் பற்றியிருக்கின்றமை ஸுஸ்பஷ்டமாகின்றது.

வால்மீகிமுனிவர் இயற்றினது *அத்ய மே மரணம் வா* என்கிற ஆநுபூர்விதான் என்று நிர்ணயமாகும்பக்ஷத்தில் "இத்தை முடித்தல்" என்பது அஸம்பாவிதந்தான்—என்கிற திருவுள்ளம் இந்த ஸ்வாமிக்கு உள்ள தென்பது நன்கு விளங்குகின்றது. நிரூபகர்கள் இவ்விஷயத்தை நன்கு நெஞ்சிற் கொள்ளவேணும். பூர்வபக்ஷக்ரந்தத்தில் பக்கம் 68-ல் முதலிலுள்ள எழு வரிகளை மாத்திரம் நன்கு நோக்கி 'ஆஸூரிஸ்வாமியின் திருவுள்ளம் இங்ஙனேதான்' என்பதைத் திடப்படுத்திக்கொள்ளவேணும். வால்மீகியின் திருவாக்கில் ஏதேனும் ஒரு வகையான பாடம் வந்திருக்குமேயல்லது இரண்டுவகையான பாடமும் வந்திருக்க அவகாசமே கிடையாதென்பதும் அவிவால்யம். நம் ஆசார்யர்களின் பரம்பரையில் எவ்வகையான பாடம் வந்ததோ அதுதான் வால்மீகியின் திருவாக்கில் வந்ததாக நாம் நிச்சயிக்கக் கடமைப் பட்டவர்கள். நம் ஆசார்ய பரம்பரையில் வந்த பாடம் எது? என்பதை நிர்ணயிக்க நாம் சிறிதும் சிரமப்பட வேண்டாமல் ஆஸூரி ஸ்வாமிதாமே தமது நூலில் பக்கம் 67-ல் (கடைசி பாராவில்) *நம்மாசார்ய பரம்பரையிலே வந்த பாடம் *அத்யமே மரணம்* இத்யாதிதான்

என்று எழுதியுள்ளார். அந்தப் பாடத்திற்கே இத்தை முடித்தல் என்கிற பொருள் பொருந்தத் தடையில்லை என்று இந்த ஸ்வாமி நிரூபணம் செய்தருளியிருந்தால் தமது வாதம் ஓங்குவதற்கு வழியுண்டாகும். அந்த நிரூபணத்தில் இந்த ஸ்வாமி சிறிதும் ப்ரவர்த்திக்கவில்லை. இதுமாத்திரம் இவருடைய நிரூபணநைபுண்ய நிவேதகமாகவுள்ளது. *வாக்யஜாதவிஸ்யக்தஜோ பவு வாது* என்பது சாஸ்த்ரஜ்ஞஸம்மதமாகையாலே அத்ய மே மரணம் வா என்று பாடக்ரமமிருந்தாலும் மாற்றி அந்வயித்துக் கொள்ளலாம்—என்று சிலர் கூறும் கூற்றிலே இந்த ஸ்வாமியும் அந்வயியாததுபற்றி நாம் பரமஸந்தோஷமடைகிறோம்.

பகவத்பாகவதாசார்யக்ருபையாலே ஆழ்வாரிஸ்வாமி ப்ராமாணிக ஸரணியில் பெரும்பாலும் ப்ரவேசித்தருளியுள்ளார். (அதாவது) இத்தை முடித்தல் என்கிற அர்த்த விவரணம் அத்ய மே மரணம் என்கிற பாடத்திற்கு இணங்காதுதான் என்பதை இசைந்தருளியிருக்கிறார் என்பது ஒன்று; நம் ஆசார்ய பரம்பரையில் *அத்ய மே மரணம் வா* என்கிற பாடந்தான் வந்திருக்கிறது என்பதை அபலபியாமல் எழுதியிருக்கிறார் என்பது மற்றொன்று.—ஆக இவ்விரண்டு விஷயங்களிலும் இவருடைய திருவுள்ளம் நன்னெறியை விட்டுச் சிறிதும் நீங்காதிருப்பது நிபுண நிரூபகர்களால் திண்ணமாகக் குறிக்கொள்ளத் தக்கது. இங்ஙனேயானபின்பு, இத்தைமுடித்தல் என்கிற பாடமே யுக்தம் என்று ஸமர்த்திக்க இந்த ஸ்வாமி ப்ரயாஸப்படுவது எவ்வளவு ஸமஞ்ஜஸம் என்பதை புத்திமான்கள் ஊஹிக்கலாம்.

இப்படி அடியேன் எழுதுவதை இந்தஸ்வாமி கடாக்ஷித்தருளி என்ன ஸாதிக்கக்கூடுமென்றால், *அத்ய மே மரணம் வா* என்பதுதான் நம் ஆசார்ய பரம்பரையில் வந்தபாடம் என்பதை மாத்திரம் நான் எனது நூலில் எழுதியிருக்கின்றேனேயன்றி, அந்தப்பாடத்திற்கு இத்தை முடித்தல் என்கிற அர்த்தம் இணங்காதென்று நான் எழுதியிருக்கவேயில்லை—என்று ஸாதிக்கக் கூடும். இது உண்மைதானா என்பதை நிரூபகர்கள் நோக்கவேணும். இதற்காக இந்தஸ்வாமியின் க்ரந்தத்தில் **215** பக்கங்களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியமில்லை. பக்கம் **67**-ல் உள்ள கடைசி பாராவை மாத்திரம் பார்த்தால் போதுமானது. *அத்ய மே தரணம் வா* என்கிற பாடமும் காணப்படுதலால் அப்பாடத்தை அநுஸரித்து இத்தை முடித்தல் என்று வியாக்கியானம் அவதரித்திருக்கக்கூடுமாகையாலே திருத்தம் வேண்டியதில்லை—என்கிற அபிப்ராயத்தையே இவர் அங்கு ஸூசிதமாகக் காட்டியுள்ளார். நம் ஆசார்ய பரம்பரையில் வந்த பாடம் அத்யமேமரணந்தான் என்று எழுதினவுடனே, பாடாந்தரத்தை யநுஸரித்து ஆசாரியர்கள் வியாக்யானம் செய்திருக்கலாமென்கிற விதத்தையும் எழுதியுள்ள இந்தஸ்வாமியின் திறமையைப்பற்றி அந்தோ! நீசனேன் என் சொல்வது!

*[illegible]।
[illegible].*

ஆசாரியர்கள் தாங்கள் ஆதரித்த பாடம் வேறாகவும், அவர்களின் வியாக்கியானத்திற்கு அநுகூலமான பாடம் வேறாகவும் இங்ஙனேயொரு அற்புதத்தைக் காட்டாநின்ற இந்த ஸ்வாமி தமது நூலுக்குப் பூர்வநிர்வாஹபரித்ராணம் என்று திருநாமமிட்டுச் செய்தருளும் பரித்ராணத்தின் பரிசு சாலவும் வியக்கத்தக்கதே. உண்மையில் அடியேன் இந்த ஸ்வாமி திறத்து ஒரு விஷயத்திற்கு மாத்திரம் உள் குழைந்து உருகிப்பிடிபட்டுத் திருவடிகளில் ஸாஷ்டாங்க ப்ரணிபாதம் செய்து நிற்கிறேன். அதாவது— அத்யமேமரணம் என்கிற பாடத்திற்கே இத்தை முடித்தல் என்கிற பொருள் பொருந்தக் குறையில்லை யென்னும் பரமஹேயவாதத்தில் இந்த ஸ்வாமி சிறிதும் ப்ரவர்த்தியாமலிருப்பதுண்டே, இஃதொன்று இவருடைய ஆழ்ந்த அறிவையும் ப்ராமாணிகத்வத்தையும் புலப்படுத்துகின்றது.

ஆரியர்காள்! பூருவர்களின் பாடத்தை அடியேன் திருத்துவதாக இந்த ஸ்வாமியும் திருவுள்ளம் பற்றுவது அழகியதன்று. நேற்று *சித்திரையில் செய்ய திருவாதிரைத்திருநாளைத் திருநாராயணபுரத்தில் ஸேவிக்க அடியேன் அங்கு விடைகொண்டிருந்தபோது அவ்விடத்து ஸம்ஸ்க்ருத மஹாவித்யாலயத்துப் புத்தகபாண்டாகாரத்தில் சேமித்துவைக்கப்பட்டுள்ள ஸ்ரீதாளகோசங்களில் ஈடு முப்பத்தாறாயிரம் இருப்பதறிந்து தத்யக்ஷர்களின் க்ருபையினால் அந்த ஸ்ரீகோசத்தையெடுத்து ஸேவிக்கப்பெற்றேன். அதில், "இத்தைமுடித்தல் ஸாகரத்தைக் கடத்தல்" என்கிற பாடம் காணப்பட்டது. (இந்த ஸ்ரீகோசம் அந்தப் புஸ்தக•பாண்டாகாரத்து ஸ்ரீதாளகோசச்ரேணியில் **137** நம்பர் உடையது. இந்த ஸ்ரீகோசத்தை அடியேன் ஸேவிக்கும்போது அங்குப் பல வித்வான்கள் கூடியிருந்தனர். அனைவரும் இதைக் கண்டார்கள். முக்கியமாக (ஷ புஸ்தக பாண்டாகாரத்தின் அதிபதியான) ஸ்ரீ உவே. ஸ்ரீரங்கம் ஸம்பத்குமாராசார்யர் ஸ்வாமி, மண்டயம் ஆழ்வார் திருமலை ஐயங்கார் ஸ்வாமி, பிரதிவாதி பயங்கரம் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி, அ. மு. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி ஆகிய இந் நான்கு திருநாமங்களும் ஸாக்ஷிகளாக அங்குக் கொள்ளப்பட்டார்கள். இதில் ஸந்தேஹமிருந்தால் அப்பாடசாலை அத்யக்ஷர்க்கும் புஸ்தகாலய அத்யக்ஷர்க்கும் எழுதி உண்மையைத் தெரிந்துகொள்க.)

"மேற்குறித்த தாளகோசத்திலும் இத்தைமுடித்தல் என்றுதானேயுள்ளது; இதனால் என்ன ஆநுகூல்யம்?" என்று நிபுண நிரூபகர்கள் நினைப்பார்கள். சில ஹ்ருதயஜ்ஞர்கள் நினைக்கக்கூடும். அவர்களுக்கு அறிவிப்பதாவது— இத்தைமுடித்தல் கடத்தல் என்று அச்சுப்பிரதிகளில் காண்கின்றபடியன்றியே இத்தை

முடித்தல் ஸாகரத்தைக் கடத்தல் என்றுள்ளதான இப்பாடத்தில் ஸாகரத்தை என்கிற பதம் பொருந்தவேணுமானல் அதற்கு முன்னே இற்றைமுடிதல் என்றே இருந்திருக்கவேண்டும். இத்தை என்றே இருந்திருக்குமானல் அதற்கு 'ஸாகரத்தை' என்றே பொருளாதலால் மீண்டும் ஸாகரத்தை என்றிருப்பது பொருந்தவேமாட்டாது. ஸாகரத்தை என்கிற பதம் ஸ்பஷ்டமாகவேயிருப்பதால் அதற்கு முன்னே இத்தை என்கிற சொல் ஒருகாலும் இருந்திருக்க ப்ரஸக்தியே கிடையாது. ஸாகரத்தை முடித்தல் இத்தைக் கடத்தல் என்றிருந்தாலாவது ஒருவாறு பொருந்தும்.

அதே புஸ்தகபாண்டாகாரத்தில் 147 நம்பருள்ள மற்றொரு ஓலை ஸ்ரீகோசமும் (௬௫) உள்ளது. அதில் இத்தைமுடித்தல்கடத்தல் என்றுதானுள்ளது. இந்த ஸ்ரீகோசத்தைவிட முன்பு கூறிய ஸ்ரீகோசம் புராதனம் என்று எழுத்துகளின் ஸந்நிவேசத்தினல் நன்கு தெரிகின்றது.

“ஸாகரத்தை என்று அதிகமாகக் காண்கிற பதம் தவறு என்று சொல்லிவிடுகிறோம்” என்றோ, “இற்றைமுடிதல் என்கிற பாடம் இருப்பதாகக் காட்டாமையாலே இது அப்ரயோஜகம்” என்றோ பூர்வபக்ஷிகள் சொல்லிவிடக்கூடும். அவர்கள் சொல்லுவது எதுவானல் நமக்கென்ன? ‘ப்ரக்ருதவிவாத ஸ்தலத்தில் ஓலை ஸ்ரீகோசமேபிடித்து ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது’ என்று நிர்ணயிப்பதற்கு இஃதொரு சிறந்த சான்று. அத்திருநாராயணபுரத்தில் உபயவேதாந்த ப்ரவர்த்தகராய், தர்க்க சாஸ்த்ரத்தில் மஹாவித்வானுய், கலாசாலைத் தலைவராய் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை எம்பெருமானர்ஸ்வாமி இந்தவிசாரங்களைக் கேட்டருளி “அத்யமே மரணம் என்பதை ஸாகரஸ்ய மரணமாக்கி அர்வயிப்பதிற்காட்டிலும் விபரீதம் இவ்வுலகிலேயே வேறுகிடையாது” என்று அருளிச்செய்தார். அருகேயிருந்தவொருவர் “பூர்வாசார்யர்கள் அப்படி அந்வயித்திருக்கிறார்களாமே” என்றார். அதற்கு அந்த ஸ்வாமி “நிஜஃஅவஷொஷஃ நிஃஷ்டெஷவி உவஷிணெஷு வஃவஷியஷீ” என்றருளிச்செய்தார்.

கூஷு.கூஈதஂ வூஷூஃ. பூர்வாசார்ய பரம்பரையில் யோந்த பாடம் அத்யமே மரணந்தான் என்று நம் ஆஸூரி ஸ்வாமி திண்ணமாக எழுதிவிட்டு, இத்தைமுடித்தல் என்கிற பொருள் அத்யமேதரணம்வா என்கிற பாடாந்தரத்திற்கே பொருந்தவற்று என்றும் காட்டிவிட்டு, இனி அவர் செய்தருளும் க்ரந்த விஸ்தரமெல்லாம் ஆகாசதாண்டவமே யாகுமென்பதில் இறையேனும் ஐயமுண்டோ?

இந்த ஸ்வாமியின்போக்கு இதுவானலும், இந்த அஸமஞ்ஜஸப் பொருளை ஸமர்த்திக்க ருசியுடையார் மற்றும் சிலருளராதலால் அவர்கள் ஒரு வாதம் செய்யக்கூடும். (அதாவது—) அத்யமேமரணம்வா என்கிற பாடத்திற்கு இத்தை முடித்தல் என்கிற பொருள் இணங்காதென்று ஆஸூரி ஸ்வாமி ஏதோ

மயங்கி எழுதிவிட்டார்; அவருடைய ஜல்பாதங்கள் கிடக்கட்டும்; அத்ய மே மரணம் என்றே ஆநுபூர்வியிருந்தாலும் இங்கு ஸமாஸவிபக்த்யாதிகளுக்கு இணங்க மரணதாரணபதங்களை மாற்றி அந்வயிப்பதில் குற்றம் குறையொன்றுமில்லை யென்றே நாங்கள் வலிதாக நின்று வாதிக்கிறோம்—என்று வரக்கூடும். அவர் களுக்குச் சொல்லுகிறோம்;— ※ஹஸிதம் ஹாஷிதம் சைவ மதியதா யதுசேஷ்டிதம்! தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபச்யதி※ என்று விலக்ஷணமான வரம் பெற்ற வால்மீகி பகவான் இராமபிரானுடைய திருவுள்ளக் கருத்தையும் ஸாக்ஷாத் கரித்தே ச்லோகமியற்றியுள்ளார். பெருமாள் மே மரண மென்று உத்தேசங்கொள்ளாதிருந்தாராகில் அத்ய மே மரணம் வா என்று வாக்யாநு பூர்வியை வால்மீகி அமைத்தது அவர்க்கு அத்யந்தம் அதமகவித்வத்தையே நிலை நாட்டி நிற்கும். வஸ்துதஃ அதமகவிகூட இப்படிப்பட்ட அசட்டுப்ரயோ கத்தை அமைக்கக் கருதான்.

"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்" என்கிற விதனை "விநா சாய ச ஸாதூநாம் பரித்ராணாய துஷ்க்ருதாம்" என்று மாற்றிப் பிரயோகிப்ப துண்டோ? இங்ஙனே மாற்றி ப்ரயோகம் கண்டால் அப்போது நிர்வஹிக்க வேண்டியபொருள் யாது? தசரதர்ஜடாயு போல்வாரான ஸாதுக்களின் விநாசத் திற்காகவும், காகாஸுரன் போல்வாரான துஷ்டர்களின் பரித்ராணத்திற்காகவும் என்று பொருள்கூற வேண்டியதாகுமத்தனையல்லது வேறொரு பொருளும் சொல்லப்போகாதிறே.

※ஸர்வதர்மாந் பரித்யஜ்ய※ என்றவிடத்தில் "மாமேகம் பரித்யஜ்ய ஸர்வதர்மாந் சரணம் வ்ரஜ" என்று அந்வயம் காட்டுவாருண்டோ? 'அங்ஙனே அந்வயம் காட்டவேண்டிய அவசியம் நேர்ந்தால் காட்டவுங்கூடும்' என்று கூறுமவர்கள் அங்ஙனே ஒரு இடத்தையாவது எடுத்துக்காட்டுவார்களாயின் நலமே. ஜம்பூ த்வீபே ஹாரதவர்ஷே ஹாரதவர்ஷே இதுகாறும் கிடையாதென்பது திண்ணம்.

※புண்யக்ருத் துஃகமாப்நோதி பாபக்ருத் ஸுகமச்நுதே※ என்கிறச்லோகத் திற்கு "புண்யக்ருத் துஃக்கம் ஆப்நோதி, பாபக்ருத் ஸுகம் அச்நுதே" என்று அந்வயம் கொண்டு "புண்ணியம் செய்பவன் துன்பத்தையடைகிறான், பாபம் செய்பவன் இன்பத்தையடைகிறான்" என்று பொருள் கூறலாமா? கூடாதா? என்று பாருங்கள். இப்பொருளில் யாதொரு பாதகமுமில்லை. [புண்ணியம் செய்கிற மஹான்களுக்கே துன்பங்கள் பெரும்பாலும் நேருவதும், பாவம் செய்கிற பாபிகளுக்கே இன்பங்கள் பெரும்பாலும் நேருவதும் உலகில் காணப் படுதலால் இப்பொருளில் குறைகூறமுடியாது.] ஆனால், உள்ளதான ச்லோக ஸந்நிவேசத்திற்கு இது பொருளன்று—என்று நிர்ணயிக்க ந்யாயமீமாம்ஸாதி பரிச்ரமம் தேவையில்லை.

கிம் வை ஹந்த? *நிஹத்ய ராவணம் ராஜா விபீஷணமபாலயத்* என்று ச்லோகமியற்ற அறியாதானொருவன் *ஹத்வா விபீஷணம் ராம: பாலயாமாஸ ராவணம்* என்று சுலோகமியற்றினால் அவனுக்கு என்ன பட்டம் கிடைக்குமோ அதுதன்னையே வால்மீகி முனிவர்க்கும் பெறுவிக்கப் பூர்வபக்ஷிகள் எத்தனை பாடுகள் பட்டாலும் அது வால்மீகிக்கு ஒருநாளும் கிடைக்கமாட்டாது. *ஹத்வா விபீஷணம் ராம: பாலயாமாஸ ராவணம்* என்று ச்லோகமிருந்தாலும் ப்ரஸித்தமான இதிஹாஸத்தையநுஸரித்து ‘ராம: ராவணம் ஹத்வா விபீஷணம் பாலயாமாஸ’ என்று அந்வயிக்கத் தடையேகிடையாதென்று வாதிக்க முன்வரும் மேதாவிகளுக்கு நம் பூர்வபக்ஷிகள் ‘கிம் கநிஷ்டா: கிம் ஜ்யேஷ்டா:’ என்னும்படியான நிலைமையைப் பெறுதற்கு இடையூறு ஏதுமில்லை. உச்யதே ஸாவதாநம். ப்ரக்ருதத்தில் ஸாமாநாதிகரண்யமென்பதே ஸ்ரீராமபிரானுக்கும் வால்மீகி பகவானுக்கும் விவக்ஷிதமாயின் அத்ய மே மரணமென்று அச்லீலார்த்த போதகமாக ச்லோகஸந்நிவேசம் இருப்பது கவிவரர்க்கு அஸாமர்த்யத்தையே நிலைநாட்டுவதாகுமென்கிறவிது பதினாயிரம் பிறவி பிறந்தாலும் பூர்வபக்ஷிகளுக்குப் பரிஹரிக்கவொண்ணாததேயாம். ச்லோகமியற்றின வால்மீகிதாமே நேரில் எழுந்தருளி “ஸாகரஸ்ய மரணம் என்கிற அந்வயத்தைக் கருதியே நான் அத்ய மே மரணம் என்றியற்றினேன்” என்று சோதிவாய்திறந்து சொன்னாலும் வித்வான்கள் விலவறச் சிரிப்பர்களேயல்லது சிறிது முகவார்கள்.

இனி, ஆஸூரிஸ்வாமி (பக்கம் **67**-ல்) “அத்ய மே தரணம் இத்யாதியான பாடம் அநேககோசங்களில் காண்கிறது” என்றும், “அதற்கு நிதர்சநமாக நெடுநாளைக்கு முன்னே வடதேசத்தில் ராமாபிராம வியாக்கியானத்துடன் அச்சிடப்பட்ட ராமாயண கோசத்தில் அத்யமே தரணமென்கிற இப்பாடத்தை ஸுஷ்டாவி காணலாம்” என்றும் எழுதியுள்ளவற்றை விமர்சிப்போம். ராமாபிராமவியாக்கியான மென்பது ப்ரஸித்தமான திலகவியாக்கியானமேயல்லது வேறல்ல. பம்பாய் நிர்ணயஸாகர முத்ராலயத்தில் அந்தத் திலகவியாக்கியான மொன்று மாத்திரம் மூலத்துடன் அச்சிடப்பட்டிருப்பதும், அதில் அத்ய மே தரணம் என்கிற மூலபாடமிருப்பதும் உண்மையே. அந்தப்பாடத்தை அடியொற்றியே திலகவியாக்கியானமும் [ப்ரொவேஷநவ்ருணாயாமில்லாமல்] யதாயதம் நிரூபித்துப் பொருள் விவரித்துளது. “நம் ஆசார்யர்களின் கோஷ்டியில் அந்தப்பாடம் இல்லைதான்” என்று இவரே எழுதிமுடித்தபின்பு அதை யெடுத்துக் காட்டுவதில் யாது பயன்?

நநு, ஸாமாநாதிகரண்ய மென்னும் வார்த்தையே ஸர்வாத்மநா அநுபபந்நம் என்கிறவர்களுக்கு அந்தப் பாடத்தில் மாத்திரம் அநுபபத்திக்குப் பரிஹாரம் வந்துவிடுமோ என்னில்; உச்யதே.

அத்யமே தரணம் என்கிற பாடம் யுக்தமென்று நாம் கனவிலும் கருதகில்லோம். சிஷ்ட பரிக்ரஹமில்லாத பாடம் வஸ்துதஃ ஸூக்ஷ்மமாயிருந்தாலுங்கூட சிஷ்டபரிக்ரஹ விரஹாதேவ ஹேதோஃ த்யாஜ்யமாயிருக்க, ப்ரக்ருதத்தில் தோஷ ஸம்பந்தத்தையும் சிஷ்டபரிக்ரஹ வைதுர்யமுமுள்ள அந்தப்பாடத்தை நெஞ்சாலும் நினைக்க ப்ராப்தியில்லை. "அநேக கோசங்களில் அந்தப் பாடம் காண்கிறது" என்று இவர் எழுதுவது விப்ரலம்பமேயாகும். வயம் ச நாம் பல தேசங்களில் பதிப்பிக்கப்பட்ட பலபல பிரதிகளையும் ஸம்பாதித்துப் பார்த்தோம். எதிலும் அத்ய மே மரண பாடந்தவிர வேறுகிடையாது.

காஞ்சியில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமத் உவே. பண்டித. ஸ்ரீ. கு. அனந்தாசார்யஸ்வாமி ஸ்ரீராமாயணத்தைத் தமிழ்ப் பொழிப்புரையோடு பதிப்பித்து வரும்போது ப்ரக்ருத விவாதாஸ்பத ச்லோகத்திற்குப் பொருள் எழுதுகையில் முதலில் யதாக்ரமமாகவே யெழுதினர். அப்போது அவர்தாம் எழுதுவதைப் பெரும்பாலும் அடியேனுக்குக் காட்டுகிற வழக்கத்தின்படி இதையும் காண்பித்தார். அதைப்பார்த்த அடியேன் "ஸாகரஸ்ய மரணம் என்று அந்வயித்துச் சிலர் பொருளுரைக்கிறார்களே, அப்படி தேவரீர் என் எழுதவில்லை?" என்று ஸாதாரணமாக வினவினேன். "அப்படியும் சிலர் அந்வயிக்கிறார்களா என்ன?" என்று கேட்டார். ஈட்டு அரும்பதங்களையெடுத்துக் காட்டினேன். இந்த ஸ்வாமி குணக்காம்பாக்கத்தவராதலால் அவ்வூர் ஜீயர் ஸ்வாமியின் அரும்பதத்தில் அபிமானம் வைத்து அந்தப் பொருளையே ஆதரிக்க ஆசைகொண்டார். ஆனாலும், அத்ய மே மரணம் வா என்கிற பாடத்திற்கு இந்தப் பொருள் ஒருநாளும் சேராது என்பதை மாத்திரம் சிக்கனக் கொண்டு தமது பதிப்பில் மூலத்தையும் 'அத்ய மே தரணம்' என்றே நிவேசித்துவிட்டார். ஆக இப்புத்தகமொன்றிலும் முன்பு காட்டிய பதிப்பொன்றிலுந் தவிர வேறு எதிலும் அத்ய மே தரண மில்லை.

மற்றும் பலபதிப்புகளிலும் இப்பாடம் உள்ளது என்றே கொண்டாலும், பகவத்கீதை ஸஹஸ்ரநாமம் முதலியவற்றில் நம் ஆசார்யர்கள் கையாளாததையும் சங்காராசார்யப்ரப்ருதிகள் கொண்டவையுமான பாடங்கள் நமக்கு எப்படி அநாதரணீயங்களோ அப்படியே இந்த அத்யமேதரணபாடமும் அநாதரணீயமாதலால் ஸதஸி உபந்யஸநீயம்.

இவ்வளவு நாம் நிரூபித்தான பிறகு, யதாகதஞ்சித் தங்களுடைய வாதங்களையே ஸ்தாபித்துக்கொள்ள விரும்பும் பூர்வ பக்ஷிகள் "நம் பூர்வாசார்ய பரம்பரையில் *அத்யமேமரண பாடமேதான் வந்திருப்பதென்று நாங்கள் எழுதினது பிசகுதான்; வால்மீகி வாக்கில் வந்ததும் எங்கும் பரவியிருந்ததும் நம் ஆசார்யர்கள் கையாண்டதும் அத்யமேதரணபாடந்தான்; அத்யமே மரணபாடம் தாளகோசங்களிலும் அச்சுப்பிரதிகளிலும் தவறுதலாக வந்து புகுந்திட்டது" — என்று வாதிக்கப்புகவேண்டும். 'இத்தை முடித்தல் பாடந்தான் பிராமாணிகம்'

என்று இவர்கள் ஸ்தாபிக்க வேண்டில் மேற்கூறியவிதமாக வாதிக்கவே முன்வந்து தீரவேண்டும். வேறுகதியில்லை. இந்தவாதத்தை இவர்கள் தாங்கள் ஸித்தாந்தமாக்கிக் கொண்டால் அதன் பிறகு ஸத்ருவத்வ்யபேக்ஷம் வக்ஷ்யாமஃ॥ அத்யமேமரணமென்கிற பாடத்தில் இத்தைமுடித்தலுக்கு அவகாசலேசமும் கிடையாதென்பது இவர்களுடைய எழுத்திலேயே ஸ்வீக்ருதமாய் விட்டபடியால் இனியிவர்கள் 'தடம் பொங்கத்தம் பொங்கோ' என்றும் 'குழமணி தூரமே' என்றும் கூவி உய்யவே கடமைப் பட்டவர்களாவர்.

இவ்விஷயத்தில் இதற்கு மேற்பட வக்தவ்யம் யாதுமில்லை. ஆஸூரி ஸ்வாமியின் பரித்ராணநூல்முழுவதும் காடுபாய்ந்த வாக்யார்த்தமே. அதற்கெல்லாம் விடையிறுத்துக்கொண்டு போதுபோக்குவது வ்யர்த்த காலக்ஷேபமேயாகும். ஆனாலும், அந்த ஸ்வாமி தம்மை அபூர்வசாஸ்த்ரஜ்ஞராக அபிமானித்து ஏதோ ஸர்வஜ்ஞகல்பமாய்ப் பலவிஷயங்கள் எழுதிவிட்டதாக ஆரவாரிக்கின்றமையால் அத்தனையும் வாசாமகோசர வாக்ய விததிகளே யல்லது வேறில்லை என்பதை விவேகிகளுக்கு நிரூபித்துக்காட்ட அடியேனும் குதூஹலமுடையேன். வஸ்துதஃ அது அஸ்மதாதீநாம் அநாவஶ்யகப்ரமேயமேயானாலும் விஷயஜ்ஞர்களிலுள்ள குதூஹலாதிசயத்தினால் மாத்திரம் "அந்த ஸ்வாமியின் வசநங்களெல்லாம் அசடு பிசடு தட்டிக்கிடப்பதல்லாமல் ஸாரமாகவுள்ள வசநம் ஒன்றுகூட இல்லை"யென்பதை நூல்விரிவுக்கும் கைவலிக்கும் அஞ்சாமலே பரக்க நிரூபித்தே விடுகிறேன். அந்த ஸ்வாமி தமது நூலில் எழுதியுள்ள விஷயம் இன்னதென்று ஒரு வித்வானும் தெரிந்து கொள்ளப்போகிறதில்லை. தாத்பர்யஸரணியில் அவர் எழுதியுள்ளதனால் அதைப் புகழவோ இகழவோ அதிகாரிகளில்லை. ஆகவே ஸஜ்ஜநமநோநந்திவிசேஷமான அந்த திவ்யக்ரந்தத்தை நோக்கி விரிவாக அடியேன் ப்ரத்யாக்யானம் பண்ணுவதும் விசேஷமாக உலகுக்குப் பயன்படாததேயாகும். ஆனாலும் அந்த ஸ்வாமியின் திருவுள்ளத்திற்காவது விஷயவுண்மைகள் தெரியட்டுமென்றே எழுத மனங்கொள்கிறேன்.

ப்ரக்ருத விவாதாஸ்பத ச்லோகத்தின் அந்வயக்ரமத்தையும் பொருளையும் நிர்ணயிக்கும் விஷயத்தில் அவை ஸம்பந்தப்பட்டவைகளல்ல. எந்த க்ரந்தத்திலும் ப்ரதாநவிஷயங்களோடு கூட ப்ராஸங்கிக விஷயங்களும் பல வந்து புகும். அப்படியே அடியேனுடைய தத்வப்ரதிஷ்டையிலும் ப்ராஸங்கிக விஷயங்கள் பல புகுந்துள்ளன. அவற்றில் அஸாமஞ்ஜஸ்யமிருப்பதாக ஆஸூரி ஸ்வாமி நிரூபித்தருளியுள்ளார். வஸ்துதஃ அந்த அஸாமஞ்ஜஸ்யங்கள் அடியேனுக்கு அபரிஹார்யமே என்றே வைத்துக்கொண்டாலும் ப்ரதாநப்ரமேயமாகவுள்ள விஷயத்திற்கு (ஸர்வதா) ஒரு அஸாமஞ்ஜஸ்யமும் வந்து புகுந்ததாக மாட்டாது. ததாஹி;—

ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவம் என்று ஸாதிக்கப்புகுந்த வொருவர் *ஸ்ரீமந்நாராயணஃ பரஃ தத்வஃ* என்று பிரயோகித்தாரென்று வைத்துக்கொள்

வோம். இந்த வாக்கியத்தில் பர: என்றது பிசகு, தத்வ: என்றது பிசகு என்று ஒருவர் கண்டனம் செய்திடுவராகில் இதனால் நாராயண பாரம்யஸாதநரூபமான ப்ரதாநப்ரமேயத்திற்கு யாதொரு இடையூறும் விளைந்ததாகாதிறே. இது போலவே அடியேனுடைய க்ரந்தத்தில் ப்ராஸங்கிகமாக எழுதப்பட்டுள்ள விஷயங்களுக்கு ஆஸுரிஸ்வாமியின் மறுப்பு கண்ணழிவற்றதென்றே கொள்ளப் படினும், *ஸாகரஸ்ய தரணம் வா மே மரணம் வா* என்கிற அந்வயமும் தத்ஸித்தமான இற்றை முடிதல் கடத்தலுமே நிரவத்யம்—என்று கொண்ட ப்ரதாந ப்ரமேயத்திற்கு யாதொரு க்ஷோபமும் இனி வந்து புகுந்திட ப்ரஸக்திலேசமுமில்லை என்பதை மாத்திரம் விவேகிகள் சிக்கனக்கொள்ளவேணும். **215** பக்கங்களாக அந்த ஸ்வாமி நிரப்பியுள்ள அதெல்லாம் பெரும்பாலும் ப்ரஸக்தாநுப்ரஸக்தவிஷயவிஸ்தாரதத்வமத்தனை போக்கி வ்யாந வ்ரஜய வ்யபேக்ஷாஹணவரமான ஹாஸம் அதிஸ்வல்பமேயாகும்.

1. ப்ரக்ருதச்லோகத்தின் உண்மையான மூலபாடம் எத்தகையது? என்பதை நிஷ்கர்ஷித்தல்.

2. அந்தப்பாடத்திற்குப் பொருந்தவற்றான அந்வயமும் பொருளும் எத்தகையன? என்பதை நிஷ்கர்ஷித்தல்.

3. ஸ்ரீராமாயண வியாக்யான கர்த்தாக்கள் பெரும்பான்மையர் இங்கு எவ்விதமாகப் பொருளுரைத்திருக்கிறார்களென்பதை விவரித்தல்.

4. திருவிருத்தத்தின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் ஸாகரஸ்ய மரணமென்று காட்டும்படியான ஸ்ரீஸூக்திஸந்நிவேச மிருப்பதாகப் பிறர்சொல்லுவதைப்பற்றின ஆராய்ச்சி.

5. சுவடிநீநர்களான அரும்பதவுரைகாரர்கள் பலவிடங்களில் தவறுதலாகவும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விருத்தமாகவும் எழுதியிருக்கிறார்களென்பது உண்மையா அன்று என்பதை அறுதியிடுதல்.

6. மே மரணமென்று அந்வயிப்பது *மாஶோசீந்தாஹிஸாக்ஷிதே* என்றதோடு விரோதிக்குமென்று பிறர் சொன்னது அஸம்பத்த மென்னும் ஸித்தாந்திவாதம் ஸங்கதமா அன்று என்பதைப் பரிசீலித்தல்.

7. நம் பூருவாசாரியர்களின் அரிய பெரிய திவ்யஸூக்திகளில் காலதோஷ வைகுண்யாதிகளாலே நெடுநாளாகவே பல பிழைகள் நேர்ந்துவிட்டனவென்றும், அந்தப் பிழைகளைத் திருத்தாமலும், திருத்தவேண்டியவை யென்றுதெரிந்துகொள்ளாமலும் பலர் தவறுதவே ப்ரவசனம்செய்து வருகிறார்களென்றும் உண்மை நிரூபணத்தில் ஆராய்ச்சி.

8. மே தரணம் வா, ஸாகரஸ்ய மரணம் வா என்கிற விகல்பகோடி விந்யாஸமே பொருந்தமாட்டாதென்று நாம் நிரூபித்துள்ளவை அசைக்கவும் முடியாதவைதானா என்பதை ஆராய்தல்.

ஆகிய இவ்வெட்டு விஷயங்கள் இந்த விசாரத்தில் விமர்சிக்கவேண்டியவை என்பது எமது கொள்கை. வஸ்துத: இவற்றுள் **1. 2.** லக்கமிட்ட விஷயங்கள் நிர்ணீதமாய்விட்டால் மற்ற விஷயங்களைப்பற்றின விசாரம் அநாவச்யகமென்றே கொள்ளலாம். ஆயினும் **3. 4.** லக்கமிட்ட விஷயங்களையும் இவ்விசாரத்தில் ஆவச்யகங்களாகக் கொள்வோம். மற்ற (**5. 6. 7. 8,** லக்கமிட்ட) விஷயங்கள் இங்கு அநாவச்யகங்களென்று ஒதுக்கப்பட வேண்டியவைகளே. ஆனாலும் ஸஹ்ருதயஹ்ருதயவிநோத நாயைமாக அவற்றையும் நாம் கொள்வோம். ஆக இவ்விஷயங்களிலும், ஸௌதந்த்ரம்பந்திகளான மற்ற விஷயங்களிலும் பூர்வபக்ஷிகளின் வசநங்கள் ஸ்வவ்யாதவிஸ்ருங்கலைகளே வடிவெடுத்தவை— என்பதை அநாயாஸமாகவே அறுதியிட்டுத் தீருவோம். இதுவரையில் நாம் எழுதியவற்றால் பூர்வபக்ஷிகளுக்கு ஸர்வஸம்ப்ரதிபந்நமாகத் தேறின ஸித்தை யை நன்னர் நிலைநாட்டிடுவோம். தயாஹி;—

1. ப்ரக்ருதச்லோகத்தின் உண்மையான மூலபாடம் அத்ய மே மரணமென்பதுதான் என்பதைப் பூர்வபக்ஷிகளின் திருவெழுத்தைக் கொண்டே நிர்த்தாரணம் செய்தாயிற்று. இனி இதில் பூர்வபக்ஷிகளுக்கு வாய்திறக்க வழியில்லை.

2. அந்தப் பாடத்திற்குப் பொருந்தவற்றான அந்வயம் ஸாகரஸ்ய மரணம் அல்ல என்பதும்— பூர்வபக்ஷிகளின் திருவெழுத்தைக்கொண்டும், பல நிதர்சனங்களைக் காட்டியும் நன்கு நிரூபிதமாயிற்று. ஆகவே, பூருவாசாரியர்கள் தாங்கள் ஆதரித்துவந்த பாடத்திற்கு மாறான பொருளை ஏறிட்டு எழுதிவைத்தார்களென்று கூறுவதில் இனி பூர்வபக்ஷிகள் தலையிட நாணியேநிற்பர்கள். ஆயினும் *ஸுஹ்ருதவைபவஸ்ரீக்ருதமேததாம் பஹுவிதாஸ்வபி ஸம்பவதி ஸ்ரிய: * என்று ஆளவந்தாரருளிய கணக்கிலே நாணாது நிற்பரேல், கிம் நச்சிந்நம்?

பூர்வபக்ஷிகளின் ப்ரவ்ருத்தி பழுதுபட்டதே என்பதை ப்ராமாணிக பண்டிதர்கள் நிச்சயிக்க இவ்வளவு ப்ரஸஞ்ஜநமே பர்யாப்தம். இனிமேல் நாம் எழுதும் விஷயங்கள் பூர்வபக்ஷிகளின் விதண்டாவாதாத்ம விஜ்ரும்பணைக வைசக்ஷ்யத்தை நிலைநாட்டுவதற்கேயாம் என்பது எமது ஹார்த்தமான அபிஸந்தி.

3. ஸ்ரீராமாயண வியாக்கியானங்களில் திலகம் தவிர மற்ற எந்த வியாக்கியானமும் ஸாகர மரணத்தை நெஞ்சினாலும் நினைத்ததில்லை. திலக வியாக்கியானத்திற்கு மூலபாடமே வேறாதலால் அதை யடியொற்றி அந்த வ்யாக்யாதா அவ்வண்ணமாகவே அந்வயிக்கவும் பொருளுரைக்கவும் கடமைப்பட்டவராதலால் அதைப்பற்றி நமக்கு விசாரமே அநாவச்யகம் என்பது புநருக்தம். எவரும்

உள்ள பாடத்திற்குப் பொருத்தமாகப் பொருளுரைக்கவே கடமைப்பட்டவரென்பது பூர்வபக்ஷிகள்தாம் தமது நூலின் முன்னுரையில் (பக்கம் 3ல்) தவம் புரிந்துயர்ந்த மாமுனிகோணர்ந்த கங்கை யென்ற பெரிய திருமொழிப்பாசுர வியாக்கியானத்திலுள்ள ஐதிஹ்யத்தை எடுத்துக்காட்டியவதனாலும் ஸித்தம். வ்யாக்யாதாவுக்குக் கிடைத்தபாடம் ஒன்றாகவும், உரைக்கும் பொருள் வேறொரு பாடத்திற்கு உரியதாகவும் இருக்கவே தகாதென்பதை இவர்களே நிரூபித்தலால், நம் ஆசார்ய பரம்பரையில் அடியோடு ப்ராப்தமான அத்யமே தரணம்வா என்னும் பாடத்திற்கே உரியதாக இவர்களே இசைகின்ற இத்தை முடித்தல் அஸ்மதாசார்ய கோஷ்டீபஹிஷ்க்ருத மென்பது ஜயத்வஜவஷிகாவதம்ஸ மாயிற்று. இனி இதிலும் வாய்திறக்க வழியில்லை.

ஸ்ரீகோவிந்தராஜருடைய வியாக்கியானத்தில்:—

"ராமः ஸுக்ரீவே, தரணம்வா ஸாகரஸ்ய—ஶரணம்வா ஸவக்ஷிதி மதிம் சகார ஸாஹஸ்ராக்ஷ்ஸீத்வா காயிகமியமய்க்ஷः வாதிகமியமவாஹ மாநஸமியமோ வேதஸ்ஸஹ மஹோதயிஶ்ஶிஷ்யஸ்யஸம்பெஸ்ய ஊதியோஜநா॥" என்றிவ்வளவே யுள்ளது. மூலத்தில் தரணம் ஸாகரஸ்ய என்பதற்கு முன்னே ஶரணமென்கிற பதம் இருக்கிறது; இருந்தாலும் ஸயமுராக அது பின்னே தள்ளத்தகுந்தது. மற்றொரு ஸம்ப்ரதவ்யாக்யாதா—"உக்ஷிணம்பாஹுஶ்வயாய ராமः ஸுக்ரீவே ஶரணம்வாய தரணம்ஸாகரஸ்யவேதி மதிம் சகார மஹோதயிஶ்ஶிஷ்யஸ்ய ஸயிஸம்பெஸ்ய ஊதிஸம்பம்யः" என்று ச்லோகமுள்ளபடியே அந்வயித்துக் காட்டினர். தரணாஸாவேஸஸ்தைவ ஶரணஶ்ஶிஷ்டமாகையாலே ஶரண மென்பதை த்விதீய கோடியாக வைத்து யோஜிப்பது உசிதம் என்னுமிவ்வளவையே கோவிந்தராஜர் திருவுள்ளம்பற்றி * ஸுக்ரீவே தரணம் வா ஸாகரஸ்ய * என்று முதல் கோடியாகவும் (வ) ஶரணம்வா என்பதை இரண்டாவது கோடியாகவும் வைத்து வியாக்கியானித்துள்ளார்.

(ஸுக்ரீவே ஸாகர தரணம்வா ஶரணம்வாஸவது) என்றோ, (ஸுக்ரீவே ஸாகரஸ்ய தரணம்வா ஶரணம்வா ஸவது) என்றோ அவர் எழுதியிருந்தால் என்ன தாத்பர்யம் ஸ்புரிதமாகுமோ அதே தாத்பர்யமே இப்போதுமுள்ளது. (ஸாகரஸ்ய தரணம்) என்ன வேண்டியதை அவர் (தரணம் ஸாகரஸ்ய) என்று மூலமுள்ளபடியே எழுதியிருப்பதுகொண்டு விபரீதார்த்த க்ரஹணம் பண்ணுவது பொருந்தாது. "தேவதத்தः புஸ்தகம் க்ருஹம் ஸஞ்சதே" என்று ஒருவர் சொன்னால், தேவதத்தः க்ருஹம் புஸ்தகம், ஸஞ்சதே என்று ஸரியாக அந்வயித்துப் பொருள் கொள்ளாமல் தேவதத்தः புஸ்தகம்—க்ருஹம் ஸஞ்சதே (க்ருஹத்தை ஸஞ்சித்தான்) என்று கொள்ளுமவர்கள் யாரோ அவர்களே யாயிற்று மேற்குறித்த கோவிந்தராஜீய வாக்யத்திலும் ஸாகரஸ்ய தரணமென்று கொள்ளாதே ஸாகரஸ்யஶரண மென்று கொள்பவர்களாவர்.

க்ரியாவஜம் வேறு ச்லோகத்திலிருப்பதால் "ஜஹொாஜ ஊரிஸஹாயி ஹியெ ஜதி யொஜநா" என்றார். ஊரணமென்பதை வஸாமரவஸ்ஜேவோடும், தரணமென்பதை மாத்திரம் ஜெ என்பதோடும் கூட்டி வ்யுத்க்ரமமாக யோஜிக்க வேணுமென்பதை ஸ்ரீகோவிந்தராஜர் ஈஷத்தும் காட்டவேயில்லை கருதவுமில்லை.

ஸஜூ ஜெ

வஸாமர (வஸ்ஜூ) தரணம்வா ஹவதூ	(தஜஹாவெ)	ஊரணம்வா ஹவதூ

என்கிற இவ்வளவுதான் கோவிந்தராஜீயத்திலுள்ளது. தரண ஊரணங்களி ரண்டுக்கும் பெருமாளே கூதா என்னுமிடம் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக் கின்றது. ஸஜூஜெ ஹவதூ! கிம் ஹவதூ? வஸாமரவஸ்ஜூ தரணம் ஹவதூ! ஸுவா கிம்ஹவதூ? ஊரணம் ஹவதூ! என்றிவ்வளவே இங்குத் தேறி நிற்கும். வூநஸூ வதூரணம் கவஸ்ஜ? என்கிற மங்கையே இங்கு உதிக்க இடமில்லை, ஜெ ஊரண மென்று மூலத்தில் ஸ்பஷ்டமாகவே யிருப்பதால்.

அந்தச் சேர்த்தியை நம்பிள்ளை போலவே கோவிந்தராஜரும் விவடீநம் செய்யவேயில்லை. அவருடைய வியாக்கியான பங்க்தியில் 'ஸஜூஜெ தரணம்வா' என்கிற வரையில் ஒரு வாக்கியமாக்கி வஸாமரவஸ்ஜ என்பதை மேல் வாக்கியத்தில் சேர்க்கலாமென்பது பிசகு. வஸாமரவஸ்ஜ என்பதில்லாமல் வெறும் தரண மென்கிற பதம் ஒருகாலும் ப்ரயொகிக்கப்படமாட்டாது. ஆதலால் வஸாமரவஸ்ஜ என்கிற பதம் ப்ரதமவாக்ய ஶேஷமேயல்லது த்விதீய வாக்ய சேஷமன்று.

ஆகவே, ஸ்ரீகோவிந்தராஜீயம் பூர்வபக்ஷிகளுக்கு கணெமஸூவாமத்தனே. இங்கே பிறர்கூறும் ஜொஜூங்கள் கெஷாஜிஷங்கள். (பூர்வபக்ஷக்ரந்தத்தில் மூன்றுவது பரிச்சேதத்தில் முக்கியமான பகுதி இப்போது கண்டிக்கப்படுகிறது.) கோவிந்தராஜர் வஸாமரவஸ்ஜ தரண மென்கிற அந்வயத்தைக் கருதி யிருந்தால் தமது டீகையில் வஸாமரவஸ்ஜ தரணம்வா என்று அடைவுபட எழுதியிருப்பர். அங்ஙனன்றிக்கே தரணம்வாவஸாமரவஸ்ஜ என்றெழுதி யிருக்கக் காண்கையால் தாஜஸாநுயம் அவர்க்கு விவக்ஷிதமன்று—என்பது பிறர் கூற்று. ஸதொாஅஜூதெ. தரணவஜம் வஸாமரவெஸ்ஜிகஜவஜவஸாகாம்க்ஷவநெயதூ முடையதாதலால் அதனை எங்கே நிவேசித்தாலும் தனக்குரியவிடத்தில் அது தன்னடையே வந்துநிற்கும். கோவிந்தராஜர் ப்ரதிபதார்த்த வியாக்கியானம் இயற்றப்புகுந்த வரல்லர். பல பல சுலோகங்களைத் தொடாமலே செல்லுகிறார். பல சுலோ கங்களில் இரண்டொரு பதங்களை மாத்திரம் தொட்டுச் செல்லுகிறார். ப்ரக் ருதச்லோகத்தில் முற்கூற்றிலுள்ள மரணம் வா என்கிற விகல்ப கோடியை அநந் தரத்தில் வைக்கவேணுமென்பதொன்றை மாத்திரமே காட்டவந்தவராதலால்

அதைக்காட்டிநின்றார். ஸாமாநாதிகரண்யமென்று இங்ஙனே கூட்டிக்காட்டாமற் போனதை ஒரு விஷயமாக எடுத்துக் கூறுமவர்களின் ஜயா விலாஸம் விலக்ஷணமே. இவர்களது கொள்கைப்படிக்கும் தாணவதம் * ஸாமாநாதிகரண்யத்தை அவசியம் அபேக்ஷித்துத்தானே நிற்கிறது. எதற்குத்தாணமென்று கேட்டால் ஸாமாநாதிகரண்யம் என்று சொல்லித்தீரவேணுமே. • ஆகவே ஸாகரஸ்ய என்பது தரணம்வா என்பதோடு அந்வயித்தேதீர நிர்ப்பந்தமுடையதாயிற்று. ஸ்வார்த்தம் ஸ்வத்தில் அந்வயித்து ஸாகாங்க்ஷமாயொழிந்த பதத்தை மீண்டும் மற்றொன்றோடே அந்வயிக்கப் பார்ப்பது *ஸக்ருத்ஸாய நவ்யநெரா நாயஉந்யஷ்யவெக்ஷிதஃ *உத்தாதிநிஜகாரிகா ந்யாயவராஹதமாகையாலே ஸாகரஸ்ய மரணமென்று திரியவும் கூட்டிப் பேசுதற்கு ஸாஹஸ்ராநஃ ப்ரஹமெமமும் கிடையாது. முந்துறவுள்ளதான (ஜ) என்னும் பதம் தரண மரணங்களிரண்டுக்கும் கதஃ ஸஉவஃகமேயாதலால் அது உஉய ப்ராவ்யந்தமிக்க இயற்கையாகவே ஸ்வப்ரதிஹதயொமூதாகும். *ஸந்ஷெ தநயொவாவி ஜஃஹிதாவா ஜநிஷ்யதெ * இத்யாதிஸ்தல ஸஹஸ்ரங்களில் இது நிர்விவாதம். ஸாமாநவதம் அங்ஙனன்றிக்கே தாணாஂமெ கஉஃவஸஉவஃகமென்றும், மரணாஂமெ கதஃஸஉவஃகமென்றும் இவர்கள் கூறுவதால், அந்த ஸாகரபதத்திற்கு *ஸக்ருஜஃஞ்ருதந்யாயவிரஃதம் மாக உத்தரத்ராவ்யந்யம் ஸஹஸ்ரவதநனும் ஸாதிக்கப் போகாதுகிடீர்.

இனி, * தாணஂவா ஸாமாநாஸ்ய * என்றவிதில் கொடிக்ஷவ்யாவகமான வாகாமும் ஸாமாநவதோதமாகத்தான் விழுந்திருக்கவேணுமென்றும் தாணவதோதமாக விழுந்திருப்பது எமக்கே அநுகூலமென்றும் பூர்வபக்ஷிகள் மன்றுடிவதுதானும் மிக அற்புதம். [தாணஂவா ஹவதஃ, மரணஂவா ஹவதஃ] என்பதே இங்கு விகல்ப சரீரமாதலால், தக்ஷவ்யாவகமான வாகாமும் தரண பதத்திற்கு அடுத்தபடியாகவும் மரண பதத்திற்கு அடுத்தபடியாகவுமே நிவிஷ்டமாகக் கடமைப்பட்டது. அவ்வண்ணமாகவே ஸ்ரீகோவிந்தராஜரும் நிவேசித்துள்ளார். சுந்யா அமையவேணுமென்று பூர்வபக்ஷிகள் கூறுவது ப்ராஜ்ஞிக மெமயீவிஜ்ஞாநவிமஹவிமஃநமத்தனே. அந்தோ ! எத்தனைமருள்!.

ஸந்ஷெ ஜமஃநம் ஜாதஃயவா மரணம் ஹவெக என்று ஒருச்லோகமுள்ளதாகக் கொள்வோம். இதில் மரணம் இன்னார்க்கு என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கவில்லை. ஆனாலும் முற்பகுதியிலுள்ள ஷஷ்டீவதங்களிரண்டனுள் ஒன்றில் இது அந்வயிக்கவேண்டும். ஜ என்பதில் அந்வயிக்குமேயன்றி மற்றொன்றில்ஒருகாலும் அந்வயிக்கமாட்டாது. அதையே *ஸந்ஷெ மரணஂவாயஜமஃநம் வெமாநாஸ்யவா * எனமாற்றிக்கொண்டாலும் வெமாநாஸ்யஜமஃநஂவா ஹவதஃ, (நவெக) ஜமரணஂவாஹவதஃ என்றே அந்வயம் தேறிநிற்கும். (ஜஜமஃநம் வா ஹவதஃ, சுயவா வெமாநாஸ்யமரணஂவாஹவதஃ) என்றாகுமென்று ஒரு விவேகியும் சொல்லான். இங்கு வியாக்கியானமெழுதுமவர் "ஸந்ஷெஜமஃநம் வா

ஸோபஸர்க³ஃ, ஶரணம் வா ப⁴வ தே” என்றெழுதுவதில் யாதொருபிசகுமில்லை. அதில் ஸோபஸர்க³ஶரணம் விவக்ஷிதமென்று அஜ்ஞன்கூட க்ரஹிக்கமாட்டான். நம்பூர்வபக்ஷிகள் ஸம்பாதித்த வ்யுத்பத்தி அபூர்வமாதலால் *ஶப்³த³ஶாஸ்த்ர ஶிக்ஷணம் பண்ண இவர்கட்குத் தடை சிறிதுமில்லைகிடீர்.

ஆக இவ்வளவாலும் ஸ்ரீகோவிந்தராஜீயமும் இற்றை முடிதல் கடாத்தலேயே நிலைநாட்டி நிற்கின்றதென்று ஸ்தாபித்தோமானோம். மஹேச்வரதீர்த்தீயம் ராமாநுஜீயம் முதலான வியாக்கியானங்களிலும் கூஜாநுபமேயன்றி இவர்கள் கூறுகிற விபரீதாந்வயம் தலைகாட்டவுமில்லை. பூர்வாசார்யர்களால் உதாஹ்ருதமான உடாலி வியாக்கியானத்திலும் ஸாகரஸ்யமரணம் கண்டதில்லை. ஆக, வம்சமுடையோர், வ்யாநுக்ரஹமும் இற்றை முடிதலுக்கே நிராபாயமென்று நிரூபித்தாயிற்று.

4. இனி, திருவிருத்தத்தில் (62) *இறையோவிரக்கினுமென்கிற பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்தி விசேஷத்தினால் இத்தை முடித்தலே புலப்படுகின்றதென்று பிறர் கூறினதற்கு நாமுரைத்த மறுப்பின் வெற்றி விவரிக்கப்படுகின்றது. இதைப்பற்றிப் பூர்வபக்ஷ நூலில் **9** முதல் நான்கு பக்கங்களிலும், **155** முதல் நாலைந்து பக்கங்களிலும், “மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிபோடுவ” தென்று வழங்குங் கணக்கிலே சில ப்ரஸங்கங்கள் செய்யப்பட்டுள்ளன. அவையெல்லாம் இரவியைக் கண்ட இருள்போல் மாயும்வகை ஈண்டு நிரூபிக்கப்படும்.

திருவிருத்த வியாக்கியானத்தில் அங்கு மூன்று வாக்கியங்கள் உள்ளன. —(1) “இது தான் சரணமென்றால் இரங்குமதன்றிக்கே அம்புக்கு முகங்காட்டு மதிறே. (2) அது ஆர்த்திக்கு இரங்குமதல்லவே; அம்புக்கு இரங்குமதிறே. (3) தனக்கு சரணமென்றால் இரங்குமதன்றே; மரணமானால் இரங்குமதிறே.’ என்பனவாம்அவை.—இவற்றுள் முதல்வாக்கியத்தினால் அருளிச் செய்யப்பட்ட அர்த்தமே சிறிது விவரணரூபமாக ஶூவஹேதேந இரண்டாம் வாக்கியத்தினாலருளிச்செய்யப்பட்டது. இனி மூன்றும் வாக்கியத்தைப்பற்றியே முக்கியமான விசாரம். இவ்வாக்கியத்திலுள்ள மரணமானால் என்பது அத்யமே மரணத்திலுள்ள மரணபதத்தை நினைப்பூட்டி ஸாகரமரணப் பொருளை ஸ்தாபித்துத் தருகின்றதென்பது பிறருடைய வாதம். இது சிறிதும் சேராது. தனக்கு சரணமென்றால் என்பதில் தனக்கு என்றது யாரைக் குறிக்கிறது? ஸாகரத்தைக் குறிக்கிறதென்று பிறர் சொல்லவேண்டும். அப்படியானால் “ஸாகரத்திற்கு சரணம்” என்னுமிந்த வாசகம் பொருளற்றதேயாகும். ஸாகரத்தை ஶரண மென்று பெருமாள் கொண்டாரேயல்லது ஸாகரத்திற்குத் தான் சரணமென்று சொல்லியிருக்கவில்லையே. அன்றியும், தனக்கு மரணமானால் இரங்குமதிறே என்பதும் பிறருடைய கருத்தின்படிக்கு அந்வயிக்கவேமாட்டாது. மரணமானால் என்பதற்கு- ‘ஸாகரத்திற்கு மரணமானால்’ என்றிறே பொருள் கொள்ளவேண்டும்; அந்தோ! மரணமான பிறகு இரங்குவதற்கு என்ன பிரஸக்தி?

சரண மென்றால் என்றதுபோல மரணமென்றால் என்று பங்க்தி இருந்திருக்குமானால் பிறரது கொள்கை ஒருவாறு பொருந்தலாம். பங்க்தி அப்படியில்லையே! மரணமானால் என்றிருப்பதை உற்று நோக்கவேணும். ஆதலால் அது பொருளன்று. அந்த மூன்றாவது வாக்கியம் ஸ்ரீராமாயண கதாஸந்தர்ப்பத்தை நோக்கியதேயன்று. அவ்வாக்கியத்தின் உண்மைப் பொருள் யாதெனில்;

தனக்கு என்றது பராங்குச நாயகிதனக்கு என்றபடி. இவ்வாக்கியத்தில் தனக்கு என்பது இரண்டிடத்திலுள்ளது; இரண்டிடத்திலும் "பராங்குச நாயகி தனக்கு" என்றே பொருள். தாற்பரியம் கேண்மின்; இக்கடலை இத்தலைமகள் [பராங்குச நாயகி] இப்போது சரணமென்று வணங்கியிருக்கிறாள். இப்போது இது இரங்கிற்றில்லை. "ஈங்கிவள் தன் நிறையோவினியுன் திருவருளாலன்றிக் காப்பரிதால் முறையோ" என்று இப்பாசுரத்திலேயே கூறியிருக்கிறபடி இவள் முடியும்படியான நிலைமையில் உள்ளாதலால் அந்தநிலைமை இவளுக்கு நேர்ந்த பிறகு 'அந்தோ! முன்னமே இவளிடத்தில் நாம் தயைபண்ணிற்றிலோமே!' என்று இக்கடல் அநுதபிக்கும்போலும் என்பதாகவே இங்குக் கருத்துத் தேறுகின்றது.

இங்கே மரணமானால் என்னும் பதமே பூர்வபக்ஷிகளின் போராட்டத்திற்கு இலக்கானது. அவர்கள் தமது நூலில் (பக்கம் 9ல்) படுகிற பரிதாபம் வாசாமகோசரம். அவர்கள் அங்கு எழுதுவதாவது— "தனக்கு மரணமான பின்பு இரங்குகை யென்னு மொருபொருள் அப்ரஸித்தமாகையாலே இந்த மரண பதத்தை லாக்ஷணிகமாகவோ உசிதவ்யாஹாரங் கொண்டோ நிர்வஹிக்க வேணும்" என்றாம்.— எவ்வளவு ச்ரமப்பட்டாகிலும் இவர்கள் நிர்வஹிக்கட்டும் மரணமானால் என்கிறவிதற்கு ஸ்வாரஸ்ய மென்ன? என்று வினவினால் *ஷிபொஷபநிரீக்ஷணெ* என்பது தவிர வேறில்லையே. பெரியவாச்சான்பிள்ளையின் அந்த ஸ்ரீஸூக்தி ஸஜுவான பொருளைத் தரவில்லை என்றும்,கஷ்டப்பட்டுத்தான் பொருள் கொள்ளவேணும் என்றும் ஆஸூரிஸ்வாமி எழுதியுள்ளாரே யல்லது, கஷ்டப்பட்டாவது அப்பொருளைக்கண்டறிந்து அந்தப்பொருள் இது. என்று காட்டவில்லையே. இது என்ன பரித்ராணம்! *ஐ மஹாஜொஐ ஹாயிவঃ* என்கிற ம்ருகேந்திரம் பண்ணுகிற ஐமவரித்ராணமே போலும். சப்தார்த்தத்தை உணரவும் உணர்த்தவும் மாட்டாதவர்கள் (அஃதாவது என்று தொடங்கி) ஸ்வாஸ்ய •விவரணம் செய்வதாகப் புக்கு ஏடுகளைப் பெருக்கியிருப்பது என்னே! (பக்கம் 10ல்) "இங்ஙனே இவ்வாக்கியத்திற்குப் பொருள் கொள்ளாத போது" என்று இவர் எழுதுவதைப்பார்க்க விலைவறச் சிரித்திட வேண்டியதாகிறது. எங்ஙனே பொருள் கொள்ளுமாறு இவர் நிர்ணயித்தாரோ தெரியவில்லையே. "பெரிய வாச்சான் பிள்ளை ஸஜுவ்யாக்யானம் பண்ணியருளினார்" என்று பக்கம் 10, வரி 4ல் இவர் ஸதியுஷாய் எழுதினது மல்லாமல், தாம் ஏதேனுமொருபடி நிர்வஹிக்கும் பொருள் இன்னதென்று வாய் திறவாமலே ஸ்ரீமத்கம்பீரமாய் "இங்ஙனே பொருள் கொள்ளாதபோது" என்றெழுதிவிட்டால்

பரித்ராணம் பரங்காகுமோ? *இன்றாக நாளையே யாக, இனிச்சிறிது நின்றாக.* மரணமானால் என்கிற ப்ராக்ருத ஸ்ரீஸூக்தியின் ஸ்வாபதேசத்தை இந்தஸ்வாமி அஸ்மதாதிகளுக்கு அறிவித்தருளாவிடினும் தம்மையுபஜீவித்திருக்கும் ஸதாசார்யர்களுக்கு அறிவித்தருளி அவர்களையாவது மகிழ்வித்தால் போதும்.

பெரியவாச்சான் பிள்ளைக்கே ஸக்லிஷ்டமாகவும் அழகுபடவும் பங்க்தி யெழுதத் தெரியாதென்று நிஸ்சங்கராய் நிரூபணம் செய்யப்பிறந்த இந்த மஹான் உண்மையில் *ஸஜ்ஜாநாஹம்ருணீ: என்றிருக்குமடியேன்திறத்தில், தாம் பயின்ற திவ்யஸூக்திகளைப் பெருக்கவர்ஷிப்பதில் வியப்பில்லைகிடீர்.

வ்ருத்தமான திருவிருத்த வியாக்கியான ஸ்ரீஸூக்திக்கு அக்லிஷ்டமாய் ஸஹிருதயமான பொருளை நாமுரைத்துக் காட்டியாயிற்று. கருங்கடல் இரக்கமின்றிச் செய்கிற காரியமாவது அறையோவென நின்றதிர்வதேயாம். (மூலத்தில்) இரக்கினும் என்றதனால் தலைமகள் கடலை நோக்கிச் சரணமென்றாளென்பது விளங்கிற்று. ஆக, இரக்கினும் இரங்காது என்ற மூல ஸ்ரீஸூக்திகளை நோக்கி, “சரணமென்றுகிடக்குமளவில் இவள்தனக்கு இக்கடல் இரங்கவில்லை” என்னும் பொருளதான “தனக்கு சரணமேன்றால் இரங்குமதன்றே” என்ற ஸ்ரீஸூக்தி அவதரித்தது. உலகில் சிலருடைய வழக்கம் யாதெனில், உயிரோடிருந்து யாசிக்குமளவும் நெஞ்சு கனியாமல் தயைபண்ணாமற்கிடந்து, யாசகர் உயிர் துறந்தவாறே ‘ஐயோ! அப்போது தயை பண்ணமற் போனேமே! என்று அநுதபிப்பது (வழக்கம்); அவ்வண்ணமாகவே இக்கடலும் இந்நிலைமையில் இரங்காதே கிடந்து இத்தலைவி உயிர் நீத்தபின் அனுதபிக்கவே பாக்கிய முடையதுபோலும்—என்னுங்கருத்துடையதான“ தனக்கு மரணமானால் இரங்குமதிறே” என்கிற அடுத்த ஸ்ரீஸூக்தி அவதரித்தது. ஸர்வதா, மரணமானாலென்கிற இந்த ஸ்ரீஸூக்திக்கும் அத்யமே மரணத்திற்கும் ஸம்பந்தம் ஸம்பந்தம் போன்றதான ஸம்பந்தங்கூட இல்லாதிருக்கப் பேராரவாரஞ்செய்வது பெரியார்க்கு அழகன்று. மரணமானாலென்கிற விதற்கு ஸ்ரீராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்த மாகவே பொருள்கொள்ளவேணுமெனினும், அப்போதும் பூர்வபக்ஷிகளின் அபிமதம் சிறிதும் ஸித்தியாதென்பது தத்வப்ரதிஷ்டையில் **65** முதல் **71** வரையிலுள்ள பாராக்களில் விசதம். “அவாவறச் சூழரியை அயனை யரனையலற்றி” என்றவிடத்து ஈட்டில் “எளியராயிருப்பார்க்கு நிர்வஹிப்பதும் சில புடைகளுண்டு” என்று அருளிச்செய்த கணக்கிலே நிர்வாஹபேதங்கள் உரியனவே. தத்வப்ரதிஷ்டையிற் பண்ணின விவரணமும் ஸ்வாயத்தமே. வஸ்துத: விசாரித்தால் நிர்வாஹத்துக்கு ஸம்ஜகம்.

ஸத்ருசவயேயம். ஸ்வாபதேசமென்னும் யோஜனை பெரியவாச்சான் பிள்ளைக்கு விவக்ஷிதமென்று சொல்லவருவது மஹாபசாரம். ஸ்ரீ ராமாயணத்திற்கு விசேஷார்த்தங்களை அருளிச் செய்வதற்கு ஸர்வஜ்ஞ பூர்வர்

ன அவர் ப்ரக்ருத விவாதச்லோகத்திற்கு விபரீதப்பொருளைத்திருவுள்ளம் பற்றி யிருந்தாராகில் அதை விஶேஷித்து எடுத்துக்காட்டி வியாக்கியானம் செய்தருளாமற் போவரா? *யானொட்டி யென்னுள் பாசுரத்தின் அவருடைய வியாக்கியானத்தில் [இருபத்தினாலாயிரப்படியில்] *ஶோஷணம் வாபி தரணம் ஸாகரஸ்ய வா* என்று சுலோகம்மாத்திரம் உதாஹரிக்கப்பட்டுள்ளதேயன்றி அதற்கு அர்த்தமாக ஒரு அக்ஷரமும் அருளிச் செய்யப்பட்டிலது. இதில் அக்ரமாந்வயம் செய்ய வேணுமென்று அவர்க்குத் திருவுள்ள மாகில், அப்படியே எம்பெருமானார் பட்டர் நஞ்சீயர் முதலான ஆசாரியர்களும் நிர்வஹித்துவந்திருப்பர்களாகில் அதை பெரியவாச்சான் பிள்ளை ஸம்க்ஷேபமாகவாகிலும் அருளிச்செய்யாது விடுவரோ? அர்த்தமருளிச்செய்யாவிடினும் மூலத்தை உதாஹரிக்கும்போதே அப்பொருளுக்கு ஸாகாங்க்ஷமான அந்வயக்ரமத்தைக்காட்டும் முகமாகவாவது உதாஹரித் திருக்கலாமே. அதுவுமில்லையே. அத்யமே மரணம்வா என்கிற ஆநுபூர்வியாகத் தானே அருளிச்செய்தனர். ப்ரமாணச்லோகம் உள்ள ஸந்நிவேசத்திலே ஒரு அர்த்தம் தோற்றுவதாயிருந்து, அது அஸ்வரஸமாகவோ விருத்தமாகவோ தோன்றினால் அவ்விடங்களில் நம் ஆசாரியர்கள் அது பொருளன்று என்று கண்டரவேண மறுத்து ஸ்வாபிப்ராயத்தை அழகிதாக அருளிச்செய்திருக்கும் முறைமையை ஶதஶஸ் ஸஹஸ்ரஶ: கண்டிருக்கிறோம். இங்கு அங்ஙனன்றிக்கேயிருக்க ஸ்வைரமாய் பங்க்தியையும் அந்யபரமான பங்க்தியையும் அவலம்பித்துக்கொண்டு மனம் போன போக்கில் பேசியுமெழுதியும் போருகிறவர்களுக்கு உத்தரமுரைக்கவேண் டும்படியான தைவதுர்விபாகமும் அந்தோ! நமக்கு நன்றாயிற்று!.

"மரணமானால் இரங்குமதிறே" என்கிற ஸ்ரீஸூக்தியில் நம் ஆஸுரி ஸ்வாமி போலவே மற்றுஞ் சில மஹான்களும் மயங்கியிருப்பதாக அறிகின்றோம். ஆக லால் இங்கு இதைப்பற்றி இன்னமும் சிறிது விரித்துரைக்க விரும்புகிறோம். பிற ருடைய மதத்தை அவலம்பித்தே பேசுகிறோம். "தனக்கு சரணமென்றால் இரங்குமதன்றே" என்கிற ஸ்ரீஸூக்திக்கு—கடல் தன்னைக்குறித்து ஶோஷயிஷ்யாமி என்று சொல்லிப் பெருமாள் படுகாடுகிடந்த விடத்திலும் இக்கடல் இரங்கிற்றில் லையிறே என்பது பொருள் என்றே வைத்துக்கொள்வோம். அதற்கடுத்தபடியா யுள்ளதான "மரணமானால் இரங்குமதிறே" என்கிற ஸ்ரீஸூக்தியும் அந்த ஸ்ரீரா மாயணப்ரகரணத்திற்குச் சேரவே நிர்வஹிக்கப்படவேண்டுமானால் அப்படியே நிர்வஹிப்பது. உண்மையில் "ஆவஹா நய ஸௌமித்ரே—ஸாகரம் ஶோஷ யிஷ்யாமி" என்ற ரோஷோக்தி ஜாலங்கள் பெருமாளுடைய திருவாக்கில் வெளிவந்த பிறகே கடலரசன் முகங்காட்டியிருக்கிறானென்பதும், அத்யமேச்லோ காநுஸந்தானத்திற்கு அடுத்தபடியாக அவன் முகங்காட்டிற்றிலன் என்பதும் அபலபிக்கமுடியாதவையாதலால், மரணமானால் என்கிற ப்ரக்ருத ஸ்ரீஸூக்திக்கு 'தனக்கு அநர்த்தம் விளைவதானபடி கண்டால்' என்று பொருள்கொள்ள ப்ராப்த மாகுமேயல்லது வேறு என்னபொருள் சொல்லமுடியும்? தனக்கு அநர்த்தம்

விளைவதானபடி கண்டது எப்போது? என்று பார்த்தால் *ஆவஜா நயவுக்குப் பிறகேயல்லது அதற்கு முன்பு இல்லை. அத்யமே மரணமென்றபோதே கடலரசன் இரங்கிவிட்டான் என்று சொல்லுவதாயிருந்தால் பூர்வபக்ஷி ப்ரப்ருதிகளுக்கு இந்த ஸ்ரீஸூக்தி பயனளிக்கும். ஸ்ரீராமாயண கதாஸந்தர்ப்பமோ அப்படியில்லை. ஆகவே தங்களுடைய வாதத்திற்கு இந்த ஸ்ரீஸூக்தியை உபஷ்டம்பகமாகக் காட்டுவது மிகவும் அபஹாஸ்யமேயாகும். மரணபதம் காண்கிறவளவையே கொண்டு ஆரவாரிப்பதானால் "யதாமரணம் தவவஹரயஃ" என்கிற உபநிஷத்தையும் "மரணமானால் வைகுந்தம்" என்கிற அருளிச் செயலையும், மற்றும் மரணவத்வடிதவாக்யாதிகள் பலவற்றையும் இவர்கள் தமக்கு உபஷ்டம்பகமாக அவசியம் காட்டலாம். அவற்றோடு இத்தோடு ஒரு வாசியில்லை காணும்.

இவ்விஷயத்தில் நம் ஆஸூரிஸ்வாமி (பக்கம் 9 ல் அஃதாவது என்று தொடங்கி) அருளிச்செய்திருக்கும் திவ்யஸூக்திகளின் ஸாமஞ்ஜஸ்யம் அளவிடமுடியாதது. மரணமானால் என்றவிடத்துள்ள மரணசப்தம் ஒன்றை ப்ரத்யபிஜ்ஞாபநம் பண்ணுவதாகவும், ஒன்றைக்காட்டிக் கொடுப்பதாகவும், ஒன்றை ஸூசிப்பிக்கின்றதாகவும் வெகு நுட்பமாகக் கண்டறிந்து அற்புதமாக எழுதியுள்ளார். இதைக்கண்ட ஒரு ஹாவுகர் பேசின பேச்சு மவவாநமாயிருந்தது; அதாவது—"ஆஸூரிஸ்வாமி இங்ஙனே பரித்ராண ப்ரபந்தம் செய்தருளப்போகிறாரென்பதையும், அதுதான் ராவணாத்திற்கிலக்கான ராவணகளேபரம் பட்டபாடு படப்போகிறதென்பதையும் இந்த மரணபதம் ஸூசிப்பிக்கின்றது — என்கிற விதனையும் சேர்த்து எழுதாதுவிட்டதென்னோ? உண்மையில் இவ்விஷயங்களையும் அந்த மாரணபதம் நன்கு ஸ்மரிப்பிக்கின்றதென்பதில் விப்ரதிபத்தியில்லையிறே" என்பதாம். இவ்வளவு ஸதுக்திகள் அவதரிக்க அவகாசமளித்துக் கொண்டாரே! என்று நாமும் வருந்துகிறோம்.

ஆஸூரி ஸ்வாமி (பக்கம் 10ல் முதல் பாராவில்) எழுதுகிறார்—பெரியவாச்சான் பிள்ளை ஷூவிவக்ஷிதாயங்களை அழகாகக் காட்டி ஸ்ரீஸூக்திகளை அமைக்க வல்லவராயிருந்தும் இங்ஙனே நாம் வெகு ச்ரமப்பட்டு நிர்வஹிக்கவேண்டும்படியான ரீதியில் மரணமானாலித்யாதி ஸூக்தியை ஏன் அமைத்தருளினாரென்றால், அத்யமே மரணமென்னும் ச்லோகத்தில் *மே மரணமென்று அந்வயிக்கவே கூடாது, *ஸாகரஸ்ய மரணமென்றே அந்வயிக்கவேண்டும்—என்று காட்டுதற்காகவேயாம்; இதை வேறு விதமான வாக்ய ஸந்நிவேசத்தினால் காட்டமுடியாதன்றோ—என்கிறார். இதைக்கண்டு *கிஂஹவெஊ விஞவெஊ கிஊாஹொ* என்று தடுமாறுகின்றோம். கேண்மின்;—

ஆரியர்காள்! பெரியவாச்சான் பிள்ளை ஸுவ்யாக்ஷமாக ஸூசுதமாய் அமைக்கவேணுமென்று ஏதேனும் ஸங்கல்பித்தருளினதுண்டோ? *ஸயஊாநுாஷூவா வெநவாவெதுாதவஂஊநஞெ வெயாகரணாஃ* என்ற கணக்கிலே ஏதேனும் நிர்ப்பந்தம் கொண்டருளினதுண்டோ? ஸதஞெஷூாகாயத்தை நாம் வாய்

திறந்து பணிக்கலாகாதென்று விரதம் கொண்டருளினதுண்டோ? பல பாசுரங்களில் [illegible]மாகவும் [illegible]மாகவும் ஸ்ரீராமாயணச்லோகங்களையெடுத்து விபுலமாகவே வியாக்கியானித்தருளாநின்றவிவர்க்கு, இங்கு (ஆசாரிஸ்வாமிஸாதிக்கிறபடி) [illegible] பண்ணியாகிலும் ஒரு பொருளை வெறுமேட்டுமடையாகக் காட்டவேண்டிய கடமை யாதுகொல்? *மார்கழித் திங்கள்* என்றவிடத்தில் *[illegible] ஸ்ரீ[illegible]* என்கிற ஸ்ரீராமாயணச்லோகத்தை யெடுத்துப் பெரிதாக வியாக்கியானித்தருளுகிறார். அதைக் காட்டிலும் இந்தத்திருவிருத்தப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் [illegible]ணத்தை யெடுத்து வியாக்கியானித்தருளவேண்டுவது மிகவும் ஆவச்யகமல்லவா? இந்த ச்லோகத்திற்கு விபரீதார்த்தம் காட்டவேணுமென்று அவர்க்குத் திருவுள்ளமிருந்ததாகில [[illegible]] என்று தொடங்கிப் பல எடுகள் அருளிச்செய்ய என்ன இடையூறு புகுந்திட்டது? இந்த இடத்திலில்லையாகிலும் வேறு எந்த இடத்திலாவது வியாக்கியானித்ததுண்டோ? *யாவனேட்டியில் மூலத்தை உபாதானம் பண்ணியிருந்தும் வியாக்கியானித்தருளாதே சென்றிருக்கின்றாரே. இத்தனையையும் விமர்சியாது ஆசாரிஸ்வாமி எழுதியிருப்பவை *[illegible]* என்ற [illegible]ச்லோகரத்நத்தையே நினைப்பூட்டாநின்றன. "மரணமானால் என்று இங்ஙனே வாக்ய ஸங்கிரேஹ மில்லாதபோது [illegible]" என்று இவர் எழுதியுள்ளதை இவர் தாமே மீண்டும் கடாக்ஷித்தருள்வரேல்..................([illegible].)

5. இனி ஐந்தாவது விஷயம்:—[illegible]களின் அரும்பதவுரைகளில் அபத்தங்கள் அனேகமிருப்பதால் அவ்வரும்பதவுரைகாரர்களுக்கு ரக்ஷையிட நம் பூர்வபக்ஷிகள் முயல்வது *[illegible]* மத்தனையேயாகும். நம்முடைய தத்வப்ரதிஷ்டையில் ஏதோ சில சில விஷயங்களுக்கு மறுப்புரைத்து முடித்திடாமல் [illegible]மும் (ஒவ்வொருபாராவுக்கும்) உத்தரமுரைக்க வேணுமென நாம் ப்ரார்த்தித்திருந்தோம். பூர்வபக்ஷிகளும் தமது நூலின் முடிவில் ஓர்விண்ணப்பமென்று தொடங்கி "தத்வப்ரதிஷ்டையில் நியமித்தபடி இக்ரந்தத்தில் ப்ரதிஷ்டா பரிசிஷ்டங்களின் பாராக்கள் தோறுமுள்ள அஸாமஞ்ஜஸ்யங்களை எடுத்துக்காட்டி அவற்றின் தூர்வாதங்கள் கிழங்கிருந்து விளராதபடி நன்றாய்ப் பரிஹரிக்கப்பட்டுள்ளன" என்று ஸ்ரீமத் காம்பீர்யம் பொலிய எழுதிவிட்டார்கள். இவர்களின் [illegible]த்தை விவேகிகள் கண்டறிந்தே யிருப்பார்களாகிலும் நாமும் சிறிது எடுத்துக்காட்டுகிறோம். சில பாராக்களின் கண்டனம் அநாவச்யகமென்று கருதித் தாமே உபேக்ஷித்துவிட்டதாக எழுதுகிறார். சில பாராக்களுக்கு நேர்கொடு நேரே உத்தரமுரைத்திட்டால் தமது பாண்டித்யப்ரகர்ஷம் நன்கு வெளியாகிவிடுமென்று கருதியோ வேறு என்ன கருதியோ பல பல பாராக்களை ஒன்றுசேர்த்துக் கண்டிப்பதாகக் குறிப்பிடுகிறார்.

இவை இரண்டும் கிடக்க, முக்கியமான சில பாராக்களை அடியோடு தொடாது விட்டுச் சென்றிருக்கிறார். தத்வப்ரதிஷ்டையில் **125** பாராக்கள் உள்ளன. பரித்ராணத்தில் (**115, 116** வது பாராக்களின் கண்டனம்) என்றவளவோடு நின்றிருக்கிறது. இடையிலும் (**72, 73** முதலிய) பல பாராக்களை ஸ்பர்சிக்கவுமில்லை. எந்தப்பாராக்களை இவர் விட்டிருக்கிறரோ அவை வஸ்துதஃ உபேக்ஷணீயங்களேயல்ல. "மணவாளமாமுனிகளுக்குப் பிற்பட்டவர்கள் இயற்றியுள்ள வியாக்கியானங்களும் அரும்பதவுரைகளும் பலவிடங்களில் தவறான அர்த்தங்களைத்தாங்கியிருப்பன" என்பதை நன்கு நிரூபிக்குமவை அந்தப்பாராக்கள்.—அரும்பதவுரைகாரர்க்குப் பரிந்து போராடுமிவர் அவர்களின் சொற்களில் நாம் காட்டும் அவத்யங்களையே முக்கியமாகப் பரிஹரிக்க பத்தஶ்ரத்தராகவேண்டும். ஈட்டு அரும்பதவுரையிலும் மற்ற மூவாயிர வியாக்கியானங்களின் அரும்பதவுரைகளிலும் குற்றம் குறைகளை நாம் காட்டியிருக்கிறோம். அங்ஙனே எத்தனை காட்ட நியமித்தாலும் எடுத்துக்காட்டப் பல விஷயங்களுண்டு. இனி நாம் எடுத்துக்காட்டப்புகும் விஷயங்கள் கிடக்க. எடுத்துக்காட்டியுள்ளவரையில் ஆஸூரிஸ்வாமியின் உத்தரம்என்ன? என்பது விமர்சிக்கப்படவேணும். ※என தாவியுள்கலந்த※ பாசுரத்தின் ஈட்டு அரும்பதத்தில் தவறு உள்ளதாக நாம் காட்டியிருந்ததற்குப் பரிஹாரம் எழுதியுள்ளார். நாம் விபரீத க்ரஹணம் பண்ணிவிட்டதாக நிகமித்துள்ளார். அதைப்பற்றின பரிசீலனையை அடுத்தபடியாக எடுத்துக்கொள்வோம். திருவிருத்தத்தின் அரும்பதத்தை இந்த ஸ்வாமி நிதியாகக் கொண்டவராதலால் "அந்த அரும்பதம் ஸதாசார்ய ஸந்நிதானத்தில் ஸம்ப்ரதாய விசேஷங்களைக் கேட்டுணர்ந்தவரால் எழுதப்பட்டதன்று" என்பதை நிரூபிப்பதில் நமக்கு ஊக்கமுண்டாயது. தத்த்வவாதகமாகச் சிலவற்றை எடுத்துக்காட்டினோம். நம் அபிமதத்திற்கு ஸாதகமாகவே இவர் விடையளித்துள்ளார். (பக்கம் **180**ல் திருவாய்மொழியின் ஈடுபோல மற்ற இயற்பாவியாக்கியானம் முதலியவை நியமேந ஆசார்ய ஸந்நிதியில் கேட்டு க்ரஹிக்கப்படுவன வென்று சொல்லமுடியாது" என்றெழுதியுள்ளார். இதனால் மூவாயிர அரும்பதங்களும் ஸகலவொருகல்வித்தாரஹஸ்யங்களாயிருக்கலாம் என்கிற இசைவு காட்டப்பட்டு, தாம் வெகு ஸாதகமாகக்கொண்ட திருவிருத்த அரும்பதத்தின் கதியும் அதுவேயென்று தம்மாலேயே ஸ்தாபிதமாயிற்று. அரும்பதக்காரர்களுக்குக் குறைகூறும் விஷயத்தில் இவரும் தீக்ஷைகொண்டவரேயென்பது நன்குவிளங்கிற்று. திருவிருத்தத்தின் அரும்பதத்தையே பெரிய அவலம்பமாகக் கொண்டு இவர் ஆரவாரித்ததும் வ்யர்த்தமாயிற்றென்று தேறிற்று. (பக்கம் **180**ல்) "இப்போது ஈட்டின் அரும்பதவுரையில் விவாதமே யொழிய இயற்பா அரும்பதவுரையில் விவாதமேயில்லையாதலால் தத்தத்தோஷங்களை யெடுத்துக் காட்டுவது தகாது" என்றெழுதுமிவர் திருவிருத்தவுரையில் நேர்ந்துள்ள மஹத்தான விவாதத்தை மறந்தே போயினர். அவ்விடத்து அரும்பதவுரையினால் வந்த அநர்த்தந்தானே அதிகம்.

*என்னீர்மை கண்டிரங்கி யீட்டில் ஒரு தமிழனுக்கும் பட்டர்க்கும் நடந்த ஸம்வாதத்தைக் கூறுமிடத்து பட்டர் எடுத்துரைத்ததாக அங்குக் காட்டப் பட்டிருக்கின்ற செய்யுளை அரும்பதவுரைகாரர் விவரிக்குமிடத்துச் செய்யுளின் பாடத்தையே தவருகக் காட்டிப் பொருளையும் அஸாதுவாக எழுதி லக்ஷணத்தையும் அந்யதாவாக்கியுள்ளார்கள் என்று நாம் எதற்காகக் காட்டினோமென்றால் "அரும்பதவுரைகாரர்கள் பலவிடங்களில் தம் மனம்போனபடியெல்லாம் எழுதுகிறவர்களே யாதலால் அவர்களின் உக்திகளையேகொண்டு போராடவேண்டா" என்பதற்காகவே. மேற்கூறிய தவறுகளை ஆஸூரி ஸ்வாமி சிறிதும் மறுக்க மாட்டாமல் அங்ஙனமே இசைந்துகொடு நின்று "இந்த ப்ரமாதங்கள் ப்ரதிதந்த்ராயத்தவிஷயகங்களல்லவாதலால் ப்ரதிதந்த்ராயத்தவிஷயகப்ரக்ருதவிவாதத்தில் அவற்றையெடுத்துக்காட்டுவது அஸமஞ்ஜஸம்" என்கிறார். இந்த அஸமஞ்ஜஸதமங்களான உக்தி ராசிகளில் "ப்ரதிதந்த்ராயத்தம் — ப்ரதிதந்த்ராயத்தம்" என்று இவர் பலகாலும் எழுதுகின்றார். அந்தோ! ப்ரதிதந்த்ரம் (ப்ரதிதந்த்ரம்) என்னுஞ் சொல்லுக்கு இன்னது பொருளென்றே அறிய கில்லாத விவர் அச்சொல்லை மீண்டும் மீண்டும் பிரயோகிப்பது ஏனோ? ப்ரதிநியதம் தந்த்ரமென்கிற வ்யுத்பத்தியினால் — அந்யஶாஸ்த்ராஸித்தஸ்வமதமாய் தத்தந்த்ராஸாதாரணமான அர்த்தமே ப்ரதிதந்த்ரார்த்தமென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் நிரூபிக்கிறார்கள். ந்யாயஸூத்ரத்தில் *ஸதந்த்ரஸித்த: பரதந்த்ராஸித்த: ப்ரதிதந்த்ரஸித்தாந்த:* என்றுள்ளது. அத்யமேச்லோகார்த்தத்தை ப்ரதிதந்த்ரார்த்தமென்று பண்டிதர் சொல்லகில்லார் *அத்யமே ச்லோகத்தின் பொருளுக்கும் நம் ஸித்தாந்தத்திற்கும் என்ன ஸம்பந்தம்? உள்ளதான ஶப்த ஸந்நிவேசம் ஒருகாலும் *ஸாகரஸ்ய மரணத்தை உணர்த்தமாட்டாது என்று நமது வாதமேயல்லது *ஸாகரநிக்ரஹ ஸங்கல்பத்தையே வதிக்கவல்ல ச்லோகாநுபூர்வியிருந்திருக்குமாகில் இங்கு வாய்திறப்பாரார்? நமது ப்ரத்யவஸ்தானத்தின் பரிசு இன்னதென்றே உணராதவிவர் அந்தோ! பெருஞ்சுமை நூல் வரைந்தது பேரின்பமோ.

6. இனி ஆறுவது விஷயம். *ஸாகரம் ஶோஷயிஷ்யாமி. என்றதன் தாத்பர்யத்தை இவர் உள்ளபடி க்ரஹியாமலே மேமரணம் என்கிற யோஜனை அத்தோடு விரோதிக்கின்றதாக ப்ரமப்ரத்யவஸ்தானம் பண்ணுகின்றார். இராமபிரானுடைய திருவாக்கில் நின்று எந்த எந்த வார்த்தை வெளிவருகின்றதோ அதுவெல்லாம் அப்படியப்படியே நிறைவேறியே தீருமென்பதுதான் ஸ்ரீராமனுடைய ஸத்யஸங்கல்பமென்று கொள்வது பிசகு. சீற்றமோ வருத்தமோ மீதூர்ந்து செல்லுங்காலங்களில் இராமபிரானது திருவாக்கில் வெளிவருகின்ற பலபல சொற்கள் உடனே மாறிவிடுகின்றன. அன்பர்களின் அபேக்ஷிதத்தை நிறைவேற்றுவதாகச் சொல்லுகிறவார்த்தை ஒருகாலும் பழுதுபடுவதல்லாமை

யாலே தாத்பர்யவத் நவத்ருஸ்வரூபமான ஸத்ஸம்ப்ரதாயமே பெருமாளுக்குள்ளது. * ஸர்வோபி நரஸ்மலாஷிதே * என்பதன் கருத்தும் அதுவேயாம். ஆகவே ஐக்ருதத்தில் அதுகொண்டு க்ஷோஹமுபாமுமில்லை என்று தெளிவது.

7. இனி ஏழாவது விஷயம்: பூருவாசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களில் பலபல வகையான பிறழ்வுகள் நேர்ந்திருக்கின்றனவென்பது மறுக்க முடியாதது. ஆனல், சில பிறழ்வுகள் நேர்ந்திருப்பது உண்மைதானென்றும், அத்தகைய அச்சுப்பிழைகளையெல்லாம் வித்வான்கள் கண்டறிந்தும் கேட்டறிந்தும் திருத்தி வைத்துக்கொண்டே யிருக்கின்றார்கள் என்றும் ஆஸூரிஸ்வாமி யெழுதுகிறார். சிலர் சிலவற்றைத் திருத்தி வைத்துக்கொண்டிருக்கலாம். இன்னமும் திருத்தமுறாத எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் வாக்கியப்பிழைகளும் எண்ணிறந்தவையுள்ளனவென்று உஸ்ரதூஹஜஅஹிதே. இத்தகைய பிறழ்வுகளை ஒவ்வொன்றாக நெடுநாளாகவே அடியேன் எடுத்தெழுதி வைஜயந்தி முதலிய ஊஹிக பத்திரிகைகளிலும் ஸ்வகீய ஸஞ்சிகைகளிலும் வெளியிடுவித்து வருகின்றேன். இங்ஙனே பல்லாண்டு பல்லாண்டாகச் செல்லும்.

ஸமீபகாலத்தில், பண்டிதமணியான ஒரு நண்பர் அடியேனை ஒரு கேள்வி கேட்டிருக்கின்றார். அதனை இங்கு வெளியிடுகின்றேன். —ஸ்ரீராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் (51—58) * நஹ்யஸ்ய ஸ்மிதஸ்யேஷு பஹவாபேக்ஷு கஸ்வஸு । ஸமுஹூர்த்தமபி ஷு ஸஜ்ஜே பாஸிஸ்ஜோ ஹவத்ரியா: ॥ * என்கிறச்லோகமுள்ளது ப்ரஸித்தமே. இது இராவணனை நோக்கித் திருவடி கூறுவது. திருவாய்மொழியில் (7-1-9) * குலமுதலடுந்தீவினை * என்றவிடத்து வியாக்யானத்தில் [இருபத்தினாலாயிரப்படியிலும் ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும்] இந்தச் லோகத்தைப் பூர்ணமாகவெடுத்து "என்றானிறே மால்யவான் ராவணனுக்கு" என்று அருளிச்செய்யப்பட்டிருக்கக் காண்கிறது. இது எப்படி பொருந்தும்? என்று கேட்டிருக்கிறார்.

இந்தச்லோகம் மால்யவானுடைய வார்த்தையாக வால்மீகி ராமாயணத்தில் கண்டதில்லை. ஈட்டு அரும்பதவுரைகாரரும் "உதிராவணம் ப்ரதி ஊருதவாநு" என்று எழுதியுள்ளார். ப்ரமாணத்திரட்டில் "யுத்தகாண்டே" என்று மாத்திரம் ஸூசுநிர்தேசமுள்ளது. ஸர்கஸம்க்யையும் ச்லோகஸம்க்யையும் நியமேந காட்டிவரும் ப்ரமாணத்திரட்டில் இங்கு அவை காட்டப்படவில்லையென்பது சுவயெயம். இங்கு ஏதோ பிழையிருந்து தீரவேண்டும். ஸ்ரீராமாயணம் பிழைபட்டதென்னலாமா? ஈடுமுதலியன பிழைபட்டன வென்னலாமா? என்று பெரியோர்களைக்கேட்டால், "மால்யவானுடைய வார்த்தைகளிலும் இந்தச்லோகம் வந்திருக்கக்கூடும்" என்கிறார்கள் சிலர். "ஹநுமாந் என்றிருந்தது மால்யவாந் என்று பிறழ்ந்திருக்கக்கூடும்" என்கிறார்கள் சிலர். மால்யவானென்பது

[illegible]ட்டில்மாத்திரமிருந்தால் [illegible]மென்னலாம். மற்றொரு வியாக்யானத்திலும் அரும்பதவுரையிலும் இருக்கிறதே யென்கிறார்கள் சிலர். ஆஸூரி ஸ்வாமி என்ன ஸாதிப்பாரோ? பெரியோர் நன்கு விமர்சித்து நிர்ணயித்தருளவேணும்.

இப்படியாக எடுத்துக்காட்டக்கூடிய பிறழ்வுகள் பலபலவுண்டு. இத்தகைய பிறழ்வுகளை அரும்பதவுரைகாரர்கள் பர்யாலோசியாமலே தம் நெஞ்சில் தோற்றினதே எழுதிவைத்துப்போகின்றனர்.

8. இனி எட்டாவது விஷயம். (விகல்பகோடிகளைப்பற்றின விசாரம்.) இந்த அத்யமே ச்லோகத்தில் விகல்பம் த்விகோடிகம். அந்யோந்ய வ்யாவர்த்தங்களான இரண்டு ஸம்பவங்களில் ஒன்று அவசியம் நேர்ந்தே தீரும் என்பது பெருமாளுக்கு விவக்ஷிதம். “[illegible] ।
[illegible] ॥” “[illegible]” இத்யாதி ஸ்தலங்களிற்போல் இரண்டில் ஒன்றுதான் நேரும். எல்லா ஜனங்களுடையவும் தலைமேலிருக்கவேண்டும்; அல்லது வனத்திற்பூப்போல் வாடியழிய வேண்டும். ஒன்று நேர்ந்தால் மற்றொன்று நேரமுடியாது. ஜனங்கள் தலைமேலிருந்தால் வனத்தில் அழியாது. வனத்திலேயே அழியுமானால் அவர்கள் முடிமேல் ஏறாது. இரண்டில் ஒன்றுதான் ஸம்பவிக்கும்; மூன்றாவது இல்லை இரண்டும் சேர்ந்து ஸம்பவிப்பதுமில்லை. இது விகல்பத்தின் ஸ்வரூபம். விகல்பாலங்காரத்துக்கு லக்ஷணங்கூறிய ஆலங்காரிகர்களும் “[illegible]” என்றார்கள். இரண்டும் சேர்ந்து ஸம்பவிக்க முடியாத பரஸ்பரவிருத்தமான இரண்டு விஷயங்களைச் சொல்லுவது விகல்பாலங்காரமென்று வியாக்கியானிக்கப்பட்டது. * [illegible] * தலையை வணக்கினால் வில்லை வளைக்க முடியாது. வில்லை வளைத்தால் தலைவணக்கமில்லை. * [illegible] ॥ * என் துயரைத் தொலைக்கவல்லவர் என் பர்த்தா, அல்லது யமன் என்கிறாளொருதலைவி. பர்த்தா வந்து சேர்ந்தால் மரணமில்லை. பர்த்தா வராவிடில் மரணமே. மரணமானால் நாயகஸமாகமமில்லையென்று விகல்பஸ்வாரஸ்யம் சொல்லப்பட்டிருக்கிறது,

அதுபோல் இங்கும் “கடலை நான் கடப்பது, இல்லையேல் முடிவது.” ஒன்று நேர்ந்தால் மற்றொன்றில்லை என்கிற அர்த்தம் மிக்க பொருத்தமாகவுள்ளது. விபரீதாந்வயத்திலோவென்றால் விகல்பவைலக்ஷண்யமே தொலைந்துபோகிறது. “நான் கடலை வற்றடித்துக் கொல்வேன், அல்லது நான் அதைக்கடப்பேன்” என்று சொல்லுகையில், வற்றடித்தல் கடப்பதற்கு விரோதமன்றிக்கே யிருப்பதோடு [illegible] அதற்கு ஸாதநமாயிருப்பதால் இரண்டும் சேர்ந்தே ஸம்பவிக்குமவையாகவுள்ளன. ஆதலால் ச்லோகத்திலுள்ள இரண்டு வாக்யங்களும் நிஷ

பலமாகின்றன. இல்லாத பதங்களை அத்யாஹரித்துக்கொண்டு ஸ்வாரஸ்யகல்பநமும் துஸ்ஸகம். அத்யாஹாரத்துக்கு ஆவச்யகதையுமில்லை. ஆகையால் விபரீதாந்வயத்தில் கிடைக்கும் அர்த்தம் ஒரு விவேகியின் ஹ்ருதயத்திலும் நிற்ககில்லாதது.

ஆக இவ்வளவாலும் க்ஷுத்ரஹேதுகதம்பகமான ஆசாரிஸ்வாமியின் வாதம் பலபடிகளாலும் பயனற்றதென்பது பரக்க நிரூபிக்கப்பட்டதாயிற்று. இன்னமும் வக்தவ்யமான விஷயங்களை யெல்லாம் விளங்கவுரைத்து *ஸத்யசைவஸ்த்யாயப்ரதக்ஷிணீ* என்கிற க்ரந்தத்தை ஸரள ஸம்ஸ்க்ருத பாஷையில் இயற்றி தேவநாகராக்ஷரத்தில் அச்சியற்றி வருகின்றோமாதலால் இந்தத் தமிழ்நூலை இவ்வளவிலே உபஸம்ஹரிக்க நினைக்கின்றோம். வித்வத்சிகாமணிகள் அந்த க்ரந்தத்தையும், அதனை ஸமர்த்தித்துப் பல வித்வான்கள் எழுதி வெளியிட்டிருக்கும் ப்ரஸித்தபத்ரிகைகளையும் கடாக்ஷித்தருளி மகிழுமாறு ப்ரார்த்தித்து நிற்கின்றோம். இந்த க்ரந்தத்தில் இடையிடையே சில விஷயங்களைப் பற்றி "மேலே விரியவுரைப்போ" மென்று கூறியுள்ளோம். அவற்றின் விரிவும் அந்த ப்ரதக்ஷிணியில் காண்க.

ப்ராஸங்கிகங்களான பல பல விஷயங்களில் ஆசாரிஸ்வாமி ஸ்வதிசோசநீயமான ஸ்வாஜ்ஞாநத்தினால் ஸ்வயம்கல்பிதராய் அந்த கார்பண்யத்தை அடியேன்மீது ஆரோபித்து எழுதியுள்ளார். அவற்றால் வாசகர்களுங்கூட விப்ரலப்தராக விரகில்லையாகையால் அவற்றிற்கு ப்ரத்யாக்யானம்காட்ட அவசியமில்லையாயினும் விஷயதத்த்வப்ரகாசயிஷயாவசம் ஸங்க்ஷேபேண ஸம்யக்பக்ஷே ப்ரத்யாக்யாதம் பவிஷ்யதீத்யநுஸந்தேயம்॥.

> விசாந்த்யஸ்வரூபாஸ்வாமிநாம் பத்மாதி நைவேத்யஸேவா
> ஸ்ரீஸம்ப்ரதாயஜோ தஹநோ ப்ரியஸேவாஹ்ருதம் ஸர்வ்வஜ்ஞாநஸேவி।
> ஸ்வயம் ஸ்வப்ரகடீக்ருதே நிஜஹ்ருதா ஹேயகவசத்வாஸம்
> க்ருஹணவ்யதிசாத்ரஸாத்ர ஹவமாயீ நः பரிஜ்ஞாஸ்யதி॥

காசம் பரிஜ்ஞாஸ்யதே ஸோயசாயதः கார்க்ரேண த்ரவயாஸிஹதः।
ஸ்வைநவ விஜ்ஞாபிஹாஸ்யவைஷ்யந்து பக்ஷிம்விஸஜாம் ப்ரஸவசாந்த்வீது॥

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
தத்வப்ராதிஷ்டா விஜயத்வஜம்
முற்றிற்று.

காமகோடி பிரஸ், காஞ்சிபுரம்.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராச்சார்ரியர் வெளியிட்ட

விஜயத்வஜ வைஜயந்தீ.

[ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீஉவே. ஆஸூரி சின்னராமாநுஜா சாரியர் ஸ்வாமி வெளியிடுவித்த ‘திவ்யஸூக்தியின் வெற்றி’ என்னும் பத்ரிகையின் ஆராய்ச்சி.]

பதினன்கு பக்கங்கள்கொண்ட இப்பத்ரிகை இன்று அடியேனது பார்வைக்கு வந்தது. சாஸ்த்ரீய விஷயங்களின்மீது பண்டிதஹ்ருதயங்கமமான உத்தரங்களை வெளியிடுவதற்கு ஸ்ரீஆஸூரி ஸ்வாமிக்குச் சிறிதும் அவகாசம் கிடைக்காமையினல் [விஷயலேசமுமில்லாமையினல்] தம் பெயரால் ப்ரதிவசனம் செய்தருளக்கூசி ஒரு தேசாந்தரி பெயரால் இப்பத்ரிகையை வெளியிட்டுள்ளார் போலும். “அதயமேச்லோகார்த்த விஷயத்தில் இனி சிசுபாலபாஷைகளை வர்ஷித்தே நாம் வெற்றிபெறலாகும்” என்று துணிந்த அந்த ஸ்வாமிகள் எவ்வகையான துருக்திகளை எவ்வளவு வாரி யிறைத்தாலும் அவற்றைப் பரமபோக்யமாகவேகொண்டு விஷயங்களுக்கு பதில் விஷயம் விஜ்ஞாபிப்பதில் மாத்திரம் அடியேன் ருசியுடையேன். அப்பத்ரிகையிலுள்ள விஷய பாகங்களுக்கு மாத்திரம் இப்போது அடியேன் உத்தரம் விஜ்ஞாபிக்கிறேன்.

அத்யமேச்லோகார்த்த ஸம்பந்தியான விஷயம் அப்பத்ரிகையில் (பக்கம் 14-ல்) கடைசி பாரா ஒன்றில் மாத்திரமே சிறிது உள்ளது. முந்துற முன்னம் அதற்கு விடை கூறிவிட்டு, மற்ற அப்ரஸக்த விசாரங்களுக்கும் யுக்தமான உத்தரம் விஜ்ஞாபிக்கிறேன். அடியேனுடைய தத்வப்ரதிஷ்டா விஜயத்வஜத்தில் முன்னுரை 8 பக்கமும், அதன்மேல் விஷயவிசாரம் 28 பக்கமும், இம்மாதத்து திவ்யார்த்த தீபிகையில் 5—5—37உ வெளியாகியுள்ளன. அவசிஷ்ட பாகங்கள் மேல்மாத ஸஞ்சிகைகளில் அடைவே வெளிவந்துலையும். இப்போது வெளிவந்துள்ள (விஜயத்வஜப்) பகுதியில் அத்யமேச்லோகவாராநுவலேகநியின் தத்துவத்தைப்பற்றின விசாரம் நிச்சேஷமாகச் செய்து முடிக்கப்பட்டு, ஆஸூரிஸ்வாமி இனி ஐதிகதஸ்வதாஜஹாராய் நிற்கும் நிலைமையை எய்தியிருக்கும் பரிசு பரக்க நிரூபிக்கப்பட்டுளது. ஆகவே இதுபற்றி இப்போது நாம் எழுதுவது புநருக்தமே

யாகுமாயினும் ஸாரமாகச் சில எழுதுகிறோம். இப்போது மறைமுக ஸ்வாமி (பக்கம் 14-ல்) எழுதியிருப்பதாவது—*அத்யமே மரணம் வா* என்கிற பாடமே உண்மையான பாடமென்றும், *அத்யமே தரணம்வா* என்பது கொள்ளத்தகாத பாடமென்றும் நாம் ஸித்தாந்தம் செய்துகொண்டதாகவும், புஸ்தகங்களிலுள்ள பாடபேதங்களை ஆதரிக்கமாட்டோமென்று நாம் கூறுவதாகவும், நம் பூருவாசாரியர்கள் ரஹஸ்யாதி வியாக்கியானங்களில் பாடபேதங்களை அங்கீகரித்தேவந்திருக்கிறபடியால் ஶ்ரீக்ருதத்திலும் நாம் பாடபேதங்களை ஆதரித்தேயாகவேண்டுமென்பதாகவும்.— ஸதை்ராஷ்தே.

நம் ஆசார்ய பரம்பரையில் எவ்வளவு பாடபேதங்கள் வந்திருந்தாலும் அவற்றை நாம் சிரஸாவஹிக்கக் கடமைப்பட்டேயிருக்கிறோம். அத்யமே மரணம் வா என்கிற பாடம்போலே அத்யமே தரணம்வா என்கிற பாடமும் நம் ஆசார்ய பரம்பரையில் வந்திருக்குமாகில் அதையும் (அல்லது அதையே) நாம் ஆதரிக்கத் தடை கிடையாது. "நம் ஆசார்ய பரம்பரையில் அத்யமே தரணம்வா என்கிற பாடம் வரவில்லை, அத்யமே மரண பாடந்தான் வந்துளது" என்று ஆஸூரி ஸ்வாமியே உறுதியாக எழுதி முடித்தானபின்பு, த்வீபாந்தரபாடம் போன்றதான ஏகதேசி பாடாந்தரத்தை ஏற்றுக்கொள்ள நியாயமேது? 'இத்தைமுடித்தலென்கிற அர்த்தம் அத்யமே மரணபாடத்திற்குச் சிறிதும் இணங்கவில்லை' என்பதை ஆஸூரி ஸ்வாமி திண்ணமாகக் கண்டறிந்தபடியாலன்றோ அந்தப் பாடத்தை விட்டுவிட்டுப் பாடாந்தரத்தைப் புகலாகப்பற்றப் புகுந்தார். அப்போதே இவர் என்ன செய்திருக்கவேண்டுமென்னில்; நம் ஆசார்ய பரம்பரையில் வந்த பாடமும் அத்யமே தரணந்தான் என்று கல்வெட்டாகக் கூறி முடித்திருக்கவேண்டும். இப்பாடமும் நம் ஆசார்ய கோஷ்டியில் உண்டு என்றாவது எழுதியிருக்கவேண்டும். அப்போதே அது செய்யவில்லாதே, நம் ஆசார்யர்கள் கொண்ட பாடம் அத்யமே மரணந்தான் என்றும் *இத்தை முடித்தலென்னும் பொருள் அத்யமே தரண பாடத்திற்கே பொருந்துமென்றும் திடமாக எழுதிவிட்டு இப்போது திகைப்பதில் யாது பயன்?

ஸ்ரீவசநபூஷண வியாக்கியானம் முதலியவற்றில் நம் ஆசார்யர்கள் பாடபேதங்களை அங்கீகரித்திருக்கிறார்கள் என்று இப்போதிவர் எழுதுவதற்குத் தாற்பரியம் என்ன? எந்த எந்த இடங்களில் ஆசார்யர்கள் கணாஙவெண பாடபேதங்களைக் கூறி விவரண ஹேதுங்களையும் காட்டியிருக்கிறார்களோ அவ்வவ்விடங்களில் நாம் அப்பாடங்களையெல்லாம் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோமென்பது வாஸ்தவமே. பாடாந்தரமென்று ஒரு ஹணவாமாகவும் அதுதானும் ஶூகூதி ஹணமாகவும் ஏற்பட்டிருக்கிறதா என்ன? அத்யமே ச்லோகத்தில் பாடாந்தரங்கள் இருப்பதாக எந்த பூர்வாசாரியர் காட்டியிருக்கின்றார்? அவர்கட்குக் கிடைத்ததும் அவர்கள் வழங்கி வந்ததும் ஒரே பாடந்தான் என்று இவரே எழுதித் தீர்ந்த பின்பு இன்னமும் இதில் மன்றாடுவதற்கு விஷயமேது?

ஒரு நிதர்சநம் காண்மின்;—ஸஹஸ்ரநாமத்திற்கு சங்கரபாஷ்யமும் பட்டர் பாஷ்யமுமாக இரண்டு பாஷ்யங்கள் உள்ளன. இவற்றில் எத்தனையோ பாட பேதங்கள் காண்கின்றன. முற்பட்டதான சங்கரபாஷ்யத்தில் பலவிடங்களில் பாடபேதங்கள் காட்டுகிறார். அவற்றையெல்லாம் பட்டர் தமது பாஷ்யத்தில் ஆதரித்திருக்கிறாரா இல்லையா என்பதை ஊன்றிப் பார்த்து யதாஶ்ருதம் சில விடங்களில் பாடபேதத்தையும் பலவிடங்களில் (ஶங்கரபாஷ்யாவாந்தரபேதங்களைத் தள்ளி) ஒரேவிதமான பாடத்தையும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆதரித்து வருகிறார்கள்.

ஸமாத்மா ஸம்மிதஸ்ஸம: என்றவிடத்தில் சங்கராசாரியர் அஸம்மித: என்று பிரித்து பாஷ்யமிட்டனர். பட்டர் ஸம்மித: என்றே பாஷ்யமிட்டனர். இங்கு சங்கரபாஷ்யப்படி அஸம்மித: என்று பாடமிருந்தாலும் அது கொண்டு நமக்கு யாதொரு காரியமுமில்லையன்றோ. *அநிர்விண்ண: ஸ்தவிஷ்டோபூ:* என்றவிடத்தில் சங்கராசாரியர் அபூ: என்றும் பூ: என்றும் இருவகையான பாடமும் கொண்டார். பட்டர் இங்கு பூ: என்ற ஒரு பாடத்தையே கொண்டார். அதனால் இங்கும் பாடாந்தரம் நமக்கு அநாதரணீயமேயாயிற்று. *கவிர்யு: கவிர வ்யய:* என்றவிடத்து அவ்யய: என்றே சங்கரபாஷ்யபாடம். அவ்யய: என்பது பட்டர் பாஷ்ய பாடம். ஆனாலும் இங்கு அவ்யய: என்கிற பாடமும் ஸ்ரீவைஷ்ணவர்களால் ஆதரிக்கப்படுகிறது. ஏன்? நிர்வசநத்தில் அப்பாடமும் காண்கையாலே.

இங்ஙனே ஸ்வல்பம் இங்குக் காட்டினோம். இவ்விதமாக நாம் பலவருஷங்களாக இரவும் பகலும் இடைவிடின்றி ஆராய்ந்து ப்ரஹ்மஸூத்ரம், பகவத்கீதை, உபநிஷத்துக்கள், இதிஹாஸ புராணாதிகள், ஆழ்வாராசார்ய திவ்யஸூக்திகள் ஆகிய இவற்றில் வ்யாக்யாநங்களைப்பண்ணி பாடாந்தரங்கள் பரிக்ரஹிக்கக்கூடிய இடங்களையும் அவை பரிக்ரஹிக்க யோக்யதையேயில்லாத இடங்களையும் ஸப்ரமாணமாக நிஷ்கர்ஷித்து வைத்துக்கொண்டேயிருக்கிறோம். ஸ்ரீஸூத்ரவிவாதவிஷயத்தில் நம் ஆசாரியர்களில் பாடபேதம் இருந்ததாக இதுவரையில் பூர்வபக்ஷிகளும் ப்ரஸ்தாவலேஶமும் செய்திருக்கவில்லையே. இனித்தான் செய்கிறோமென்னில்; யதேஷ்டமாகச் செய்க. இத்தை முடித்தல் என்பதன் அருகே (பகவத் விஷய ஸ்ரீகோஶங்கள் எல்லாவற்றிலும் ஸுவிஶேஷேண) காண்கிற அத்யமே மரணம் வா என்பதை அத்யமே தரணம் வா என்பதாக முந்துற முன்னம் மாற்றியாகட்டும்.

" வியாக்கியானத்தைக்கொண்டே மூலபாடத்தை நிஷ்கர்ஷிக்கவேண்டுமாதலால் இத்தை முடித்தலென்றதைக்கொண்டு அத்யமே தரண பாடத்தையே பூர்வாசார்யபரிக்ருஹீதமாக நிர்ணயிக்கிறோம் " என்று இவ்வளவே ஆஸூரி ஸ்வாமி எழுதியருளினால் போதும். பிறகு நாம் தலைவணங்கியே நிற்கக்கடமைப் பட்டிருக்கிறோம் என்பதை வாஸ்தவமிதி ஸவிநயம் நிவேதயாம:. " அத்யமே

மரணபாடத்தையே கொண்ட ஆசாரியர்கள் இத்தை முடித்தலென்று ஸாதிக்க அவகாசமே கிடையாது" என்கிற நமது வாதத்திற்கு இவர் என்ன விடை கூறினார்?.

"நம் பூர்வாசார்யர்கள் யாவரும் பாடபேதங்களை அங்கீகரித்தே வந்துள்ளார் என்பது உலகறிந்த விஷயம்" என்கிற நிரங்குசவார்த்தையை எழுதியிருக்குமிவர் ஒரு இடத்தையெடுத்துக்காட்டி இங்கே இன்னவிதமான பாடபேதத்தை இன்னார் இன்ன ஹேதுவினால் அங்கீகரித்துள்ளார் என்று நிரூபித்தால் அப்போது தாமே தமது வார்த்தையின் ஸவஹாஸ்யதையையும் ஸநிரங்குசதையையும் எளிதிலுணர்வார். ப்ரக்ருதோபயோகியான விஷய விசாரம் இவ்வளவே. இனி ஏடுகளை நிரப்ப இவர் எழுதியுள்ள ஸகல விஷயங்களுக்கும் விடை கூறுவோம்.

ஸ்ரீமத் திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமி பக்கலில் அடியேனுக்கு கௌரவபுத்தி இல்லையென்று ஒரு விஷயம் எடுத்துக்காட்டுகிறார். இப்படியெழுதிவிட்டால் திருமழிசை ஸ்வாமிகள் பலரும் தமக்குத் துணைநிற்பர்கள் என்பது இந்த ஸ்வாமியின் ஆசாமோதகம்போலும். அந்த ஸ்வாமிகள் யாவரும் உண்மையை உணர்ந்தேயிருப்பர்கள். திருச்சந்த விருத்தத்திற்கு அண்ணாவப்பங்கார் ஸ்வாமி அருளிச்செய்த உரையில் "ஆயநின்னை யாவர் வல்லர்" என்றவிடத்தில் [நின்னை ஆய யாவர் வல்லர்—] உன்னை ஆராய்வதற்கு யார் சக்தர்? என்று உரையெழுதவேண்டியிருக்க அங்ஙனம் எழுதாமல் (ஆய நின்னை) என்றே வைத்து "ஸர்வ சக்தி யுக்தனான உன்னை" என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்படியானால் பின்பு வல்லர் என்ற க்ரியையோடு அந்வயிக்க ஒரு வினையெச்சம் வேண்டிற்றாயிற்று; அதற்கு அந்த ஸ்வாமி என்ன செய்திருக்கிறாரென்றால் "காண என்று அநுஷங்கம் செய்துகொள்வது" என்று அருளியுள்ளார். ஆய என்கிற வினையெச்சம் உள்ளதாயிருக்க, இந்தப் பாசுரத்திலாவது கீழ்ப்பாசுரத்திலாவது இல்லாத (காண) என்பதை அநுஷங்கித்துக்கொள்ளவேணுமென்பதில் ஔசித்யமில்லாமையாலே இந்த பங்க்திகள் ப்ராமாதிகமாக விழுந்திருக்கலாம் என்று அங்கு அடியேன் எழுதினேன். அச்சுப்பிழை என்று எழுதவேண்டியிருக்க ஸாஹஸிகமென்னலாமா? என்று மறைமுகஸ்வாமி கர்ஜிக்கிறார். அச்சுப்பிழையென்று எழுதக்கூடிய இடங்களில் அப்படியே எழுதியுமிருக்கிறேன். அதையும் இவரே எடுத்துக் காட்டியுள்ளார். அண்ணாவப்பங்கார் ஸ்வாமியை அடியேன் அவதார புருஷராகவே கொண்டிருக்கிறேனென்பது அடியேனது நூல்களைப் பூர்த்தியாகப் பார்த்தவர்கட்குத் தெரியும்.

அடியேன் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைத் திரஸ்கரித்துப் பெருமாள் திருமொழி திவ்யார்த்த தீபிகையில் ஏதோ எழுதியிருப்பதாக ஒரு விஷயம் எடுத்துக் காட்டுகிறார். இதை அநுவதிப்பதுதானும் அடியேனுக்கு மஹாபாதகமாகும். ஸ்வப்நாவஸ்தையிலாக அடியேன் எத்தனை பிறவி பிறந்

தாலும் பெரியவாச்சான்பிள்ளை பக்கல் அபசாரப்படும்படியான மஹாபாதகம் மாத்திரம் அடியேனை ஒருகாலும் அணுகமாட்டாதென்பது ஸத்யம். இப்போது இங்கு இவர்கள் காட்டும் விஷயத்தில் தத்துவத்தை உலகுக்கு உணர்த்துகிறேன். இதைப்பற்றி ப்ரஹ்ம வித்யா பத்ரிகையில் (2—11ல்) 1921 ஆம் வருஷத்திலேயே 11 பக்கங்கள் எழுதி வெளியிட்டிருப்பதை ப்ராஜ்ஞர்கள் மறந்திரார்கள். அவ்விஷயங்களைச் சுருக்கி இங்கு விஜ்ஞாபிக்கிறேன். பூர்வவியாக்கியானங்களில் முத்ரண ப்ரயுக்த தோஷங்களாகச் சொற்பிழைகள் எழுத்துப்பிழைகள் நேர்ந்திருப்பது தவிர, பல வாக்கியங்கள் அடியோடு விடுபட்டுமிருக்கின்றன என்பதை அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி அநேக தாள கோசங்களின் உதவியினாலும் ஆசார்ய பரம்பரோபதேசத்தாலும் உணர்ந்தருளி, காலக்ஷேப ஸமயத்தில் அடியேன்போல்வார்க்கும் ப்ரஸாதித்தருளினார். பங்க்தி பங்க்தியாக விட்டுப்போன விடங்கள் பலவற்றில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுகிறேன்.

ஆசார்யஹ்ருதயத்தில் இரண்டாவது ப்ரகரணம் முடிவு சூர்ணையின் வியாக்யானத்தில் (அவஸானத்தில்) "துதையாவது—சிறுசோறு அடுகைக்கு உபகரணமாகையாலே தாருரூபவஸ்தாவாரத்துக்கும் இவை உபகரணமாயிருக்கையாலே." என்று (1876ஆம் அச்சிட்ட) தெலுங்கு லிபிப்ரதியிலும், பிறகு அச்சிட்ட தமிழ் லிபிப்ரதியிலும் காண்கிறது. இது ஸர்வாத்மநா அநந்விதம் என்பது நாம் சொல்லவேண்டா. இங்குப் பலவாக்கியங்கள் விடுபட்டன.

> "துதையாவது சிறுசோறு அடுகைக்கு உபகரணமாகையாலே இந்திரிய வ்யதிரிக்தங்களான ஹோமஹோவகரணங்களுக்கு உபலக்ஷணம். ஹோமஹோ நமான தேஹத்தையும் ஹோமஹோவகரணமான இந்திரியங்களையும் சேர்ந்து கழ லித்யாதியாலே லீலோபகரணமாகச் சொல்லுகிறது. லீலையாவது தாருரூதிகரஸமான வ்யாபாரமாகையாலே தாருரூபவஸ்தாவாரத்துக்கு இவை உபகரணமாயிருக்கையாலே."

என்று இங்ஙனே ஸ்ரீஸூக்தி இருக்கவேணும். இங்கு அச்சில் பல பங்க்திகள் விட்டுப்போயின. [ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபகஸபையின் பதிப்பில் இதைத் திருத்தியே நாம் வெளியிடுவித்திருக்கிறோம்.] இவ்வளவு பங்க்திகள் விடுபட்டுப்போயிருப்பதனால் அநந்விதமாகவேயிருந்தும் அந்த ஸ்ரீகோசங்களை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமிகள் பலர் தடுமாறுமதும் ஒரு சங்கையுமில்லாமலும் ஸாதித்து முடிக்கிறார்கள். இங்ஙனமே தத்வத்ரய முமுக்ஷுப்படி ஸ்ரீவசநபூஷணதிவ்யப்ரபந்தாதி வியாக்கியானங்களிலுமுள்ளன என்பதை எவ்வளவோ வெளியிட்டுமிருக்கிறேன், வெளியிடவும் போகிறேன்.

பெருமாள் திருமொழியில் (4—7.) *வானாளும் பாசுரத்தின் வியாக்யான அவதாரிகை அச்சுப்பிரதிகளில் உள்ள விதமாவது—"திருமலையில் சிகரமானால்

ஏறவல்லார் அநுபவித்து, மாட்டாதார் இழக்குமதாயிருக்குமிறே; அப்படியின்றியே எல்லார்க்கும் அநுபவயோக்யமாயிருக்கும் கானாறாகவேணும் நானென்கிறார்" என்னுமிவ்வளவே. இதற்கடுத்தாப்போல் இருக்கும் ஸ்ரீஸூக்திகள அச்சில் விடுபட்டன. அஸ்மதாசார்யரான ஜீயர் ஸ்வாமி திருத்திவைத்துக்கொண்டிருந்த ஸ்ரீகோசத்திலிருந்து ஸங்க்ருஹீதங்களான ஸ்ரீஸூக்திகளாவன;—

"அன்றிக்கே, திருமலையில் வாழ்ச்சியையே பேறாகக்கொண்டிருக்குமிவர்க்கு அதின் ஏகதேசமாயிருக்கை தேட்டமல்லாமையாலும், ஸ்வபோகவ்யவஹாரத்திலும் பரபோகவ்யவஹாரம் ஸத்ஜநாபிமதமாகையாலும் அதற்குறுப்பாகக் கானாறாக வமையுமென்கிறார்." என்பனவாம்.

கீழ் ஆறாம்பாட்டில் (அன்னனைய பொற்குவடாம் என்று) திருமலையில் ஏகதேசமாகவேணும் என்றார். இவ்வேழாம் பாட்டில் கானாறாகவேணுமென்கிறார். இதற்குச் சிலர் கூறும் அவதாரிகையைப் பெரியவாச்சான்பிள்ளை முந்துறவருளிச்செய்து அதில் ஸ்வாரஸ்யம் குறைந்திருக்கையாலே பட்டர் நம்பிள்ளைபோல்வார் அருளிச்செய்யும் அவதாரிகையை அடுத்தபடியாக அருளிச்செய்தார். திருமலையில் ஒரு சிகரமானால் அது ஏறவல்லார்க்கு மாத்திரம் பயன்பட்டு மற்றையோர்க்குப் பயன்படாததாம்; அங்ஙனமன்றி எல்லார்க்கும் பயன்படத்தக்கதான ஒரு காட்டாறாகக்கடவேன்—என்பது முதல் அவதாரிகையின் கருத்து. இதில் ஸ்வல்பம் அஸ்வாரஸ்யமுண்டு: திருமலையில் தம்முடைய பிறவி பிறரொருவர்க்குப் பயன்படவேணுமென்பது இவருடைய திருவுள்ளமல்ல. 'திருமலையில் வாழ்ச்சிதானே தமக்குப்பேறு' என்று கொண்டவராதலால், அங்குத் தமது ஜன்மம் பிறர்க்கு அநுபாவ்யமாகிறதா இல்லையா என்பதை இவர் கணிசிக்க ப்ராப்தரல்லர். தவிரவும், திருமலையில் தம்முடைய சேஷத்வம் விளங்க வாழ்வது இவர்க்கு உத்தேச்யமேயல்லது திருமலையின் ஏகதேசமாகவே தாம் இருக்கப்பெறுவது உத்தேச்யமுமன்று. இவர்க்குத் திருமலையில் வாழ்ச்சி எப்படி உத்தேச்யமோ அப்படி வேறிடங்களில் வாழப்பெறாமையும் பரமோத்தேச்யம். கீழ்ப்பாட்டில் விரும்பினபடி குவடாக ஜனிக்கப்பெறில் அது ஒரு சிலாவிசேஷமேயாதலால் அதனை யாரேனும் பெயர்த்துக்கொண்டு போய் அநுத்தேச்யமான விடங்களில் வைத்துவிட நேர்ந்தால் தாம் திருமலையில் வாழ்ச்சியை இழந்ததோடு ஹேயதேசப்ராப்தியாகிற அநிஷ்டத்தையும் அடைந்தாராகக்கூடுமாகையாலே இவ்வகையான இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களுக்கு அவகாசமற்ற பிறவியை [அதாவது கானாறாவதை] இப்பாட்டில் விரும்புகிறார் என்பதே ரஸவத்தரம் என்கிற அழகிய திருவுள்ளக்கருத்தைப் பெரியவாச்சான்பிள்ளை தாமே அடுத்தபடியாகக் காட்டியருளினர்.

மேலே பாசுரத்தின் வியாக்கியானத்திலும் இந்தத்திருவுள்ளத்தையே நன்கு விளங்கக் காட்டியிருக்கிறார். எங்ஙனே யென்னில்; "[கானாறாய்ப்பாயுங் கருத்து

டையேனுமேயோ] ஸஹ்யம் பற்றினதாகில் கீழேபோமிறே. அங்கே சுவறிப்போம் காட்டாறுகு மபிஸந்தியையுடையேனாகவேணும்.'' என்பது வியாக்கியான் ஸ்ரீஸூக்தி. இதன் பொருளை நன்கு ஆய்ந்துணர்ந்தால் கலக்கம் தொலையும். அங்கே சுவறிப்போம் என்றது மிகவும் ஸாபிப்ராயம். திருமலையில்வாழ்ச்சிதான் இன்றியேயொழிந்தாலும் பிறவிடங்களில் புகப்பெறாத பிறவியாதலால் இதுவே நன்றுஎன்பதையன்றோ இந்த ஸ்ரீஸூக்தி காட்டுகிறது. முதலவதாரிகையே பிள்ளைக்குத் திருவுள்ளமாகில் "அங்கே சுவறிப்போம்" என்கிற இந்த ஸ்ரீஸூக்தி அதோடு விரோதிக்குமே. திருமலையில் ஏறவல்லாரல்லாதார்க்கும் அநுஸந்தாவ்யமாகைக்காகக் கானாறாகவேணுமென்றாரென்னில், அதற்கு அநுகுணமாக "இவ்வருகுள்ளாரும் எளிதிற் குடைந்தாடுதற்குப் பாங்காகப் பெருகிச் செல்லுங் கானாறு" என்றன்றோ வியாக்கியானித்திருக்கவேணும். அப்படியில்லாததோடு தத்விருத்தமாகவுமன்றோ ஸ்ரீஸூக்தியுள்ளது. இவ்வளவு ஆராய்ச்சியில்லாமல் ஸஹஸாப்ரமித்து ஆக்ஷேபிக்குமவர்களுக்கு நாம் விடையளிப்பதில் வீணே. இதைப்பற்றின விரிவு நிரீக்ஷவ ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சந பத்ரிகையில் காணத்தக்கது.

* கர்த்தவ்யம் விநயசாலிநேதி * மிகவும் அற்பனாகிய அடியேன் பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை அநாதரித்து எழுதுகிறவனென்பதே தேறிவிட்டாலும் பிள்ளையின் பெருமைக்கொரு குறையில்லை; அடியேனுடைய ஆத்மஸ்வரூபம் நசித்துப்போகுமத்தனை. இவ்வகைக்குரிய விஷயத்தை யெடுத்து எழுதி வீண்போது போக்குவதிற் காட்டிலும் பூர்வாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளில் பல பெரியார்களும் உண்மையுணராது தடுமாறி நிற்கும்படியான விஷயங்கள் பலவுள்ளனவே, அவற்றை யெடுத்துக்கொண்டு ஆக்ஷேபித்து உண்மைப் பொருளுணர்த்தி இந்த ஸ்வாமி நிர்வஹிப்பரேல் அது ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கெல்லாம் ஆற்றிய பேருதவியாகும். தாத்ருச விஷயங்கள் பலபல இருப்பவற்றில் சிலவற்றை இங்கு விஜ்ஞாபிக்கிறேன். பரமக்ருபையுடன் சிறிதேனும் லோகோபகாரம் செய்தருள்வரா?

பகவத்கீதையில் [15—4] * தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ * என்கிறவிடத்தில் நம் ஸ்ரீபாஷ்யகாரர் [ப்ரபத்யேத — தமேவ சரணம் ப்ரபத்யேத] என்று பாஷ்யமருளிச்செய்து "ப்ரபத்யே யத: * இதி வா பாட:; தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே — சரண முபகச்சேத், யத: ...." இத்யாதி அருளிச்செய்துள்ளார். "இங்கு உபகச்சேத் புருஷமேவ வாக்யாந்வயாத் ஸ யத: இதி வக்தவ்ய:" என்பது தாத்பர்யசந்த்ரிகா. ஶங்கராசார்யர் ப்ரபத்யே என்று உத்தமபுருஷைகவசனமாக வைத்து வியாக்கியானம் பண்ணியுள்ளார். ஆநந்த தீர்த்தாசார்யர் பாடத்தை மாத்திரம் ப்ரபத்யே என்று கொண்டு ப்ரபத்யேத என்று ப்ரதம புருஷமாக பாஷ்யமிட்டார். * வ்யத்யயோ பஹுலமிதி ஸூத்ராத் ப்ரதம புருஷ — ப்ரபத்யேதேதி" என்று அங்கு

ஜயதீர்த்த முநியின் வியாக்கியானம். இதர பாஷ்யப்ரக்ரியை எங்ஙனே யிருந்தாலும் நம் ஆசார்யர்கள் ஸ்ரீராமாநுஜ பாஷ்ய ப்ரக்ரியையையே சரணமாகப் பற்றவேண்டியவர்களென்பது நிர்விவாதம். மணவாளமாமுனிகள் அருளிச் செய்த கீதார்த்த ஸங்க்ரஹ தீபிகையிலும் ப்ரக்ருத ச்லோக வியாக்கியானம் நம் கீதாபாஷ்யத்தை அடியொற்றியே அவதரித்திராநின்றது. ப்ரபத்யே என்று உத்தமனை பாடம் அதிலும் கொள்ளப்படவில்லை. இப்படியிருக்க;

முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகரணத்தில் ஸகலோபாய விவரணத்தில் பிள்ளையுலகாசிரியர் * தமேவ சாத்யம் * என்னுமிவ்வளவு மாத்திரம் உதாஹரித்தருளினர். அங்கு வியாக்கியானம் செய்தருளும் மணவாளமாமுனிகள் "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே என்று ஆத்யனை அந்த புருஷனையே ப்ரபத்தி பண்ணுகிறேன் என்றும்" என்றருளிச் செய்திருக்கக் காண்கிறோம். இது கீதா பாஷ்ய விருத்தமாகவும் சங்கரபாஷ்யாநுஸாரியாகவுமுள்ளதே யென்கிறார்கள்.

திருவாய்மொழியில் (1—1—6.) * நின்றனரிருந்தனர் * என்கிற பாட்டின் ஒன்பதினாயிரப்படியில்— "நாலாம் பாட்டிலே ஸர்வ தாதாத்ம்யம் ஸித்தமாகையால் இப்பாட்டில் ப்ரவ்ருத்திநிவ்ருத்த்யாதி தாதாத்ம்யத்திலே தாத்பர்யமாயிற்று. * காரணம் து த்யேய: * என்கிறவிடத்தில் காரணத்வாதிகளே விதேயமானாப்போலே." என்பது நஞ்சீயரருளிச்செயல். அவ்விடத்திலேயே இருபத்தினாலாயிரப்படியில்— "நாமவன் என்கிற பாட்டிலே ஸ்வரூபஞ் சொல்லுகையாலே இப்பாட்டில் ப்ரவ்ருத்திநிவ்ருத்தி மாத்ரத்தையே நினைக்கிறது; காரணாதிகரணத்தில் காரணத்வாதிகளே விதேயமானாப்போலே." என்பது பெரியவாச்சான் பிள்ளையருளிச்செயல்.

இனி இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்தியெங்ஙனே யென்னில்;—"ஸ்ருஷ்ட்யாதி வாசக ஶப்தம் வ்யக்தியிலே பர்யவஸித்து நிற்குமாபோலே ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளுக்கு வாசகமான சப்தமும் அபர்யவஸாநவ்ருத்த்யா அவனளவிலே சென்றல்லது நில்லாது. * காரணம் து த்யேய: * என்கிற விடத்திலே குணவிசிஷ்ட வஸ்து தோற்றாநிற்கச் செய்தேயும் காரணத்வாம்சத்திலே தாத்பர்யமாகிறாப்போலே......ப்ரவ்ருத்திநிவ்ருத்த்யம்சத்திலே நோக்கென்று சொல்லுவாருமுண்டு; அப்போது ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது."—என்று காண்கிறது. இங்குப் பெரியோர்கள் சங்கிப்பது யாதெனில்; நம்பிள்ளை, நஞ்சீயர் பக்கலிலே ஸகலார்த்தங்களும் கேட்டவர்; நஞ்சீயரருளிச் செயலுக்கு விருத்தமாக நம்பிள்ளை ஸாதிப்பரோ? நம்பிள்ளை ஸந்நிதியில் கேட்டதைத்தானே பெரியவாச்சான்பிள்ளையும் ஸாதித்தருள்வர். இங்ஙனமிருக்க, இங்கு ஈட்டில் நஞ்சீயருடையவும் பெரியவாச்சான்பிள்ளையினுடையவும் ஸ்ரீஸூக்திகளை(த் திருவுள்ளம்பற்றி) "என்று சொல்லுவாருமுண்டு" என்று அநுவதித்து, உடனே "அப்போது ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது" என்றருளிச் செய்வதனால் அவற்றை உபேக்ஷித்திருப்பது

போல் விளங்காநின்றதே, * பேசிற்றே பேசும் ஏககண்டர்களின் திவ்யஸூக்தி இங்ஙனே இருக்கலாமோ? என்று.—இத்தகைய இடங்களிலே நம் ஆசாரிஸ்வாமி தம் பாண்டித்யத்தையும் விமர்சசக்தி விசேஷங்களையும் செல்லவிட்டு ஸமந்வயம் காட்டியருளினால் உலகுக்கு மஹோபகாரம் செய்ததாகுமே.

இங்ஙனே நாம் விஜ்ஞாபிப்பதைக் கடாக்ஷித்தவுடனே ஆசாரிஸ்வாமி என்ன ஸாதிக்கப்போகிறாரென்னில்; பூர்வவியாக்கியானங்களை மறுத்து எழுதுகிற வழக்கம் பூருவாசாரியர்களுக்கே உண்டு' என்று காட்டி ஸ்வதோஷத்தைப் பூருவர்கள் திறத்திலும் ஆரோபணம் செய்து, ஏவம் அவர்களோடு நம்மோடு வாசியில்லையென்று சொல்லிக்கொள்வதற்காகவே இதையெல்லாம் எடுத்தெழுதுகிறானிவன்—என்று சொல்லக்கூடும்; இதனால் சில பாமரர்களை வஞ்சிக்கவுங் கூடும். அவர்க்கு விளையக்கூடிய விபரீத க்ரஹணக்ஷயநங்களுக்காக அடியேனுடைய விவக்ஷிதங்களை மறைத்துவைக்கவொண்ணுமோ? பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணத்திற்கென்றே இட்டுப் பிறந்திருக்குமடியேன் திறத்து இவர் ஆரோபிக்கும் குற்றங்களைச் சிலர் நம்பினால் அதனால் ஸுதராம் அடியேனுக்கு யாதொரு அவத்யமும் விளையாது. பரகால ஜீயர் தமது பதினெண்ணுபிரப் படியினுபக்ரமத்தில் "வ்யாக்யாநம் ஶங்கோசவதிவ்யவஹாரம் யதாக்ஷிணாத்யை: க்ருதம் ஸ்ரீபாஷ்யாதிவிருத்தமேவ ததிதி வ்யக்தம்." என்று எழுதியிருப்பதற்கு எவ்வளவு மதிப்போ அவ்வளவே ஆசாரிஸ்வாமியும் தச்சிஷ்யர்களும் அடியேனுடைய வியாக்கியானங்களைப்பற்றி யெழுதுவதற்குமாகும் என்பதை நிரூபகர்கள் மறவார்கள். "பூருவர்களின் ஸ்ரீஸூக்திகளை ஸம்ரக்ஷிக்கவேண்டிய கடமை இவ்வண்ணாஸ்வாமிக்கு அடியோடு இல்லை" என்று எழுதி, அந்தக் கடமை தமக்குள்ளதாகக் காட்டியிருக்குமிவர் அந்தக் கடமையை மிகவும் அவசியமான விஷயங்களிலே செலுத்தியருளவேணுமென்றே மேற்குறித்த விஷயங்களை அடியேன் இங்கு விஜ்ஞாபித்தேன். இங்ஙனே இவர்குப் பல விஷயங்கள் தருவேன்.

"இவனுடைய கோற்கீழ்க் கன்றாக நாம் வளரவில்லை; இவனெடுத்துக் காட்டும் விஷயங்களைப்பற்றி நாம் அபிமானிக்க வேண்டிய ஆவச்யகதையில்லை" என்றித்தகைய சில ஸ்ரீமத் கம்பீர ஸ்ரீஸூக்திகளால் நெகிழ நினைத்தருளாமல் ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணக்கடமையொன்றையே கடைப்பிடித்து ஸத்ஸம்ப்ரதாயப்ரவசநங்களினால் லோகோபகாரம் செய்தருள்வாராக.

ஆசாரிஸ்வாமிகள் ஒரு ஸர்வதேஶர்மன் பக்கலிலே அபஶ்ரவணம் பண்ணியிருந்து அந்த அவலம்பத்தையுமிழந்ததாக விஜயத்வஜத்தில் நாம் எழுதியிருந்தோம். அந்தப் பகுதிக்கு மறுப்பெழுதாநின்றவிவர் ஒரு மதுரைதாஸரைப்பற்றி ஏதோ எழுதிவருகிறார். இதனால் ஸர்வதேஶர்மத்வம் அந்த வ்யக்தியிடத்தே யோஜ்யமென்று காட்டி, உண்மையில் அந்த வ்யக்தியிடத்தில்தான் தாம் அபஶ்ரவணம் பண்ணிக்கிடந்ததென்பதையும் விளக்கி அந்தோ!

ஹாஸ்யராகின்றனர். திருவாய் மொழியில் (6-2-11) * அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டழகூத்தவப்பன் * என்றவிடத்து ஈட்டில் நம்பிள்ளை ஆச்சரியமாக ஒரு கதை ஸாதிக்கிறார்—"மடம் மெழுதுவாரார்? என்ன, 'அச்ரோத்ரியன்' என்றார்கள்; இப்பரப்பெல்லாம் என்னாலே மெழுகப்போமோ வென்றான், அது போலே." என்பது அவ்விடத்து ஸ்ரீஸூக்தி. அதனையே நம் ஆஸூரிஸ்வாமி நினைப்பூட்டுகிறார். இவர் அஸூயராக பதில் எழுதுபவராகில் இங்ஙனே யெழுதியிருக்கவேணும்; (அதாவது) ஜாதி வ்யவஸ்தையை எம்பெருமானிடத்தில் தான் நாங்கள் ஸம்ரக்ஷணம் பண்ணியிருந்தோம். அந்த அவலம்பத்தை ஒருகாலுமிழக்க ப்ரஸக்தியேயில்லை யெமக்கு" என்றெழுதி யிருந்தால் பாபி கூத்தில் தலைநின்றாராவர். அதற்கு ப்ரஸக்தி ஏது?

நம் ஸ்வாமி வாயினாற் பேசும்போதும் எழுதும்போதும் தாமது ஆராய்ச்சியின்மையை விளக்கியே தீருவர் என்று நிதர்சநங்களுடன் விஜயத்வஜத்தில் நிரூபித்திருந்தேன். அந்த நிரூபணம் தமது நூலில் நேர்ந்துவிட்ட அச்சுப்பிழைகளையே பற்றுக்கோடாகக் கொண்டது—என்கிறார். ததாஸ்து. ஒவ்வொரு விஷயத்திலும் இவர் மருண்டேயிருப்பதை விஜயத்வஜம் அலகலகாக எடுத்துக் காட்டுகிறதே; அதற்கெல்லாம் அச்சுப்பிழை அச்சுப்பிழை அச்சுப்பிழை என்றேயோ இவர் விடையிறுக்க நினைப்பது? உண்மையில் வேறு கதியில்லையென்பது உலகறியும். அச்சுப்பிழை மாத்திரமேயோ? ஹல்லுப்பிழையுமுண்டோ? ஸிஹ்ம என்றதில் அச்சுப்பிழையில்லையே ஹல்லுப்பிழைதானே. "நவநீத ஹாரிணி வனே ஹஸ்தம் க்ஷீயதம் ந்யாஸ:" என்றால் "ஜாத: கண்டு நவதகம் ஸு ஹாபிதஸ்ய" என்றது போன்ற இவருடைய விடை எவ்வளவு தூரம் விலைச்செல்லும்?

விஜயத்வஜத்தில் அடியேனுடைய பெயர் அண்ணங்கராச்சாரியர் என்றிருக்கிறதாம். ஆசாரியர் என்பது ஆச்சாரியர் என்று ஆனதற்கு என்ன இலக்கணம்! என்கிறார். எந்த இலக்கணம் காட்டினால் இவர்க்கு அர்த்தமாகும்? கிடாம்பியாச்சான், நயனாராச்சான், என்னாச்சான் இத்யாதியாகப் பல திருநாமங்கள் வழங்கி வருகின்றனவே; அங்கு ஆச்சான் என்ற சொல்லுக்கு என்ன பொருள்? தெரியுமோ இவர்க்கு? ஆசாரியர் ஆசானாகி, ஆசான் ஆச்சானாயிற்று என்று ஆத்தான்ஜீயர் விவரிக்கிறார். அரசாங்கத்து அகராதியிலும் இதனை ஆதரித்துள்ளார்கள். ஆகவே தமிழில் ஆசாரியன் போலவே ஆச்சாரியன் என்பதும் நன்கு அமையும். அடியேன் அபசப்தமாகவே ப்ரயோகிக்கவேணுமென்று ஆசைப்பட்டு ப்ரயோகித்தாலும் அது ஸாதுசப்தமாகவேதான் பொலிவுறும். அந்தோ! நம் ஸ்வாமியின் எண்ணமெல்லாம் ஊமனார் கண்ட கனவிலும் பழுதாயொழிகின்றனவே. ஆச்சரியமான விஷயங்கள் கண்டு பிடிக்கிறார்!

ஸ்ரீபாஷ்யத்தில் ஸத்தாவ பாடவிஷயமாக ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தவைஜயந்தியில் (1—12ல்) மிகவிரிவாக எழுதியிருக்கிறேன்; விஜயத்வஜத்திலும் விரிவு காணலாம். இப்போது ஸாரமாக நான்கு வார்த்தையே எழுதுவேன். ச்ருதி

ப்ரஸவபக்ஷத்திற்கு ச்ருதப்ரகாசிகையிலும் விவரணமுள்ளது, தத்வடீகையிலும் விவரணமுள்ளது. இவர் ச்ருதப்ரகாசிகையைவிட்டு தத்வடீகையைத் தேடிப் பிடித்து அதில் ஸர்வவாதிநிராஸ: என்றிருப்பதை யெடுத்துக்காட்டினபடியாலே ச்ருதப்ரகாசிகையைத் தமக்கு அநுபகாரகமாகவும் தத்வடீகையையே பரமோபகாரகமாகவும் கொண்டார் என்பது விளங்கிற்று. அதே தத்வடீகையில்—“தஸ்ய ஸங்கோசாத். ந கேவலம் ப்ரயோகஹேதுத்வே கிமாஸ:” என்றுள்ள ஸ்ரீஸூக்தியினால் ஸம்பவபாடம் ஸர்வஸம்மதமாகும் என்பதையறிய இவர்க்கு உபகாரணமில்லை. சாஸ்த்ரக்ரந்தங்களில் பிரயோகிக்கப்படுகின்ற அபவாத சப்தம் எதிலே நியதமென்பதை ※பாதகபாதகாநித்யாந்தரங்காபவாதாநாமுத்தரோத்தரம் பலீய:※ என்றவ்யாகரண பரிபாஷையின் வியாக்யானங்களினால் தெளியவேணும். ப்ரதி ப்ரஸவபக்ஷமும் பாதகபாதகத்திலேயே நியதமென்று வையாகரணஸித்தாந்தம். இந்த விசாரம் விஜயத்வஜத்தில் மிகத்தெளிவாகக் காணலாகும். ஸம்பவ பாடம் ஸாதுவென்று கண்டுகாணவுமிவர்க்கு நேராது. “ப்ரதிப்ரஸவ சாஸ்த்ரத்தின் ப்ரவ்ருத்திஸம்பவம் ஹேதுவாமொழிய அந்த சாஸ்த்ரத்தின் இருப்பே ஹேதுவாகமாட்டாது” என்று அஸமஞ்ஜஸதமமாக இவர் எழுதியிருப்பதெல்லாம் பண்டே ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தியில் நம்மால் நன்கு ப்ரத்யாக்யாதங்கள். அந்தோ? ப்ரதீதப்ரமாணநம் பண்ண முயல்வதே!. ஸ்ரீஜகத்குரு ஹயவதநலீலாவதாருடைய மூலஸாவப்ரகாசிகையில் (ப்ரதிப்ரஸவ ஸம்ஹாவாதி) என்றே ப்ரதீகயாரணமுள்ளது.

ஆஸூரிஸ்வாமியின் பூர்வநிர்வாஹ பரித்ராண க்ரந்தத்தினால் அடியேன் மிகவும்வருந்திக்கிடக்கிறேனென்பது அடியேனுடைய லிகிதங்களினாலேயே விளங்குகின்றதென்று தோல்விச்சுவடியில் எழுதப்பட்டுளது. வாஸ்தவமாய் அவருடையக்ரந்தத்தினால் அடியேன் அளவிலாத வருத்தத்தையே அடைந்து கிடக்கிறேன். ஏதோ தெரிந்தவரென்று சிலரால் மதிக்கப்படும் நிலைமையில் எழுந்தருளியிருந்த ஸ்வாமிக்கு ஸ்வகீய க்ரந்தமூலமாகவே ஒரு அபக்யாதி ஏற்பட்டால் அடியேன் வருந்தாதிருக்க எங்ஙனே முடியும்? ※ஸகலம் து:கம் ஸம்ஸாரே※ என்கிற கணக்கிலேயன்றோ எமது ஸௌஹார்த்தமுளது. “ஆஸூரிஸ்வாமி க்ரந்தநிர்மாணப்ரவ்ருத்தி கொள்ளாமல் இதுகாறும்போல் வாதாரம்பவிஜ்ரும்பணத்தளவிலே நின்றிருந்தால் எவ்வளவோ மதிப்பாகவேயிருக்குமென்றும், இக்கு இன்றென்பதை விமர்சியாமலே ஸஹஸாப்ரவர்த்தித்து ஸ்வபக்ஷமஹிமைய வாசாமகோசரமென்று ஒரு க்ரந்தத்தைப்பெருக்கியதனால் பலரும் ஏசுதற்கு இடமாயிற்றே?” என்றும் ஆங்காங்குப் பலர் குழுமிக்கு ழுமிக் கூறுவதைக்கேட்குமடியேன் பரிதாபப்படாதிருக்கவொண்ணுமோ? நமக்கு அநுகூலமாகத்தானே பலரும் சொல்லுகிறார்களென்று அடியேன் மகிழ்ந்திருப்பேனோ! அவர்க்கு விளையும்அவஜ்ஞை அடியேனை வருந்தச்செய்யாதிருக்குமோ? அந்த வருத்தந் தன்னையே விஜயத்வஜத்தில் வாய்விட்டு முறையிட்டிருக்கின்றேன். வேறு

வகையான வருத்தம் நமக்குண்டாக ப்ரஸக்தியேது! விஷய விசாரங்களில் ஒவ்வொரு ஸம்பந்தத்திலும் பூர்வபக்ஷிகளின் ஸர்வதோமுகமான பாண்டித்யத்தை நாம் நிரூபிக்க இருந்தாலன்றோ இவர்கள் நினைக்கிறபடி நாம் வருந்தவேணும். இன்றுதாறும் நாம் வெளியிட்டிருக்கின்ற விஜயத்வஜப் பகுதியே போதுமே பூர்வபக்ஷிகள் ※ இருந்தார் தம்மையுடன் கொண்டு அங்கெழிலார் பிலத்துப் புக்கொளிக்க.—இனி வெளிவரப்புகும் விஜயத்வஜப் பகுதியிலும் இவர்களது திவ்ய ஸூக்தியின் வெற்றி வைபவம் எவ்வளவோ அற்புதமாகக் காணலாகுமே. விஜயத்வஜம் எட்டு பக்கத்தளவிலே அவஸிதமென்று மயங்கி மகிழ்ந்து ஆரவாரிப்பது விவேகிகளின் பணியாகுமோ? வஸ்துதஸ்து, இனி வெளிவரப்புகும் பகுதியைப் பற்றி விசாரமே வேண்டா. வெளிவந்தவரையில் ஒரு பாராவுக்காவது விடை கூற இயலுமோ இவர்க்கு? நிந்தைகளால் நூல் நிரப்ப நன்றாக இயலும்.

உத்தமம் உத்தமம் ஸர்வஜ்ஞம்மந்யதா. அடியேன் அநுசிதமும் அநாவச்யகமுமான விசாரத்தில் ஒருநாளும் ப்ரவர்த்திக்க விரும்பேன். ப்ரவர்த்தித்த உசிதகார்யத்தில் பிறருடைய மாயமயக்குகளால் நிலைகலங்கித் தளும்பி நிற்பேனல்லேன். இவர்கள் பிரயோகிக்கும் உபாலம்பசரங்கள் அடியேனுக்கு ஒரு வாட்டத்தையும் உண்டுபண்ணமாட்டா.

விஷய விசாரத்தில் நோக்குடையவர்கள் இத்தகைய உபாலம்பஸாஹஸத்தில் ஒரு நாளும் இழியக் கருதார். இப்போது 14 பக்கம் வெளியிட்டுள்ளார்களே, இதில் விவாதாஸ்பதவிஷய விசாரம் நாலெட்டு வரிதானே. அது தானும் ஸமஞ்ஜஸமாகவுண்டோ? ப்ராமாணிக பண்டிதரென்று புகழ்பெற விரும்புவார்க்கு இதுவோ பணி? உபாலம்பத்திற்கென்றே தொடங்கினதாயிருந்தாலும் பலர்க்கும் பயன்படக்கூடிய ஸத்விஷயங்களையும் ஊடேயூடே சேர்த்து வெளியிட்டால் ‘கலையிலங்கு மொழியாளர் இவரே’ என்று போற்றலாகுமே. சூர்ப்பணகை மந்தோதரி போல்வாருடைய அழுகைப் பாசுரங்களிலிருந்தும் வேதாந்த ரஹஸ்யார்த்த நிதிகளன்றோ வெளிவரலாயின. ஸத்விஷயங்கள் நெஞ்சினுள்ளே தேங்கிக்கிடந்தாலன்றோ அவை அவசமாகவும் பெருக்காறெடுத்துவரும்.

நம் ஸ்வாமிகளின் திருவடிகளில் தலைவணங்கிக் கைகூப்பியேத்தி நின்று விஜ்ஞாபிக்கிறேன். வாதகதாரஸிகர்கள் ஸ்ரீஸூக்திகளை வெளியிட்டு வாய்மாளச் செய்துவிடுவோமென்கிற திருவுள்ளத்தைப் பாவியேன் திறத்தில் வஹித்தருள வேண்டா. அவற்றால் யாதொரு பேறும் பெறலாகாது. நிரவத்யகபோலக்ஷவடிவடிவாஜ்ஞாயங்களுக்குத் தலைதுலுக்கி நிற்பார்திறத்தே காட்டியருளும் திருநாவீறுகள் பாவியேன்பாடு விலைச் செல்லவில்லா. சந்த்ராலோகத்தில் ※ நஹ்யுதிதே தக்ஷிதவ! க்ருபிதம் க்ஷிப்யதே தஸ்மை:※ என்றொருச்லோகம் காட்டப்பட்டுளது. அது திருவுள்ளத்திற் பதிந்திருக்கவேணும். ஸூக்ஷ்மதக்ஷப்ராஜ்ஞங்கொண்டு பெயர்த்து விடுவோம் என்கிற உநாநாதடவ்யவாஹங்கள் அதத்ஸாத்ரஸப்ரஸாஸ்யாஸ்வாதிகளிடத்தே மடிந்தொழிய வேண்டுமத்தனை.

தர்க்க ஸங்க்ரஹம் வாசித்தவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு சிறுவிஷயத்தில் நம் ஸ்வாமி மருண்ட மருளை ஈண்டெடுத்துக் காட்டுகின்றேன் காண்மின். ஶாஸ்த்ராவகாஹநஸாமர்த்யத்தின் பரிசை இஃதொன்று கொண்டே நிலையிடலாம். விஜயத்வஜத்தில் (பக்கம் **2**-ல்) "பாண்டித்யத்திற்கும் ஆராய்ச்சிக்கும் ஸம்பந்தம் நியதமன்று" என்று நாம் எழுதினோம். இதை இவர் (பக்கம் **6**-ல்) எடுத்துக்காட்டி என்ன எழுதியுள்ளாரென்னில்; "ஆசாரிஸ்வாமிகட்குப் பாண்டித்யமுளதேயாயினும் ஆராய்ச்சியில்லையென்றும், தமக்குப் பாண்டித்யமில்லையாயினும் ஆராய்ச்சி உளதென்றும் தெரிவிக்கிறார்; இது வியப்பினும் வியப்பே" என்கிறார். இதனால் இவருடைய தர்க்கப் படிப்பின் பரிசும் வெளியாயிற்று. "பாண்டித்யத்திற்கும் ஆராய்ச்சிக்கும் ஸம்பந்தமில்லை" என்று நாம் எழுதியிருந்தோமாகில் இவர் பண்ணுகிற அர்த்தம் இடம் பெறும். அங்ஙனே நாம் எழுதியிருக்கவில்லை. "ஸம்பந்தம் நியதமன்று" என்றே எழுதியுள்ளோம். இவரும் அப்படியேதான் உதாஹரித்துள்ளார்.

மஹாநஸபர்வதாதிகளில் வஹ்நிதூமங்களுக்கு ஸாஹசர்யத்தைக் கண்ட சைத்ரன் வஹ்நிதூமயோஸ்ஸாமாநாதிகரண்யம் நியதமென்றான். அதைக் கேட்ட மைத்ரன் அங்காராயோகோளகாதிகளில் வஹ்நௌ தூமஸாஹசர்யத்தின் அபாவத்தைத் தான் கண்டவனாகையாலே வஹ்நிதூமயோஸ்ஸாமாநாதிகரண்யம் ந நியதம் என்கிறான். இங்கு விவக்ஷிதமென்ன? யத்ர யத்ர வஹ்நி: தத்ர தத்ர தூம: என்று வ்யாப்தி சொல்லப்போகாது என்று விவக்ஷிதமேயல்லது (யத்ர யத்ர வஹ்ந்யபாவ: தத்ர தத்ர தூம:) என்பதும் விவக்ஷிதமாகாது. அது போல வைதுஷ்யவிமர்ஶயோஸ்ஸாமாநாதிகரண்யம் ந நியதம் என்கிற நம் வார்த்தைக்கும் (யத்ர யத்ர வைதுஷ்யம் தத்ர தத்ர விமர்ஶ:) என்று வ்யாப்தி சொல்லப்போகாது என்றிவ்வளவு விவக்ஷிதமேயல்லது (யத்ர யத்ர வைதுஷ்யாபாவ: தத்ர தத்ர விமர்ஶ:) என்றதாகத் தேறாது. வஹ்நிதூமயோஸ்ஸாமாநாதிகரண்யம் நியதம் ந என்பவனுடைய கருத்தின்படி, தூமம் ஹேதூக்ருத்ய வஹ்நிஸாதநம் பண்ணலாமேயல்லது வஹ்நிம் ஹேதூக்ருத்ய தூமஸாதநம் பண்ணலாகாது (அதாவது) வஹ்நிமாந் தூமாத் என்னலாமேயொழிய தூமவாந் வஹ்நே: என்னலாகாது என்று தேறுவதுபோல, 'வைதுஷ்யவிமர்ஶங்களுக்கு ஸாமாநாதிகரண்யம் நியதமன்று' என்ற நமது கருத்தின்படிக்கும் விமர்ஶம் ஹேதூக்ருத்ய வைதுஷ்யஸாதநம் பண்ணலாமேயல்லது வைதுஷ்யம் ஹேதூக்ருத்ய விமர்ஶஸாதநம் பண்ணலாகாது (அதாவது) அயம் வித்வாந் விமர்ஶயுக்தத்வாத் என்னலாமே யல்லது (அயம் விமர்ஶயுக்த: வித்வத்த்வாத்) என்னலாகாது — என்பது தேறும். [இங்கு நாம் அஸந்திக்தமாகக் காட்டினதற்கு வஹ்நிதூமஸாமாநாதிகரணம் ஆசாரிஸ்வாமியென்னுமிடம் ஸ்பஷ்டமேவோக்தம்] இங்கு இன்னமும் விவரிக்கவேண்டிய அவசியமில்லை. ஏவஞ்ச, "அண்ணாஸ்வாமி தமக்குப் பாண்டித்யமில்லையாயினும் ஆராய்ச்சியுளதாகத் தெரிவிக்கிறார்" என்று இவர் எழுதினது * ந்யாயஸூத்ரவிப்லவம் முதற்கொண்டே விபரீத க்ரஹணமே இவரைத் தொடர்ந்து வருகின்றதென்பதைக் காட்டும்.

இதன்மேல் அவர் ஒன்று சொல்லலாம். அதாவது—

ஸத்த்வஸத்வஸம்பந்தா பக்ஷோபயஸித்தி இல்லையாயினும், ஸத்பக்ஷயோஸாதாரணாதிகரணத்வம் நஹியதே என்கிற வாக்கியம் பக்ஷே ஸத்ஸாதாரணாதிகரணத்வ நிஷேதத்வஸத்வத்தை போதிக்க ஶக்தமாவதுபோலவே பக்ஷே ஸத்த்வஸத்வாத்யந்திகத்வத்தையும் போதிக்க ஶக்தமேயாகும். பக்ஷே ஸத்ஸாதாரணாதிகரணத்வம் நியதோ நாஸ்தி என்றால் ஸத்பக்ஷயோஸாதாரணாதிகரணத்வம் நியதோ நாஸ்தி என்றால் பக்ஷஸாத்வவத்தி ஸத்தியிருக்கலாம், ஸத்த்வஸத்வதி பக்ஷமிருக்கலாம் என்கிறவரையில் தெரிவிக்கப்பட்டே தீரும். அது போலவே விஶேஷணதா வைஶிஷ்ட்ய ஸாதாரணாதிகரணத்வம் நியதோ நாஸ்தி என்னாமல் வைஶிஷ்ட்ய விஶேஷணதயோ: ஸாதாரணாதிகரணத்வம் நியதோ நாஸ்தி என்று சொல்லியிருக்கையாலே வைஶிஷ்ட்யவத்வவி விஶேஷணத்வவமிருக்கலாம் விஶேஷணதாவத்வவி வைஶிஷ்ட்யாஸத்வமிருக்கலாம் என்ற இரண்டையும் இது காட்டியே தீரும். ஆகவே யாம் எழுதியது நன்றே — இதி.

அத்ர தத்ஸத்த்வ ஸத்ய வ்யதிரேக:—ஸத்பக்ஷயோஸாதாரணாதிகரணத்வம் அநியதம் என்கிற வாக்கியத்தினால் பக்ஷஸாத்வவத்தி ஸத்திஸத்தாவர்போலே ஸத்த்வஸத்வதி பக்ஷஸத்தாவமும் ஸம்பவிக்கலாமென்று போதிக்கப்படுமானாலும், ஸதாவதா (ஸதஸதோ ஸத்த்வஸத்வாஸதி பக்ஷஸதா) என்றுசொன்னதாக ஒரு நாளும் தேறாது. பர்வதத்தில் ஸத்த்வஸத்வமோ பக்ஷ ஸத்பாவமோ வ்யதிரேக வ்யாப்யவ்யாபகபாவஸம்பந்தனை போக்கி நிஶ்சிதஸாதாரண்யாவஸ்தமாக மாட்டாது. அதுபோலவே (வைஶிஷ்ட்ய விஶேஷணதயோ ஸாதாரணாதிகரணத்வம் அநியதம்) என்றவாக்கியத்தால் வைஶிஷ்ட்யாஸத்வவத்வவி விமர்ஶஶக்தியிருக்கலாமென்று போதிக்கப்படுவதாகவே கொண்டாலும் [தாத்பர்யவாக்ய வ்யதிரேக ப்ரதீதிவ்யதிரேகாதிஶாகார: ஸாதாரணம் வைஶிஷ்ட்ய ஸத்வவஸத்வ விஶேஷணதா யாதும்ப்ரஹ] என்று சொல்வதற்கு இந்த வாக்யம் இடம் தரவேமாட்டாது. *ஜ்ஞாநாந்தஶாநயோஸாதாரணாதிகரணத்வ நியதோ நாஸ்தி* என்று ஒரு மஹர்ஷி கூறினால் ஜ்ஞாநஸத்வவி அநந்தஶாதத்வம் தம்மிடத்திலிருப்பதாக அவர் இந்த வாக்யத்தால் தெரிவிக்கிறாரென்று உன்மத்தனும் உரைக்கில்லானிறே.

விஷயவைசித்ரி இங்ஙனேயிருக்க, நம் ஸ்வாமி விபரீதமாக எழுதியதனால், நாம் விஜயத்வஜத்தில் வெளஜந்யாய இவர் கிறத்து இசைந்தெழுதியபாண்டித்ய மும் இவர் தம்மாலேயே ஸமர்த்திதமாயிற்று. இவருடைய வெற்றிக் காகித வெளியீட்டின் பலனாயிற்றிது. சீடனால் பெற்ற பேறு இதுபோலும்.

ப்ராயோபவேசம் என்னும் விஷயமாக உண்மை விளக்குவோம். இவர் முந்துற நமக்கு வர்ணநீய க்ரந்தமாக ப்ரஸாதித்தருளின ப்ரமநிராஸ பத்திரிகையில் "ராஜநீதிக்குச்சேர ப்ரதமகோடியான ப்ராயோபவேஶத்திலே முந்துற இழிந்து" என்று அடிக்கடி ப்ராயோபவேச வஶவமிதமாக எழுதியிருந்தார். அதன்மேல் தத்வப்ரதிஷ்டையில் நாம் வரிதான தூஷணங்கள் கொடுத்ததையும், பரிசிஷ்ட

ரக்ஷாபத்ரத்தில் ப்ரகாசநம் பண்ணியிருந்ததையும் கண்டு ப்ராயோபவேச பதத்தின் ஸ்தானத்திலே ஸாமபதத்தை நிவேசித்து பரித்ராணம் வெளியிட்டிருக்கிறார். இதற்கு முன்பு ப்ராயோபவேச பதத்திற்கு இன்னது பொருளென்றே இவர் அறிந்திலர் என்பது விளங்கிற்று. தவிரவும் (பரித்ராணத்தில் பக்கம் 151-ல்) "பெருமாள் கடற்கரையிலே செய்தருளின தர்பஶயநத்தை ப்ராயோபவேசமென்று" நாம் மன்றாடுவதாக எழுதினார். அதிலேயே (பக்கம் 150-ல்) "ப்ரதம கோடியான ப்ராயோபவேசத்தில் என்று இங்ஙனே ஒரு வாக்யமிருந்தாலும்" என்றெழுதியுள்ளார். இருந்தாலும் என்கிறாரே; அந்த வாக்யம் எங்கேயிருப்பதாகக் கொண்டு இவர் யதேஷ்டவ்யாஹரணம் பண்ணுகிறார்? ப்ரமநிராஸத்தின் கையெழுத்துப்ரதியில் இருந்தாலும் என்று இப்போது சோதிடம் சொல்லவருகிறார். இருந்த பதத்தை ஏன் இவர் மாற்றினார். மாற்றாதே வெளியிட்டிருந்து தத்ஸமர்த்தநம் செய்திருந்தாலன்றோ சதிராகும். இவருடைய ஒவ்வொரு விஷயமும் இங்ஙனே வ்யாஜதஸமென்றுணர்க.

ஸபையில் வாதிக்க ஸஜ்ஜர்களாயிருக்கிறோமென்கிறார்கள். நாமும் ஸஜ்ஜர்களேயென்பதை இப்போது ஸஹ்ருதயமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஏற்கனவே தத்வ ப்ரதிஷ்டா பரிசிஷ்டத்தில், பாரோராறிய அடியேன் செய்யும் விண்ணப்பம் என்ற மகுடத்தின்கீழ் (ஒரு பக்கம் பூர்த்தியாக) நாம் எழுதியிருப்பதை விவேகிகள் கடாக்ஷித்தருளியுள்ளார்கள். "இற்றை முடிதலென்கிற பாடமே தத்துவமென்று வாதப்போரில் இசைய நேர்ந்துவிட்டாலும் என்க்ஷேணதா அரும்பதவுரைகாரரின் பாடத்தைத்தான் ஆதரிக்குமென்பது ஸத்யம்— என்று பெரிய திருவோலக்கத்தில் பெருமிடறு செய்த நம் ஆசார்யஸ்வாமிக்கு வாத விருப்பம் எதற்காக? என்று அதில் நாம் கேட்டிருப்பதற்கு யாதொரு விடையும் வெளிவரவில்லை. தவிரவும், அத்யமே ச்லோகார்த்த விஷயமாக முதன்முதலாக க்ரந்தமெழுதினவன் அடியேன். அதை ஆசார்ய ஸ்வாமியிடம் அடியேனே நேரில் ஸமர்ப்பித்து இற்றை முடித்தல் பொருந்தவே மாட்டாதென்பதைப் பரக்கவே நிரூபித்துப் பேசினேன். அப்போதே இவர் இதைப்பற்றி வாதஸபை நடத்தவேணுமென்று ப்ரஸ்தாவித்திருக்கலாம். அப்போது திருமுடி துளக்கி விட்டெழுந்தருளிப் பிறகு சில அஸூயுக்களால் உத்தேஜிதராய் மறுப்பென்றொன்றெழுதி அதையும் சிலர்க்கே வாசித்துக்காட்டி மூடி மறைத்து வைத்து வந்தார். அதை நாமாகவே வலியக் கேட்டு வாங்கி அதில் அடிதொடங்கி நுனி வரையில் அபத்தம் தவிர வேறில்லையென்பதை விசதீகரித்து வெளியிட்டான பின்பு சில மநோரதங்களைத் திருவுள்ளத்திற்கொண்டு இவர் வாதத்திற்கு ஆஹ்வாநம் பண்ணினது வாஸ்தவமே. அப்போது நாம் ஓடியொளித்ததாக இவர் எழுதுகிறார். "[illegible]" என்று (அதிமாநுஷ ஸ்தவத்தில்) ஆழ்வான் ஸாதித்த பலாயநமா? "[illegible]" என்று (ஸுதர்சநசதகத்தில்) தத்விஷதாம் ஸாதித்த பலாயநமா? என்பதை விவேகிகள் உணர்வார்கள்.

எம்பெருமானாருடைய திவ்ய ஸூக்திகளையும் தத்ஸம்ப்ரதாய ஸம்ஸித்தமஹாசார்யருடைய திவ்ய ஸூக்திகளையும் தூஷித்து எத்தனையோ பேர்கள் க்ரந்தங்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் ஸ்ரீபெரும்பூதூர்க்கும் வருகிறார்கள். அவர்களோடு இவர்கள் வாதப்போர் நடத்தி வெற்றிபெற்றால் ஸித்தாந்த ஸ்தாபநம் பண்ணின ஸுக்ருதமாவது இவர்கட்குக் கிடைக்கும். பிராமணர்கட்கு வாதப்போர் கூடாதென்று சாஸ்த்ரம் நிஷேதித்ததை ஸித்தாந்த ஸ்தாபநார்த்த வாதவ்யதிரிக்த விஷயமாக நயிப்பித்துப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள். ப்ரக்ருத விஷயத்தில் வாதப்போர் நடத்தவேண்டிய ஆவச்யகதை என்ன வந்திட்டது. நேரில் வாதிப்பதற்கு நாம் அஞ்சியோடி பொளிக்கிறோமென்று இவர் கைகூசாமல் எழுதுவதனால் நமக்கு யாதொரு குறையுமில்லை. ஆண்டுதோறும் எம்பெருமானார் மஹோத்ஸவத்தில் இவர்களுடைய கலாசாலையில் இவர்களுடைய திருமுன்பே பல்லாயிரவர் மகிழ நாம் ஸ்ரீபாஷ்யாதிகளில் நமக்குள்ள வாஸித்த்வத்தை விளக்கிக்கொண்டே வருகிறோம். வாதத்திற்கு நம்மை இவர்கள் ஆஹ்வாநம் பண்ணினவன்றைக்கு மற்றைநாளே நாம் அதே ஸ்ரீபூதபுரியில் அந்தக் கலாசாலையிலேயே இவர்களும் இருந்த மஹாஸபையில் நம் நாவீறு காட்டி மஹாமஹநீயர்களின் ப்ரசம்ஸைகளை இவர்களும் காதுகுளிரக் கேட்குமாறு பெற்றிருக்கின்றோம். இவ்வாண்டுதனிலும் அதே கலாசாலையில் இவர்கள் திருமுன்பே நாம் வடமொழியிலும் தென்மொழியிலும் ஸ்ரீபாஷ்ய விஷயங்கள் பேசி, அப்போது அங்கு அக்ராஸனம் வஹித்த [சென்னை ஜட்ஜ்] மஹநீயரால் அதிமாத்ரம் புகழப்பெற்றிருக்கிறோமென்பதையும் உலகறியும். [இங்கு இவற்றை நாம் குறிப்பிடுவது ஒருகாலும் தற்புகழ்ச்சிக் குற்றத்தின் பாற்படாது என்பதை விவேகிகள் அறிவார்கள்.] இவர் நம்மைக் குறித்து "அஞ்சியோடினார், ஓடியொளித்தார், ஒளித்து மறைந்தார், மறைந்து பதுங்கினார்" என்று எவ்வளவு பல்லவிகள் பாடினாலும் இவற்றால் சில பாமரர்கள் களித்துக் கிடக்கலாமேயல்லது லௌகிக வைதிக மஹநீயர் திருவுள்ளத்தில் விகாரலேசமும் இவர்களால் விளைக்கப்போகாதென்பது திடமொழி மறையேயாம்.

ப்ரக்ருத விஷயத்தில் வாதிகூஷ்மாண்டம் நடைபெறவேணுமென்கிற இவர்களது குதூஹலமும் குறையற நிறைவேறிவிடுக. த்வைதிகளிலோ அத்வைதிகளிலோ ப்ரஸித்தராயுள்ள ப்ராமாணிக பண்டிதர் இரண்டொருவரை இவர்தாமே மத்யஸ்தராக வரித்து வீற்றிருக்கும் தேசகாலங்களை அடியேனுக்குத் தெரிவித்தருளினால், விடைகொண்டு, தத்வப்ரதிஷ்டையிலும் விஜயத்வஜத்திலும் நாம் எழுதியுள்ள விஷயங்களின் ஸாதீயஸ்த்வத்தை விளக்கி உபந்யஸிக்கத் தடை கிடையாது. அதற்குள் அடியேனுடைய விஜயத்வஜத்தின் அவசிஷ்ட பாகமும் வெளிவந்துவிடும். "எஞ்சியபாகம் விரைவில் வெளிவரும்" என்று இவரோ இவரது சீடரோ தெரிவித்திருக்கிறபடி வெற்றிக் காகிதத்தின் சேஷமும் அதன் மறுப்பும் வெளிவந்துவிடட்டும்.

விஜயத்வஜ வைஜயந்தியின்
முதற்பகுதி முற்றிற்று.

காமகோடி பிரஸ், காஞ்சிபுரம்.

ஸ்ரீரஸ்து.

ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

அத்யமேச்லோகார்த்த

தத்வப்ரதிஷ்டா.

திருவாய்மொழி முதற்பத்தில் ஏழாந் திருவாய்மொழியில் "யானொட்டி யென்னுள்" என்கிற ஏழாவது பாசுரத்தின் உரையில் (241ஆம் பக்கம் முதலாக 245ஆம் பக்கம் வரையில் விவரிக்கப்பட்டுள்ள அர்த்த விசேஷங் களின்மீது சில மஹான்கள் தெரிவித்தருளின சங்கைகளுக்கு ஸமாதானம்.

---

* அத்யமேச்லோகார்த்த தத்வப்ரதிஷ்டா ॥ *

[ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியர் இயற்றியது.]

வஜவஸாவாயஸ் வஷாஸ்ஹாஜயூா நவாவ ந வெ தவஸா ।
அண்ணாஸாயஸ்ஷாவெஸ ந தக்வாயஸ்: ஹூாவலுதெயா நா ॥

யெதாவதுாயியொஹஃயவவஹி க்ஷொஹாதுஹிதாது உநதெ
தெ தெஷாஂதா ஶிய:கெயாம விஜஹதஃ ஹுவலுாவநாம் தநதாஃ ।
ஹதெுவஂவயூ ததுதகுயஸதாம் நிஜஸ்ஹுாஸாணாஂஸதாம்
ஸாஸாஸாஸவிவெவநவுஸநிநாஶாஶாஸ்நாஹாஸ்ஂஹவெஜ ॥

1. ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம்—இருபத்தோராவது ஸமஹ்த்தில், கடலைக்கடந்து இலங்கைக்கு எழுந்தருளத் திருவுள்ளம் பற்றிய சக்ரவர்த்தித் திருமகனர் ஸமுத்ரராஜனை நோக்கிச் சரணகதி செய்தருளினபடியைச் சொல்லி வரும் பிரகரணத்தில் „ஒக்ஷிணொ ஒக்ஷிணஂபாஹுா உஹாவஸிவ ஹஹிஃ । மொஹஹவூஷாதாஸஉவயாய உஹூஜஃ ॥ அத்யெ ஶரணஂவாஶ்ய தரணஂ ஸாமஸவூா । ஐதிராஸொ உதிகூஅவா உஹாவாஹுஉஷ்ஹொரஷயிஃ । அயிஸிஹெு ஹவியிவஜ ஹுயதொ நியதொ ஶுநிஃ ॥" என்றுள்ள ச்லோகங்களில் „அத்யெ ஶரணஂவாஶ்ய தரணஂ ஸாம

ரஸ்யா” என்றவிடத்திற்கு ‘அத்யைவ ஶரணம் வா ஸாமரஸ்ய ஶரணம் வா’ என்று யோஜனை காட்டி ஸ்ரீ ரோவிந்தராஜர் வியாக்கியானித்துள்ளார். ப்ரகரணத்திற்குச் சேர யதாவஸ்தித ஸ்ரீதியிலே க்ரமமாகவே அந்வயித்துப் பொருளுரைக்கவேண்டியிருக்க இங்ஙனே யோஜித்து வியாக்கியானம் செய்தது— ஈடு முப்பத்தாறாயிரப்படியில் * யானொட்டி யென்னுள் * என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே

[“தான் ஒட்டிவந்து] * அத்யைவ ஶரணம் வாஸி தாணம் ஸாமரஸ்யா * என்று—இற்றை முடிதல் கடத்தல் செய்யுமதுக்கு மேற்பட வில்லை யென்றாற்போலே ப்ரதிஜ்ஞை பண்ணியாயிற்றுப் புகுந்தது.”

என்று அருளிச் செய்யப்பட்டிருந்த ஸ்ரீஸூக்தி சில ஓலை ஸ்ரீ கோஶங்களில் “இத்தை முடித்தல் கடத்தல் செய்யுமதுக்கு மேற்படவில்லை” என்பதாக ஸ்வல்பம் அக்ஷரவிபர்யாஸத்துடனே நிவிஷ்டமானபடியைக்கண்டு விபரீதார்த்தநிர்வாஹம் பண்ணின அரும்பதவுரைகாரர்களின் வழியை அடியொற்றியது என்பதை அடியேன் பல வருஷங்களுக்குமுன் ஸுஹ்ருத் விஜ்ஞா பத்ரிகையிலும், பிறகு ஸ்வகீய-தீவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகையிலும் வெளியிட்டிருந்தேன். அது மேற்குறித்த பாசுரத்தின் உரையிலேயே காணத்தக்கது.

2. அத்யைவ ஶரணம்வேதாந்தாசார்ய நிர்வஹணத்தில் உள்ளபடியே உரைக்கவேண்டுவதே உசித மென்றும் நம்பிள்ளையின் வியாக்கியானம் அப்படியேதான் என்றும் அந்யதா யோஜிப்பது ஈஷத்தும் பொருந்தமாட்டாதென்றும் இவ்விஷயங்களை அதிவிஸ்தாரமாகவே ஸோபபத்திகமாக நிரூபித்து எழுதியிருக்கிறேன். அதைக் கடாக்ஷித்தருளின பல மஹான்கள் நன்கு ஆராய்ச்சி செய்து இது தக்க நிரூபணமேயாகும் என்று போரவும் திருவுள்ளமுவந்து ஸ்ரீமுகங்கள் அருளினார்கள். கோயில் ஆழ்வார்திருநகரி வானமாமலை ஸ்ரீவில்லிபுத்தூர் சேரங்குளம் முதலான ஸ்தலங்களில் அபிநந்தநம் செய்தருளின மஹான்கள் இன்னமும் எழுந்தருளியுள்ளார்கள். அரும்பத வுரைகாரர் எழுதியிருக்குமது ப்ராமாதிகந்தான் என்பதை நன்கு இசைந்து அந்த ஸ்வாமிகள் அநுக்ரஹித்தருளின திருமுகங்கள் உள்ளன.

3. அரும்பத வுரைகாரரும் ரோவிந்தராஜரும் காட்டியுள்ள யோஜனை யுக்தமேயாகுமென்றும், நம்பிள்ளை யீட்டில் “இத்தை முடித்தல் கடத்தல்” என்றுள்ள பாடமே உண்மையானதென்றும், அதனை இப்போது திருத்தப் புறப்படுவதும், அரும்பத வுரைகாரர்மீதும் ரோவிந்தராஜர்மீதும் ப்ராமாதிக ஆரோபணம் பண்ணப்புகுவதும் பெரிய ஸாஹஸமென்றும் சில மஹநீயர்கள் திருவுள்ளம்பற்றியிருப்பதுமுண்டு.

4. அங்ஙனம் திருவுள்ளம்பற்றிய மஹான்களின் ப்ரத்யவஸ்தாநங்களை அறியப்பெற்ற அடியேன் இந்த ஸம்ப்ரதாய ப்ரதிஷ்டையை விஜ்ஞாபிக்கப் புகுகின்றேன். ஈட்டு ஸ்ரீஸூக்தி "இற்றை முடிதல் கடத்தல்" என்பதாகவே இருந்ததென்றும், அங்ஙனல்லாது வேறுவகையாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லையென்றும் ஈண்டு விரிவாக நிரூபிக்கின்றேன்.

5. அரும்பத வுரைகாரர் பக்கலில் அடியேன் ஆங்காங்கு நிரூபிக்கும் குறைபாடு இருவகைப்பட்டதாகும். மூல ஸ்ரீஸூக்தியை (அதாவது—தங்கள் அரும்பத வுரைக்கு மூலமான பூர்வாசார்ய வ்யாக்யாந ஸ்ரீஸூக்தியை) உள்ளபடியே அநுவதித்து அதன் அர்த்தத்தை மாத்திரம் வேறாக எழுதிவிடுகிறார்களென்பது ஒருவகை. அந்த மூல ஸ்ரீஸூக்தியையே அந்யதாவாக அநுவதித்து உபஜ்ஞவக்த்ரு விவக்ஷிதமல்லாதவொரு அர்த்தத்தை எழுதிவிடுகிறார்கள் என்பது மற்றொருவகை. இவ்விரண்டினுள், முந்தினவகையில் இக்காலத்துப் பெரியோர்கள் அவ்வளவாகத் திருக்கண் செலுத்தமாட்டார்கள். இரண்டாவது வகையில் சிலர் ரோஷங்கொள்ள ப்ராப்தியுண்டு. ஏனென்னில், தாங்களும் ஆஶ்ரித்து நெடுநாளாக க்ரஹித்தும் ப்ரவசநம் செய்தும் போருகிற பாடம் அபபாடமென்று தேறிவிட்டால் தங்களுக்கு ஸம்ப்ரதாய பரம்பராப்ராப்தி இல்லையென்றதாகுமன்றோ. ஆகவே தங்களையும் ஸம்பந்தித்து நிற்பதான அபவாதத்தைப் பரிஹரிக்க அவர்கள் திருவுள்ளம்பற்றுவது யுக்தமேயாகும்.

6. வஸ்துதஸ்து; ப்ராமாணிகர்களின் பந்தா அப்படிப்பட்டதன்று. ஸ்கலிதங்கள் நேர்ந்துவிடுவது ஸஹஜமே; யுக்தமானதை யார் தெரிவித்தாலும் திருத்திக்கொள்வது நன்று—என்றே மஹான்கள் கொண்டிருக்க ப்ராப்தம். இங்குச் சிறியதொரு விஷயம் காட்டுகிறேன்;

7. ஆசார்யஹ்ருதயத்தில் உபாயப்ரகரணத்தில் ஆறுவது சூர்ணிகையில் "ஸக்த ஸமர்த்தமாகவும்" என்றொரு ஸ்ரீஸூக்தியுள்ளது. இதற்கு வியாக்கியான மருளிச்செய்யாநின்ற மணவாளமாமுனிகள்

"ஸமாஸத்தில் ஸக்த ஸமர்த்தமென்னவேணும்; ஸமர்த்தமென்கிற விது பாடஸௌகர்யத்தாலே வந்ததாமித்தனை"

என்று ஸாதித்திருக்கக் காண்கிறோம். யாரோசில அல்பஶ்ருதர்கள் ஸக்த ஸமர்த்தமென்று ஓதிவந்திருந்தால் அதைப் பொருள்படுத்தி மாமுனிகள் இந்த சிக்ஷணத்தை ஸாதித்திருக்கமாட்டார். அப்படி ஸாதிப்பதானால் ப்ரதிஸூத்ரமும் ஏதேனும் அபபாடநிராஸங்களை ஸாதிக்கப்ராப்தமேயாகும். பரி

பண்டிதவித்வச்சிரோமணிகளாகவுள்ளவர்களும் ஏதோ அநவதாநத்தாலே ஸஹஸ்ர ஸஹஸ்ரமென்று பதிவந்திருக்கவேதான் (அப்படியே சில ஏட்டுப் பிரதிகளிற் பாடமும் வழங்கிவந்தமையால்தான்) இதைப்பற்றி மாமுனிகள் அந்த ஸ்ரீஸூக்தி அருளிச் செய்யலாயிற்று. அவர் தாம் அங்ஙனே அருளிச்செய்துவைத்தும் நிர்வாஹ நிரூபகர்கள் ஶோதித்து வெளியிட்ட ஸ்ரீகோஶங்களிலும் ஸஹஸ்ராவி ஸஹஸ்ரஸஹஸ்ரமென்கிற பாடமே நிவேஶிதமாகவுள்ளது. ஸர்வஸ்வமாக்கி நித்யாநுஸந்தாநம் செய்துவருகின்ற மஹான்களும் நாளைக்கும் அந்த அபபாடத்தை விடாமலே அநுஸந்தித்துவரக் காண்கிறோம். அறுநூறுவருஷங்களுக்கு முன்னமே ஆசார்ய சிகாமணியினாலேயே மறுக்கப்பட்ட அபபாடம் நாளைக்கும் அருமல் அநுவர்த்திக்கும்போது நீசனேன் நிறையொன்றுமிலேனாகிய அடியேன் திருத்திக்காட்டுகிறபாடம் ஸகலவித்வஜ்ஜநஸ்வீக்ருதமாக வேணுமென்று ஆசைப்பட ப்ரஸக்திலேஶந்தானுமில்லையே. ஔசித்யவிஜ்ஞாநவைதவைகல்யம் ஶாஸ: கரோதீதி விஹாஸ்யதாம் பூர்யேய:॥

8. அருளிச்செயல் மூலத்திலும் வ்யாக்யாநவிருத்தமான பாடங்கள் பலபல வழங்கிவருகின்றன. யாரோ தெரியாதவர்கள் தவருக வழங்கிவந்தால் அதுவொரு விஷயமாகுமோ? என்னவேண்டா. தெரியாதவர்கள் வழங்கிவருவதைப்பற்றி அடியேன் வாய்திறக்கவேமாட்டேன். சிறந்த ஸுவிஜ்ஞர்களென்று பேர்பெற்றவர்கள் தாமும் தவருன பாடங்களை யாதார்த்தமாக வழங்கி வருவதைப் பல திவ்ய தேசங்களில் அடியேன் ஸாக்ஷாத் அநுபவித்தறிந்துவருகின்றேன். இதைப்பற்றித் தனியே ஒரு புத்தகமும் மற்றொருகால் வெளியிடலாகும். „யதார்த்தவாதீ பஹுஜநத்வேஷீ" என்பதையும் அடியேன் கணிசிப்பவனல்லேன். விவக்ஷிதம் ஹ்யநுக்தமநுதாபம் கரோதி ஹ்ருதயே. இது நிற்க.

9. ப்ரக்ருத விஷயத்தில், [ஸமுத்ரே மரணம்வா ஸாகரஸ்ய தரணம்வா] என்று க்ரமமாகவே அந்வயித்துப் பொருள்கொண்டேயாகவேணுமென்பதை முந்துற உபபாதிக்கின்றேன். கடல்கரையிலே பெருமாள் ப்ராயோபவேஶம் செய்தருளினதாக ஸுவிஜ்ஞர்களும் சொல்லிவருகிறார்கள். ப்ராயோபவேஶஶப்தார்த்தம் கீத்ருஶமென்று ஆராயவேணும். „ப்ராயோ மரணஸங்கல்ப:" என்றார்கள் நைகண்டுகர்கள். இவ்வசனம் அமரகோஶத்திலுமுள்ளது. ஸாகரத்திற்கு மரணம் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி ஶயநிப்பது பெருமாளுடைய ப்ராயோபவேஶமாக ஆகுமோ? „கதம்சித்வி ஸாகரதரணம் வடியாவிடில் மரணமடைவதே கருமம்" என்று ஸங்கல்பித்துக்கொண்டு ஶயநித்தருளினர் என்றால்தான் ப்ராயோபவேஶமென்னப் பொருந்தும். இதுவொரு முக்கியமான விஷயம்.

10. இங்கு ப்ராயோபவேஶமன்று; ஶரணாகதிஸத்ரமேயாம் என்று கொண்டாலும் குறையில்லை. காபட்யத்தைக் கனவிலுமறியாதவராய் ஆர்ஜவமே வடிவெடுத்தவரென்று பலவிடங்களிலும் பேசப்பெற்றவரான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனார் ஶரணாகதியிலிழியும்போதே எதிர்த்தலையைத் தலையறுப்பதையும் நெஞ்சிற் கொண்டாரென்று கூறுவது பொருந்துமோ? ஒருகால் இது கண்ணபிரானுடைய கதையாயிருந்தால் அவனுடைய படிக்குப் பொருந்துமென்னலாம். ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்திலுகக்கப்பட "நிஜாபாஸிதயா ஸர்வஶாவ்யாதா ஶாவசக்ருஷே" என்று பேசப்பட்ட பெருமாள் திறத்திலே இங்ஙனே ஒரு அபக்ருத்யத்தை ஏறிடப்பார்ப்பது அபசாரகோடியிலே புகாதோ?

11. அத்யமேமரணமித்யாதிக்குமேல் ஐந்தாவது ஶ்லோகத்தில் "ப்ரஶமஶ்ச க்ஷமாசைவ ஆர்ஜவம் ப்ரியவாதிதா। அஸாமர்த்யம் பலந்த்யேதே நிர்குணேஷு ஸதாம் குணா:॥" என்று பெருமாள் ஸாதிப்பதில் ஆர்ஜவமும் கூறப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. ஶரணாகதியோடுகூடவே ஸாகரோச்சோஷ்யகரண ஸங்கல்பமும் தமக்கிருந்ததாகில் ஆர்ஜவமென்று சொல்லிக்கொள்ள நா எழுமோ? ப்ரஶமம் க்ஷமை ஆர்ஜவம் ப்ரியவாதிதை என்கிற குணசதுஷ்டயமுங் கொண்டு ஶயநித்துக் கிடந்ததாகத் தாமே அருளிச்செய்கிற பெருமாளுக்கு அப்போது கடலரசனைத் தலையறுக்க நினைவும் கூடவேயிருந்ததென்று சொல்லுவது அழகான வார்த்தையோ?

12. கிஞ்ச, ஸாகரஸ்ய மரணம்வா என்று கொண்டு சொல்லுமர்த்தம் மஹர்ஷிவிவக்ஷிதமாகில் "அத்யமே தரணம்வாபி மரணம் ஸாகரஸ்ய வா" என்று அநாயாஸமாக நிபணிக்கத் தட்டில்லையே. "ஸ்வதச்சைவஹஸ்ய ஶரணே நிர்யோகவயர்நா யோகாநஹர்ஷவாக:" என்று விடையளிப்பது இவ்விஷயத்திற்கு ஏலாதன்றே.

13. சில அச்சுப்பிரதிகளில் "அத்யமே தரணம்வாபி மரணம் ஸாகரஸ்யவா" என்றே பாடமுளதென்று சிலர் கூறுவதும் பயனற்றது. நம் ஆசார்யர்களுக்கு அத்தகைய பாடம் இல்லையென்பது ஸுஸ்பஷ்டமிறே. அங்ஙனே பாடமிருந்தால் அரும்பதவுரைகாரர் ப்ரக்ருதமான யோஜனையை எடுத்துக்காட்டியிருப்பது அநவகாஶபராஹதமாகுமன்றே.

14. இனி, வாங்குஶாத்ரவ்யர்க்குஶோவதுவாது என்கிற ந்யாயத்தைக் கொள்ளலாகாதோவென்னில்; அதுவும் இங்குக் கொள்ளலாகாது. ஸர்வ

யா ப்ரகரணாதிகளுக்கு மிகவும் விருத்தமான அர்த்தத்தைக் கொள்வதற்கு அந்த ந்யாயம் எங்ஙனே ஸஹகரிக்கும்? மூன்றுநாளளவும் பெருமாள் அநஶநத்திலே தீக்ஷிதராய் நியமம் தவறாதவராய் ஶயநித்திருந்தும் கடலரசன் வந்து முகங்காட்டாமையாலே அதற்குப் பிறகு பெருமாளுக்கு ஔதாஸீந்யத்திலே சிறிது திருவுள்ளம் சென்றதத்தனை போக்கி, அந்தநிலைமைக்குமுன் பெருமாள் திருவுள்ளத்திலே க்ஷுத்ரமான நோக்கமும் கூடியிருந்ததென்று ஸாதிப்பதற்கு ஸ்ரீராமாயணத்தில் ஒரு அக்ஷரமும் கிடைக்கமாட்டாது கிடீர்.

15. ஸமுத்ரராஜனிடத்திற்போலவே ஸுக்ரீவ மஹாராஜனிடத்திலும் பெருமாள் ஶரணாகதரானார் என்பது ஸ்ரீராமாயண ஸித்தம். ஸாகர விஷயத்தில் சீறிச்சிவந்து * சாபமாநய ஸௌமித்ரே இத்யாதியை அருளிச்செய்தது போலவே அந்த வாநரராஜன் விஷயத்திலும் "ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத:। ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலிபதமந்வகா:॥......த்வாம் து ஸத்யாததிக்ராந்தம் ஹநிஷ்யாமி ஸபாந்தவம்" இத்யாதியை அத்யுத்கடமாக அருளிச் செய்திருக்கக் காண்கிறோம். ஸுக்ரீவன் விஷயத்திலே பெருமாளுக்கு இந்த நினைவு முன்னமே யிருந்ததென்று யாரேனும் சொல்வாருண்டோ? சொல்லத்தான் கூடுமோ?

16. "அத்ய மே மரணம் வா" என்று பெருமாள் தம்முடையமரணத்தைத் திருவுள்ளம் பற்றியிருந்தாராகில் அவர்தாம் * ராமோ த்விர் நாபிபாஷதே யாகையாலே ப்ரதிஜ்ஞையின்படியே மரணங்கதராகவே முடிந்திருக்கவேணுமென்றும், அப்படி முடியக்காணாமையாலே அங்ஙனே அர்த்தம் கொள்ளக் கூடாது என்றும் ப்ரத்யவஸ்தாநம் பண்ணுகின்றார்கள். இவ்வொரு விஷயத்தையே சிக்கனக்கொண்டு பேசுகிறார்கள் ப்ரத்யவஸ்தாதாக்கள். வேறொரு விஷயத்தையும் அவர்கள் தமக்கு பக்ஷமாகப் பற்றியருளவில்லை.

17. அத்ரோச்யதே. பிராட்டியைப் பெறுதற்குடலாக ஏதேனுமொருபடி நான் ஸாகரதரணம் செய்யாவிடில் உயிர்விடுவது திண்ணம் என்று பெருமாள் ப்ரதிஜ்ஞை செய்தருளினாரே யல்லது வேறில்லை. அவர்தாம் அங்ஙனே எளிதாக ஸாகரதரணம் செய்தருளித் தலைக்கட்டினாராகையாலே மரணங்கதராக ப்ரஸக்தியுமில்லை, மரணங்கதராகாமையாலே ப்ரதிஜ்ஞாஹாநம் வந்துவிட்டதென்று சோத்யம் பண்ண அவகாஶமுமில்லை.

18. "ராமோ த்விர் நாபிபாஷதே" என்றது இராமபிரானுடைய ஸத்யவாதித்வஸ்வபாவத்தைச் சொன்னபடி. கடலரசன் சரணாகதிக்கு முகங்

காட்டாதபோது இராமபிரான் உடனே ஶரணமடையாதது ஸத்யவாதித்வக்ஷதிகர மல்லவோ வென்பது உசிதமன்று. அந்த ப்ரமாணத்திற்கும் இந்த நடத்தைக்கும் யாதொரு முரண்பாடுமில்லை. முரண்பாடு இருப்பதாகக்கொள்ளுமளவில் இப்படிப்பட்ட முரண்பாடுகள் ஸ்ரீராமாயணத்தில் ப்ரஸக்தம் அபரிஹார்யமாகவே நிற்கும். சில காட்டுகிறேன்.

19. பெருமாள் காட்டுக்குப் புறப்படும்போது பிராட்டியையும் இளைய பெருமாளையும் படைவீட்டிலேயே நிறுத்திப்போவதாகவே நிச்சயித்து அதனை வாய்விட்டும் அருளிச்செய்தார். "வநம் நேதும் ந க்ருதா மதிஸ்தஸ்யா ஸஹைவ ராகவேண யதா மஹாத்மநா" என்று வால்மீகியாலும் வெளியிடப்பட்டது. இத்தகைய ஸங்கல்பத்தைப் பெருமாள் மாற்றிக்கொண்டது அவருடைய வ்ரதத்திற்கு விரோதமென்று சொல்ல ப்ராப்தமாகாதோ?

20. "ஸகம் ஶேவம் ஸாவம் வநௌ" என்னும்படியாக ஸாஹஸீயமான ஸமயத்தைப் பண்ணிவைத்து ஸுக்ரீவனளவிலே தலையறுக்கத் திருவுள்ளம்பற்றி வார்த்தை சொன்னதெல்லாம் 'ராமோ த்விர் நாபிபாஷதே' என்றதற்கு விரோதமென்று விளம்ப வேண்டிவருமே.

21. பஞ்சவடியில் பிராட்டியைப் பிரிந்தவாறே "ஸீதயா ரஹிதோ ஹம் வை நஹி ஜீவாமி லக்ஷ்மண । வ்ருதம் ஶோகேந மஹதா ஸீதாஹரணஜேந மாம் । பரலோகே மஹாராஜோ நூநம் த்ரக்ஷ்யதி மே பிதா ॥ இத்யாதிகளாலே உடனே உயிர்துறப்பதாக ஸத்யமிட்டுச் சொன்ன பெருமாள் அது செய்யாதே தரித்திருந்ததும் ராமோ த்விர் நாபிபாஷதே என்றதற்கு விபரீதமென்று ஆக்ஷேபிக்கவேண்டிவருமே.

22. கைகேயிவிஷயமாகப் பெருமாள் அருளிச்செய்யும் வார்த்தைகள் எத்தனைவிதம் என்பதைச் சிறிது நோக்கவேணும். "ந தேம்பா மத்யமா தாத கர்ஹிதவ்யா கதஞ்சந । தாமேவேக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு." இத்யாதிவாக்யங்களாலே கைகேயிபக்கலில் பரமபக்தியைக் காட்டா நின்ற பெருமாள் தாமே, பிராட்டி விராதாபஹ்ருதையானவளவிலே "யதபிப்ரேதமஸ்மாஸு ப்ரியம் வரவ்ருதம்ச யத் । கைகேய்யாஸ்து ஸுஸம்வ்ருத்தம் க்ஷிப்ரமத்யைவ லக்ஷ்மண ॥ யா ந துஷ்யதி ராஜ்யேந புத்ரார்த்தே தீர்க்கதர்ஶிநீ । யயாஹம் ஸர்வபூதாநாம் ப்ரிய: ப்ரஸ்தாபிதோ வநம் । அத்யேதாநீம் ஸகாமா ஸா யா மாதா மம மத்யமா ॥" இத்யாதிகளையிட்டு உள்வெதுப்பையுங் காட்டியிருக்கக் காண்கிறோம். ஸீதாவியோகத்தாலே

வசவடியில் துவண்டு கதறும் போதும் "ஹா ஸகாமாத்ய கைகேயீ தேவி ராஜ்யம் லப்ஸ்யதி" என்றும் பேசினர். இங்ஙனே யுத்தகாண்டத்திலுமாகப் பலகால் பேசியிருக்கக் காண்கிறோம். "ஸகாமாம் கைகேயீம் ஸம்ப்ராப்ய மயா விநா। ஸகாமஸு யதாந்யாயம் ராஜ்யம் ராஜஸுதா ॥" என்றும் ஊடே அருளிச்செய்கிறார். ஒரு கைகேயிதிறத்திலேயே ஸ்துதியும் நிந்தியும் தோற்ற மாறிமாறிப் பேசுவது என்னே !.

23. "வநவாஸோ மஹோதய:" என்ற திருவாக்கிலேயே "ராஜ்யாச்ச ஸம்ஸோ வநவாஸோ நஷ்டாஸீதா ஹதோ த்விஜ: ஈத்ருஸீயம் மமாலக்ஷ்மீர் நிர்தஹேதபி பாவகம்" என்ற ஸ்ரீஸூக்திவார்த்தையும் வெளிவந்திருக்கக் காண்கிறோம். இவையெல்லாம் பொருந்தவிட முடியாதவை யென்று எமது அபிப்ராயமன்று. நம்பிள்ளை அழகாகப் பொருந்தவிட்டு வ்யாக்யானித்தருளியே யிருக்கின்றார். அது வ்யுத்பந்நர்களுக்குச் சிறிதும் உபகாரகமன்று என்பதே இங்கு விவக்ஷிதம். 'ராமோ த்விர்நாபிபாஷதே' என்பதைப் பற்றிக் கொண்டு வ்யுத்பந்நம் பண்ணுமவர்கள் இவ்விஷயங்களில் ஒருபடியாலும் ஸமாஹிதராகமுடியாது. முடியுமானல் இங்கும் அதுஒக்கும்.

24. இன்னமும் யுத்தகாண்டத்தில் நூற்றுப் பதினேழாவது ஸர்க்கம் முழுதும் நன்கு ஆராயத்தக்கது. அங்கே பெருமாளருளிச் செய்கிற வார்த்தை எங்ஙனே யென்னில்; (இராவண வதத்திற்குப் பிறகு பிராட்டியைக் கடாக்ஷித்தருளி)

> "ஸீதே ! நான் இத்தனை ஆனைத்தொழில்கள் செய்ததெல்லாம் என்னுடைய ஆற்றலைக்காட்டுவதற்கேயன்றி உன்னைப் பெறுதற்காக வன்று காண்; பரக்ருஹவாஸம் நெடுநாள் பண்ணிப்போந்த நீ கெடுதலடையாமல் இருந்திருக்கமாட்டாய்; உன்னை நான் பரிக்ரஹிக்கவே மாட்டேன்; உன் பக்கலில் எனக்குச் சிறிதும் அன்பு கிடையாது. உனக்கு இஷ்டமான இடத்திற்கு நீ ஓடிப்போக வேண்டியது தவிர வேறொன்றும் செய்யத்தக்கதில்லை. நான் ஸத்குலப்ரஸூதனா யிருந்துவைத்து ஸத்யமாய் உன்னை ஒருநாளும் ஸ்வீகரிக்கவேமாட்டேன்"

என்று பெருமாள் அருளிச் செய்திருப்பதை அநுஸந்திக்கவும உடல் நடுங்குகிறது. பெருமாள் கீழே பலகாலும் அருளிச் செய்திருக்கிற வார்த்தைகளுக்கும் மேலே அருளிச் செய்யும் வார்த்தைகளுக்கும் பிறகு செய்தருளின செயலுக்கும் இப்போது அநுஸந்தித்துக்காட்டின இந்த வார்த்தைகளுக்கும் 'ராமோ த்விர்நாபிபாஷதே' என்பதற்கும் எவ்வளவு பொருத்தம் என்பது ஸஹ்ருதயர்களின் திருவுள்ளத்திற்கே புலனாக வேண்டும்.

25. இவற்றை யெல்லாம் நாம் எடுத்துக் காட்டுவதானது ஸாமர்த்யாதிசயத்தை என்று பெருமாளுக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற பெருமை பொருந்தாது என்கிற எண்ணத்தினாலன்று; ஸ்ரீராமாயண ஶ்லோக ஸங்கேதங்கள் பரஸ்பரவிருத்தங்கள் என்று காட்டவேண்டிய தீயநினைவினாலுமன்று. ஸ்வாபாவிகதோஷமுமின்றியே நிர்வஹித்துப் பெரியோர் உபதேசித்தருளின அர்த்தவிசேஷங்களை அறிந்து தெளிந்தே யிருக்கிறோம். ஆனால், ப்ரத்யவஸ்தாதாக்கள் "அத்யைவ மரணம்வா" என்று பெருமாள் ஸ்மரணப்ரதிஜ்ஞை பண்ணியிருந்தால் அவர் அவசியம் மரணமடைந்தே யிருக்க வேண்டும்; அதுதான் பெருமாளுடைய ப்ரக்ருதிக்குச் சேர்ந்தது" என்று இதையொரு பெரிய விஷயமாகப் பேசுகையாலே, இது பொருளற்ற வார்த்தை என்பதை அவர்களது திருவுள்ளத்திற் பதிய வைப்பதற்காகவே இவ்விஷயங்களை யெல்லாம் விவரித்தோம். கீழே நாம் காட்டிய இடங்களில் அவர்கள் எவ்விதமான ஸமாதானத்தைத் திருவுள்ளம் பற்றுவார்களோ அவ்விதமான ஸமாதானமே ப்ரக்ருதப்ரத்யவஸ்தானத்தையும் நிரஸிக்கவல்லதாகுமென்பதே இங்கு வ்யாஸப்ரதிவிவாதயிஷிதம்.

26. பெருமாளுடைய திருவாக்கிலிருந்து ஒரு வார்த்தை வெளிவந்து விட்டால் அது அப்படியே நிறைவேறித் தீரவேண்டுமென்று ஸாதித்தருளுமவர்கள், நாம் கீழே காட்டிய விஷயங்களுக்கு ஸமாதானமுரைப்பதற்கு முன்னே ஒரு சிறிய விஷயத்திற்கு ஸமாதானமுரைக்க வேணும். அதாவது—"ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" என்று ப்ரதிஜ்ஞை பண்ணியருளின பெருமாள் அந்த ப்ரதிஜ்ஞையை ஏன் நிறைவேற்றியருள வில்லை? என்று கேட்கிறோம். இதற்கு என்ன ஸமாதானம் என்பது தெரியவேணும். கடலரசன் ப்ரத்யக்ஷமாய்க் காட்டி விட்டபடியாலே அந்த ப்ரதிஜ்ஞையை உபஸம்ஹரித்துக் கொண்டாரென்னில், மரணஸங்கல்பஸம்ஹ்ருதிக்கும் அதுவேதான் காரணமென்று உணரலாமே.

27. நநு, 'யதாகதம் விஸ்ஸாகர தரணாஹாவை மரணம் ப்ராப்நவாநி' என்பதாகப் பெருமாள் திருவுள்ளமாகில் "அத்யாப்யேஷ்மரணம்வாபி மரணம்வாஹவைநஸ" என்று இங்ஙனே வசநவ்யக்தி இருந்திருக்கவேணுமே; அங்ஙனன்றியே ஸ்மரணத்தையே முந்துற ப்ரஸ்தாவித்து ஶ்லோகமிட்டிருக்கக் காண்கையாலே ஸாகரவாயம் ஸ்வீயாதவளவில் உடனே ஏன் மரணமடைந்திருக்கவேண்டாம்? என்னில்; ததிதம்வைஶம்பாவக: இப்போது பெருமாள் தம்முடைய தைந்யம் தோற்றப் பேசவேண்டிய வடிமாகையாலே அதற்குச்சேர 'அத்யைவ மரணம்வா' என்று முந்துறப் பணித்தார். யேநகேநாபிப்ரகாரேண ஸாகரதரணமே பெருமாளுக்கு ப்ரதாநோத்தேஶ்யம். அது ஒரு விதத்திலும் வடியாவிடில் மரணமடைவதாகத் திருவுள்ளம். அது வடிந்து விட்டபடியாலே ம்ருதிக்கு அவகாஶமில்லை என்னுமிவ்வளவே இங்கு ஸாரம்.

28. சுஃ்ூெ ஊரணம்வா என்று ஊரணவுஹ்தாவம் செய்தவளவையே கொண்டு அதனைப் பெருமாள் செய்தேயிருக்க வேண்டுமென்று சொல்லும் பக்ஷத்தில் "ஐதஸ்தியெஹும் வஙிவத்யாஃஹூ" "சுயெஃ்வாஹம் வுவெக்ஷ்ூரி ஷிவம்வா வஜிவெஷூவா" ஐத்ராஷியாக அருளிச் செய்தபடியே அவ்வோ காரியங்களும் பெருமாள் செய்தருளியே யிருக்கவேண்டும். அவை செய்யாமைக்குக் கூறும் காரணமே சுஃூெஊரணமென்ற இவ்விடத்திலும் பொருந்துமென்றுணர்க. * யஹொஹயொஹஷொஷொஷுஜ த்ராஷி.

29. சுஃ்ூெ தரணம்வா ஸாமரவஹ ஊரணம்வா என்கிற யோஜனையில் சுதூஜ ஊவஙிஹாயமான ஒரு சுநுவவத்தி யுண்டு. விகவுக்களெல்லாம் விஷஊகொடிஃயமாஜிகளாகவே யிருக்கவேணுமென்பது ஸாஷூீய ஸாரணி. வுக்ூதத்தில் ஹொகமுள்ளபடியே சுநவயித்தால்தான் அந்த ஸாரணி ஸம்மதமாகும். மாற்றி யோஜிக்குமளவில் ஒருகாலும் ஸம்மதமாகாது. தஜெவ ஸாவிஸஃஊவவாஃூதெ—"ஜெ ஊரணம்வா ஸாமரவஹ தரணம்வா" என்கிற யஷாவஹூித யொஜனையில் விஷஊகொடிஃயம் ஸுஸ்பஷ்டமாகவே தெரிகின்றபடியால் அதில் விரிவு வேண்டியதில்லையே. 'ஸாமரவஹ ஊரணம்வா ஜெ தரணம்வா' என்று வ்யுத்க்ரமமாக யோஜிக்குமளவில் பலவகை அநுபபத்திகளுண்டு. இப்படிப்பட்ட வாக்ய ஸந்நிவேசமே அத்யந்தம் அநந்விதம் என்பது மேலே நன்கு நிரூபிக்கப்படும். முந்துறமுன்னம் ஸ்பஷ்டமாகவே தெரிகின்ற அநுபபத்தி யாதெனில்; இந்த யோஜனையில் விகவுகொடி வெஷஃூம் சொல்லப்போகாது. ஸமுத்ரத்திற்கு மரணமாவது அதனை ஹோஷணஞ் செய்வதுதானே. அங்ஙனம் சடலை வற்றச் செய்துவிட்டால் பிறகு தரண மென்று தனிப்படக் கதவ்ூமான தொன்றுண்டோ? வெறுந்தரையைத் தாண்டிச்செல்வதானது வேறொரு கோடியாகச் சொல்ல முடியாதே. ஆகவே இரண்டுபடச்சொல்வதானவிது ஜாரஊவாஷிவாகஃ தாஜூமே.

30. இங்கு, ஜெதரண மென்று ஸாஊவஹவக தரணமும், ஸாமரவஹ ஊரணமென்று ஊணவஹவக தரணமும் விவக்ஷிதமாகையாலே குறையொன்றுமில்லை யென்கிறார்கள். இது ஏலாது. இவ்வபிப்ராயத்திற்கு வுதாயகமான ஹவஸஹிவெஹம் மூலத்தில் சிறிது மில்லையே. வாவநிகமாக இருந்தாலன்றிப பயனில்லையே. இப்படிப்பட்ட விகவுஹரீரம் எங்கேனுங் கண்டதுண்டோ? விசேஷ்பம் ஒன்றேயாய் விசேஷணும்ஹத்தில் மாத்திரம் வாசியுள்ளதான விகவுகொடி அஸம்பாவிதமென்று எம்முடைய கருத்தன்று. "ஜுஊஷணம்வா பீதம்வா" என்பது போன்ற விகவு வவநவஃகிகள் ஸுஸங்கதமேயாகும். இங்கு அப்படி யன்றிக்கே 'ஜெதரணம்வா ஸாமரவஹ ஊரணம்வா' என்று விஹெஷ்ூம்ஹத்திலும் ஹேஃம் நன்கு விளங்குமாறு சொல்லப்படுகையாலே விஹெஷணாம்ஹ ஊத்ருஹெஃத்தையிட்டு இங்கு விகவுகொடி

ஷுவ்ருத்தி யென்று சொல்வதற்குப் பொருத்தமே யில்லையன்றே. வீதவா நீ யொர்வா ஹவெய்ய, உஷாஹை ஷுவெஸிதவா நீயோவா ஹவெய்ய என்பது போல் பொருந்தாத விகல்பமன்றே இது.

31. ஸாமாவஸ்ய ஊரணமென்று அந்வயங் கொள்ளில் ஊரணவுடம் சுஜூஹடீாவிதணிஜமென்று கொள்ளவேணும். 'முடித்தல்' என்று ஈட்டி லுள்ளதாகச் சொல்லுகைக்குஞ் சேர இப்படியே யாகவேணும். ஆகவே, கொலை செய்வதே இங்கு மரண பதார்த்தமென்று தேறிற்றுயிற்று. ஸாகரத்தை (அல்லது அதன் அதிஷ்டாநதேவதையை)க் கொலை செய்வதாவது என்ன? என்று விமர்சித்தால் கடலை ஷுஷ்நிவிடீஸெஷமாக ஆக்குவதே அதுவாகுமென்று அறுதியிடப்படும். "ஸாமாஂ ஸொஷயிஷாமி—வஹூாஂ யாஂஷு வவஂமஊ:" என்கிற [மேலே சீற்றம் மேலிட்டு அருளிச் செய்யுமிடத்திலுள்ள] ஸ்ரீஸூக்தியாலும் இவ்வர்த்தமே ஊர்ஜிதமாகும். ஸவஂவ, ஊரண தாரணங்களானவை ஹஷஹஹோவாவஜாயடீாஷவமாகையாலே. இவற்றுக்கு விகஷ்வ கொடிகவமே ஸம்பவிக்க விரகில்லை. 'ராவணஸ்ய ஊரணஂவா ஷுதஂ ஊவெ தஸ்ய வாதநஂவா' என்றாற் போன்ற விகல்ப கோடிகள் எப்படி அஸம்பாவிதமோ அப்படியே ஷுகதடீுக ஸாமாகஊடீக ஊரணமும் தயா வியமேயான தாரணமும் விகல்ப கோடிகளாவதற்கு ஸம்பாவனையேயில்லை. ஸமுத்ர மாரணமானல் தாரணம் ஹஜித்ததே யாகையாலே.

32. இதற்குப் பிறர் சொல்லுவதென்னவென்றால், தாரணவுமானது தாரணஸாஊநத்தைச் சொல்லக்கடவதேயானலும் தாரணவிஸெஷ ஹெதுஂ ஷுதூயகமான மரணபதம் இங்கு அடுத்திருக்கையாலே இந்தத் தாரண வுத்திற்கு வ்ருத்திஸஂகொவம் செய்வது உசிதமேயாகும்; ஸாஷயஊண விஸெஷஹிஜவிஸெஷ ஊதுவாரம் இது—என்று கொள்ளலாம். கொள்ளவே, ஸாஊ வஷவடீகதாரணமென்று இங்குள்ள தாரணஸஷ்வத்திற்கு அர்த்தம் கூறினபடியாயிற்று. ஸயீவடீவஸாஜிய்யத்தாலே ஸொவுத்திற்கு யெஷஂவாரகவம் கொள்ளப்படுகிறதன்றே, அதுவே இதற்கு மிகவும் ஏற்ற நிதர்சநம்—என்கிறார்கள்.

33. இந்த நிதர்சநம் இவ்விடத்திற்கு ஸுதராம் அநநுரூபம். ஸொவயீவடீந்யாய ஸஂவாரத்திற்கு இங்கு என்ன ப்ரஸக்தியுள்ளது? இங்கு ஸொஸஷ்வஸாநீயம் எது? ஸயீவடீஸஷ்வஸாநீயம் எது? என்று கேட்டால் விடையிறுக்க வேண்டாவோ? ஸ்தூலமாகச் சொல்லிவிடுவது ஒன்றுமோ? ஸொவயீவடீந்யாயத்திற்கு விஷயபூதங்களான ஸ்தலங்களை சாஸ்த்ரஜ்ஞர்கள் காட்டியேயுள்ளார்கள். பெரியாழ்வார் திருமொழியில் "மலைபுரை தோள் மன்னவரும்" என்கிற பாசுரத்தின் வியாக்கியானத்திலே நூற்றுவரும் என்றவிடத்தில் மணவாளமாமுனிகளும் இந்த ந்யாயத்தை உபஜீவித்திருக்கிறார்.

ச்ருதப்ரகாசிகையிலும் காண்கிறோம். ஸாமாந்யவாசியாயும் விசேஷவாசியாயுமுள்ள சப்தங்கள் ஏகத்ர காணப்படில் அங்கு ஸங்கோசம் பண்ணுவதற்கன்றோ இந்த ந்யாயம் ஸஹகரிக்கும்.

34. நிகமந ச்ருதிவிசார வாக்யத்தில் (ச்ருதப்ரகாசிகா)

"உபாத்தவிசேஷவ்ருத்திஸித்தவிஷயே ஸாமாந்யசப்தஸ்ய விசேஷபரிஹாராய ஸங்கோச: உத்ஸர்க்காபவாதந்யாய:। அவிசேஷேபி விசேஷபர்யவஸாநாய ஸங்கோசஸ்சேத் கோபலீவர்த்தந்யாய:। உபாத்தவிசேஷவிஷயே தஸ்ய ஸங்கோசஸ்ஸாமாந்யவிசேஷந்யாய இதி பேத:।"

என்று அருளிச் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். ஸாமாந்யசப்தமும் விசேஷ சப்தமும் உபாத்தமாயிருக்கவேணும். அங்கு ஒன்றுக்கு ஸங்கோசம் பண்ணுவதாகக் காட்டவேணும். இங்கு மரண தரண சப்தங்களை ஸாமாந்ய விசேஷசப்தங்களாக யாரேனும் கொள்ளுவாருண்டோ? கொள்ளுவதற்கு ஔசித்யலேசந்தானு முண்டோ? பலீவர்த்தசப்தத்தின் அர்த்தமும் கோசப்தத்திற்கு உண்டு என்று காட்டுகிறாப்போலே இங்கும் மரணசப்தத்தின் அர்த்தமும் தரணசப்தத்திற்கு உண்டென்று நிரூபித்தாகவேண்டுமே. நாநார்த்தவர்க்கச்ரேணியில் இங்ஙனே யொருபதம் கண்டிலோம். "கௌ: பும்ஸி பலீவர்த்தே ஸ்த்ரியாம் தேநௌ" என்கிறாப்போலே தரணமரண பத விஷயமாக அர்த்தபேதம் காட்டுகிற ஒரு நிகண்டுவும் காண்கின்றிலோம்.

35. பெரும்பாலும் கார்யே காரணோபசாரம் காண்கையாலே ப்ரக்ருதத்தில் மரணபதமும் மரணகார்யதரணபரமாகலாம் என்று பிறர் சொல்லுவதும் பொருந்தாது. அங்ஙனே கொண்டால் ஸாமரஸ்யமரண மென்றது (மரணகார்யதரணதாத்பர்யாபிப்ராயேண) ஸாமரஸ்ய தரண மென்றபடியாயிற்று. இதில் வாதிகளுக்கு என்னலாபம். மரணபதம் தரணபரமென்று கொள்வதனால் 'ஸாமரஸ்யதரணம்வா, ஸ்வதரணம்வா' என்பதாக விகல்பகோடி ஏற்படுமே யல்லது வேறொன்று மேற்படாததலால் வாக்யார்த்தவ்யாஹாத மத்தனையே.

36. அன்றியும், 'ஸாமரஸ்யமரணம்வா ஸ்வதரணம்வா' என்கிற இந்த யோஜநாசரீரத்தை ஊன்றி ஆராய்ந்தால் இதில் மற்றொரு அநுபபத்தியும் வலிதாகத் தோன்றி நிற்கும். இரண்டு வாக்யம் போலுள்ளவிதனில் முதல் வாக்கியத்தில் ஸாமரஸ்ய என்கிற ஷஷ்ட்யந்தபதஸ்தாநத்திலேயே இரண்டாவது வாக்கியத்தில் [ஸ்வ] என்கிற ஷஷ்ட்யந்தபதம் நிவிஷ்டமாயிருக்கின்றதென்பது நன்கு புலப்படும். ஆகவே இரண்டு ஷஷ்டிகளின் அர்த்தமும் ஒன்றேயாயிருக்கவேண்டுமென்பது சாஸ்த்ரஜ்ஞர்களுக்கு நிர்விவாதம். அஃது இங்கு

ஸம்பவிக்கின்றதில்லை. ஸாமர்த்யஸ்ய என்றவிடத்தில் ஷஷ்டிக்குக் கர்மத்வமே அர்த்தமாகும். கர்த்ருத்வம் அர்த்தமாக வழியேயில்லை. தே என்றவிடத்தி லுள்ள ஷஷ்டிக்கோவென்னில் கர்த்ருத்வம் தவிர கர்மத்வம் அர்த்தமாகச் சொல்ல ப்ரஸக்தியேயில்லை. ஆனபின்பு த்வதீயயோஜநாவிந்யாஸமே அஸங்கதமென்று நன்கு தேறிற்றாகும். 'யஜ்ஞகர்மணாம் தாநம் பவது, க்ஷேத்ரகர்மணாம் தாநம் பவது' என்று வசநவிந்யாஸமிருக்கலாமே யல்லது யஜ்ஞகர்மணாம் தாநம் பவது, உத்க்ருஷ்டகர்மணாம் விதரணம் பவது என்றிருக்கத் தகுதி இல்லையன்றோ. ஸதாத்ருசவிகல்பகோடிவிந்யாஸஸா பீஜமாகவன்றோ பிறருடைய விகல்பகோடிவிந்யாஸம் தேறிநின்றது. மரண மென்பதற்கும் தரணமே பொருளென்று பிறர் சொல்லா நின்றார்களிறே.

37. அந்யே து;-மரணபதத்திற்கு வெறும் தரணத்தை நாங்கள் பொரு ளாகப் பணித்திலோம்; சரணயோஜ்யதரணத்தையேயன்றோ பொருளாகப் பணிக்கின்றோம் என்பர்கள். இந்த வாதமும் நிஷ்பலம். இங்கு மரணமென்றும் தரணமென்றும் இரண்டு சப்தங்கள் உள்ளன. ஒன்றுக்குக்கூட ஸமுதாயார்த்தத்தில் நோக்கில்லை யென்று இவர்கள் சொல்லி முடிப்பதாகத் தேறுகிறது. அதாவது,(1)மரணபதத்திற்கு தாரணம் அர்த்தம்; அந்த மாரணமும் ஸ்வயோஜ்யதரணபரம்; (2) தரணபதம் ஸாகரோல்லங்கநதரணபரம்—என்றிப்படி ஒவ்வொரு பதத்திலும் முன்னும் பின்னும் வளர்த்திக்கொள்ளவேண்டிய அருமை கள் சாஸ்த்ரவரம்புக்கு மீறினவையா யிருக்கையாலே இப்படிப்பட்ட யோஜனை யை ஒருபோதும் நம் ஆசார்யர்கள் கொள்ளார்கள் கிடீர்.

38. அத்ர கேசிதாஹு:;—(வாக்யயோஜநாகாங்க்ஷத்வாய) தே ஸாமர்த்யஸ்ய தரணம் வா தே ஸாமர்த்யஸ்ய சரணம் வா என்றே இங்கு யோஜ னா சரீரம் கொள்க. உத்க்ருஷ்ட ஸாமர்த்யகர்மக தரணம் வா, உத்க்ருஷ்ட ஸா மர்த்யகர்மக சாரணம் வா என்று இப்போது அர்த்தமாகிறபடியால் குறை யொன்றுமில்லை யென்று.—இப்படிப்பட்ட யோஜநாசரீரம் இதற்குமுன் காட்டப் படவில்லை. புதிதாகச் சொன்னாலும் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படியே கொள்வோம். இவையிரண்டும் ஹீந கோடிகளேயல்ல என்கிற நம்முடைய வாதம் நிலைநின்றேயிருக்குமாதலால் நசைவம் நிஷ்டாநோ வாதி நாஸீதி நிஶ்சிதம்.

39. வஸ்துதஸ்து, தே ஸாமர்த்யஸ்ய சரணம் என்கிற வாக்யசரீரம் அந்வயிக்கவே மாட்டாது. ஏனென்னில் உபபாதிக்கிறோம் கேண்மின். இங்கு மரணபதத்தை உள்ளபடியே கொண்டால் ஸ்யாது அகர்மகமாகையாலே (தே, ஸாமர்த்யஸ்ய) என்ற இரண்டனுள் ஏதேனுமொரு ஷஷ்ட்யந்தமிருக்கத் தகுமே யல்லது இரண்டு மிருக்கத்தகாது. மரணத்தை சாரணார்த்தமாகக் கொள்

ளும் பக்ஷத்தில் மரண சப்தார்த்தம் வய மென்றதாகிறது. அப்போது ஸாமரஸ்யவய: என்கிற அவ்வளவு மாத்திரமே பொருந்தாத்தனை போக்கி தவாஸ்யகதயா, ச என்பது இருக்கத் தகவேதகாது. ஈயா ஸாமரஸ்யவய: என்பதன்றோ முறைமை. இன்னமும் உட்புகுந்து சோதிக்கப்புக்கால் பல வகைப்பட்ட வ்யாவாதங்கள் ஸாஹஸ்த: இடம் பெறும். ஆதலால் வ்யுத்க்ரமாந்வயம் ஒருபடியாலும் பொருந்ாதென்று விட்டொழிவதே அழகியது.

40 வாநரவிஸஷநிருவஸ்தொ ஸாமரஸ்ய ஈரணம்வா, ச தாரணம்வா ஹவதா என்கிற யோஜனையை அரும்பதவுரைகாரர் காட்டியிருக்கிறார். ஒரு வாக்யத்தில் ஸாமரஸ்ய என்கிற பதத்தையும் மற்றொரு வாக்யத்தில் ச என்கிற பதத்தையும் வைத்து யோஜித்து விட்டாலும் இவ்விரண்டு பதங்களும் இரண்டு வாக்கியத்திலுமே இருந்து தீரவேண்டிய நிர்ப்பந்தமுண்டு. எங்ஙனே யென்னில்; ஸாமரஸ்யாரணம் என்பது கத்ருஸாவெக்ஷம்; சதாரணம் என்பது கஈஸாவெக்ஷம். ஆகையாலே ஆகாங்க்ஷாசாந்தி பிறக்குமாறு நிரவெக்ஷமாக வாக்யப்ரயோகம் பண்ணவேண்டுதலால், அரும்பதவுரைகாரர் காட்டியுள்ள யோஜநா சரீரம் குறையுற்றதென்பது புநருக்தமேயாகும். இனி, குறையற யோஜநாசரீரம் வைக்கவேண்டுமானால், பிறர்விவக்ஷிக்கும் தாத்பர்யத்திற்குத் தகுதியாக எங்ஙனே வைத்தால் ஒக்கும்? என்று பார்ப்போம். ச்லோகத்திலுள்ள பதங்களில் ஒன்றையும் மாற்றாமலும் அத்யாஹாரம் செய்துகொள்ளாமலும் ஸாகாங்க்ஷமாக யோஜநாசரீரம் விந்யஸிக்கவே முடியாதென்பது திண்ணம். ஆகவே அப்படிப்பட்ட யோஜனையை ஆசார்யர்கள் ஒருகாலும் திருவுள்ளம்பற்றி யிருக்கவேமாட்டார்கள். ச்லோகமுள்ளபடியே யோஜிப்பதில் ஒரு குறையும் சொல்வதற்கிடமின்மையால் 'ஸாமரதாரணம்வா ஈரணம்வா ச ஹவதா' என்கிற அர்த்தத்தையே ஆசார்யர்கள் அருளிச்செய்ய ப்ராப்தம். அப்படித்தான் அருளிச் செய்துமிருக்கிறார்கள்—என்கிற நமது விஜ்ஞாபநம் என்றென்றும் வெற்றிபெற்றதேயாகும். இதில ஒரு குறையேனும் காட்டக்கூடுமோ?

41. கூடம் தவறின யோஜனையைச் செய்வதற்கு ஆவஸ்யகதாலேசமுமில்லையென்பதும் அது செய்யவும் முடியாதென்பதுமாக இரண்டு வாதங்கள் நம்முடையவை. இரண்டும் ஸமப்ரதாநமேயானாலும் முந்தின வாதம் மிகப்ரதாநம். ருஜுவான நெறியில் செல்வதே பெருமாளுடைய இயல்பு. எதிர்த்தலையில் தீம்புகண்டால் பிறகு தண்டிக்க முயல்வதும் அவருடைய இயல்வு. இங்ஙனன்றியே முதலடியிலேயே எதிராளன்மீது விபரீதமான எண்ணத்தை நெஞ்சிலே வைத்துக்கொண்டு போட்கனான செயலைச் செய்தாரென்பது நிருஜஜ்ஞாதகளாபிஷ்ஞான சக்ரவர்த்தித்திருமகன் திறத்திலே பெருத்த தூஷணமேயாகும்.

42. மேலுள்ள ஐதிஹ்யத்தை நோக்கி அதற்கும் சேரப் பொருள்கூற வேண்டுமாதலால் இப்படித்தானே சொல்லியாக வேண்டுமென்று பிறர் கூறுவ

தும் பொருத்த முடைத்தன்று. சரணாகதியை அநுஷ்டிக்குமிந்த ஸமயத்திலே பெருமாளுடைய திருவுள்ள நிலைமையிருந்தபடியை மாத்திரம் கூறவந்திருக்கின்ற ப்ரக்ருத ச்லோகத்தில் தற்போது பெருமாள் திருவுள்ளத்திலில்லாத நிக்ரஹ நினைவையும் கூட்டி யுரைப்பது ஒருபடியாலும் பொருந்தாது.

43. சரணாகதி செய்ய அர்ஹரல்லாத பெருமாள் அதனைச் செய்தாரென்னும் போது இதுவே பேட்கனன செயல்தானே; இதுமாத்திரம் பெருமாளுடைய நேர்மைக்குத் தகுமோ? என்று சிலர் கேட்பதும் தவறு. "க்ருதாநம் சாந்யேஷாம் கரோதி" என்றதற்குச் சேர எவ்வளவோ காரியங்களைப் பெருமாள் செய்தருளினார். அவற்றிலே இதுவுமொன்று. விச்வாமித்ரர் பின்னே கைகட்டிச் சென்று 'என்னைப் பணிவிடைக்காரனாகக் கொள்ளீர்' என்று சொல்லியும் குரங்கின் காலிலே குனிந்தும்போந்த பெருமாளுக்கு வருண தேவதையின் காலிலேவிழுகையும் அவதார நிலைமைக்கு ஏற்குமதொன்றிறே.

44. * பிஶாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந் அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம்" என்று அவலீலையாகப் பேசியருளின பெருமாள் இலங்கையரோடு நெடும்போது நின்று பொருது அப்பேற்றுப் பலபல வருத்தங்கள் பட்டதெல்லாம் பொருந்துகிற கணக்கிலே ஸமுத்ரசரணாகதியும் பொருந்தக் குறையில்லை. ஶரணவரணாவக்ரு சகாயாவஹேஶ்ந சரண சரண நோக்கமும் ஸமுத்ரவிஷயத்திலே பெருமாளுக்குண்டென்று சொல்லுகிற இந்த வொருவார்த்தை மாத்திரம் ஒருபடியாலும் ஸ்ரீராகவன் திறத்திலே பொருந்தவே மாட்டா தென்பது ஸுநிஶ்சிதமே யாகும்.

45. நநு, அத்ய மே மரணம்வா என்று பெருமாள் தம்முடைய முடிவையே ஸங்கல்பித்துக் கொண்டாரென்று வைத்துக்கொண்டால், சரணாகதியினால் உத்தேச்யம் கைகூடாதவளவிலே முடியக்கடவதாக ஸங்கல்பித்துக் கொண்டாரென்றுதானே சொல்லியாகவேண்டும். எப்போது சரணாகதி பலிக்கவில்லையென்று ஆயிற்றே, ஸங்கல்பப்படி உடனே முடியவன்றோ ப்ராப்தம். *சாபமாநய * என்றும் * ஸாகரம் ஶோஷயிஷ்யாமி * என்றும் இப்படிப்பட்ட ப்ரவ்ருத்திகளிலே ஒருப்பட்டது என்? என்று கேட்கலாம்: இந்த ப்ரகரணத்திலே நாம் பலவகை விஷயங்களை யெடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்ய ப்ராப்தமாகிறது; ததாஹி;—

46. ஸமுத்ரராஜனை நோக்கிச் சரணாகதி செய்யுமாறு உபதேசித்தவர் விபீஷணாழ்வான். அவரோ பெருமாளுடைய பெருமையைப் பெரிது மறிந்தவர். 'ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே' என்று பெருமிடறு செய்து கதறினவர். அப்படிப்பட்டவர் பெருமாளை ஒரு க்ஷுத்ரன் காலிலே விழச் சொன்னது ஏன்?

47. அவர் தாம் சரணாகதியின் ஸ்வாரஸ்யத்தை யறிந்தவராகையாலே பெருமாளுடைய பேராற்றல் முதலியவற்றை மறந்து சரணாகதி செய்யச் சொல்லிவிட்டாரென்று கொண்டாலும் ஸர்வஜ்ஞரான பெருமாள் அச்சொல்லை ஏற்றுக் கொண்டது ஏன்?

48. "அநந்யாபீநதவம் தவகிம ஜமாவெவேஷிஷாவா: வாபநம ஸ்வாம் தாஹ்வணதவாதஞம் உநஹெ" என்கிறபடியே பெருமாள் தாம் ஆச்ரித பரதந்த்ரராகையாலே, அப்போதுதான் வந்து சேர்ந்து அடியவர்களில் தலைமை பெற்று விளங்குகின்ற அவ்விபீஷணாழ்வானுடைய உக்தியை மறுக்கமாட்டாமல் அதற்கிசைந்தாரென்று கொண்டாலும் சரணாகதிக்கு இலக்கான கடலரசன் உபேக்ஷித்துக் கிடந்ததேன்?

49. வருணன் ஸாமாந்ய புருஷனல்லனே; பெருமாளுடைய பெருமைகளை அறியாதவனுமல்லனே; முன்பு திருவடி இலங்கைக்கு விடைகொள்ளுங்கால் மைநாககிரியை யனுப்பி எவ்வளவோ மதிப்பைக்காட்டியுமிருக்கிறானே. இவன் பெருமாள் பண்ணின சரணாகதியை அறியப்பெற்றிலன் என்னவுமொண்ணாது; நம் போல்வாருடைய ஸாதாரணங்களிலும் உவஷிதனாய் நின்று பலனளிக்குமிவன், யதாவஷிதமாயும் உஷவஷிகவிஷ்தமாயுமுள்ள ஸ்ரீராம சரணாகதியை அறியாதிருந்தானென்னப் போகாதிறே.

50. அன்றியும், பெருமாள் சரணாகதியைக் கொண்டே காரியம் ஸாதித்துக் கொள்ள வேணுமென்கிற நிர்ப்பந்தமுமில்லையே. அவதாரங்களில் வித்யாக்ரஹணார்த்தமாகத் தம்மில் தாழ்ந்தவர்களிடத்திலும் உபஸத்தி செய்வதுபோலே சிறுகாரியத்திற்காக நீசர்களிடத்திலும் சரணாகதி செய்ய ஒரு விதியில்லையே. வித்யாக்ரஹண விஷயமென்பது அஸாதாரணம். 'வதெக்ஷிதொவா வ்யஷ் ஹாஜ யஷஹாஞதவவா" இத்யாதிப்படியேயாகாமல் குருமுகமாகவே அதிகரிக்கவேணு மென்பதை ஸ்வாநுஷ்டாந முகத்தாலும் காட்டுதற்கு அவதாரங்களில் ஆவாயெஷாவஹஉநம் செய்வதற்கு ஒரு உபபத்திகூற இடமிருப்பதுபோல் சரணாகதிக்கு அப்படி யொன்றுமில்லையே!—என்றிப்படிப் பலவாறாகப் பலர் சங்கிப்பதுண்டு.

51. இவற்றுக்குப் பெரியோர் ஸாதிப்பனவும் கேட்டிருக்கிறோம்;—விபீஷண சரணாகதியைப் பார்த்து அதில் ஒரு சுவடறிந்து, பெருமாள் தாமும் அதை யநுஷ்டிக்க ஆசை கொண்டார் என்னலாம். கடலரசன் உபேக்ஷித்தமைக்குப் பலவாறு காரணம் கூறுவர். தேவதாந்தரங்களுக்கு சுத்தஸத்வகுணம் கிடையாது; "கஷாஷியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர்முகன்" என்று ஆசார்ய ஹ்ருதயத்திலுள்ளபடியும் அங்கு வியாக்கியானத்தில் விவரித்தபடியும் ஒவ்வொரு ஸமயத்திலே ஒவ்வொரு குணம் தலைகாட்டி நிற்குமாகையாலே தமோ குணம் தலையெடுத்துநின்ற நிலைபோலுமிப்போது. *அஹம்வெஷி உஹாதாநு* என்று மாமுனிவன் சொல்லக் கேட்டும், தாடகா தாடகேயாதி நிரஸநம் அஹல்

யாசாப மோக்ஷம் சிவதநுர்ப்பங்கம் முதலான அருந்தொழில் செய்தமை கேட்டும், * என் வில்வலிகண்டு போவென் றெதிர்வந்தான்றன் வில்லினோடும் தவத்தை யெதிர்வாங்கி முன்வில் வலித்தபடியைக் கண்ணெதிரே கண்டுங்கூட தசரத சக்ரவர்த்தி பெருமாள் பெருமையை உணர்ந்திலனென்னும்போது வருணாதிகளுக்குச் சொல்ல வேணுமோ பின்னை ?

52. சரணாகதிக்குக் காரியஞ் செய்தால் அதை நாம் அங்கீரித்தபடியாகும் என்று நினைத்து வருணன் வாளாவிருந்தானென்பாருமுளர். உடையவர் திருமலைக் கெழுந்தருளினபோது பெரிய திருமலைநம்பி தெண்டனிட, உடையவர் தூஷ்ணீ மிருந்ததற்குச் சொல்லுகிற காரணம் போலுமாமிது. ஆண்டாள் * ஆழிமழைக் கண்ணா வென்று தொடங்கி நியமித்ததுபோல ஸ்ரீராகவனும் நம்மை ஏவிக் காரியங் கொள்ளவேண்டியிருக்க முறைகேடாக இங்ஙனம் சரணம் புகுவதேயென்று இருப்புத் தாழ்த்தான் போலும் கடலரசன்.

53. முன்பு திருவடிக்கு அத்தனை உபசாரங்கள் பாரித்து இப்போது அபசாரம் செய்த வகையினால் பகவத்ப்ரபாவத்திற்காட்டிலும் பாகவதப்ரபாவம் அதிசயமுடைத்தென்பதைக் காட்டினவாறுமாம். * மண்மிசை யோனிகள்தோறு மித்யாதி பாசுரத்திற்கு மிகவுமிணங்கின நிர்வாஹம் இது.

54. இவ்வோ புடைகளிலே சொல்லிப் போருகிற ஸமாதானக் கணக்கிலே, * சுஜுஜெ ஶரணமென்று ஸங்கல்பித்த பெருமாள் பிறகு அம்பு தொடுக்க ஒருப்பட்டமைக்குச் சொல்லிப்போரும் ஸமாதானங்களும் பலபலவுண்டு. விஶ்வர்கள் திறத்திலும் அல்பம் ஆபிமுக்ய்யங் கண்டவாறே ஆனைத் தொழில்கள் செய்தும் பக்ஷபதிக்கும் பெருங்குணம் தம்மிடத்திலுண்டென்று காட்டுதல் பெருமாளுக்கு இங்கு விவக்ஷிதம். கடலரசன்மீது சீறிச்சிவந்த கண்ணோடேயிருக்கு மிருப்புதன்னிலேயே அவனுக்கு மஹத்தான விரோதிநிரஸநத்தைச் செய்து கொடுத்தமை ஸ்ரீராமாயண ப்ரஸித்தமிறே. இது ஊன்றி நோக்கத்தக்கது.

55. அன்றியும், உண்மையில் சூகிஂவநமும் சுநநமதிசுவமு முடையவனுக்கே சரணாகதியில் அதிகாரமுண்டேயல்லது * சுஷஶயம் விஜாநாதி ஶாஶய என்பார்க்கு அது கிடையாது என்கிற சாஸ்த்ரார்த்தத்தை வெளியிடுதலில் நோக்கு என்பாருமுண்டு. மற்றுங் கற்றுணர்ந்த பெரியார்பாடே கேட்டுத் தெளிக. 'ஶாஜொஷிநஹி ஹாஷதெ' என்பதற்கு இது விருத்தம் என்கிற வாதம் ஒருபடியாலும் ஒங்காது. இதைப்பற்றிக் கீழே பரக்கப் பேசியாயிற்று. ஶூரண ஸஂகஜுக்திற்கு நேர்விருத்தமாக ஸாமஶ ஶாரணத்தைச் செய்து முடித்திருந்தாராகில் பெருமாள்மீது குறைகூற இடமுண்டாகலாம். அங்ஙனம் நிகழவில்லையே. ஆழ்வார்கள் மடலூர்வன் என்று அச்சமுறுத்தினாப்போலே பெருமாளும் வெறுமனே சிறிது அச்சமுறுத்தி உடனே நனிமிகு நன்மைகளையே செய்தருளினாராகையாலே ஸஂகஜுதவிஶமாகச் செய்தாரென்று வாய்

திறக்கவும் வழியுண்டோ ? மனிச்சுக்குச் சேர ஶரணாகதி செய்தார்; ஈச்வரத்வப் பிடார் பொங்கி * வாவஶாநய ஸௌமித்ரே * என்றார். இதில் என்ன வொவ்வுமுளது? தயாசதகத்தில் தேசிகன் பணித்த * சுவாம்வதஸ்ஸ்ரு ஞ் * என்கிற ச்லோகத்தின் பொருளை உணரப்பெற்றால் உள்ளம் குளிரும்.

56. பெருமாள் திசைக்கருமம் திருத்திவந்து முடிசூடினபோது பரதாழ்வானை யௌவராஜ்யத்திலே முடிசூடிவைக்கை ப்ராப்தமாயிருக்கச் சேய்தே “ ஸூதிஷ் யஜஸ்ஷ ஜயாவஸௌஜாம் மாம் வஜவஸராஜாயஶிதாம் ஸ்வநெந ” என்று இளைய பெருமாளை நியமித்தது—பரதாழ்வான் ஜாதஸுகஸுத்திலே வதிக்கிற நாளிலே ‘ஶுக்ஷணெஜாம் ஜயாவஸாயஸம் வஶாயி சுவம் வஸஸலாமி’ என்று சுவஶமாய்ச் சொன்ன இவ்வளவையே கொண்டல்லவோ என்றும், ஆகையாலே சொன்ன வார்த்தை தவருதவர் பெருமாள் என்றும் வாதிகள் கூறுகிருர்கள். அதற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம் ? ஆனாலும் இதைப்பற்றியும் நாம் விமர் சிப்போம். ஸூதிஷ்ஶ்லோக வ்யாவ்யாநத்தில் “ வஜவஸாஹிஷெகாஶஹெ ஹா தாவஸஹியாநெ வ்ரதிஜ்ஞாநாக ராஜொஜிநஸஹி ஹாஷதஜதிநிய ஜாக ஶுக்ஷணஜெவ யௌவராஜெ நியுக்த ” என்று ஒரு வ்யாவ்யாதா எழுதினர். மற்றொரு வ்யாவ்யாதா “ஸூத்நா ஸஹ வநவாஸஃஸோ நஹவாக ராஜெ ஸஹஸவாநஹவாயஸம் ஶுக்ஷணம்வ்ரதி யௌவ ராஜெ வ்ராயஸநெதிஹாவஃ” என்று எழுதினர். இரண்டும் பொருந்தியதே. இந்த விஷயத்தால் நம் வாதிகளுக்கு என்ன உவகாரமோ அறியோம்.

57. இந்த விஷயத்தை யெடுத்துக் காட்டுகிறவர்கள் ஸ்ரீராமாயண அயோத்யா காண்டத்தில் நூற்றேழாவது ஸர்க்கத்தில் “வுரா ஹ்ராதஃ பிதா நஸ் ஜாதரம் தெ ஸஜுவஹநு। ஜாதாஜஹெ ஸஜாஶுௌஷிஜ்ராஜெ ஶுக்ஜ நுத்ஜமி ” என்றுள்ள பெருமாள்வசனத்தை யெடுத்துக்கொண்டு விமர்சித்து நிர்ணயித்திருந்தாலன்றோ நன்ருகும். தசரதர் கைகேயியை மணம் புணரும் போதே அவளுடைய தந்தையிடத்தில் கைகேயீ புத்ரனுக்கே ராஜ்ய மளிப்பதாக ப்ரதிஜ்ஞை செய்திருந்தாரென்று இதனால் கூறப்படுகிறது. பிதாவைப் பொய்ய னுக்கமாட்டே னென்று பலகாலும் பேசுகின்ற பெருமாள் வநவ்ரயாணாக வஜவஸமும் வநவாஸாநஜமும் பட்டாபிஷேகத்திற்கு எங்ஙனே இசைந் தருளினர் ? * ஸூதிஷ்யஜஸ்ஷ ஜயாவஸௌஜா மென்று இளைய பெருமாளை நோக்கிக் கூறுதற்கே அதிகாரமில்லையே பெருமாளுக்கு. இதற்கு ஸமாதானம் கிடைக்கும்போது * வாவஶாநயவுக்குத்தானு கிடைக்காமற்போகும் ?

58. பெருமாள் ஒன்றே உரைப்பவர் ஒரு சொல்லே சொல்பவர் என்பதில் யாருக் கும் விவ்ரதிவத்திபில்லை. சுவ்ஜெஜாணம்வா என்று வ்ரதிஜ்ஞை செய்திருந்தால் அதன்படி ஜாண மடைந்திருப்பதன்றோ அவர்க்கு உரியது என்கிற வாதத்தின்

ஸஜாதீயத்வத்திற்கு இந்தக் கதைகள் எங்ஙனே உபகரணமாகும்? பிறர் கருத்தின்படியே ஸாக³ரஶரணமென்று கொள்ளும் பக்ஷத்தில் அந்த ப்ரதிஜ்ஞையையாவது அவர் நிறைவேற்றியிருக்க வேண்டுமே. அதுவுமில்லையே. ராமோ த்³விர்நாபி⁴பா⁴ஷதே என்றதோடு இது விரோதியாதோ?

59. நநு, ஸாக³ரஶரணம்வா என்ற ப்ரதிஜ்ஞையைப் பெருமாள் பத்தும்பத்தாக நிறைவேற்றியருளாதொழியினும் அதற்குறுப்பான பரிகரபந்தம் (பாபஶாநயேத்யாதி) செய்தருளினராகையாலே ப்ரதிஜ்ஞார்த²ம் ஸந்நிர்வஹணம் ஸுப்ரதிஹதமே என்னில்; இந்த ஸமாதாநம் உபயோஸ்ஸாநம். ஸமுத்³ரம் ஶரணம்வா என்று திருவுள்ளம் பற்றினபடியே மூன்றுநாள் தரைக்கிடை கிடந்தது அதற்குறுப்பான பரிகரபந்தமேயிறே.

60. அன்றியும், "ராஜ நீதிக்குச் சேர முந்துற ப்ரத²மகோடியான ப்ராயோபவேஶத்திலே யிழிந்து மூன்றுநாள் கடந்தும் முகங்காட்டாமையாலே ப்ரதிஜ்ஞையின் கொடூரமான ஸாக³ர ஶோஷணத்திலே இழிந்து நின்றரென்று கீழில் ப்ரதிஜ்ஞைக்கு அநிர்வஹமாயே மேல் அதிவ்ருத்தமாகா நிற்கும்" என்று பிறர் கூறுவதை நோக்குங்கால் அவர்கள் தம்முடைய கொள்கையைத் தாமே ஶிதிலமாக்கிக் கொண்டார்களென்பது ஸுவ்யக்தமே யாகும்.

61. ததா²ஹி॥ ப்ராயோபவேஶம் ப்ரத²மகோடி யென்கிறார்களன்றோ. ப்ரக்ருதவிகல்பகோடித்³வயத்தில் எந்த கோடியை இவர்கள் ப்ராயோபவேஶமாகத் திருவுள்ளம் பற்றுகிறார்களென்று தெரியவேணும். ஶரண மென்பதைத்தான் ப்ராயோபவேஶ கோடியாகக் கருதினோமென்று இவர்கள் கூறவேணும். அந்தோ! இது சேருமோ? ஶரண ப்ரஸ்தாவ வாடையின்றிக்கே யிருக்கும் வார்த்தைக்கு ப்ராயோபவேஶ கோட்யாத்மகத்வம் எங்ஙனே படிக்கும். ஒருகாலும் படியாது. அங்கு மூலத்தில் இரண்டு விகல்ப கோடிகள் உள்ளன. அவற்றுள் எது ப்ரத²மம் என்பது ஒரு விசாரம். எது ப்ராயோபவேஶகோடி என்பது மற்றொரு விசாரம். இவ்விரண்டு விசாரமும் ஒரு நிர்ணயம் பெற்றுவிட்டால் ஶங்கா: கொஞாஹயொஹவெஸ:.

62. எம்முடைய கொள்கையின்படி எதை ப்ரத²மகோடியாகக் கொண்டாலும் கொள்ளலாம். அதில் ஆக்ஷேபமொன்றும் விளைய அவகாசமில்லை. ஸாக³ரதரணத்தை ப்ரத²மகோடியாகவும் ஶோஷணத்தை த்³விதீயகோடியாகவும் கொள்வதே விவக்ஷிதம். உண்மையான ஈட்டு ஸ்ரீஸூக்தியின்படி ஶோஷணத்திற்கே ப்ரத²மகோடித்வம் ப்ரதிபந்நமானாலும், ஸமுத்³ரதரணாத்மகமான த்³விதீயகோடித்வம் அதற்கு உபேக்ஷணீயமே யாகுமென்றும், நம்பிள்ளை அதை

பூர்வபக்ஷகோடியாக வைத்து ப்ராப்தாப்ராப்தவிவேகாஸ்ய ப்ரகரணத்திற்கு நன்கு இணங்குதற்காகவும் மூலஸந்நிவேச முள்ளபடிக்குப் பொருந்தவுமென்க. ஸ்மரண ஸங்கல்பகோடியே ப்ராயோபவேசகோடியாகவும் தேறிவிடுகிறது. வாதிகளின் கொள்கைப்படி பார்த்தால் ஒருபடியாலும் ஸாமஞ்ஜஸ்யம் வாராது.

63. இத்தை முடித்தல் என்று நம்பிள்ளை ஸூக்தி உள்ளதாகக் கொள்ளுமிவர்கள் ஸாமாந்யஸ்மரணத்தையே பூர்வபக்ஷகோடியாகக் கொள்ளக் கடமைப்பட்டவர்கள். அதை பூர்வபக்ஷகோடியாக நம்பிள்ளை என் வைத்தருளினர்? என்று கேட்டால் ஸீஜுவான விடையளிக்க வழியில்லை. இற்றை முடிதல் என்பதை பூர்வபக்ஷகோடியாக வைத்ததற்கு ஔசித்யம் நாம் சொல்வது போலே இவர்களுக்குச்சொல்ல அவகாசலேசமுமில்லைகிடீர். இது எங்ஙனேயாயினுமாகுக. இதையே வாதிகள் பூர்வபக்ஷகோடியாக இசைந்து இதற்கே ப்ராயோபவேசகோடித்வத்தையும் சொல்லத்துணிவரேல் ஸாஹஸம்வா ஸாஹஸம்வா வஹு. ஸாமாந்யஸ்மரணத்தை ப்ராயோபவேசமாகச் சொல்லப்போகாதிறே.

64. இனி, ஸ்மரணமென்பதுதான் பூர்வபக்ஷகோடி என்பர்களேல், அதற்கும் ப்ராயோபவேசகோடித்வம் அஸம்பாவிதமே. கோநாம ப்ராய:? கஸ்²வா ப்ராயோபவேச:? என்று விசாரிக்கவேணும். ப்ராயோபவேச:, ப்ராயோபவிஷ்ட: என்கிற பதங்களை யெடுத்துக் கோசங்களில் விவரணஞ் செய்திருப்பதை நோக்கி ப்ரஸித்தியையும் அபலபியாமலிருக்குமவர்கள் ஸ்மரணமென்கிறவிவ்வளவை ஒருகாலும் ப்ராயோபவேசகோடியாகச் சொல்லத் துணியார்கள். இந்த ச்லோகத்தில் ஸ்மரணஸங்கல்பமுள்ளதாகக் கூறினுலல்லது ப்ராயோபவேசமென்று வாய்திறக்கவே முடியாது. இங்கு ப்ராயோபவேசமென்று ஸஸங்கல்பவ்யவஹரிக்கின்ற வாதிகள் இற்றை முடிதல் என்கிற திருத்தமான பாடத்தையே'சிரமேற்கொண்டார்களென்பது திண்ணமேயாயிற்று.

65. பெரியவாச்சான் பிள்ளை * இறையோவிரக்கினும் * என்னுந் திருவிருத்தப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் அருளிச் செய்துள்ள ஒரு ஸ்ரீஸூக்தியைப் பற்றிக்கொண்டு பிறர் செய்யும் வாதம் பண்டே உக்தோத்தரம். இங்கும் சுருங்க விடையளிப்போம்.

66. அங்குள்ள பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளாவன :—

(1) "இதுதான் சரணமென்றால் இரங்குமதன்றிக்கே அம்புக்கு முகங்காட்டுமதிறே. (2) அது சூதிக்கிரங்குமதல்லவே, அம்புக்கிரங்குமதிறே. (3) தனக்கு சரணமென்றால் இரங்குமதன்றே, மரணமானாலிரங்குமதிறே." என்பன.

இது வாக்யத்ரயாத்மகமாகவுள்ளது. முதல் வாக்கியத்தில் விவக்ஷிதமான அர்த்தமே அனந்தரவாக்யத்தாலும் ஶப்தபேதேந சொல்லப்படுகிறது. பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானங்களிலே இத்தகைய ஶைலி பெரும்பாலுமுண்டு. ஸ்வவாக்யந்தன்னையே உத்தரோத்தரம் விவரணம் பண்ணிப் பல வாக்யங்களாக அருளிச்செய்வதும், விவரண விவரணீபாவமின்றியே யொழிந்தாலும், ஒருவகையாக அருளிச் செய்த அர்த்தந்தன்னையே ப்ரக்ரியா பேதேந பன்னிப்பன்னி அருளிச்செய்வதும் ப்ராயேண புலப்படும். "அர்த்தமாத்ராலாகவேந புத்ரோத்ஸவம் மந்யந்தே வையாகரணா:" என்றுப் போலே நம் ஆசார்யர்கள் ஒரு நியந்த்ரணமுடையரல்லர். அநுபவரஸிகர்களாகையாலே ஒரோ ஸ்தாநங்களிலே நோக்காகப் பன்னிப் பன்னியும் பகர்வர்கள். இதை பரஶ்ஶதோதாஹரணபுரஸ்ஸரமாக நன்கு நிரூபிக்க வேண்டிய ஆவஶ்யகதை நேருங்கால் விபுலமாகவே நிரூபிப்போம்.

67. இவ்விடத்தில் வாதிகளின் ஸம்ரம்பம் யாதெனில், "மரணமானாலிரங்குமதிறே" என்ற பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தியில் மரணமென்றுள்ள பதம் சரமே ஶரண மென்றவிடத்துள்ள ஶரண பதத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமென்றும், அப்படியே அரும்பத வுரைகாரரான அப்புவும் காட்டியிருக்கிறாரென்றும், ஆகவே ஸாமாந்ய ஶரணமென்கிற யோஜனை பெரியவாச்சான்பிள்ளைக்கும் அபிமதம் என்று காட்டுவதாம்.

68. இது இப்போதாக வாதிகள் புதிதாகத் தாமெடுத்துக் காட்டும் விஷயமன்று. ப்ரஹ்மவித்யா பத்ரிகையிலே அடியேன் நிரூபித்திருந்தவற்றை ஸாவதாநம் கடாக்ஷித்தருளின ஸ்ரீமத் பரமஹம்ஸ. அயோத்யா. ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி அப்போதே "உன்னுடைய நிரூபணங்கள் பரமோத்தமங்களாகவே யுள்ளன. அதுதான் தத்துவமென்று தெளிவது தவிர வேறு வார்த்தைக்கு இடமில்லை. ஆனால், திருவிருத்தத்தில் அறுபத்திரண்டாவது பாசுரத்தின் பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியானத்திலே அரும்பத வுரையையுங் கொண்டு எனக்குச் சிறிது ஆஶங்கை வர்த்தியா நின்றது; அதனையும் நீ ஆராய்ந்து அறிவிக்கவேணும்" என்று ஸ்ரீமுக மருளினர். அப்போது அடியேன் ஆராய்ந்து விஜ்ஞாபித்ததைத் திருவாய்மொழியின் திவ்யார்த்த தீபிகையிலே வெளியிட்டேயிருக்கிறேன். (அதாவது)—

∴ இங்கு சரமே ஶரணம்வா என்கிற ஶ்லோகத்தைப்பற்றின ப்ரஸங்க லேஶமும் கிடையாது. 'அம்புக்கு முகங்காட்டுமதிறே' என்கிற ஸ்ரீஸூக்திக்குப் பிறகு 'தனக்கு மரணமானாலிரங்குமதிறே' என்கிற ஸ்ரீஸூக்தி இருப்பதனால் பெரிய வாச்சான்பிள்ளை தனிச்லோகியில் அருளிச்செய்கிற

கணக்கிலே ப்ரஸங்கமாக அருளிச் செய்தவத்தனை. அவ்விடத்து அரும்பதவுரைகாரரும் நம்பிள்ளையீட்டின் அரும்பதவுரையில் பாடயோஜநையினால் எழுதியுள்ளது மேற்கண்ட விபுல விவரணங்களினால் விடை பெற்றதேயாகும்" என்பன அங்கு அடியேனுடைய வாக்கியங்கள். அவைகிடக்க.

69. மரணமானால் என்கிற இந்தச் சொல் அந்திம ஸ்மரணத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாக ஆவதற்கு ப்ரஸக்தியேயில்லை யென்பதை நன்கு உபபாதிக்கிறேன். மரணமானால் என்பதற்கு ஸ்மரண ப்ரயோஜக வ்யாபார முண்டானால் என்கிற அர்த்தந்தவிர வேறு அர்த்தம் சொல்ல முடியாதென்பது நிர்விவாதம். ஸ்மரணப்ரயோஜக வ்யாபாரம் பகவந்நாமதேயாதி ஶ்லோக பக்ஷமே யல்லது அந்திம ஶ்லோக பக்ஷ மன்றே. ஆகவே பகவந்நாம ஸௌலப்யாதி—ஸாமர்த்ய ஶ்லோகவிஷயார்த்தாதியைத் திருவுள்ளம் பற்றியே மரணமானால் என்கிற ஸூக்தியைப் பிள்ளை பணித்தாரென்னுமிடம் அவிவாத ஸித்தம். மரணமானு லென்பதற்கு ஸ்மரண மென்கிற சொல் செவிப்பட்டால் என்று அர்த்தம் கொள்ளுகிறோமென்னில், அப்படியே கொண்டாலும் தோஷ மில்லையே. அந்தச் சொல் செவிப்பட்டவுடனே முகங்காட்டி யிருந்தாலன்றோ "மரணமானால் முகங்காட்டுமதிறே" என்கிற ஸ்ரீஸூக்தி பொருந்தும்.

70. இனி வாதிகள் என்ன கூறுவர்களென்றால், ஸ்மரணமானால் என்பதற்கு ஸ்மரணப்ரயோஜக பகவந்நாமாதி நிஷ்ப்ராண வ்யாபாரம் கண்டால் என்பதுதான் அர்த்தம்; ஆனாலும் அந்த வ்யாபாரம் அந்திம ஸ்மரண மென்றவிடத்திலேயே ஸங்க்ருஹீதமாகையாலே தாத்பர்ய ஸங்க்ரஹத்தையும் ப்ரத்யபிஜ்ஞாபநம் பண்ணுவதற்காகவே தத்தத்ஸ்மரணபதபதிதமாகப் பிள்ளை ப்ரயோகித்தருளினர் என்று கூறப்புகுவார்கள்.

71. இதற்கு அடியேனுடைய விடையளிப்பு விசேஷித்துக் குறிக்கொள்ளத் தக்கது. ஸ்ரீநாராயண ஶ்லோகவிஶேஷங்களுக்கு பட்டர் நம்பிள்ளை முதலானோர் அழகாக உபந்யஸித்தருளின அர்த்தவிஶேஷங்களை முதன் முதலாகப் பட்டோலை கொண்டவர் பெரியவாச்சான் பிள்ளை. ஈடுமுப்பத்தாறாயிரப்படியிலும் ஸ்ரீநாராயணஶ்லோகங்கள் பலவற்றுக்கு விஶேஷார்த்தங்கள் அருளிச் செய்யப்பட்டிருப்பினும் பெரியவாச்சான் பிள்ளை யருளிய அருளிச் செயல் வ்யாக்யாநாதிகளில் உள்ள அர்த்தவிஶேஷங்களே ஈட்டிலுமுள்ளவை என்பது நன்கு ஆராய்ந்து நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ள விஷயம். பெரியவாச்சான் பிள்ளை காலத்தில ஈட்டுக்கு ப்ரசாரம் அடியோடு இல்லை யென்பது நிர்விவாதம். அந்திமஸ்மரணாதி ப்ரக்ருத ஶ்லோகத்திற்கு விவாதாஸ்பதமாகவுள்ள

ப்ரதிபதயோஜநையை ஒரு மூலையிலாவது பெரியவாச்சான் பிள்ளை நிரூபித்தருளியிருக்கிறாரா என்று தேடிப்பாருங்கள். ஓரிடத்திலும் கிடையாதென்று அடியேன் ஶபதமிட்டுரைக்கின்றேன். ஈட்டில் ஸாதித்திருப்பது போராதோ என்பீர்கள். இதுவோ நமக்கிப்போது விவாதாஸ்பதமாகவுள்ளது. அன்றியும், ஈட்டில் இன்னவிதமாக நிர்வஹித்திருக்கிறரென்பது பெரியவாச்சான் பிள்ளைக்குத் தெரிய ப்ரஸக்தியில்லை. ஆகையாலே ஈட்டு ஸ்ரீஸூக்தியைத் தனியே ஒதுக்கிவைத்திட்டு வார்த்தை சொல்லுவோம். ஏகஶரண மென்கிற ஶ்லோகத்தில் ஶரண மென்பது ஸாதநத்தோடே அந்வயித்துப் பொருள்படுகிற தென்னும் விஷயம் ஏற்கனவே யத்ருச்சாத்ருஷ்ட நிவர்த்யமாயிருந்தாலன்றோ தத்த்வஜ்ஞாபந ஶாஸ்த்ரம் திருவிருத்த வ்யாக்யானத்தில் உதிக்க ப்ரஸக்தி யுண்டாகும். அநுவாதம் ப்ரமோவாத ஸாபேக்ஷமென்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகிற வோபாதி இங்குமுண்டிறே.

71. ஏகஶரண மென்பதில் ஸ்வாதந்த்ர்யதீதமான அந்வயத்தையும் ஸமஷ்டியையும் விட்டு வ்யஸ்த ஸமாஸத்தையும் தத்ஸாமாந்யமான ஸமஷ்டித்தையுமே கொள்ளவேணு மென்று நம் பூர்வாசார்யர்கட்குத் திருவுள்ளமிருந்தால் அதைக் காட்டவல்ல ஸ்ரீஸூக்திகள் எப்படி யிருக்குந்தெரியுமோ? வெகு உபபாதநத்தோடே கூடித் தளிரும் முறியுமாயிருக்கும்.

72. அயோத்யா காண்டத்தில் (23—28) „ராஜ்யம் ச தவ ரக்ஷேய மஹம்வேலேவ ஸாகரம் । ப்ரதிஜாநாமிதே வீர மாபூவம் வீரலோகபாக்॥” என்ற ஶ்லோகத்தில் வீரலோகபாக் மாபூவம் என்று ஏகவாக்யமாக அந்வயிப்பது ஸ்வாதந்த்ர்யதீதம்; ஸ்ரீநாராயண ப்ரபந்நர்களனைவரும் நாளைக்கும் அப்படியேதான் அந்வயித்துப் பொருள்கூறிவருகிறார்கள். அருளிச்செயல் வ்யாக்யானங்களை அடைவே அயிகரித்தருளினவர்கள் சிலரும் இப்படியேதான் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிட்டுள்ளார்கள். நம் பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்களையே பின்செல்பவரான ஸ்ரீ கோவிந்தராஜரும் இங்கு „வீரலோகபாக் மாபூவம்” என்றே யோஜநை காட்டியுள்ளார். ஆனால் நம் பூர்வர்களுக்கு இது பூர்வபக்ஷகோடியிலேயாகும். கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானத்தில் பெரியவாச்சான் பிள்ளை இந்த ஶ்லோகத்தை வியாக்கியானித்தருளியுள்ளார், காண்மின். மாபூவம் என்று தனியே ஒரு வாக்யமாக

வும் 'ஸீதயா ஸஹ' (ஸஹ வேதிஷ்ய) என்று மற்றொரு வாக்யமாகவும் ஸம்பந்த மாகக் காட்டி உரைத்தருளினர். (அதாவது)—

[ஸஹ வேதிஷ்ய] "இப்படிச் செய்திலேனாகில் உம்முடைய ஸந்நிதியில் வர்த்திக்கப் பெறு தொழிகையு மன்றிக்கே உம்முடைய ராஜ்யத்திலும் வர்த்திக்கப் பெறுதவனாகிறேன். [ஸீதயா ஸஹ] உம்மை முடிசூடி அநுபவிக்கப்பாரித்து அது பெறுதே போன சக்ரவர்த்தி புகக்கடவ லோகம் புகுகிறேன்."

என்பது அங்குற்ற பிள்ளை ஸ்ரீஸூக்தி. இங்கு அரும்பதவுரைகாரர் யதா என்று தொடங்கி "ஸீதயா ஸஹாஹம் ஸஹ வேதிஷ்ய என்று ஒரு வாக்யமாய் ப்ரதிஜ்ஞை யைப் பண்ணிச் செய்யாத தசரதன்லோகமடையக்கடவே னல்லேன் என்று பாவம்" இத்யாதியாக எழுதியிருப்பது பிள்ளை திருவுள்ளத்திற்கு ஒருபடி யாலும் பொருந்துவதன்று.

73. இவ்விஷயத்தை இங்கு நாம் எடுத்துக்காட்டுவதற்கு இரண்டு நோக்கம். ஸுவாத ப்ரதீதமான அர்த்தத்தைத் தள்ளி விசேஷித்து அவ யாநிக்க வேண்டிய அரிய பெரிய அர்த்தத்தை நம் முதலிகள் அருளிச் செய்யக் கோலினல் இங்ஙனே விளக்கமாக அருளிச் செய்வர்களேயன்றி நாம் போராட வேண்டும்படியான நிலைமையிலே மயங்கவைத்து அருளிச் செய்யார்கள் என்று காட்டுவது ஒரு நோக்கம். இப்படி அழகாக ஆசார்யர்கள் காட்டியுள்ள விடத்தி லும் அவயாந மின்றியே தங்கள் நெஞ்சில் தோற்றினபடியே எழுதிவைத்திருக் கின்ற அரும்பதவுரைகாரரும் ஸ்ரீகோவிந்தராஜரும் நம் வாதிகள் போல்வார்க்கு உபஜீவ்யராகார்கள் என்று காட்டுவது மற்றொரு நோக்கம்.

74. அய ப்ரக்ருத உதாஹரணம்—அஷ்டமே ஸ்லோகத்தில் வ்யாக்ர க்ரமாந்வயமுள்ளதாகப் பிள்ளைக்குத்திருவுள்ளமென்று திருவிருத்த வ்யாக்யானத் தைக்கொண்டு நிரூபிக்கப் புகுமவர்கள் அப்படிப்பட்ட வ்யாக்ரக்ரமவ்யாக்யானத் தைப் பிள்ளை ஏதேனுமோரிடத்திலாவது நிரூபித்திருக்கிறுரென்று காட்டியே தீரவேணும். அல்லாதபோது, தத்ப்ரதிஜ்ஞாவசநாய மரணமானலித்யாதி ஸூக்தியை ஸாதித்தாரென்கிற வாதம் ஜீவிக்கமாட்டாது. ப்ரதிஜ்ஞாவ்ய வஸ்தையே அஸித்தமிறே. ஸித்தமென்னில், எங்கே எவ்விதமாக ஸித்தமென்று நிரூபிக்கவேணும். இவ்விடத்து ஸ்ரீஸூக்தியினலேயே (அதாவது மரணமான லித்யாதி திருவிருத்த வ்யாக்யான ஸ்ரீஸூக்தியினலேயே) அது ஸித்தமென்கிறு மென்னில், இது அந்யோந்யாஸ்ரயதோஷமென்று விடுக்க.

75. நநு, திருவிருத்தத்தின் அரும்பதவுரைகாரரும் பிறரும் திருவுள்ளம்பற்றுகிறபடி எங்ஙனேயாயினுமாகுக; அங்குப் பெரியவாச்சான்பிள்ளை மரணஶப்தகடிதமான ஸ்ரீஸூக்தியை அருளிச்செய்ததேன்? [illegible] ஶரணாகதி கத்யத்தில் வேறொரு ஶ்லோகத்திலும் மரணஶப்தஶ்ரவணமில்லையே. இதற்கு நீதான் ஒரு கதி சொல்லித்தீரவேணுமேயென்னில்; முன்னமே சொல்லியிருக்கிறேன்; இன்னமும் சொல்லுகிறேன்; "சரணமறைபயந்த தாமரையானோடு, மரணயமன்னுயிர்கட்கெல்லாம்" என்று பொய்கையாழ்வாரும் "சரணமாகும் தன தாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" என்று நம்மாழ்வாரும் ஶரணஶப்தத்தையும் மரணஶப்தத்தையும் ஒரு ப்ராஸத்திலே அமைத்தருளியதுபோலவே பிள்ளையும் அமைத்து ஸாதுவாகப் [?] பேசியருளினர். வால்மீகி தரணமரணங்களுக்கு ப்ராஸமிட்டார். பிள்ளை ஶரணமரணங்களுக்கு ப்ராஸமிட்டார். அஹம்வேத்மி மஹாத்மாநமித்யாதி பலவிடங்களிலே தனிச்லோகியில் இங்ஙனே ப்ராஸாநுப்ராணிதமாக அருளிச்செய்யுமியல்பு பிள்ளைக்கு உண்டென்பது ஸஸாக்ஷிகம். [புல்லுங்கையுமான — வில்லுங்கையுமான;] [சடையுந்தலையுமான — குடையும்முடியுமான;] இத்யாதி.

76. இங்கு மற்றொன்றும் அவஶ்ய விவக்ஷிதம்: ஸாவதாநயேத்யாதி [?] ஶ்லோகார்த்தாவதரண [?] ப்ரகரணங்களிலே —

> "ஆத்யே [?] ஶரணம்வ்ரஜ வென்று பெருமாள் தமக்குக் கோ
> லினமரணம் எதிர்த்தலைக்கே நிகழ ப்ராப்தமாயிற்றுக்காணும்."

என்று நம் முதலிகள் ரஸோக்தியாக [?] உபந்யஸித்துக்கொண்டிருந்தார்கள் போலும். அந்த ஸ்ரீஸூக்தியின் வாஸனை பின்னாட்டியும் மரணமானலித்யாதி ஸ்ரீஸூக்தி திருவவதரித்தது என்று தெளியலாம்.

77. திருவிருத்தவ்யாக்யாநத: உதாஹ்ருதங்களான மூன்று வாக்யங்களில் த்விதீயவாக்யத்தாலே த்ருதீயவாக்யத்திற்கு வ்யர்த்ததாகாரகம் [?] ப்ரஸம்ஜிக்குமென்று வாதிகள் காட்டுகிற ஆபத்தியானது தத்ர ப்ரதமவாக்யத்தாலே த்விதீயவாக்யத்திற்கும் வ்யர்த்ததாகாரகம் [?] ப்ரஸம்ஜிக்குமென்ற ஆபாதநம் பண்ணுவதற்கே உறுப்பாகும். எங்ஙனேயென்னில்; "ஶரணமென்றால் இரங்குமதன்றிக்கே அம்புக்கு முகங்காட்டுமதிறே" என்கிற ப்ரதமவாக்யத்தில் கிடைக்காதபொருள் "ஆர்த்திக்கிரங்குமதல்லவே, அம்புக்கிரங்குமதிறே" என்கிற த்விதீயவாக்யத்தில் என்னகிடைக்கிறது. த்ருதீயவாக்யம் வ்யர்த்தமாகு மென்பவர்க்கு த்விதீயவாக்யமும் வ்யர்த்தமாகவேண்டியதாகும். முதல் வாக்யத்தில் ஶரணாகதத்வத்திலே [?] நோக்கு என்றும் த்விதீயவாக்யத்தில் பூர்வவாக்ய ப்ரதிபாதித ஸஹாய விஶிஷ்டவேஷத்திலே [?] நோக்கு என்றும் வாசி காட்டுவது அபிப்ராயமே. இது அது என்ற [illegible] இது உபபத்தி காட்டினபடி.

யாருமத்தனை போக்கி ப்ரயோகாந்தரமத தாத்பர்யாபேக்ஷையா த்விதீயவாக்யாந்தர தாத்பர்யத்திற்கு இன்னது வேண்டுமென்று காட்டிற்றாகா தென்னுமிடம் நிர்வாஹ நிரூபக நியாமநாதிகளும்.

78. கேவிதார்; "ப்ரபந்த வ்யதீதத்திலே நோக்கான போதிலும் 'ஸாமாந்யதரணம்வா ஸரணம்வா' என்றுவது யோஜித்துக் காட்டவேணுமே; முதலடியிலேயே மரணத்திற்கு ப்ரஸக்தியில்லையே. ஸமுத்ரராஜனும் பண்ணுதவன்றிறே தாம் மரணத்தை ப்ராவிக்கவேணும். இப்பொழுது வாநரவீரர்களைத் திரட்டிக்கொண்டு பெருமாள் எழுந்தருளினது கடற்கரையிலே தீர்த்தமும் ப்ரஸாதிக்கவன்றிறே."

என்கிறார்கள். இதுவும் ஸம்ப்ரதாயமான ஈட்டுப் பங்க்தியை மறுத்து ஸ்வஸித்த காஸிதமான தாத்விக வாக்யத்தை ஸிரஸாவஹிப்பதிலேயே வ்யவஸித்து நிற்கிறது. எங்ஙனேயென்னில்; கடலரசன் ஸமுத்ரராஜனும் பண்ணுதவன்று ப்ராப்யமாகக்கூடிய ஸ்வரணத்தை முந்துற ப்ரஸாவித்தல் பிசகு' என்று இவர்கள் கருதுகிற கணக்கிலே அக் 'கடலரசன் ஸமுத்ரராஜனும் பண்ணுமைக்கு முன்னே தத்தாரணமும் ஸ்வப்ரஸக்தமாகையாலே "இத்தை முடித்தல்" என்று ஸாரணத்தை முன்னேயிட்டு ஈட்டில் காட்டினதாக இவர்கள் நினைக்கிற யோஜனையும் இவர்களுக்கு உபேக்ஷணீயமே யென்னத் தட்டுண்டோ? "வாநர வீரர்களைத் திரட்டிக்கொண்டு பெருமாள் எழுந்தருளினது கடற்கரையிலே தீர்த்தமும் ப்ரஸாதிக்கவன்றிறே" என்கிற விவர்கள் விபீஷணாழ்வான் பக்கலிலே ஸமுத்ர நிஸ்தாரணோபாயோபதேசம் பெற்ற பெருமாள் ஸமுத்ரதாரணத்தைத் தான் ப்ராப்யோபாயமாக நிலையிட்டருளினர் என்று ஸித்தாந்திக்கிறார்கள் போலும். "ஸமுத்ரம் ராகவோ ராஜா ஸரணம் கந்துமர்ஹதி" என்று விபீஷணாழ்வான் உபதேசித்ததன் அர்த்தத்தை ஸமுத்ரதாரணரூபமாகவே பெருமாள் க்ரஹித்தாரென்று இவர்களுடையநினைவுபோலும். இதனில் மிக்கோரயர்வுண்டே?

79. அத்ரேதமவதேயம்||கடற்கரையிலேபெருமாளெழுந்தருளினது தீர்த்தமும் ப்ரஸாதிக்கவுமன்று, கடலரசனைத் தலை துணிக்கவு மன்று. ஹந்த விபீஷண ஸாக்ஷிகத்தில் கௌரவத்தாலும் தம்முடைய நீர்மையினாலும் ப்ராயோபவேசநத்தில் (அல்லது ஸரணாகதியில்) ஒருப்படுவதற்காகவே யெழுந்தருளினர். அதற்கு அநந்தரமான ஸங்கல்பம் 'ஸரணம்வா தரணம்வா' என்பதேயாம். ஸரணம் ப்ரயோஜநாவிஷ்டமன்றியே யிருந்தாலும் அதை முந்துறப் பேசினதற்கு நிதானம் முன்னமே சொன்னோம். விந்யாஸம் முற்பட்டிருந்தாலும் தாத்பர்யம் அடைவுபெற்றதேயாகும். "அப்பா! உனக்கு ஒரு ரூபாய் தரு

கிறேன், என்னை அக்கரை சேர்க்கவில்லையோ'' என்றாற்போன்ற வசநவ்யக்திகள் ஜகத்ப்ரஸித்தம். இங்கு த்ருஷ்டாந்தம் ப்ரயோகநிர்திஷ்டமாயிருந்தாலும் அது ஸஹிதகாய நிஷ்பத்திநஹாராவியே யென்பது நிர்விவாதம். ப்ரோஷ நாயஷ்யா ப்ரயோகநிதேஶ:. அதுபோலவே இங்கும் ஸவ்யாவி தாரணா ஹாவத்தில் உத்திஷ்டமான ஶரணத்தை முந்துற நிதேஶித்தது ஸாமரஹ்ருதய ஸாரஜ்ய ஸம்வாதநைகஸ்வகமென்றுணர்க.

80. இவ்விடத்தில் * ஊதிராஶோதிம்க்ருக்வா * என்றுள்ளதேயன்றி * ஊதேத்வ ஶோஷ்யாமி ஷ்யூஷ்ய * என்றில்லாமையாலே பெருமாள் தமது திருவுள்ளத்திற் குள்ளேயே ரஹஸ்யமாகக் கருதின விஷயந்தானே இது. இது கடலரசனுக் குத் தெரிய ப்ரஸக்தியில்லையே — இத்யாதிகளையிட்டுச் சில ஶங்கைகள் காட்டு வர் சிலர். ''ஶ்நஸ்யந்யஉவஸ்யந்யஃ சகுண்யந்யஃ'' என்றிருக்கும் நம்போல் வார் திறத்திற்போலே பெருமாள் திறத்திலும் ஶங்கிக்கலாகாது. ஊதிஸம் க்ஷேவ:.

81. "இத்தை முடித்தல் கடத்தல்'' என்பதாகவே ஈட்டுப்பங்க்தி இருக்குமாகில் இது ஈட்டுவ்யாகாரணத்திற்குச் சிறிதும் பொருந்தாததோடு விபரீத ஸ்வகமுமாகும் என்று அடியேன் எழுதியிருந்தேன். (அதாவது)

"யானொட்டியென்னுள்—என்கிற இந்தப் பாசுரத்தின் வியாக்கியா னத்தில் இந்த ஶ்லோகத்தையெடுத்து விவரிக்கவேண்டிய காரண மென்ன? என்று ஆராய்வோம். மூலத்தில் 'எம்பெருமானை நான் விட்டாலும் அவன் என்னை விடான்' என்றருளிச்செய்யப் புகுந்த ஆழ்வார் நான் இசைந்து என்னுடைய ஹ்ருதயத்திலே இருக்கவேணு மென்றிலேன்; அவ்வெம்பெருமான் தானாகவே ப்ரதிஜ்ஞபண்ணிக் கொண்டு என்னுள்ளேபுகுந்தருளினதாலால் இப்படி நிர்ஹேதுக மாக அடியேனை விஷயீகரித்த அவன் நான் அகன்றுபோவதை இசைந்திடுவனோ? என்றருளிச்செய்திருக்கிறார். ஆழ்வார் விஷ யத்திலே எம்பெருமான் ப்ரதிஜ்ஞை பண்ணினதாகச் சொல்லப்பட் டிருக்கிறதே, இது எப்படிப்பட்ட ப்ரதிஜ்ஞை என்று கேள்வியாக, இதற்கு இராமபிரானுடைய ஓர் ப்ரதிஜ்ஞையை எடுத்துக்காட்டினார் நம்பிள்ளை: கடலரசனுடைய ஸ்தானத்தில் ஆழ்வாரும் இராமபிரா னுடைய ஸ்தானத்தில் எம்பெருமானுமாகக் கொள்ளவேணும். கொண்டு ஸமுத்ரம் ஶோஷணம்வா என்கிற ஶ்லோகத்திற்கு 'ஸமுத்ரத்தை முடிக்கவாவது அதை நான் கடக்கவாவது வேணும்' என்பதாகப் பொருளுரைத்தால் தார்ஷ்டாந்திகத்தில் 'ஆழ்வாரைக் கொல்லவா வது....' என்பதாக ப்ரதிஜ்ஞையின் ஆகாரம் கூறவேண்டும். இஃது எங்ஙனே பொருந்தும்!

என்பன அடியேன் முன்பெழுதியுள்ள வாக்கியங்கள்.

82. இவற்றின்மீது வாதிகள் பணிப்பதென்ன வென்றால்;—'இத்தை முடித்தல்' என்று பாடங்கொண்டாலும் இற்றை முடிதல் என்று பாடங்கொண்டாலும் எந்த வாக்யத்திலும் ப்ரதிஜ்ஞா விஷயஸாரஸ்யமும் ஸூசகமும் நிரூபிக்கப்போகாது, ஆகவே 'ஸத்யம் ஶபாமி தாரணம் ஸாகரஸ்யேவ' என்பதனால் தெரிவிக்கப்படுகிற ப்ரதிஜ்ஞாஶரீரம் ஸர்வதா இங்கு ஸ்விவக்ஷிதம். மேலே "இதி ராமோ ப்ரதிஜ்ஞாய ஸ்வயம்ஸி" என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அந்த ஶ்லோகத்தின் ஸாரஸ்யாதிஶயத்தையே கொண்டு தத்ஸ்வரூபவதியான ஸத்யஶபதஶ்லோகத்தைச் சுருக்கி விவரித்தாரென்று கொள்ளவேணும் என்கிறார்கள்.

83. இவர்கள் இங்ஙனம் கூறுவது எங்ஙனேயிருக்கின்றதென்றால், விவாஹத்தில் ஸம்ப்ரதாயாரண ஸமயத்தில் "ஸம்ப்ரதாநாநேந ஸஜீவநஹேதுநா | ஸுபௌ ஏதேந விஜ்ஞேந த்ரஷ்டா யாநு வரம் வதிம் ||" என்று புரோஹிதர் உரக்க வோஷிக்க, அதுகேட்டவர்கள் ஏதுக்கு இப்படிச்சொல்லுகிறீர்? என்று வெகுண்டுகேட்க, புரோஹிதர் விழித்துக்கொண்டு 'உத்தரார்த்தில் நோக்காக நான் சொல்லவில்லை, இரண்டு ஶ்லோகங்களினுடையவும் வ்ருத்தமும் ஸாரமும் ஸமரூபமாக இருக்கிறது என்று காட்டுவதற்காகச் சொன்னேனத்தனை' என்று விடையளித்தாராமென்கிறகதைக்கு ஸாரகமாயிருக்கின்றது. ப்ரகரணத்திற்கு ஸர்வாத்மநா அநந்வயார்த்தமானதொரு ஶ்லோகத்தையெடுத்து நம்பிள்ளை விவரித்தாரென்று சொல்லுவது சாலுமோ? நம்பிள்ளை ஸ்ரீஸூக்தியை * ஏகோயணவி வாக்யார்த்தமாக முடித்துவிடுவது மஹான்களுக்குத் தகுதியோ? பொருள்பணிக்காதே வ்ருத்தத்தை மாத்திரம் யக்ஞிஶிக்ஷம் குறிப்பிட்டு விடுவதாயிருந்தால் 'இந்த வ்ருத்தஸாதருஶ்யத்திற்கு உத்தரார்த்த நோக்கு' என்று கூறலாம். அங்ஙனேயும் சிலவிடங்களுண்டென்பதை அடியேன் குறிக்கொண்டிருக்கிறேன். வ்ருத்தஸாதருஶ்யத்தளவிலே நில்லாமல் நமக்கு இத்தனை விவாதங்கள் வளரும்படியாக ஸ்வார்த்தத்தையும் அருளிச்செய்து வைத்திருக்க, அது அநாவஶ்யகமாகவே எழுதிவைத்தது என்று ஸுஜ்ஞர்களும் பேசுவது * ஸஹாவய திஷ்டம் தேஹமோவாதத்யஶோக ॥ ஸாதருஶ்யஸாரஸ்யமும் பொருந்த எந்த ஶ்லோகத்திலே நோக்கு என்று இவர்கள் கருதுகிறார்களோ அந்த ஶ்லோகத்தை அடியோடு உபாதானம்பண்ணாததும் அநபேக்ஷிதமான ஶ்லோகத்தை உபாதானம்பண்ணி விவரணமும் செய்ததும் இவர்களது உள்ளத்திலே நம்பிள்ளையின் விலக்ஷண வாதுர்யமாகப் புலப்பட்டதுபோலும். இப்படிப்பட்ட வ்யாவ்யாநஶைலி மற்று எங்கேனும் கண்டதுண்டோ என்று கேட்டுணர அடியேனுக்கு மிக்க விருப்பமுண்டு.

84. 'இங்குப் பிறர் சொல்லுகிறவிது இருக்கட்டும்; நீ எப்படிக் கிருதுகிறாய்? ப்ரதிஜ்ஞாவிஷயஸாரஸ்யத்தை நீ எங்ஙனே உபபாதிக்கிறாய்? சொல்லிக்காண்' என்று அடியேனைக் கேட்குமளவில், கைகூப்பி விண்ணப்பிக்கிறேன்;— இன்று எனக்கு ஸந்நிஹிதஸித்தி நேரவேணுமென்று படுகாடுகிடக்கிறேன்; அது நேர்ந்தால் வாழ்கிறேன்; இல்லையேல் மாள்கிறேன் — என்பதாக ப்ரதிஜ்ஞாஸாரஸ்ய நிஷ்கர்ஷம். கடற்கரையிலே பெருமாள்கொண்ட திருவுள்ளமும் ஆழ்வார் திறத்திலே எம்பெருமான்கொண்ட திருவுள்ளமும் இவ்வகையாலே ஸாரஸ்யமாவதற்கு என்னகுறை? 'அங்கே தரணமென்றதுபோலே இங்கே தரணப்ரஸக்தியில்லையே, என்னவேண்டா. தரணசப்தவிவக்ஷிதம் ஸந்நிஹிதஸித்தி = என்று இவ்வளவு கொள்ளவே ப்ராப்தம். 'ஸாகரஸ்யாரணம்வா' என்று யோஜிப்பார்க்கு கிணாறு சரணமென்று கேட்டால் விடையளிப்புயாதோ? வேதவிசேஷ ஸம்வாதநத்தை சரணமாக உபபாதித்தவத்தனை என்றல்லது வேறு யாதும் சொல்லவொண்ணாதே. சரணமென்பது அதுவானால் தரணமென்பது இதுவாகத் தட்டுண்டோ? த்ருஷ்டாந்த ப்ரதர்சநம் பண்ணுகிறவிடங்களிலெல்லாம் யாவதம்ச ஸாரஸ்யாபேக்ஷை யார்க்குமில்லையே.

85. கதாநு கிலாந்தம் பவதி? க்ருஷ்ண சரணாகத்யாதியில் ப்ரதிஜ்ஞாதமான சம்சம் யாறெட்டி யென்னுள் பாசுரத்தினீட்டில் விஷய ஸாரஸ்யநிபந்தநமாகவே உதாஹரிக்கப்பட்டது; இற்றை முடிதல் என்று திருத்தமான பாடத்திற்குத் தான் இங்கு ஔசித்யமும் உபபத்தியுமுண்டு; 'இத்தை முடித்தல்' என்கிற பாடம் ஒருபடியாலும் பொருந்தாது; முன்பு நாம் நிரூபித்திருக்கிறபடி தேவகப்ரமாதத்தாலே ஸம்பவிதமானதே அது; வ்யாஹிதாநத்தாலே அதனையே ஸமர்த்திக்கப்படும் பாடுகள் ஊமனார்கண்ட கனவிலும் பழுதாயொழிந்தனவேயாம் என்று ஸாத்யஸாதகவாதிதம் பவதி ||

86. ஸ்ரீராமாயணஆரண்ய காண்டத்தில்முப்பத்தொன்காவதுஸர்க்கத்தில் சூர்ப்பணகை இராவணனிடம் ஸ்ரீராம குணங்களைப் புகழ்ந்து பேசும் பிரகரணத்தில் "தீர்க்கபாஹுர்விசாலாக்ஷ: சீரக்ருஷ்ணாஜிநாம்பர: | கந்தர்ப்பஸம ரூபஸ்ச ராமோ தசரதாத்மஜ:||" என்றுள்ள ச்லோகத்திற்கு கோவிந்தராஜீய வ்யாக்யாநவதாரிகை. —

"ராமாநுஜவர்ணநஸஹ்ருதயாபி தத்ப்ரஜ்ஞத ஸ்மோந்மாத
ஹேதுஸ்வரூபதம் ராமஸ்யாவண்யம் ஸம்ப்ரணோதியத்தே
தீர்க்கபாஹுரிதி த்ரிஜிநா |"

என்று பல பிரதிகளிலும் அச்சிடப்பட்டுக் காண்கிறது. பல ஓலை ஸ்ரீகோசங்களிற் பாடமும் இப்படியேதான். ஆனால் இவ்வாக்கியம் அந்வயிக்கிறதா என்று விமர்சியாமலே பலரும் மேலெழச் செல்லுகின்றனர். சூர்ப்பணகையின் முகம்

விகாரப்பட்டது போலவே இங்கும் ஓரெழுத்து விகாரப்பட்டதனால் ஸாஹஸமாய்விட்டது. "ராமாநுஜவசஸஹ்யயாவி" என்பதற்கு அர்த்தமே கிடையாது. காமாநுஜ என்றிருக்கவேணும். காமத்திற்கு அடுத்தபடியாய் க்ரோதம் உண்டாவதாக யோகஶாஸ்த்ரஸித்தமாகையாலே க்ரோதத்தையே இங்கு காமாநுஜஶப்தத்தினால் விநோதமாகக் கூறுகின்றார். மேலே தத்ர ஹ்ருஜ ஶப்தவிவக்ஷிதம் காமமென்றுணர்க. இப்போது சூர்ப்பணகை இராமபிரான்மீது மிகவும் க்ரோதவசம்வதையாகையாலே அவனை வாய்வந்தபடி நிந்திக்கவேண்டியிருந்தும் அது செய்யாதே இங்கு ராமலாவண்யத்தை ஏதுக்குப் பாராட்டிக் கூறுகின்றாளென்கிற ஶங்கைக்குப் பரிஹாரமாகவுள்ளது இந்த அவதாரிகாவாக்கியம். அவளுடைய காமக்ரோத மோஹாந்தத்திற்கு ராமலாவண்யமே ஹேதுவாதலால் நெஞ்சில் ஊறியிருக்கின்றவதுவே அவசமாக வாயில் வந்து விடுகிறதென்று இங்கு விவக்ஷிதம். இவ்வழகிய கருத்தை ஒரு அக்ஷர விபர்யயம் அஸத்கல்பமாக்கிவிட்டது. இதனைத் திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியின் பிதாமஹர் ஆராய்ந்து ஸாதித்ததாக அஸ்மதாசார்யரான அழகியமணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி யருளிச்செய்யக் கேட்டிருக்கை. இப்படிப்பட்ட அவத்யங்கள் ஓலை ஸ்ரீகோசமே பிடித்து ஏறி ஸர்வதேஶ ஸர்வகாலேஷ்வவ்யாஹத பராக்ரமங்களாய் விடுகின்றன. கஷ்டம் ப்ராக்ருதம் ப்ராஸ்துத:.

87. 'இற்றை' என்கிற பதம் இத்தை என்று மாறுபட்டதற்குக் காரணம் விவரித்ததுபோலே முடிதல் என்கிறபதம் முடித்தல்என்று மாறினதற்குநிமித்தம் நன்கு விளக்கப்படவில்லை என்று அடியேன்மீது சிலர் குறைகூறுவதும் பொருந்தாது. திருவாய்மொழி திவ்யார்த்ததீபிகையில் (பக்கம் 244-ல்)

> "இத்தை முடிதல் என்றால் அந்வயிக்கவில்லையேயென்று
> இத்தைமுடித்தல் என்று எழுதிவிட்டார்கள்."

என்று விளக்கியேயிருக்கிறேன்.

88. நெடுநாளைக்குமுன்னமே ஓலை ஸ்ரீகோஶங்களிலேயே இத்தை முடித்தலென்கிற பாடம் ப்ரசாரப்ரசாரமாயிற்றென்று அடியேன் எழுதியிருந்தேன். இதன்மேல் — முற்காலத்து மஹான்கள் கேவலம் ஏடுபார்த்தேயா க்ரஹித்துவந்தார்கள்? ஸதாசார்யஸந்நிதியிலே குனிந்து கேட்டவர்களல்லவா? ஸம்ப்ரதாயமாக யதாவஸ்திதபங்க்திகளையும் ததர்த்தங்களையும் கேட்டிருந்த மஹான்களிடத்தில் அரும்பதவுரைகாரர்கள் ஶிக்ஷிக்கப்பெறாமலிருந்திருப்பார்களா? இத்யாதி ஆக்ஷேபங்கள் கூறுகின்றார்கள்.

89. அரும்பதவுரைகாரர்கள் ஸதாசார்யஸந்நிதியிலே குனிந்து கேளாதவர்களென்றுசொல்லவும்கருதவுமில்லையடியேன். அவர்கள்எழுதியுள்ள அரும்பதவுரைகளில் ப்ராமாணிகர்கள் நிர்விவாதமாக இசையக்கூடிய அவத்யங்கள் பல

வற்றை அடியேன் குறிக்கொண்டிருக்கிறேன். இங்குச் சிலவற்றைமாத்திரம் இப்போது காட்டுகிறேன். தத உபரி ஸஹ்ருதய ஹ்ருதயம் ப்ரீணாது |

90. திருவாய்மொழியில் "என்னீர்மை கண்டிரங்கி" என்ற பாசுரத்தின் ஈட்டையும் அரும்பதவுரையையும் கையிற்கொள்ளுங்கள்.

> "ஹட்டரை ஒரு தமிழன் கேட்டிரங்கியென்னுதே கண்டிரங்கி யென்னப்பெறுமோ என்ன,..........காதலர் தோடுவழி யிதுராஜி, உனக்கு இத்தமிழ் போகாதோ? என்றார்."

என்பது ஈட்டுப்பங்க்தி. இதில் காதலர் தோடுவழி என்றது குறுந்தொகையி லுள்ள ஒரு செய்யுள். இதன் ஆநுபூர்வி உள்ளவாற்றையும் அதன் ஸ்வாரஸ்யத் தையும் அடியேன் திவ்யார்த்த தீபிகையில் விவரித்திருக்கிறேன்; அதாவது—

முற்காலத்தில் ஒரு தமிழன் பட்டரிடத்தில் வந்து இப்பாட்டின் முதலடியில் ஒரு ஆக்ஷேபம் செய்தானும்; அதாவது—இது பிரிந்திருக்கும் நிலைமையில் சொல்லுகிற பாசுரமேயன்றிக் கூடியிருக்கும் நிலைமையிற் சொல்லுகிற பாசுரமன்றே; பிரிந்திருக் குங்காலத்தில் தலைவியின் தன்மைகளைத் தலைமகன் பிறர்சொல்லக் காதால் கேட் கலாகுமே தவிரக் கண்ணால் நேரில் காணமுடியாதன்றே; ஆகவே, "என்னீர்மை **கேட்டி**ரங்கி யிது தகாதென்னாத" என்று பாசுரமிருக்கவேண்டியது உசிதமாயிருக்க, "என்னீர்மை **கண்டிரங்கி**" என்று எப்படிச் சொல்லலாம்? என்று பூர்வபக்ஷம் செய் தானும். பட்டர் அதைக்கேட்டு, 'பண்டிதரே! நன்கு கேட்டீர்; * புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேனவ்வளவில், அள்ளிக்கொள்வற்றே பசப்பு. * என்ற திருக்குறளும், * ஊருண்கேணியுண்டுறைத் தொக்க பாசியற்றே பசலை, காதலர் தொடுவுழித் தொடு வுழி நீங்கி விடுவுழி விடுவுழிப் பரத்தலானே * என்ற குறுந்தொகைச் செய்யுளும் உமக் குத் தெரியாதுபோலும்' என்று சொல்லி அவற்றைப் பரக்க உபந்யஸித்து ஸமாதா னப்படுத்தியருளினராம். (ஸமாதான விவரணம் வருமாறு:—)

* **புல்லிக்கிடந்தேன்** * என்ற குறள் திருக்குறளில் பசப்புறு பருவரல் என்னுமதி காரத்தில் ஏழாவதாகும். இது நாயகியின் பேச்சு; முன்பொரு நாள் நான் காதலரை அழுந்தத் தழுவிக்கிடந்தேன்; கை மாறுவதற்காகச் சிறிது புடைபெயர்ந்தேன்; ஒரு நொடிப்பொழுது விலகினமாத்திரத்திலும் பசலைநிறம் வந்து உடம்பெல்லாம் மூடிக் கொண்டது என்பது இதன் கருத்து. * **ஊருண்கேணி** * என்ற செய்யுள் குறுந் தொகையில் முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பதாவது. இதன் கருத்தாவது—ஊரி லுள்ள ஜனங்களாலே நீருண்ணப்பெறுகிற கேணியினுள்ளே படர்ந்துகிடக்கும் பாசி போன்றது பசலை நிறம்; தண்ணீரில் நாம் கைவைத்தோமாகில் கைபட்டவிடங்களில் பாசி நீங்கும்; கையை எடுத்துவிட்டோமாகில் அவ்விடமெல்லாம் பாசி மூடிக்கொள் ளும்; அதுபோல, கணவனுடைய கைபடுமிடங்களில் பசலைநிறம் நீங்கும்; அணைத்தகை நெகிழ்த்தவாறே அப்பசலை நிறம் படரும்; ஆதலால் பாசிபோன்றது பசலைநிறம் என்ற படி. (**தோடுவுழித் தோடுவுழி**—தொட்டவிடங்கள்தோறும். **விடுவுழி விடுவுழி**— விட்ட விடங்கள்தோறும். **பரத்தலான்**—வியாபிக்கிறபடியினாலே.) பிரிவாற்றாமையி னால் ஸ்திரீகளின் மேனியில் தோன்றும் நிறவேறுபாடு பசலைநிறமெனப்படும். நாயகனை விட்டுப் பிரிந்தகாலத்திலே நாயகியினுடலில் இந்த நிறவேறுபாடு தோன்றுவது ஆச் சரியமல்ல; ஒரு படுக்கையிலேயே படுத்துக் கூடியிருக்கும்போதே க்ஷணகாலம் கைநெ

கிழ்ந்தவளவில் இந்தப் பசலைநிறம் படர்கின்ற தென்றல் பிரிந்த நிலைமையிற் கேட்க வேண்டியதில்லையன்றே.

பட்டரிடத்தில் ஆக்ஷேபம் செய்த தமிழனுக்கு இப்போது என்ன ஸமாதானமாயிற்றென்னில், இப்பாட்டு பிரிவுகாலத்திற் சொல்லுவதானாலும் கூடியிருந்த காலத்தில் நிகழ்ந்த ஸம்பவத்தையே நினைப்பூட்டுவதாதலால் கேட்டிரங்கி என்னவேண்டியதில்லை; **கண்டிரங்கி** என்றே சொல்லத்தகும் என்றதாயிற்று.

(இவ்வளவும் அடியேனுடைய திவ்யார்த்ததீபிகையில் விவரணம்.)

91. அரும்பதவுரைகாரர்எழுதியுள்ள ஆநுபூர்வியும்அர்த்தமும்ஸம்ப்ரதாயஸரணியில் க்ருஹீதந்தானா அல்லது வேறாக இருக்குமா என்பதை ப்ராஜ்ஞர்கள் பரிசீலிக்கலாம். குறுந்தொகை உரையுடன் அச்சிடப்பட்டேயிருக்கிறது. அந்தச்செய்யுளை அரும்பதவுரைகாரர் "சங்கத்தார் குறள்" என்றும் எழுதியுள்ளார். குறளின் இலக்கணம் என்ன என்பதையறிந்திருந்தால் அங்ஙனே யெழுதியிருக்கமாட்டார். அந்தப்பாட்டின் முதற்பகுதியை இருபத்தினாலாயிரப்படியில் பெரியவாச்சான்பிள்ளை உதாஹரித்தருளியுள்ளார். பிற்பகுதியை ஈட்டில் உதாஹரித்தருளினார். இதைத் திருவள்ளுவர் குறள்என்று ப்ராசீந ஸம்ஸ்க்ருதவிஷய ஸ்ரீகோஶ ஸம்பாதகர்களான ஆதீயர்களும் ஸூசநிர்தேசம் பண்ணிவிட்டார்கள். இந்த அரும்பதவுரையில் ப்ராமாண்யப்ரதிபத்தியுள்ள காலக்ஷேபவர்களான ஸகல தேஶீய ஸகல ஸ்வாமிகளும் அப்படியே உபதேசித்துக்கொண்டு வருகிறார்கள். ஆராய்ச்சிபண்ணி உள்ளபடியே உணர்ந்தவர்கள் உண்மை யுரைக்கப் புகுந்தால் * யஶஸ்வீஜநேஷு ப்ராதேஶ ஹாஸ்ய: கஸ்வீந வாந்தர: * என்ற மதியேயன்றோ. இப்படி ஒன்றா இரண்டா?

92. "எனதாவியாவியும் நீ" என்றவிடத்து அரும்பதவுரையில்—"இவ்விடத்தில் ஆழ்வார் ப்ரக்ருதிவிகாரத்திலுண்டான தடுமாற்றத்தாலே ப்ரமிக்கவும் ஸந்தேஹிக்கவுங்கூடும்; அங்ஙன் ஸம்ஸாரவாயுருக்கு ப்ரஸக்திஸ்தாநமில்லாமையால் ப்ரமிக்கவும் ஸந்தேஹிக்கவுங் கூடாதிறே" என்றுள்ள பங்க்திகளை ஸ்ரீஸூக்தியவெ. சிறுபுலியூர் ஸ்வாமி கடாக்ஷித்தருளி "ப்ரமஸந்தேஹங்கள் நம்மாழ்வார்க்கு மாத்திரமே கூடும், ஆளவந்தாருக்குக் கூடாது என்று ஶாஸ்த்ரநிஷ்கர்ஷம் பண்ணி யிருக்குமிது என்னே!" என்று போர விஸ்மயித்தருளினார் என்பது ஸுப்ரஸித்தம்.

93. முதல் திருவந்தாதியின் வ்யாக்யாநாவதாரிகையில் — "இவர்கள் (முதலாழ்வார்கள்) அவதரித்தது ஒரோதேசங்களிலேயாகிலும் காலப்பழமையாலே இன்னவிடமென்று நிச்சயிக்கப்போகாது" என்பதாகப் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தியுள்ளது. அங்கு அரும்பதவுரைகாரர்—

"[இவர்களித்யாதி.] இவையிரண்டு ஸங்கதியும் ஸ்வரஸமன்று. பிழையும் தெரியாது. வந்தவிடங்களிலே கண்டுகொள்வது."

என்று எழுதியுள்ளார். ஸம்ப்ரதாயப்ரவ்ருத்தியிலே குனிந்து பதினைந்து வரையாக ஸாஸனங்களும் ஸாஸ்த்ரங்களும் கேட்கப்பெற்ற அரும்பத வுரைகாரர்கள் இப்படி கூழாக்கிவைத்துப் போகலாமாவென்று கேட்டால் யாது விடை கிடைக்குமோ தெரியவேணும். இப்படிகளிலே நாம் எடுத்துக்காட்ட ஸஜ்ஜமாகவுள்ள விஷயங்கள் பலபல. அரும்பதவுரைகாரர்களால் நமக்கு உப காரமில்லையென்று அடியேன் சொல்லுகின்றிலேன். மஹோபகாரங்கள் பெரும் பாலுமுண்டு. அதிலும் ஈட்டுக்கான அடையவளைந்தானரும்பதவிளக்கம் அதிமாத்ரோபகாரகம். அஃது இல்லையாயின் அஸாரஸ்யம் ஸம்ஸாரஸ்ஸமுத்ர என்றும் உறுதியாகச் சொல்லலாம். ஆனால் உபகாரங்கள்போலவே அபகாரங் களும் சிலவுண்டு. அவற்றில் நாம் உதாஸீநர்களாக இருக்கை உரியது. மஹர்ஷிகளின் வாக்குக்களிலும் த்யாஜ்யங்கள் பலவுண்டென்றும் அவற்றைத் தள்ளி உபாதேயமானவை மாத்திரமே உபஜீவ்யங்களென்றும் பூர்வாசார்யர்கள் நிஷ்கர்ஷித்திருக்கும்போது அஸ்மத்ஸஜாதீயர்களான அரும்பதவுரைகாரர்களைப் பற்றி கதையா? ந்யாயஸித்தாஞ்ஜனத்தின் முதலில் ப்ரத்யக்ஷாத்யாயத்தில்

"அதோ யாவதிஹயாஸ்த்ரம் தாவதேவோபஜீவ்யதே | நவராக தடாகஸ்ய

வஸ்த்ரேணாதஸ்யகாலேவிக்ஷேபஸாஹித்யமாஹரேணோபஜீவ்யதே"

என்று தேசிகன் பணித்திருப்பது மஹர்ஷிகளின் விஷயத்திலேயேயன்றோ. ஸ்ரீஹஸ்திகிரித்தில் வ்யாஸர்காட்டினவழியே இது.

94. ப்ரஸம்காத விவக்ஷிதங்களை இன்னமும் சிறிது விஜ்ஞாபிக்கிறேன். நம் ஆசார்யர்களின் அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகள் [ரஹஸ்யவ்யாக்யாந— அருளிச்செயல் வ்யாக்யாநாதிகள் யாவும்] அநேகஸ்தலங்களில் அநேகவிதமான மாறுகோலங்களை அடைந்திருப்பது மிகவும் ஸோசநீயம். நாலாயிர வ்யாக்யா நங்களையும் நன்கு ஊன்றி ஸேவிக்கப்புக்கால், அரும்பதவுரைகாரர்களின் ஹ்ருதய ப்ரமாதாதிகளாலேற்பட்ட அபசாரங்கள் ஒருபுறமிருக்க, லிபிகாரர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு லேககர்களாலும் ஸோதகர்களாலும் ஏற்பட்டிருக் கின்றவர்ணவ்யத்யாஸாதிவிபர்யாஸங்களும் தத்ப்ரயுக்தமான தோஷங்களும் அபாரம். ஆசார்யஹ்ருதய வ்யாக்யானத்திலே மணவாளமாமுனிக ளின் அமுதமொழிகள் பலபல விடங்களில் அத்யந்தஸோசநீயமான விக்ருதி களைப் பெற்றிருப்பதுபற்றி என் சொல்லவல்லேனென்வாய்கொண்டே? இதி லும் ஒன்றிரண்டு விஷயம் காட்டுகிறேன். அதில் மூன்றாவது ப்ரகரணத்தில் "தமருகந்த அடியோமுக்கேயென்னும் பின்னானார் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்" என்றவிடத்து வியாக்கியானத்தில் "அவதாரங்களுக்குப் பிற்பாடரா னவர்களுக்கு அநுஸந்தாநமான அர்ச்சாவதாரத்திலே * ஸமஸ்த * என் கையாலே வரதாதிகளில் அநுஸந்தாநமான குணங்களெல்லாம் பூர்ணமென்

கை:'' என்கிற பங்க்திகள் அச்சிடப்பட்டுக் காண்கின்றன. இங்குள்ள ஸர்வம் ஸஹே என்கிற மேற்கோள் எந்த அம்சத்திற்கு உதாஹ்ருதமென்று விமர்சிக்க வேணும். ''ஸர்வம்ஸஹஸஹிஷ்ணு:'' இத்யாதிகளிற் சொல்லப்பட்ட [ஸர்வாவதாரஸாதாரணமான] ஸர்வ ஸஹிஷ்ணுத்வத்தை க்ருஷ்ணாவதாரத்திற்கு நியமனமாகக் காட்டுவதற்கு ஸர்வம்ஸஹே என்கிற ப்ரமாணம் மேற்கோளாக இங்குக் காட்டப்பட்டதென்று சிறிதும் கூசாமலே பலர் கூறிவிடுகிறார்கள். ''ஸஹாநுதாபம் ஹாவி கிம் வா ஸர்வம்ஸஹே ஸஹஜம் ஹி தேவழ'' என்கிற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தியிலுள்ளதான ஸர்வம்ஸஹே என்கிறவிது ப்ரக்ருத ஸந்தர்ப்பத்திற்கு அணுமாத்திரமாவது பொருந்துமா வென்று வினவினால் சீறுபாறென்கிறார்கள் பரமைகாந்திகள். ஸ்வீய ஸம்ப்ரதாய க்ரந்த பரிசீலன தீக்ஷிதர்களாகவுள்ள பிறர்களோ உண்மையறியாமல் தூஷிக்கத் தலைப்பட்டு விடுகிறார்கள். இங்கு உண்மையான பாடம் என்னவென்றால், ஸ்ரீவசந பூஷண வ்யாக்யாநாதிகளிலும் உதாஹ்ருதமான ''ஸர்வம் பரிணாமம் ஸஹேத்'' என்கிற உபநிஷத் வாக்யமே இங்கு ஸர்வம்ஸஹே என்று விக்ருதமாக விழுந்திட்டது. இது அச்சு ஸ்ரீகோசங்களில் மாத்திரமன்று.

95. தெலுங்கு லிபியில் அறுபது வருஷங்களுக்குமுன் அச்சிட்டிருக்கின்ற ஆசார்யஹ்ருதய வியாக்கியான ஸ்ரீகோசத்தில் பலவகைப் பிழைகள் விழுந்திட்டன வென்று அனேக தாளகோசங்களை வைத்துக்கொண்டு ஸ்ரீ பழந்தண்டலம் ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர் ஸ்வாமி தமிழ் லிபியில் அதை அச்சிடத் தொடங்கினார். அப்போது அஸ்மதாசார்யரான ஜீயர் ஸ்வாமி அவரை வரவழைத்து, தம்மிடத்திலுள்ள அச்சுப்பிரதி பெரியோர்களால் சுத்த தாள கோசங்களைக் கொண்டு நன்கு பரிஷ்கரிக்கப்பட்டிருக்கின்ற தென்பதை அவர்க்குத் தெரிவித்து, அவசியமான பல பல திருத்தங்களைக் குறித்துத் தந்தருளி: இத் திருத்தங்களை தேவரீர் அவஹிதராய் நோக்கி அச்சிடவேணும்' என்று ஸாதித்து நியமித்தருளினார். அவரும் அப்படியே யென்று இசைந்து போய் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி நியமனத்தைச் சிறிதும் குறிக்கொள்ளாமல் தமக்குத் தோன்றினபடியெல்லாம் அச்சிட்டு முடித்துவிட்டார். முடிந்தபின்பு அப் புத்தகத்தைக் கடாக்ஷித்தருளின ஜீயர்ஸ்வாமி போரவும் நிர்வேதப்பட்டு மறுபடியும் அவரை நோக்கி 'இப்படியும் செய்வீரோ?' என்று கேட்டருள, அதற்கு அவர் விடை கூறினார் — 'அடியேன் பல தாளகோசங்களையும் ஸம்பாதித்து மிகவும் ஜாகரூகனாகவே அச்சிட்டிருக்கிறேன். தாளகோசத்தில் இல்லாதவற்றை அடியேன் எப்படிச்சேர்ப்பது? ஸ்வாமி குறித்துத் தந்தருளின திருத்தங்களை தாளகோசங்களில் இருந்தமட்டிலும் ஆதரித்திருக்கிறேன். மற்றைப்படி அடியேனுடைய

பதிப்பில் பிழைகள் இருந்தால் தாளகோசங்களே அவற்றுக்கு ப்ரதிஷ்டை' என்றார். அந்தப் பதிப்பை யெடுத்துப்பாருங்கள்; நியமேந ஒவ்வொரு பக்கத்திலும் கோளாறுகள் நேர்ந்தே யிருக்கின்றன. அவை தாளகோசங்களிலும் ஏறிக்கிடப்பன என்றும் தெரிந்துவிட்டது. வநதாவதா ஶுபஶங்களை ஸாபஶங்களென்று கொள்ள வழியுண்டோ? இப்படி ஒன்று இரண்டா? ஶதஶதம் ஶஹஸ்ரஹஸ்ர மென்னலாம். இது அதிசயோக்தி யன்று.

96. ஸமயம் வாய்க்கும்போதுதானே அடியேனும் விஷயங்களை விஜ்ஞாபிக்கவேணும். மற்றொன்றுங் கேண்மின்;— அதில் மூன்றாவது ப்ரகரணத்தில்

"ஶ்ரீமனஞ்சூழும் ஸௌகுமார்ய ப்ரகாசம் அச்சேரியிலே."

என்றொரு சூர்ணிகையுளது. இப்படியே தேசமெங்கும் உருப்போட்டு அநுஸந்தித்துவருகிறார்கள். தெலுங்கு லிபியிலோ தமிழ் லிபியிலோ மூலப்பதிப்பிலோ வியாக்கியானப் பதிப்பிலோ எதிலும் இப்படியேதான் பாடமுள்ளது. 'அச்சேரியிலே' என்றால் என்ன அர்த்தம் என்று விமர்சிப்பாரேயில்லை. திருவண்பரிசாரம் என்கிற மலைநாட்டுத் திருப்பதி இங்கு விவக்ஷிதம். ஆழ்வாருடைய திருத்தாயாராகிய உடைய நங்கையாருக்கு அவ்வூர் பிறந்தகமாதலால் அதனை ஆய்ச்சேரி என்று மூலவக்தா திருவுள்ளம்பற்றினர். (ஆய் - தாயார்.) அதை வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் ஸ்பஷ்டமாக விவரித்தருளினர் — "உடைய நங்கையார் பிறந்தக மாகையாலே ஆழ்வார்க்கு ஆய்ச் சேரியாயிருப்பதாய்" என்கிற ஸ்ரீஸூக்திகளைக் காணலாம். மேற்குறித்த வியாக்கியானத்திலு மகப்பட அச்சேரியென்றே பாடம்ஏறிவிட்டது. அச்சேரியென்றால் திருவண்பரிசாரத்தை எங்ஙனே குறிக்குமென்று விமர்சிப்பதுமில்லாமே ப்ரவசநாதிகளும் செய்து வருகிறார்கள். ஒரு அக்ஷரம் மாறிவிட்டாலும் ஆசார்யர்கள் திருவுள்ளம்பற்றியிருந்த ரஸ்யமான தாத்பர்ய விசேஷம் பழுதுபட்டொழிகின்றது காணீர்.

97. ஸ்ரீபாஷ்யாதிகளிலும் இப்படிப்பட்ட விபர்யயங்கள் இடம்பெற்றே யிருக்கின்றன. ஶ்ருதப்ரகாசிகையில் "ஶாநராமாநுஜ ஸம்பாவநாஶங்கா" என்று பலரும் ஓதிவருவது ப்ரஸித்தமிறே. இது தவறான பாடம் என்று பெரியோர்கள் திருத்தியருளினாலும் "ஓலை ஸ்ரீகோஶங்களிலும் இப்படியே தான் பாடங்காண்கிறது; இப்படியுமிருக்கத் தகுதியுண்டு; மாறொரு வாயமுமில்லை" என்று ஸாதிக்கிற ஸ்வாமிகளையும் ஸேவியாநின்றோம். இங்ஙனமே ப்ரமேஶ்ருத பாஷ்யாவதாரத்தில் "ந வ க்ஷுண்ணிஷ்ஷ்யாஜூாவ நிஷேயஸ்ஸம்காணீய:" என்ற பிறகு "க்ருஷ்ணமாவ ஷஷ்டீ ஸமஸ்த ஜதி ப்ரதி ப்ரஸவஸம்பவாக:" என்று ஓதிவருகிறார்கள். ஸ்ரீகோஶங்களிற் பாடமுமப்

படியே காண்கிறது. இவ்விடத்தில் ஸுதாவாக் என்றிருந்த பாடம் ஸம்ஹவாக் என்று பிறழ்ந்துவிட்டதென்று ப்ராமாணிகப்ராஜ்ஞர்கள் நிரூபித்தருளுகிறார்கள். ஸம்ஹவஶப்தத்தின் ப்ரயோகத்திற்கு இது அர்ஹமான இடமன்றுதானே.

98. நெஞ்சை நடுநிலையில்வைத்து, பக்ஷபாதமின்றிக்கே ஆராயவல்லார்க்கு இந்த நிரூபணங்களெல்லாம் நன்கு ருசிக்கும், 'ததேவ ந ததேதி ருச்யதே' என்றிருப்பார்க்கு இவை * ஊமையரோடு செவிடர்வார்த்தையாமத்தனை. உண்மையில் அடியேன் சிறிய ஞானத்தன். ப்ராமாணிகர்களான பல பெரியோர்களின் திருவடிவாரத்தில் கேட்ட விஷயங்களை அடியேன் விஜ்ஞாபிப்பவனேயல்லது ஸ்வீய ஊஹநீஷைமயைக்கொண்டு இத்தகைய திருத்த விஷயங்களை விஜ்ஞாபிக்கின்றேனாக யாரும் கருதலாகாது. இவைநிற்க.

99. அருளிச்செயல் வ்யாக்யாந திவ்யஸூக்திகளைப்பற்றி இப்போது விசாரமாகையாலே அந்த ஸ்ரீஸூக்திகள் லேகாவகர்களாலே சீர்மைகெட்டிருக்கும்விதம் எப்படிப்பட்டதென்று ப்ராமாணிகர்கள் தெரிந்து உள்ளமுருக இங்கு இரண்டொரு விஷயங்கள் விளம்புகின்றேன்.

100. பெரிய திருமொழியில் (8-2-1.) தெள்ளியீர் தேவர்க்குமென்ற பாசுரத்தி னிறுதியில் **தக்கதே** என்பதற்கு வ்யாக்யாநத்தில் —

"தக்கதல்ல * நமேதாஸுவத் என்கிறாள்" என்பதாகப் பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தி அச்சிடப்பட்டுக் காண்கிறது. இங்கு நமேதாஸுவத் என்று ப்ரமாணம் காட்டப்பட்டிருக்கிறது. இது எதற்காக? என்பது புலப்படவில்லை. இது ஜிதந்தாஸ்தோத்ரத்திலுள்ளதென்று கீழே ஸூசநமும் காட்டியிருக்கிறார்கள். உண்மையில் நமேதாஸுவ மென்கிற ஶ்லோகம் ஜிதந்தாஸ்தோத்ரத்திலுள்ளதுதான். அதனை இங்கு நிதர்ஶிப்பதற்குக் காரணம் என்னேவென்று எவ்வளவு ஆராய்ந்துபார்த்தும் புலப்படவில்லை. ஓலை ஸ்ரீகோஶங்களைப் பார்த்ததிலும் (நமேதாஸுவ மென்கிறாள்) என்றே காணப்பட்டது. இதன் மருமம் விளங்கவில்லையேயென்று விசாரமாகவே யிருந்தது. நம்பெருமாள் ஸந்நிதியில் பகற்பத்துத் திருநாளில் இப்பாசுரத்தின் அரையர் ஸேவையைக் கேட்டிருந்தபோது

நமேதந்நாஸுவ: என்கிறாள்.

என்று அரையர் பெருமிடறுசெய்து ஸேவித்தருளினதைக் கேட்டவாறே யதோ்யாஸ்மி யதோ்யாஸ்மி என்று உள்ளங்குளிர்ந்தேன். * கிம் தஸ்ய தேவப்ராணாமதாநாம் வராஹவோ நாம நமேதந்நாஸுவ: * என்கிற ஶ்லோகார்த்த ஸ்ரீஸூக்திதான் இங்கு உபாத்தம் என்று தெளிவுபிறந்தது. **தக்கதே!** என்ற

மூலத்திற்கு அது மிகவும் பொருத்தமான மேற்கோள் என்றும் பிறகு தெரிந்தது. அரும்பதவுரைகாரர் இதை மிக நுட்பமாகக் காட்டியுமிருக்கிறார். அது பயன்படாதபடிக்கு முத்ராபகர்கள் ஜிதந்தாஸ்தோத்ரமென்று ஶப்தநிர்த்தேஶம்பண்ணி வைத்திட்டார்கள். அவர்களோ ஸாரஜ்ஞர்களல்லர். ஶாஸ்த்ரஸம்ப்ரதாயங்களிலே ஸதாசார்யஸேவா ஸமதிகதஶேமுஷீகரான தத்காலீயரும் சிங்கப்பெருமாள்கோயில் மாடபூசி ஸ்ரீ ராமாநுஜாசார்யர் ஸ்வாமிகளாயிற்று தந்நாயகர். அவர் தாம் என் செய்வர்? பல் தாளகோஶங்களிலும் அந்தப் பாடமே அவர்க்குக் கிடைத்ததாம். ஆரியர்காள்! இஃது எப்படிப்பட்ட விக்ருதி!, எத்தனைகாலமாக ஏற்பட்ட விக்ருதி! என்பதை விமர்ஶித்தருள்க. நதேரூப மென்பதாகவே இங்கு பாடம் வைத்துக்கொண்டு எல்லா ஸ்வாமிகளும் காலக்ஷேபம் ஸாதித்துவருவதும் அஜ்ஞாநஜம். "உனக்காக ரூபாதிகளொன்றும் கிடையாதாகையாலே கைவளைகொள்வது தக்கதே? என்கிறாள்" — என்று அர்த்தம் ஸாதித்துவிட்டால் கைகூப்பவேண்டியதுதானே. இதற்கே ஸம்கட்ட நால்வரிருவர் கைவீசிப் புறப்படவேண்டியதும் ப்ராப்தமாம். ஆயினும் விவேகிகள் ஒருகாலும் ஆத்மவஞ்சநம் செய்யார்கள்.

101. திருநெடுந்தாண்டகத்தில் (13) "வில்லிறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாயென்றும்" என்ற விடத்து வ்யாக்யாநத்திலே

> "வில்லைமுறித்த ஆண்பிள்ளைத்தனத்தையும் வார்த்தை சொன்ன சீர்மையையுங்கண்டு நீராடினாள் பிராட்டி; அவ் வில் முறித்த ஆயாஸத்தால் வந்த ஶ்ரமம்தீர அவள் தோளிலே முழுகினானாயிற்று."

என்கிற பங்க்திகள் (தெலுங்குலிபிப் பிரதிகளில்) காணப்படுகின்றன. "பிராட்டி நீராடினாள்" என்கிற வாக்கியம் இங்கு ஒரு பொருளையும் தாராது. கீழ்க்குறித்த தத்காலீயர் ஸ்வாமி இதை ஶோதித்துத் தமிழ் லிபியில் முத்ரணம் செய்தருளப் புகுந்தபோது இவ்விடத்திலே மிகவும் அஸமாஹிதராய் இதஸ்தத: பலரையும் விசாரித்தருளினர். எந்த ஓலை ஸ்ரீகோஶத்தைப் பார்த்தாலும் "நீராடினாள் பிராட்டி" என்றே காணப்பட்டது. அது ஒருபடியாலும் நெஞ்சுக்கு ருசியாமையாலே அந்த ஸ்வாமி சிறிது ஸாஹஸிகத்வத்தை அவலம்பித்து

"இனியளானாள் பிராட்டி"

என்று திருத்திப் பதிப்பித்துவிட்டார். நாளைக்கும் ஸ்வாமிகள் கடாக்ஷிக்கலாம்; தெலுங்குப் பிரதிகளில் நீராடினாள் என்றிருப்பதும், தமிழ்ப் பிரதிகளில் இனியளானாள் என்றிருப்பதும் நிர்விவாதம். அடியேனது இளமையில் இந்த

விவாஹம் காஞ்சியில் உத்ஸவமாக நடந்தபடியாலே ஒரு ஸமயம் அடியேன் கோயிலுக்கு விடைகொண்டிருந்தபோது அங்கே ஸாத்ஸவஸிஷ்ரான ஸ்ரீமத் உ. வே. பத்ராவிஸ்வாமி ஸந்நிதியிலே பணிந்து இவ்விஷயத்தைப்பற்றி விஜ்ஞாபித்தேன். அந்த ஸ்வாமி ஓலை ஸ்ரீகோசத்தையெடுத்துக் கடாக்ஷித்து, அதில் நீராடினாள் என்று எழுதப்பட்டிருந்து, பிறகு 'டி' என்னுமெழுத்து அடிக்கப்பட்டிருந்ததைப் வாத்ஸல்யவையுடனே காட்டியருளினர்.

102. இங்கு விஷயமென்னவென்றால்; "வில்லிறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாய்" என்று மூலத்திலுள்ளது. தோய்கையாவது நீரிலே மூழ்குகை. இங்கு நீர் இல்லையே, அப்படியிருக்க மூழ்குகைக்கு ப்ரஸக்தியேது? என்று சிலர் சங்கிக்கக்கூடுமென்பதாகப் பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றி, 'இங்கு நீர் உண்டு, நீரிலேதான் தோய்ந்தது' என்று நிரூபிக்கவேண்டி, பெருமாள் வில்லை முறித்த ஆண்பிள்ளைத்தனத்தையும் வார்த்தைசொன்ன சீர்மையையுங் கண்டு நீரானாள் பிராட்டி; அவள் தோளிலே பெருமாள் வில்முறித்த விடாய்தீர முழுகினார் — என்று வெகு அழகாக அருளிச்செய்து வைத்தார். [நீரானாள் = நீர்ப்பண்டமாயுருகினாளென்றபடி.] இந்த ஸ்ரீஸூக்தி எப்படிப்பட்ட விக்ருதியை யடைந்தது பார்க்க.

103. இங்கு நீராடினாள் என்பதாகவே பாடம் வைத்துக்கொண்டு சில காலக்ஷேப ஸ்வாமிகள் விசேஷார்த்தம் ஸாதிக்கக் கேட்டிருக்கிறோம். திருப்பாவையில் "நீராடப்போதுவீர்" என்றவிடத்து "தமிழர் கலவியைச் சுனையாடலென்பர்" என்று ஸாதித்திருப்பதைப் பற்றிக்கொண்டு, இங்கு 'பிராட்டி நீராடினாள்' என்றால் ஸ்ரீராம ஸம்ச்லேஷத்தை விரும்பினாளென்று கருத்து என்று முஷ்டிபிடிப்பர்கள். எந்த ஸ்ரீஸூக்தி எந்த விதமான விக்ருதியை யடைந்தாலும் தியங்காதே மயங்காதே நெஞ்சில் தோன்றினபடி அர்த்தமுபந்யஸிக்கவல்லார் இவ்வுலகில் மலிந்தேயுள்ளார். பொருந்துமா பொருந்தாதா என்று ஆராயவல்லார்க்கன்றோ ஆயாஸம்.

104. முமுக்ஷுப்படியில் "ஒருவனடிமைகொள்ளும்போது" என்ற ஸ்ரீஸூக்தியை ஒருவர் "ஒருவண்டிமைகொள்ளும்போது" என்று வாசித்தாராம். அதற்கும் ஒரு ஆசார்யர் மயங்காதே அர்த்தம் அருளிச்செய்தாராம். சில நையாயிகர்கள் உத்பத்திமத்வாத்அநித்ய: = என்பதை அநித்ய: என்று வாசித்தாலும், அநித்ய: என்றுள்ளதை நித்ய: என்று வாசித்தாலும் சிறிதும் சிந்தியாதே யாந்த்ரிகமாகவே அப்படிக்கே அர்த்தம் சொல்லிக் கொண்டு போவர்கள். வைதிகதமத்யாயஸியாதி ஸூத்ரங்களில் நஞ் இருக்க வேண்டுமிடங்களில் தத்பாவமும், இல்லாதிருக்க வேண்டுமிடங்களில் தத்ஸத்பா

வமும் ஆங்காங்குக் காணப்படும். அங்கெல்லாம் திருத்தவேணுமென்கிற விசாரஸக்தியெலமுமின்றியே ஸம்ஸாரோபதமாக ப்ரவசனப் பெருக்கை வஷிப்பார் பலரைக் காணுகின்றோமிறே.

105. இங்ஙனே பலவற்றையுங் காட்டி ப்ரஸம்ஸிக்கின்ற பாவியேன்மீது சீறேல்மின். நம் ஆசார்யர்களின் அமுதிலுமாற்றவினிய வரவோவாவந திவ்ய ஸ்ரீஸூக்திகள் ஆங்காங்கு சுதிநிவெப்ஷாஹூமான சுநூயாஹாவத்தை அடைந்துவிட்டனவே! என்கிற வரிதாவமும், அப்படி விகாரமானவற்றையும் ஸமயிக்க ஊஹநீயர்களும் முற்படுகிறார்களே! என்கிற நிவெப்ஷமும் கொடுவினையேனைக் கொள்ளைகொண்டிருக்கின்றன.

106. முன்பு நாம் எழுதியிருந்ததில் *சுராவண ஊராமம் வா* என்றதைப்பற்றின நமதுவார்த்தைகளின்மீது சிலர் வேறுவகையாகச்சொல்லப்பார்த்தார்கள். 'இந்த க்ஷணத்தில் ஜகத்து ராவண சூந்யமாகவாவது ராம சூந்யமாகவாவது ஆய்விடப்போகிறது, பாருங்கள்' என்று பெருமாள் சொல்லுகிற இந்த வார்த்தையில் சுராமூ என்றது வார்த்தைப் பாடேயன்றி அது கருத்தூன்றிச் சொல்லுகிற வார்த்தையன்று என்பது நம்முடைய அபிப்பிராயம். பிறர் சொல்லுவதாவது — ஜகத்து ராம சூந்யமாய்விடுமென்று சொல்லுகிறபடியன்று; ராமனென்கிற பெயரை நான் இழந்துவிடக் கடவேனென்று சொல்லுவதாகக் கொள்ளவேணுமென்று. இந்த அஸமஞ்ஜஸ சுஷ்கவாதத்தில் நாம் தலையிடத் தேவையில்லை. இந்த விசாரம் நமக்கு ஸுதராம் அநபேக்ஷிதம். எங்ஙனேயாயினுமாகுக. இங்கு நாம் இப்போதாக விஜ்ஞாபிப்பதைக் குறிக்கொள்ளவேணும்.

107. "சுஷ்நு ஊஹமூதெ நவிராக ஸத்யம் ப்ரதிஶ்ருணோமிவ: | சுராவணமராமம்வா ஜகத்ருக்ஷ்ய வாநரா:!" என்று பெருமாள் கனக்க ஶபதமிட்டருளிச் செய்கிறார், இந்த முஹூர்த்தத்திலேயே [நவிராக] காலதாமதமின்றியே இராவணனை யொழித்துவிடுகிறேனென்றவர் அந்த ப்ரதிஜ்ஞவத்தின்படி ஸத்யவ இராவணனை முடித்தாரா என்று பாருங்கள். இந்த ப்ரதிஜ்ஞைசெய்தருளின பிறகு ராவணவயமாவதற்கு இடையே பஹுவித காயப்ரவர்த்தனமுள்ளது. இராவணன் பெருமாளுடைய ஸாரதியையும் குதிரைகளையும் வருந்தச்செய்தல் முதலிய காரியங்கள் பலவும் பின்னிட்டு நடந்திருக்கின்றன. ராவணன் ஶூரஸப்ரயோகம் பண்ணும்படியாகவும் பெருமாள் பார்த்துக்கொண்டிருக்கிறார். அறுக்க வறுக்க மீளவும் முளைக்கின்ற ராவணன் தலைகளைப் பெருமாள் நூற்றொருதடவை துண்டித்துப் பெரும்பாடுகள் பட்டிருப்பதாக வால்மீகிமுனிவர் பலஸர்க்கங்களாலே ப்ரவசனம் பண்ணியிருக்கிறார். ராமோதிர்நாபிஹாஷதெ என்பதை நியியாகப் பற்றியிருக்குமவர்களுக்கு இங்கு விசிகித்ஸை யொன்றும் விளைந்திலதோ? ஸத்யம் ப்ரதிஶ்ருணோ

ஜிவ: என்றதற்கு அடுத்த ஸ்லோகம் இராவணன் மாண்டொழிந்தா னென்பதாக இருந்தாலிறே ராமோ விக்ரஹவாந் தர்ம: என்பதற்குச் சேர்ந்ததாயிருக்கும். இப்படிப்பட்ட ஸமாதாநங்களெல்லாம் நமக்கு அநாதரணீயமாமே.

108. அன்றியும் இந்த விஷயத்திலே பெருமாள் ஸ்வபாவமாக என்ன அருளிச்செய்கிறாரென்றால் இராவணனைக் கொல்வதற்காகவே தாம் வாலிவத ஸேதுபந்தநாதிகளை மிக்க ஜாகரூகதையோடே செய்து போந்ததாக அருளிச்செய்கிறார். பெருமாளுடைய பல உக்திகளை ப்ரமாணமாகப் பற்றிக்கொண்டு நம் ஆசார்யர்கள் அடிக்கடி அருளிச்செய்வதென்ன வென்றால், பெருமாளுக்கு இராவணனைக் கொல்லவேணு மென்கிற திருவுள்ளமிருந்தால் அதற்காகப் படைதிரட்டிக் கடலடைத்து இத்தனை பாடுகள் படவேண்டிய அவசியமேயிராது; இராவணனுடைய ஆநுகூல்யத்தை ஆந்தனையும் பெற நினைத்தே இத்தனை ஸம்ரம்பங்கள் செய்து போந்தார்; ஆந்தனையும் பார்த்தும் அது கிடைக்கப்பெறாமையாலே பெருமாளுக்கு உண்மையில் கேதமேயுள்ளது என்று பலகாலு மருளிச்செய்திருக்கக் காண்கிறோம். யதா:, “ஸம்ரம்பேண நாபிரத ஹ்ருஷ்ட் ஹ்ருதா ஸ்ரீராம:” என்ற பெருமாள் திருமுகப் பாசுரத்தை நோக்குங்கால் இவ்வண்ணமேதான் உரைக்க ப்ராப்தம். “ஸ்யந்தநே ஸ்யாமிநி நிவர்த்தம் ந: ப்ரயோஜநம்” என்ற பெருமாளுக்தியை ரஸ்ஸாஸிதமாக வ்யாக்யானித்தருளின நம்பிள்ளையும் இவ்வர்த்தந்தன்னையே ஜீவாதுவாக வைத்தருளினர். ஆழ்வானும் [ஸ்ரீஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் நிவ்ஸந, — ஸ்ரீஸ்தவத்தில் இதுவாதி ஸ்லோகங்களில் இவ்வர்த்தந்தன்னையே பொதிய வைத்தருளினர். இத்தனைக்கும் மூலமாகப் பெருமாளுடைய ஸூக்திகள் வலிதாகவுள்ளன. இது இப்படியிருக்கும்போது, “ஸ்வபாவமான இந்த ராவணனை முடிப்பதற்கே நான் இத்தனை பாடுகள் பட்டுவருகிறேன்” என்று பெருமாள் அருளிச்செய்கிற வார்த்தைகளை வாதிகள் கண்டு வைத்தும் ராமோ விக்ரஹவாந் தர்ம என்றதற்கு இவை பொருந்தியவைகளே என்று திருவுள் ளம்பற்றி யிருப்பார்களாயின், ஆநுகூல்ய ஸந்தர்ப்பமென்ற ப்ரகரணத்தில் மாத்திரம் அந்த ப்ரமாணத்திற்கு முரண்பாடு வந்துவிட்டதாக இவர்கள் கருத என்ன ப்ரஸக்தியுள்ளது? “ஆழ்வான் நம்பிள்ளை போல்வார் அருளிச்செய்திருந்தால் அதைக்கொண்டு பெருமாள் திறத்திலே ஸமாதாநம் பண்ணுவது என்ன அழகு!” என்பரேல், பெருமாளுக்குத் திருவுள்ளமல்லாததை ஆசார்யர்கள் வியாக்கியானித்தருளுகிறார்களென்று தூஷித்தபடியாகத் தலைக்கட்டிற்றாகும். ஸ்ரீராமாயணத்தின் கதைப்போக்குகளில் எவ்வளவோ மர்மங்கள் பொதிந்துள்ளன. “ஸர்வேஷாம் ஸர்வபூதாநாம் மர்மஜ்ஞ: ஸம்பவ:” என்றதுமிது தன்னிலேயிறே.

109. மரணம்வா வரணம்வா என்றும், ஸாவணம்வா ஸாமம்வா என்று மித்யாதியாக இரண்டுபடப் பேசியுள்ளதெல்லாம் விருத்தாபிஹாஷதெக்கு ஸத்யவிரூபமென்று ஒருவர் வ்யாக்யாநம் பண்ணப்புக்கால் என்செய்வரோ இவர்கள்? கொடித்யாவமாஹிநியான வாதைத்யைப்பெருமாள் அருளிச் செய்யவேகூடாது; அது கூடுமாளுல் *ஒன்றே யுரைப்பானெருசொல்லே சொல்லுவானென்பது கூடாது. இரண்டையுங் கூட்டி நிவஹிப்பது இவர்களுக்கு வஷ்டமதமாளுலும் ஸாயுஜ்யமேயாகும். ஸரமெ மரண மித்யாதியி லுட்புகுந்து ஸயவிவாரம் பண்ணுவதை விட்டிட்டு ஹூஷ்யஸ்பாநவாக்யவிஷயிலேயே விமர்ஷங்கொள்ள வழகியது. மரணமென்றே தரணமென்றே ஸாமமென்றே ஸாவணமென்றே ஏதேனுமொரு கொடியைப் பேசியிருக்கவேண்டுமே யல்லது ஸஷ்டாதிகளைப்போலே அவரும் உஹயகொடிகளைப் பேசிவைத்தது விருத்தாபிஹாஷதெக்குப் பொருந்தவே பொருந்தாது என்று வ்யாக்யாநம் ஹ்ராவமாளுல் இதற்கு வ்யாக்யாநம் எங்ஙனேயோ?

110. "கொவிதாநு கொஜிதமெ க்ராய:" என்று கேட்ட மஹர்ஷி தாமே "கஷ்யஹிமதி ஷேவாஸ்து ஜாதமெராஷஸ்ய ஸம்யக்மெ" என்றும் கேட்டிருப்பதைக் கணிசிக்குமளவில் சில விடங்களிலே கொவமாகாதென்றும் சிலவிடங்களிலே கொவமவஜநீயமென்றும் தெரிவித்ததாகத் தேறும். அந்தக் கணக்கிலே, சில விஷயங்களில் விரநஹிஹாஷணமும் சிலவிஷயங்களில் விஷிஷ்டாஹிஹாஷணமும் ஒரு குறையுமின்றியே பொருந்துமென்றுவஸிஙாஙிப்பது ஸ்ரீராமாயணகஷ்யங்கஷவிமர்ஷஸார ஸவஹம்.

நிகமநம்

111. நம்பிள்ளை 'இத்தை முடித்தல் கடத்தல்' என்கிற வநதாஷ்யமான அர்த்தத்தைத் திருவுள்ளம்பற்றவே யில்லை என்பதை மத்யஸ்தத்ருஷ்டிகள் எளிதாக அறியலாம். எங்ஙனேயென்னில்; இப்படிப்பட்ட ஸயத்திற்கு மூலமாக ஷ்லோகாந்வயம் செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி யிருந்தாராகில் தாஷ்யஸாந்வயவ்யுஷ்ட வஸிவாடியாகவே வ்யதீகொவாஷாநம் அவசியம் செய்தருளியிருப்பர். [ஸரமெ ஐத்யாதி. மெ தரணம்வா ஸாமரஸ்ய மரணம்வா] என்றிங்ஙனே வ்யதீகயாரணம் செய்தருளிப் பிறகு விவரணஸங்கியை ஸாதித்திருப்பர். இப்படியுள்ளதோவென்று பாருங்கள். ச்லோக முள்ளபடியேதானே வ்யதீகஹ்ரஹணம் பண்ணியிருக்கிறார். அதற்குமாறுகப் பொருளுரைத்துக்காட்டுவது பிள்ளையினுடைய மெஸஷியே யன்று.

112. வ்யதீகம் எப்படி ஹ்ரஹித்தாலும், ஸயவிவரண வ்யக்ரியயா யொஜநாவ்யணாயீவ்யத்யாயநம் உவவஹமாகையாலே இங்கு ஸணரவெண யொஜநை

யைக் காட்டி யருளாவிடினும் ஸூத்ர விவரணத்தை அழகாகச் செய்தருளிவிட் டாராதலால் ஸ்ரீவ்யாக்யான ஸ்ரீஸூக்தியிலேயே ஸமாஹித யோஜனையைக் காண்பி த்தருளவில்லையென்று குறைகூறுதற்கு இடமில்லையென்று வாதிகள் ஸமாதிக்க வும் ஔசித்யமில்லை. ஏனெனில்; அந்த ஸந்தர்பம் நம்பிள்ளைக்கு விவக்ஷித மாகில் “கடலைக்கடத்தல் முடித்தல்” என்று இங்ஙனே ஸ்ரீஸூக்தி அவதரித் திருக்கவேணுமே யல்லது வேறுவிதமாக அவதரிக்க அவகாசமே யில்லை. மூலத்தில் ஸாகரஸ்ய என்றிருக்கும்போது இத்தை என்று எழுதுவா ருண்டோ? திடீரென்று இத்தையென்னலாமோ? மூலத்தில் விசேஷ்ய நிர்தேசம் ஸ்பஷ்டமாயிருக்க அதற்கு நேரான பொருளையிட்டுக் கூறாதே இத்தையென்று தொடங்குவது ப்ராஜ்ஞசைலிக்குச் சிறிதும் பொருந்தாது. பொருந்துமென்றே வைத்துக்கொண்டாலும், வாதிகள் விவக்ஷித்திருக்கிற தாத் பர்யத்திற்குச் சேர ‘ஈஷ்ய ஸாகரஸ்ய தரணம்வா ஈரணம்வா’ என்று யோஜனை கொண்டு, ஈ என்றது ஈயா என்றபடி என்றும் சொல்லி, அதன்படியாக விவர ணம் காட்டவேணுமேயல்லது ஸாகரஸ்ய ஈரணம் வா ஈ தரணம் வா என்று கொள்ளவும் இதன்படி பொருள்காட்டவும் ஔசித்ய லேசமுமில்லை. மூலத் தில் ஸாகரபத தரண பதங்களுக்கு ஸமாஸவ்யாஸமாக அமைந்திருக்கிற சேர்த்தியை விகடநம் செய்வாருண்டோ? இந்த சதிர்கேட்டை நம்பிள்ளை பேரில் ஏறிடத்தகுமோ? ‘ஸாரம் தே ஸாரஸ்வதம் ஜாநீதே’ என்றதற்கு, வ்யுத்பத்திஸூக்தரான நம்பிள்ளை * தரணம் ஸாகரஸ்ய வென்றுள்ள பதச் சேர்த்தியை உடைத்து மிகவும் அநாவச்யகமாகவும் அஸங்கதமாகவும் பிரித்து யோஜித்தாரென்பது ஸத்யமாய் அவருடைய வ்யுத்பத்திவைபவத்தைப் பரிசழிக் கிறவத்தனையே.

ப்ராக்ருதம் தோன்றியுள்ள பதில் சுவடிகளில் அடிக்கடி "மத்யஸ்த வித்வான்களே!—உபய ஸம்ப்ரதாயத்திலுமுள்ள மத்யஸ்த பண்டிதர்களே!" என்று விளித்து ஸ்வவிவக்ஷிதங்களை விஜ்ஞாபிக்கிறார்கள். இதற்கு ஏதேனும் அர்த்தமுண்டாவென்று பாருங்கள். வடதேசிய க்ரந்தங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் பார்க்கவேணுமேயல்லது மற்றையோர் பார்க்க ப்ரஸக்தியில்லை. பார்த்தாலும் அவர்களுக்கு விஷயமின்னதென்று விளங்கவும் மாட்டாது. அன்னவர்கள் நம்முடைய நிபந்தனங்களை ஊன்றிப்பார்த்து ஸ்வாபிப்ராயத்தை ஒருவிதமாக நிஷ்கர்ஷித்துக் கூறினாலும் "பக்ஷபாதோ ஹி மோஹாத்" என்கிறபடியே ஸ்வஸித்தாந்தபக்ஷீயர்கள் அவர்களது அபிப்ராயத்தைக் கண்ணழிக்க ஸஜ்ஜர்கள். இனி ஸ்ரீவைஷ்ணவ பண்டிதர்களின் மநநிலையோவென்னில், 'ஆச்சான்பிள்ளையருளிச் செய்தது அஸங்கதந்தான்' என்று தென்கலை பண்டிதரும் இசையப்போகிறதில்லை. ஆச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தியை தேசிகன் தூஷித்திருப்பதாகச் சொல்லப்படுகிற ஸ்தலங்கள் அஸங்கதங்களே யென்று ஒரு வடகலை பண்டிதரும் இசையப்போகிறதில்லை. ஸ்வஸித்தாந்த நிஷ்டநமாக ஸ்வஸம்ப்ரதாயர்களான ஆசார்ய நிகமேவகர்களைப்பற்றி 'இவரெழுதியுள்ளவை ஸகலமும் பிசகு' என்றும் 'அவரெழுதியுள்ளவை ஸகலமும் ஸமீசீநம்' என்றும் உபய ஸம்ப்ரதாயத்திலும் சொல்லவல்லவர்கள் பலர் உண்டானாலும் ஸ்வாசார்யஸம்ப்ரதாயத்தை உதாஸீக்க ஒருவரு மிசையார். அடியேன் எழுதியுள்ள விஷயோபந்யாஸ ப்ரகாரங்களைப் பிசகென்று ஸ்வபக்ஷீயர்களே பழித்துவிடலாம். ஆனாலும், விசாரபதத்திலுள்ள ததாசார்ய ஸ்ரீஸூக்திகளை தத்தத்ஸம்ப்ரதாயஸ்தர் யாரும் பிசகாகக் கனவிலும் கருதப்போகிறதில்லை. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரக்ருதவிவாதாஸ்பதங்களாயுள்ள நான்கு காரிகைகளை ஸமர்த்திதங்களாக ஸ்ரீவரவரமுநிஸம்ப்ரதாயஸ்தர் ஒருவரும் ஒருநாளும் இசையார். ஐதரேயாதிவிதாநவிதேவ॥ உண்மை இங்ஙன மிருக்கும்போது 'மத்யஸ்த

பண்டிதர்கள் கவனிக்கவேணும்' என்று பிறர் பலகாலும் எழுதுவது பயனற்ற பணிப்பன்றோ. சில பாமரர்களை மயக்கவேண்டி எழுதும் வார்த்தையன்றோ?

வேதாந்த தீபிகா பத்திரிகையின் ஆசிரியரும் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய நிஷ்டரும் ப்ரபல பண்டிதருமாகிய ஸ்ரீஉவே. மாம்பலம். எஸ். வாஸுதேவாசாரியர்ஸ்வாமி நெடுநாளாக உலகுக்கெல்லாம் உணர்வை யூட்டிவருகிறார். அந்த ஸ்வாமி ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தை ஸதாசார்ய ஸந்நிதியிலே நன்கு ஸேவித்தவர். ஸஜாவி பலர்க்கும் அவர் உபதேஶம் செய்தருள்பவர். அந்த ஸ்வாமி, விவாஜாஸ்வகாரிகைகளைப்பற்றித் தெரிவித்தருளின திருவுள்ளம் (மூன்று வருஷகாலமாக) ஸஹஸ்ரஶ அடியேனால் வெளியிடப்பட்டது. அதாவது, "அந்த காரிகைகளும், அவற்றில் ப்ரயோகிக்கப்பட்டுள்ள ஶப்தங்கள் போன்று ஸ்ரீதேசிக திவ்யஸூக்திகளில் மற்றும் காணப்படுகின்ற கடுஶப்தங்களும் ஸவர்ணநீகஸ்பிதங்களாகத்தான் இருக்கவேணும்; ஸூவாயஸ்வ வஞ்சியுடையார் இப்படியெல்லாம் எழுத ப்ரஸக்தியிராது" என்பதே அந்த ஸ்வாமி தெரிவித்தருளின விஷயம். 'நான் அப்படித் தெரிவித்ததாகச் சொல்வது பொய்' என்று அந்த ஸ்வாமியும் இதுவரை வெளியிடவில்லை. 'அந்த ஸ்வாமியின் அபிப்ராயம் ஸப்ரயோஜகம்' என்று வெளியிடவும் பிறர்க்குத் துணிவு பிறக்கவில்லை. உள்ளுக்குள்ளே உருகி நைகின்றார்களத்தனை. ஆகவே ஐயஸ்வஜ்ஞத்ரஷ்டர் பெரியார் தெரிவிக்கிற விஷயமும் ஸஹிநிவேஶவஶீக்ருத வெதஸ்ஸர்களுக்கு விஷமாகும்போது 'மத்யஸ்தர்கள் கவனிக்கவேணும், மத்யஸ்தர்கள் விமர்ஶித்தால் போதுமானது' என்று பிறர் பக்கந்தோறும் எழுதுவது எதற்கு உபயோகம்.

ப்ரக்ருதவிவாத விஷயத்தில் முதன்முதலாக நமக்கு ப்ரத்யக்ஷ ப்ரதிவாதம் செய்யப் புகுந்தவர் மதுரை நாராயணையங்கார் என்கிற பண்டிதர். அவர்க்கு நாம் பதில்க்ரந்தம் எழுதினபின் அவர் ஶரணராக, ஸ்ரீ அஹோபிலமடாஸ்தாந வித்வானாகிய புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி தாம் ஒரு ஸஞ்சிகை யெழுதினார். அதற்கும் பதில் க்ரந்தம் நாம் எழுதி வெளியிட்ட பின் அவரும் 'ஶரணஃ கொஶாஹவஃ' என்று தஷ்ணீகராக விரும்பி "அண்ணங்கராசாரியருடைய வாதங்களை ஸ்ரீதேசிக பக்தர்களும் ஆதரிக்கத் தலைப்பட்டு விட்டார்களே!" என்றொரு நிவேதந பத்ரிகையை வெளியிட்டுவிட்டு விரதரானார். [திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜ் பண்டிதர். வேளிபநல்லூர் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய சிரோமணி ஸ்வாமியும், திருப்பதி காலேஜ் ப்ரின்ஸிபால். தாதாசார்ய சிரோமணி ஸ்வாமியும் புத்தங்கோட்டம் ஸ்வாமியின் வாதங்களை மறுத்தும் அடியேனுடைய வாதங்களைத் தழுவியும் உத்யாந பத்ரிகையில் ஒரு விஷய ப்ரகாஶநம் செய்திருந்ததே அந்த நிர்வேத பத்ரிகையின் வெளியீட்டுக்குக் காரணமாயிருந்த தென்பது இப்போது ஸகல வித்வான்களுக்கும் ஸ்புதி

யதார்த்தமாகும். அது நம்முடைய ரக்ஷாவிநோதந ஸர்வஸ்வகாரீ கையில் ஸர்வவிசுத்தஸம்வாதிதமே.] அந்தப் புத்தங்கோட்டம் ஸ்வாமி உபரதரான பிறகு மூன்று வருஷங்கள் கடந்தபின் இப்போது சிலமாதமாக ஒருவராய் இருவராய் மூவராய் நால்வராய் இங்ஙனே பலபல பண்டிதர்கள் ப்ரதிவாதந ப்ரவ்ருத்தர்களாய் வெளிவருகின்றனர். ஸ்ரீரங்கத்தில் நின்றும் வெளிவருகின்ற ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ பத்ரிகையில் ஸஞ்சிகைதோறும் இவர்களுடைய வாக்விலஸிதங்களைக் காணலாம்.

நாம் எழுதுவதெல்லாம் அதத்த்வஸம்பந்நமென்றும் எடுத்துக் கழிக்கவும் தகாததென்றும் உந்மத்தப்ரலபித நிர்விசேஷமென்றும், ஆனதுபற்றியே ஸ்ரீஉபயஸம்ப்ரதாய ஸாரஜ்ஞர்களில் ப்ராமாணிகர்களான மஹான்கள் இதையெல்லாம் கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை, பொருள்படுத்தி ஒன்றுமே பதில் எழுதுவதுமில்லையென்றும் உதாஸீநமாக இவர்கள் இப்போது எழுதுகிறார்கள். ஆஸ்திகர்களே! அடியேனுடைய சுவடிகள் இவ்வளவு நிஹீநங்களாயிருந்தால் இத்தனை வித்வச்சிரேஷ்டர்கள் எதுக்கு இவ்வளவு ஸம்ரம்பங்கள் கொள்ளவேணும்? அடியேன் எழுதியிருப்பதுபோல (ஸமீப காலத்தில்) ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. அயோத்யா ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி போல்வார்களும் இந்த ப்ரத்யர்த்திகளின் பக்ஷங்களைக் கண்டித்து க்ரந்தங்கள் அருளிச் செய்திருக்கிறார்களே. அந்த க்ரந்தங்களுக்கு மறுப்பாக ஒரு ஏடாவது இவர்கள் எழுதப் புகுந்தார்களோ? இரண்டு வருஷமாக ஸ்ரீரங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளிவருகின்ற ஸம்ரக்ஷணீ பத்ரிகையில் அடியேனுடைய க்ரந்தங்களுக்கு மறுப்புரைகள் என்கிற ப்ரகடநமில்லாத ஒரு ஸஞ்சிகையாவது காட்ட முடியுமா? வடகலைப் பண்டிதர் ஒருவர் தப்பாமல் அடியேனொருவனுக்கே ப்ரதிவாதகர்களாய் வெளிவந்தாய்விட்டது. உப்பிலியப்பன் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் வைதிகாக்ரேஸரரும் வித்வச்சிரேஷ்டருமான ஸ்ரீ உவே. நவநீதம் கிருஷ்ணமாசார்யர்ஸ்வாமி ஒருவர்தவிர மற்ற ப்ரஸித்த பண்டிதர்கள் யாவரும் வேறுபணியற்று இரவும்பகலும் இதுவே கிரிசையாய் ப்ரதிவாதநங்கள் செய்துவருகிறார்களென்பது ப்ரத்யக்ஷஸித்தம். ஆரும் அபலபிக்க முடியாது. நம்முடைய ராமாநுஜ தர்சநத்திற்குப் பெருத்த தூஷணமாக ந்யாயபாஸ்கரம் முதலான க்ரந்தங்கள் பல தோன்றியுள்ளன. அவற்றுக்கு மறுப்பு எழுதவேண்டிய முக்ய கைங்கர்யத்தையும் விட்டு 'அடியேனுடைய க்ரந்தங்களுக்கு பதில் எழுதுவதைவிட வேறு எதுவும் புருஷார்த்தமன்று' என்ற வுறுதிகொண்டு ப்ரதிபக்ஷிபண்டிதர்களத்தனைபேரும் ப்ரவர்த்தித்திருக்க, அம் மஹாநுபாவர்கள் தாமே ஒவ்வொருவரும் தம்தம் க்ரந்தங்களில் "அண்ணங்கராசார்யருடைய க்ரந்தம் ஒன்றுகூட எடுத்துக் கழிக்கவும் தகாததே; அவற்றில் வசவுதவிர வேறு கிடையாது" என்று எழுதிவருகிறார்கள். இவ்வளவு அருவருக்கத்தக்க க்ரந்தங்களை யெழுதிவருகின்ற அடியேனுக்கு

பதில்எழுத ஒரு திருத்தேரிழுக்கப் போதுமான ஸூரி ஸமுதயங்கள் ஏதுக்குத் திரண்டுருண்டு ஸம்ரம்பிக்கவேணும்? வசவுதவிர வேறு எழுதவறியாத அடியேனுக்கு வசவுகளில் கைதேர்ந்தவொரு கிதவர் கிளம்பி பதில் எழுதினால் போதாதா? பலபல பிருதாவளிகளை வஹிக்கின்ற பெரியோர்கள் ஏதுக்குக் கிளர்ந்தெழுந்து வ்யாபரிக்கவேணும்? நாம் க்ரந்தங்களில் எழுதும் விஷயங்களுக்கு ஸஜாவான உத்தரம் கிடைக்கும்போது இதற்கும் உத்தரம் கிடைக்கும்போலும்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. கோழியாலம் ஸ்வாமி என்று ஸுப்ரஸித்தரான யதீஶ்வரர் நெடுநாளாகக் கச்சியில் எழுந்தருளியிருக்கும்படியா யிருக்கிறது. இந்த ஸ்வாமி ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் நிகரற்ற மஹாந். அந்த மஹநீயரைப் புகழ்வதற்கு நீசனேன் நிறையொன்றுமிலேனுய அடியேன் ஒருபடியாலும் அதிகாரியல்லேனுயினும் ஹார்திகமான ஹர்ஷப்ரகர்ஷத்தைத் தெரிவித்துக் கொண்டபடி இது. இந்த ஸ்வாமி ஒரு நாளைக்குள்ள அறுபது நாழிகையில் ஏழெட்டு நாழிகை நீங்கலாக மற்ற ஸகல நாழிகையும் அடியேனுடைய சுவடிகளைக் கடாக்ஷித்துக் கொண்டே காலத்தை க்ஷேபித்தருளும்படியா யிருக்கிறது. சில ஸமயங்களில் அடியேனை நேரில் கடாக்ஷித்து நியமிக்கும்படியாயு மிருந்தது; அதாவது—"உன்னுடைய வ்யாக்யாநாதிகள் எனக்கு ஸததமுபகரிக்கின்றன; அந்த உபகாரத்தை அவ்வளவிவ்வள வென்று சொல்ல முடியாது; ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிரதி தவறுமல் எனக்குக் கொடுத்துவிட வேணும்" என்று. அப்படியே பலகால் நிர்ப்பந்தித்து ஸ்வீகரித்தருளவு மாயிற்று. நாளைக்கும் எந்த ஸமயத்தில் ஆச்ரமத்திற்கு விடைகொண்டு யார் பார்த்தாலும் அடியேனுடைய ஸஞ்சிகைகளைத்தான் ஸ்வாமி ஒய்வின்றிக் கடாக்ஷித்தருளும்படியிருக்கும். ஒன்றிரண்டு ஸஞ்சிகைகள் அச்சிட்டு வெகுநாளானமை பற்றி மிகவும் துர்லபமாய்ப்போகவே அவற்றை ஶிஷ்யர்களைக் கொண்டு எழுதுவித்துச் சேமித்துக் கொள்ளவுமாயிற்று. இங்ஙனே அடியேன் விஜ்ஞாபிப்பதில் அணுமாத்திரமேனும் அபத்தம் இருக்குமானால் அந்த ஸ்வாமிதாமே புண்யகோடி விமாநச்சாயையில் நின்றருளி ஸாதித்துவிடலாம். ஸூக்ஷ்மாம் நாமைசேதஸ.

நாம் தேசிகனுடைய க்ரந்தங்களைக் கண்டிப்பதற்காகவே ஜநித்திருப்பதாக நம் புத்தகத்தில் எழுதிவைத்திருப்பதாய் ஒரு விஷயம் எழுதுகிறார்கள். இது எந்தப் பாமரரை வஞ்சிக்கவோ? பட்டர் முதலான பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு மறுப்பாக ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாராதிகள் சிலவற்றில் [பின்புள்ளார் ப்ரக்ஷேபித்ததாகக்] காண்கிறவற்றுக்கு மறுப்புரைக்கவே நாம் ஜநித்தது என்று தாராளமாக எழுதியிருப்பதுண்டு. இதன்மேல் விவேகிகள் எவ்விதமாக பதில் எழுதலாமென்றால், 'பட்டர் முதலான பூருவர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கு மறுப்பாக ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாராதிகளில் அக்ஷரலேஶமும் கிடையாது' என்றெழுதலாம். அதைவிட்டு உக்தியையே மாறுபாடாக அநுவதித்துக் காட்டுவது யோக்யர்களின் செயலன்று. அன்றியும், "தேசிக திவ்யஸூக்திகளைக் கண்டிக்க இவர் ஜந்மாந்தரத்தில் ஸுக்ருதம் செய்துவைக்கவில்லை" என்று

தத்வ போதிநீகாரர் (பக்கம் 44ல்) எழுதுகிறார். அந்தோ! இப்படியும் எழுதுவாருண்டோ? தேசிக ஸூக்திகளைக் கண்டிப்பது மஹாபாதகம் என்றும், அந்த கண்டனம் ஸுக்ருதிகளுக்கேஸாத்யம் என்றும் தெரிவிக்கின்ற இவர்கள் தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷகர்களாம்!.

மஹாகவி, அரசாணிபாலை வேங்கடாத்வரிஸ்வாமி பணித்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் ஐச்வர்யஸ்தபகத்தில் "ஸ்ரீசைலாவரஜஸூரணிர்" என்கிற ச்லோகத்தின் வியாக்கியானத்தில் ஸ்ரீதேசிக ஸித்தாந்தத்திற்கு ஸ்ரீபராசரபட்டார்யரே பூர்வபக்ஷியென்று ஸ்பஷ்டமாகக் காட்டியிருப்பதை யாவரும் காணலாம். பட்டர் ஸ்ரீஸூக்திகளில் ஸ்ரீதேசிகனுக்குள்ள அன்பும் ஆர்வமும் வாசாமகோசரம். அப்படிப்பட்ட பட்டர் ஸ்ரீஸூக்திகளுக்கு மறுப்புரையாகக் காணப்படுமவற்றை நாம் மறுக்கப் பிறந்தோமென்றால் இதில் இவர்கள் என் வருந்தவேணும்? "ஶுத்தாநாமுபேஶதி ஜநநீ வஹ" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்திக்கும் "அஹம் மத்ரக்ஷணபரோ மத்ரக்ஷணபலம் ததா ந மம ஸ்ரீபதேரேவேத்யாத்மாநம் நிக்ஷிபேத் புத:" என்ற ஸ்வஸூக்திக்கும் நேர்விருத்தமாக ஸாத்யோபாயசோதநத்தில்—"சேஷபூதனுமாய்ப் பரதந்த்ரனுமான இவனுக்கு யதாதிகாரம் ஸ்வரக்ஷார்த்தவ்யாபாரம் பண்ணக் குறையில்லை" என்று காணப்படுகிறதே என்று இது போன்ற சில விஷயங்களைக் கேட்பார்க்கு ஸமாதாநம் பண்ணி விடையளிப்போம். அங்ஙனம் பண்ணமுடியாத விடங்களிலே மறுப்புரைப்போம். தேசிக திவ்யஸூக்திக்கென்றே இட்டுப்பிறந்திருக்கிற நாம் எது செய்யினும் கேட்க இவர்களார்கொல்? யசோதைப்பிராட்டி கண்ணனை உரலிலே பிணைத்துச்சிக்கன ஆர்த்து அடிக்கவுங் கடவள். 'என் குட்டனே முத்தம் தா' என்னவுங் கடவள்.

பட்டர் ஸாதித்த அஷ்ட ச்லோகியில் இருந்த ச்லோகங்கள் மறைக்கப்பட்டு இல்லாத ச்லோகங்கள் புதிதாய்ச் செய்து சேர்க்கப்பட்டன வென்று விமர்சகர்கள் கருதுவதாக ஒரு ஸாஹஸவசனத்தை இப்போது கிளப்பியிருக்கிறார்கள். (விமர்சஹ்ருதயம் பக்கம் 5. காண்க) விமர்சம் ஸயுக்திகமாயிருந்தால் இசையத்தக்கதே. தேசிக திவ்யஸூக்திகளில் ப்ரக்ஷேபங்கள் பலவுள்ளன வென்று நாம் நிரூபித்ததற்கு பதிலாக இவர்களும் ஒன்று எழுதிவிட்டால் அது வெற்றிபெறவேண்டாவோ? அஷ்ட ச்லோகியில் *ஶரணாநாம்ஜமதா சித்தாந்தஶ்லோகத்திற்கு மிகவும் விருத்தமாகவே ப்ரதிபக்ஷிகளின் மதமுள்ளதென்று நாம் ரக்ஷையில் நிரூபித்ததற்கு இவர்களுடைய பதில் இது. அந்தோ! என்ன ஸாஹஸம்! திருக்குடந்தையில் ஸ்ரீதேசிகஸூக்திகளைப் பல வியாக்கியானங்களோடு அச்சிடுவித்த ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய விவர்த்திநீ ஸபையார் அவற்றினிடையே இந்த அஷ்டச்லோகியையும் வியாக்கியானங்களோடு [கீலகவருஷத்தில் அதாவது 28 வருஷங்களுக்குமுன்] வெளியிட்டிருக்கிறார்கள். அன்றியும், இவர்கள் போரப்பொலியக் கொண்டாடுகிற ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜந க்ரந்தத்திலும்

இதி அடிக்கடி உதாஹ்ருதம். எந்த ச்லோகம் மாறுபட்டதாக இவர்கள் இப்போது எழுதுகிறார்களோ அந்தச்லோகம் நாம் உதாஹரித்தவண்ணமாகவும் உலகில் எங்கும் பரவியுள்ளவண்ணமாகவுமே அதில் உதாஹ்ருத மென்பதை இவர்கள் அறிந்துவைத்தும் வீணாக அப்ராமாணிக ஸரணியை அவலம்பிப்பது இவர்களுக்கே தகுதி.

இந்த அஷ்டச்லோகி பட்டர் ஸாதித்ததன்று என்பதற்குச் சில காரணங்கள் எழுதுகிறார்கள். அவை முழுவதும் தவறு. 1. யதிஸம்மிருக்கிறதாம்; „யதிஸம்ஹோநஷோஷாய”என்றான் ஒணீ. 2. ஒஸெதாநு என்றவிடத்தில் வைதாநு என்பது ஸூத்ர விருத்தமாம். ஒஸாய-ஸாநு என்பது திருக்குடந்தை வியாக்கியான ஸ்ரீகோஸபாடம். 3. தநுவஹாவநம்வ என்றவிடத்தில் வஹாவநவஷம் அநந்விதமாம்; அவ்யுத்பந்நர்களுக்கு எதுவும் அநந்விதமே. 4. வகாரதுகாரங்கள் வீணாக இருக்கின்றனவாம். ஸ்ரீபாஷ்யத்தில் "ஸூநீதாம் துநிஜாக்ஷஸெ:”என்றதையும் ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் "ச்ரியா ஸஹ து தாம்பத்யம் சாச்வதம் தத ஏவ து” என்றதையும் தூஷிப்பவர்களே இவர்கள். சுஸம்விஷ்ஹேண. இங்ஙனம் பூர்வாசார்ய ஸூக்திரத்ந தூஷணதீக்ஷிதர்களான இவர்களுடைய ஸாஹஸத்தை உலகம் நண்குணர்க.

விஶ-ஹ்ருஷயாஷிஹி ஷ்ரிவ துநெ: வுவநெஃவநெ
வுயெவந நு வாஶஹூஊவாகூதீவெஷநிநெ।
வுயாநஶஹியிதிஸும் வுயயதீயஶஷகூதி:
வுஶாணஸாணாயஷி வுணதிஜெவ கூய-ஃ: வநெ॥

ஊதிவாவாஷிஹயம்காவம்ஸீயாணம்ஹாய-கூதிததிஷு।
ஸ்ரீஷெஸிகொக்திஸிஶாஜநகூதிரஹஜஹாவிஶநவஷு॥

ஸ்ரீ:

பெருமாள் கோயில்

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

ஸ்ரீதேசிகஸூக்தி ஸித்தாஞ்ஜனம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திவ்யார்த்த தீபிகை.

(மாதந்தோறும் வெளிவரும் ஸ்ரீவைஷ்ணவ ஸமய ப்ரசார பத்திரிகை.)

ஆசிரியர்:—

ஸ்ரீகாஞ்சி. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

அஜ்ஞாநத்வாந்தஸம்ஹாரி ஜ்ஞாநரோசிர்பிஃ ।
ஹரிதா ஸ்வாஸ்ரிதைஃ ஜீயாத் திவ்யார்த்த தீபிகா ॥

பாடங்களின் பரிஷ்காரணங்கள்.

சென்ற ஆவணிமாதத்தில் வெளிவந்த வேதாந்த தீபிகையில் அடியேனுடைய இரண்டு ஆராய்ச்சிகளைப்பற்றி இரண்டு மஹான்கள் எழுதியிருந்த வியாஸங்களை வாசித்தேன். ஸ்ரீபாஷ்யத்தில் "ப்ரதிப்ரஸவஸூத்ராவாத்" என்றிருந்த பாடம் "ப்ரதிப்ரஸவஸம்ஹவாத்" என்று மாறுபட்டது என்று அடியேன் வாசிகமாகவும் க்ரந்தமுகமாகவும் பிரசாரம்செய்த விஷயத்தில் ஸம்ஸ்க்ருத பண்டிதர்கள் ஆராய்ச்சி செய்தருளிப் பொருளல்லாத வடியேனுடைய வார்த்தையைப் பொருளாக்கி அநுமோதநம் செய்திருப்பதுபற்றியும், உலகுக்கு உண்மையை விளக்கியிருப்பதுபற்றியும் பெருநன்றி பாராட்டுகின்றேன்.

பகவத்விஷயத்தில் ஒரு சிறு வாக்கியத்தில் அடியேன் விபுலமாகச் செய்திருந்த ஆராய்ச்சியைப்பற்றி மறுப்பு முறையில் ஒரு மஹான் எழுதியிருந்த வியாஸத்தை வாசிப்பதற்கு முன்னே அது விஷயத்தில் பத்ராதிபர்கள் வெகு அழகாகக் குறிப்பிட்டிருந்தவற்றை ஸேவித்துப் பரமாநந்தமடைந்தேன். பத்ராதிபருடைய அக்குறிப்பு சுருக்கமாயிருப்பினும் மிகவும் ஸாரமாக இருப்பதனால் அவ் விஷயத்தில் அடியேன் மீண்டும் எழுதவேண்டியதொன்றுமில்லை, ஆயினும் ப்ரஸங்கவஶாத் சில விவக்ஷிதங்களை விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

'அஷ்டௌ ஸ்ரவணம்வா' என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தில் [ஸாமஸ்ரவஸ்ஸ்ரவணம்] என்று அந்வயிப்பதே யுக்தமென்று கூறுமவர்கள் ஒரு சிறு விஷயம் மாத்திரம் ஆலோசித்தால் போதுமானது. 'அஷ்டௌ ஸ்ரவணம்வாபி தாஸணம் ஸா

ஶரஸூவா' என்பதில், தரணம் எதற்கோ அதற்கே மரணம் என்றுகொள்ளில், [அதாவது—தரணகர்மஸமானவஸ்துவுக்கே மரணமென்னில்] ஸாகரபதத்தின் அர்த்தம் யாது? ஜலராஶி என்று அர்த்தமா? அல்லது அதற்கு அதிஷ்டாந தேவதையாகிய வருணன் என்று அர்த்தமா? வருணனைத் தரணம் பண்ணுவதாகச் சொல்லமுடியாததலால் ஜலராசியே இங்கு விவக்ஷிதமென்று திண்ணமாகத் தேறும். அப்படிப்பட்ட ஜலராசி விஷயத்தில் மரண பதப்ரயோகம் ஸமுசிதமென்று ஸம்ஸ்க்ருத பாஷையில் வாஸனையுடையார் சொல்ல ப்ரஸக்தியுண்டா? செடி கொடி மரம் மலை குளம் குட்டை ஏரி கடல் என்பனபோன்ற அசேதநப் பொருள்களுக்குச் செய்யும் கெடுதல்களை மரண பதத்தினால் நிர்த்தேஶித்திருப்பதாக, இப்பூமண்டலத்திலுள்ள புத்தகங்களுள் ஏதேனுமொரு புத்தகத்திலாவது ஒருவர் காட்ட முன்வரக்கூடுமோ?

'இந்த வ்ருக்ஷத்தை வேரோடு வெட்டிப்போட்டுவிடுகிறேன்' என்று சொல்ல நினைப்பவர்கள் 'இந்த வ்ருக்ஷத்தை மரணமடைவிக்கிறேன்' என்று சொல்வது எப்படி இல்லையோ, எப்படி அஸம்பாவிதமோ, அப்படியே 'இந்த ஜலராசியை வற்றச்செய்துவிடுகிறேன்' என்று சொல்ல நினைப்பவர்களும் 'இந்த ஜலராசியை மரணமடைவிக்கிறேன்' என்று சொல்வது காலத்ரயத்திலும் அஸம்பாவிதமான விஷயமேயாகும். விவாதச்லோகத்திற்கு முன்னும் பின்னும் "ஸாகரஶோஷணவா" என்றும், "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" என்றும் இருப்பதை அபலாபம் செய்வார் ஆருமில்லையே. ஶோஷண பதமும் மரணபதமும் பர்யாயமென்று கொள்வதற்கு ஆதாரலேஶமேனுமுண்டோ?

"ஹஸிதம் பாஷிதஞ்சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம்। தத்ஸர்வம் யதாவ்ருத்தம் ப்ரகாஶதே" என்று விலக்ஷணமான வரம்பெற்ற வால்மீகிபகவான் இராமபிரானுடைய திருவுள்ளக்கருத்தையும் ஸாக்ஷாத்கரித்தே ச்லோக மியற்றியுள்ளார். பெருமாள் ஶோஷண மென்று உத்தேஶங்கொள்ளாதிருந்தாராகில் மஹர்ஷி 'ஶுஷ்யே ஶோணம்வா' என்று வாக்யாநுபூர்வியை அமைத்திருப்பரா? விவக்ஷிதாநுகுணமாக ச்லோக மியற்றத்தெரியாதா வால்மீகிக்கு? தகார ஶகாரங்களை மாற்றி எளிதாக அமைத்திருக்க என்ன தடை?

மூலகாரர்க்கு விவக்ஷிதமல்லாத பொருளையும் வ்யாக்யாதாக்கள் ஸ்வாரஸ்யாதிகளை நோக்கிப் பணிக்கலாமென்பது முண்டு. அப்படிக்கு இவ்விடத்தில் ஸ்வாரஸ்யலேஶமு மில்லாததோடு அஸ்வாரஸ்ய பாஹுள்யமுமுள்ளது. ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாயத்திற் சேராத இதர மதஸ்தர்கள் ஸ்ரீராமாயணத்திற்கும் மற்றும் பகவத்கீதை முதலானவற்றுக்கும் சொல்லுகிற பொருள்களைக் காட்டிலும் அத்யந்த விலக்ஷணமாகவே ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் சிலவிடங்களிலோ பலவிடங்களிலோ அருளிச்செய்துள்ளார்க ளென்பதையும் நாம் அறிவோம். அவ்விடங்களை ஆராய்ந்தால் எவ்விதமான க்லேஶமுமின்றியே அந்வயக்ரமங்களை ரஸாபாஸமாக மாற்றுதலுமின்றியே உள்ளபடிக்கு இணங்கவே அருளிச்செய்ததாயிருக்கு மத்தனை யல்லது வேறுவகையாகக் கண்டதில்லை.

இதற்கு இரண்டொரு நிதர்ஶநமும் காட்டுவோம். பகவத்கீதையில் (10-10) "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் | ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே||" என்ற ச்லோகத்திற்கு பாஷ்யமியற்றிய ஶங்கராசார்ய ஸ்வாமிகள் ப்ரீதிபூர்வக மென்பதை பஜதாம் என்பதில் அந்வயித்து உரைத்தார். நம் உடையவர் அதை ததாமி என்பதில் அந்வயித்து உரைத்தருளினர். இங்கு க்லேஶம் சிறிதுமின்றியே கிடைக்கிற அர்த்த ஸ்வாரஸ்யத்தை வித்வான்கள் உணர்வர்கள்.

ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் ராவணவதாநந்தரம் விபீஷணாழ்வானை நோக்கிப் பெருமாளருளிச்செய்யும் வார்த்தையாகிய "மரணாந்தாநி வைராணி நிவ்ருத்தம் ந: ப்ரயோஜநம் | க்ரியதாமஸ்ய ஸம்ஸ்காரோ மமாப்யேஷ யதா தவ." என்கிற ச்லோகத்திற்கு உலகில் பலர் சொல்லிவருகிற அர்த்தத்தைவிட்டுப் பரமவிலக்ஷணமாயும் ஸ்ரீராமபிரானுடைய திருவுள்ளத்திற்குப் போரப் பொருத்தமாயும் நம்பிள்ளை அருளிச்செய்யும் பொருள் திருவாய்மொழியில் "கேசவன்தமர்" என்ற திருப்பதிகத்தின் ஈட்டின் ப்ரவேஶத்தில் ஸ்பஷ்டமாகவுள்ளது. இங்ஙனே நூற்றுக்கணக்கான இடங்கள் நம் ஆசார்யர்களின் ஸூக்ஷ்மார்த்த ஶேமுஷீவிலாஸத்தை நன்கு காட்டக்கூடியவையாக உள்ளன. மூலவக்தாவுக்கு ஸ்வதாத்பர்யத்தைச் சிறிதும் காட்டாமலும் 'ஏலாதபொருளை ஏறிட்டுரைக்கின்றார்கள்' என்று எவரும் கருத இடமில்லாமலும், அஸ்வாரஸ்யாதிகளுக்கு அவகாஶலேஶமும் தாராமலும் உள்ள சிறந்த பொருள்களையே நம் ஆசாரியர்கள் அருளிச்செய்வது வழக்கம்.

அடியேன் ஸ்வபுத்தியைக் கொண்டு ஈட்டுப் பங்க்தியைத் திருத்துவதாகப் பிறர் எழுதுவது யுக்தமன்று. ஸ்ரீபாஷ்யத்தில் "ப்ரதிபுருஷவ்யவஸ்திதாஸ்ச" என்கிற யுக்தமான பாடத்தை அடியேன் ப்ராசீநகோஶத்தைக் காட்டியே விஜ்ஞாபித்தே னென்பதை ஸ்ரீ. உ. வே. பண்டித. வி. அனந்தாசார்யர் ஸ்வாமி (வேதாந்த தீபிகையில் வெளியிடுவித்துள்ள) தமது வியாஸத்தில் நன்கு நிரூபித்தே யிருக்கிறார். ஒவ்வொருவரிடத்திலும் நாம் ஓலை ஸ்ரீகோஶங்களைக் கோண்டுபோய்க் காட்ட அவகாஶப்படுமோ? 'இற்றை முடிதல்' என்கிற பாடத்தை அடியேன் ஒரு ஸ்ரீகோஶத்திலிருந்தே அறிந்தே னென்பதை இவ்விசாரத்தின் உபக்ரமத்திலேயே விஜ்ஞாபித்திருக்கிறேன். அரும்பதக்காரர்கள் என்பவர்கள் பிற்காலத்தவர்கள். அவர்களுடைய ஜ்ஞாநாதிக்யாதிகளில் யாரும் விவாதப்படுவாரில்லை. அவர்களது வசனங்களைச் சிரமேற் கொள்வாரைப் பற்றியும் நாம் வருந்துவோமல்லோம். திவ்யப்ரபந்த வியாக்யானங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அரும்பதவுரைகளில் எத்தனையோ இடங்களில் ஸம்ப்ரதாயவிருத்தவசனங்கள் மலிந்து கிடக்கின்றன என்பது ஸர்வவிதித ஸத்யமேயாகும். ஆகவே அரும்பதவுரைகளை அப்பால் வைத்திட்டுப் பூர்வாசார்ய திவ்யஸூக்திகளையே ஊன்றி நோக்கவேணுமென்பது அடியேனுக்குக் கிடைத்த ஆசார்யோபதேஶம்.

ஸ்ரீராமாயணத்திற்கு விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு வென்றே அவதரித்த ப்ரவ்ருத்தரான பெரியவாச்சான்பிள்ளை ஸர்வதர்மான்பரித்யஜ்ய ச்லோகத்திற்கு வ்யுத்க்ரமாந்வயஸித்தமான பொருளைத் திருவுள்ளம்பற்றி யிருந்தாராகில் அதை விசிஷ்ய எடுத்துக்காட்டி வியாக்யானஞ்செய்தருளாமற் போவரா? இந்த 'யானொட்டியென்னுள்' பாசுரத்திற்குப் பெரியவர்ச்சான்பிள்ளை அருளிச்செய்திருக்கும் இருபத்தினாலாயிரப்படியில் "க்ருத்வா சரணம் வ்ருதம் சரணம் ஸமாச்ரயேத்" என்று இவ்வளவு மாத்திரம் உதாஹரிக்கப்பட்டுளதே யன்றி அதற்கு அர்த்தமாக ஒரு அக்ஷரமும் எழுதப்பட்டிருக்கவில்லை. இதில் வ்யுத்க்ரமாந்வயம் செய்யவேணுமென்பது அவர்க்குத் திருவுள்ளமாகில், அப்படியே எம்பெருமானார் பட்டர் நஞ்சீயர் முதலான ஆசார்யர்களும் நிர்வஹித்து வந்திருப்பார்களாகில் அதைப் பெரியவாச்சான்பிள்ளை ஸம்க்ஷேபமாகவாகிலும் அருளிச்செய்யாது விடுவரோ? அர்த்தமருளிச் செய்யாதொழிந்தாலும் மூலத்தை உதாஹரிக்கும்போதே அப் பொருளுக்கு ஸாதகமான அந்வயக்ரமத்தைக் காட்டும் முகமாகவாவது உதாஹரித்திருக்கலாமே. அதுவுமில்லையே. ஸ்வாரஸ்ய ஸித்தமான அர்த்தம் பிசகு என்றும், வ்ருதம் சரணம் பதங்களை மாற்றி அந்வயித்துக் கொள்ளும் பொருளே யுக்தமென்றும் நம் பூருவர்கள் திருவுள்ளம் பற்றி யிருந்தார்களாகில் அதை எவ்வளவோ அழகாக விளக்கி யிருப்பர்களே. பெரியவாச்சான்பிள்ளையா விவரணம் செய்யாது விட்டிடுபவர்?

"யாப்பிலக்கணத்துக்காகப் பதங்களை இடம்மாறி உபயோகிப்பது ஸர்வ ஸாதாரணம்" என்கிறார் நண்பர். இந்த வார்த்தைக்கு ப்ரக்ருத ஸ்தலத்தில் என்ன ப்ரஸக்தி? தபஸ்ஸ்வாத்யாயநிரதம் என்கிற ச்லோகத்தில் 'வால்மீகிஃ முநிபுங்கவம் நாரதம் பரிபப்ரச்ச' என்ன வேண்டுவது யாப்புக்காக "நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர்முநிபுங்கவம்" என்றுவிழுந்திருப்பதுவாஸ்தவம். இங்ஙனே பல்லாயிரமிடங்களுண்டு. "க்ருத்வா வ்ருதம் சரணம் கோஷணம் ஸமாச்ரயேத்" என்றால்யாப்பிலக்கணம் வழுவுவதுண்டோ? "ஸாம்ராஜ்யம் மாமகானாம் ததும்" என்பதை ஸந்ததம் மாமகானாம் ராஜ்யம் என்றும் மற்றும் பலவகையாகவும் சொல்லப் பொருந்துமாயினும் கவி ஸ்வேச்சாநுகுணமாகச் சொல்லிவைத்தார் என்பதுபோலே ப்ரக்ருத ச்லோக விஷயத்திற் சொல்ல நினையார்கள் ஸம்ஸ்க்ருத பாஷையின் சுவடறிந்தவர்கள்.

இதம் த்வத்ர வக்தவ்யம் ॥ பிறர் கருதுகிறபடி வால்மீகிக்கு விவக்ஷிதமாகில் இந்த ச்லோகத்தில் சரணபதம் தலைகாட்டவே தகாது, அதன் ஸ்தானத்தில் கோஷண மென்கிறபதமே இருந்து தீரவேண்டும், அதுவும் இரண்டாவது பாதத்தில் இருக்கவேணும். என்கிறவிது ஸர்வ்ருதயஸம்வாதஃ.

ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (5-34-31) "ஸவ்ருத ஹஸ்து க்ருத்வா விதூய ஹஸ்தம்வபுயாய சே | ஸந்திஷ்டாம் க்ருஷ்ணஸ்ய தத்ஸாதாநுஹேஸ்வர."

என்கிற ச்லோகம் ரஸிகர்களால் குறிக்கொள்ளத் தக்கது. [ஜீவிதாஹஞ்ச க்ருஷ்ணஸ்ய வதாய] என்கிற அந்வயம் இங்கு விவக்ஷிதம். காசீராஜனைக் கண்ணபிரான் கொன்றொழித்த பிறகு அவனது புதல்வனுடைய வார்த்தை இது. ‘என்னுடைய தந்தையைக் கொன்ற க்ருஷ்ணனைக் கொல்லும் பொருட்டு’ என்கிற அர்த்தம் இங்கு விவக்ஷிதம். ஆனால் இங்கு ஸமாஸஸந்நிவேசம் [வதாய ஜீ] என்று விழுந்திருக்கிறது. இங்கே வியாக்கியானம் செய்துள்ள மஹான்கள் எதிர்கால நிகழ்ச்சிக்குத் தக்கபடியே அவன் வாக்கில் பரவசமாகவே அப்படிப்பட்ட வாக்ய ப்ரயோகம் வந்ததென்று காட்டுகிறார்கள். இந்த ப்ரயோகம் கவி சாதுர்யத்தை நிலைநாட்டி நிற்கும். கவிசக்ரவர்த்தியான கம்பரும் இங்ஙனே தம் வாக்கின் வல்லமை விளங்குமாறு பல செய்யுட்கள் பாடியுள்ளார். விராதன் வதைப் படலத்திலுள்ள “ஆதி நான்முகன் வரத்தினெனதாவியகலேன்” என்ற செய்யுளே இங்கு ஒரு நிதர்சனமாகக் கொள்க. விராதனது செருக்கு மொழியாகிய இதனில், தான் இறப்பதை முன்னமே தெரிவித்துக் கொள்வதான அமங்கலப் பொருளும் தோன்ற நின்றது.

இப்படிப்பட்ட விபரீதப் பொருள்களும் கூடவே தோன்றுமாறு கவியியற்றுவது ஆஸுரப்ரக்ருதிகளின் விஷயத்திலுண்டேயல்லது எம்பெருமான் விஷயத்திலாவது பகவத் பக்தர்கள் விஷயத்திலாவது கிடையாது. ஆகவே, ப்ரக்ருதத்தில் ஸாமர்த்ய ஹரணமென்பதே ஸ்ரீராமபிரானுக்கும் வால்மீகி பகவானுக்கும் விவக்ஷிதமாயிருந்ததென்னும் பக்ஷத்தில் சத்ருஜீவஹரணமென்று விபரீதார்த்த போதகமாக ச்லோக ஸந்நிவேசம்இருப்பது கவிக்கு அசக்த்யுபாலம்பத்தையே நிலைநாட்டுவதாகும். கவிஸார்வபௌமரான வால்மீகி இந்த அவத்யத்திற்கு ஒருநாளும் இலக்காகமாட்டார். பலபல இடங்களில் ஸ்ரீராகவன் தன்னுடைய மநுஷ்ய பாவனைக்குச்சேர அஜ்ஞத்வ ப்ரகாசத்தைச் செய்துகொண்டிருப்பது போலவே இங்கும் அதுதன்னைச் செய்துகொண்டா ரென்கிற உண்மையைக் காட்டவேண்டியே வால்மீகி முனிவர் இங்ஙனே ச்லோக மியற்றினாரென்பதே தத்துவம்.

தம்முடைய சக்தியில் ஸந்தேஹலேசமுமில்லாதவரும் “ஸமுத்ரம் சோஷயிஷ்யாமி ஸாமர்த்யாஸ்த்ரமோக்ஷணே” என்று தோள்கொட்டிச்சொன்னவருமான பெருமாள் திருவாக்கில் ஜீவஹரணமென்று வருவதற்கு அவகாசமே யில்லையென்று வாதிக்குமவர்கள், அப்பெருமாள் திருவாக்கில் அப்படிப்பட்ட வாசகம் வந்ததாக முனிவர் ஏன் கவி இயற்றினாரென்று அம்முனிவரையே கண்டு கேட்கவேணும். தாரணீஸம்பந்தாதிவாதந ப்ரணாளியிதேயிது.

வால்மீகிராமாயணத்தை தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், வங்கம், முதலிய பல பாஷைகளில் பல மஹாகவிகள் கீர்த்தனை முதலியனவாகப் பாடியுள்ளார்கள். அவைகளைக் கண்டபாடஞ்செய்து ஓதுமவர்களும் பலருள்ளார்கள். ஒன்றிலாவது ஸாமர்த்ய ஹரணமென்று அந்வயித்துப் பாடினதாகக் கேட்டிலோம்.

பூருவாசாரியர்களின் காலத்தில் ஸ்ரீராமாயணத்திற்கு உடாலி வ்யாக்யானமே ப்ரஸித்தமாக இருந்தது. "ஜ்ஞாதிஷாஸீ யதொஜாதா" என்ற விடத்திற்கு "யதஃகூதஸ்ஜ்ஞாதா என்றுன் உடாலி." என்று ஈட்டிலும் அருளிச் செய்கிறார். அவ்வண்ணம் பூருவர்கள் மெச்சின வியாக்கியானத்திலும் இவ்வர்த்தம் கண்டதில்லை. ஸ்ரீகோவிந்தராஜரும் இப்படி யெழுதியிருக்கவில்லை யென்று பண்டே பரக்க நிரூபிதம். இப்படியெல்லா மிருக்க, "இத்தை முடித்தல்" என்று கைப்பிசகாகச் சிலர் எழுதியிருந்ததையும் அதற்குச் சேரச் சிலர் விவரணமிட்டிருப்பதையுமே நிதியாகக் கொண்டுபோருகிறோ மென்பாரை மறுப்பாரார்? ஸுஹ்ருதமாஹிகளைத் திருத்தக் கனவிலும் நினையோம்.

அடியேனுடைய தத்வப்ரதிஷ்டா க்ரந்தத்தில் பிறர் மனம்நோகத்தக்க வாசகம் ஒன்றுகூட இல்லாதிருக்க, அத்தகைய வாசகங்கள் பல இருப்பதாக நண்பர் எழுதுவது நியாயமன்று. இருந்தால் தீபிகை வாயிலாகவே உதாஹரித்துக் காட்டலாம். பண்டித பரிபாஷையில் "தஸ்கர ஸ்ஸம்பவ, ஸ்ஸஜ்ஜனஸ, ஶோசநீய" இத்யாதி ரூபங்களான வசந வ்யக்திகள் தாராளமாகவுண்டென்பதை ஸ்ரீபாஷ்யம், ஸஹஸ்ரநாம பாஷ்யம் முதலானவற்றில் பரிசயம் பண்ணினார் அறிவர். "தஷ்டம் ஸ்விஷித ஹமவத் ஹாவஸ் ஊாஜஸஸ் ஶெலாவ" என்றும், "நதெ நிரவ நாஹஞா, ஸ்வித ஶொவநீயாஃ" என்று முள்ளன பட்டர் ஸ்ரீஸூக்திகள். ஸ்ரீபாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் இதற்கும் மேலாகப் பல ஸ்ரீஸூக்திகள் காணலாம். மஹான்கள் அங்ஙனே அருளிச்செய்தாலும் நீசனேன் நிறையொன்றுமிலேனாகிய அடியேன் அப்படிப்பட்ட வாசகங்களில் ஏகதேஶமும் எழுத அநதிகாரியே யென்பது நிர்விவாதம்.

இந்த ஸூத்ரஶ்லோகார்த்த விஷயமாக இதற்கு மேற்பட எழுதவேண்டியதாதொன்றுமில்லை. நம்முடைய பூர்வாசார்யர்களின் திவ்ய க்ரந்தங்களில் பல இடங்களில் சொற்கள் மாறியும், உள்ள பங்க்திகள் விடுபட்டும், இல்லாத பங்க்திகள் வந்து புகுந்தும் ஆக இப்படிப்பட்ட விபர்யாஸங்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன வென்பதுபற்றி க்ரமேண விபுலமாக விஜ்ஞாபனம் செய்துகொள்வேன். "பலகாலமாய் காலக்ஷேபம் ஸாதித்துவருகிற மஹாமஹா வித்வான்களுக்குத் தோன்றாத விஷயங்களை எடுத்துரைக்க இவனார்?" என்று திருவுள்ளம் பற்றுமவர்களைப்பற்றி வக்தவ்ய மொன்றுமில்லை. விமர்ஶ ரஸிகர்கள் கவனிப்பார்களாக.

அபூர்வ ஆராய்ச்சிகள்.

ஸாமாந்ய கவிகளின் அருமையான வாக்குக்களில் நேர்ந்துள்ள சில பிறழ்வுகளை ஈண்டெடுத்துக் காட்டி ரஸிகர்களை விநோதம் செய்வோம். குவலயாநந்தத்தில் த்ருஷ்டாந்தாலங்கார ப்ரகரணத்தில் — "ஸஞ்ஜாதபத்ர ப்ரகராந்விதாநி ஸமுத்வஹந்தி ஸ்புடபாடலத்வம் | விகஸ்வராண்யர்க்கராபிமர்ஶாத் தினாநி பத்மாநிவ வ்ருத்திமீயு: ||" என்கிறவொரு ச்லோகம் உதாஹரிக்கப்பட்

டுள்ளது. இதில் ஸ்ரீஷ்மர்துவின் திநங்களுக்கும் வநங்களுக்கும் ஸ்லேஷஸம்ஸ்ரி யினால் ஸாம்யம் நிர்வஹிக்கப்பட்டுளது. இதில் "ஸஞ்ஜாதவக்ர ப்ரகாராஞ்சிதாநி" என்கிற ப்ராயோகிகவிசேஷணத்தை ஸஹ்ருதயர்கள் நன்கு பராமர்சிக்க வேண்டும். வநங்களுக்கு ஸஞ்ஜாதவக்ர ப்ரகாராஞ்சிதத்வம் உள்ளதுதான். இது திநங்களுக்கு எப்படி? என்று விமர்ஸிக்கவேணும். இங்கு வியாக்கியானம் செய்தவர் ஏதோ எழுதியிருக்கிறார். அதனால் விவேகிகள் த்ருப்திபெறார் கள். இங்கு ஒரு பிறழ்வு. ஸஞ்ஜாத என்பதை [ஸஜ்ஜாத] என்று திருத்திவாசித்துப்பாருங்கள். [ஸஜ்ஜை: சூதவக்ர ப்ரகாரை: அஞ்சிதாநி ஸ்ரீஷ்மர்துதிநாநி] வேனிற் காலத்தில் எங்குப்பார்த்தாலும் குடைமயமாகவே யிருக்குமன் றோ? ஸஜ்ஜங்களான [ஸஜ்ஜங்களான] சூதவக்ரப்ரகாரங்களோடே — குடைகளின் கூட்டங்களோடே, அஞ்சிதாநி என்றாயிற்று. வநவக்ஷத்திலும் ஸஜ்ஜை: — ஸாலை:, ஜாதை: — ப்ராதுர்பூதை:, வக்ரப்ரகாரை: — உபவன ப்ரதேசை: அஞ்சிதாநி என்றாகிறது. இப்போதுள்ள ஸ்வாரஸ்யாதிசயத்தை ரஸிகர்கள் நன்கு உணர்வார்கள்.

மற்றொன்றுங்காண்மின்; குவலயாநந்தத்திலேயே விஷமாலங்கார ப்ரகரணத்தில், "யதாமதீயே வரதராஜஸ்தவே" என்று தொடங்கி "ஸாநுப்ரியா ஸாம்ஸ்ம சந்த்ரஸரோஜஸோபாயோபாதாவு கிரணோத்கர ஸாஹஸாதம் | தத்ரோஷ்ணரைஸ் ஸஹஸாக்ஷணமேவ தாபம்ஸஞ்ஜாதமீக்ஷ்ய ஸவிதா து:" என்கிற ச்லோக முதாஹரிக்கப்பட்டுள்ளது. இது தேவப்பெருமாள் விஷயமாக அப்பய தீக்ஷிதர் இயற்றிய ச்லோகம். இதன் கருத்தாவது — பேரருளாளனே! ஸூர்யனனவன் உன்னுடைய திருவடித்தாமரையின் மிகச்சிவந்த சோபையைத் தான் அடைய விரும்பினான். [ஸூர்ய கிரணங்கள் இரவில் அக்நியை ஆவேசிக்கின்றனவென்று வேதத்திற் கூறப்பட்டிருப்பதை ஸ்மரிப்பது.] என்னசெய்தால் தன் கிரணங்கள் தேவப்பெருமாளுடைய திருவடிபோல் சிவக்கும் என்று பார்த்து, இரவெல்லாம் தன் கிரணங்களை அக்நியில் புகுவித்து ப்ரஹாதவயநும் நன்றாகக் காய்ச்சினான். நல்ல சிவப்பு உண்டாய்விட்டதென்று கண்டு அக்நியில் நின்றும் கிரணங்களை யெடுத்து வெளியில் பரப்பினான். அவை முதலில் ப்ரஸரிக்கும்போது சிவந்திருந்தாலும் க்ஷண காலத்திற்குள் சிவப்பு மாறிப்போகவே 'ஐயோ! நாம் மிகவும் சிரமப்பட்டுச் செய்த காரியம் அற்ப பலனைத் தலைக்கட்டிற்றே!' என்று ஹ்ருதயத்தில் தாபத்தை யடைந்திட்டான். அந்தத்தாபமே வெய்யிலாகக் காண்கிறது. இவ்விதமாக அவன் முயற்சி செய்வதும், அது அற்பபலனாவதும், அதனால் அவன் தாப மடைவதும் ஒருநாள் இரண்டுநாள் அன்று; அநாதிகாலமாக நாடோறும் இந்த ஸம்பவம் நிகழ்ந்து வருகின்றது என்பதாம்.

இந்த ச்லோகத்தில் "ஸஹிமேதாவ:" என்பதற்கு எங்கே அந்வயம்? என்ன அர்த்தம்? என்று பராமர்சிக்கவேணும். வியாக்கியானம் செய்தவர் எழு

தியிருக்கும் பொருள் விரஸமேயாகும். “ஸஹிஊஜதாத:” என்று திருத்தி வாசித்துப் பாருங்கள். இப்போது மிகவும் ரஸமான பொருள் கிடைக்கும். ஸூர்யன் செய்தகாரியம் பயன்படவில்லை யாகில் அவன் அதை விட்டுத் தொலைக்கலாமே; ஒவ்வொருநாளும் முயற்சி செய்வதும் வருந்துவதுமாக இருப்பானேன்? “தாவமஹஜதநஷிநு” என்கிறீரே, இவ்வளவு மூடனா அந்த ஸூர்யன்? என்று கேள்வியுண்டாக, அதற்கு விடை கூறுகிறார் [ஸஹிஊஜதாத:] என்று. “ஶநிஊஜள வமஶகாயள ஹாயாவஸௌரவிதொக:” என்ற அமரகோஶத்தின்படி ஊஜ னென்னும் பெயரையுடையனாகிய ஶநியானவன் ஸூர்யனது புத்திரன் என்பது ப்ரஸித்தம். “காரணகுணா: காயெஷு ஸஂக்ரமந்தி” என்கிற நியாயத்தின்படி பிதாவான ஸூர்யன் மூடனானபடியால்தான் புத்திரனும் மூடனாகப்பிறந்தான். புத்திரனுடைய ஸர்வஸித்தமான ஊஜத்வத்தைக் கொண்டு பிதாவின் ஊஜவஶித்வத்தை அனைவரும் அறியலாமென்று வெகு சமத்காரமாகக் காட்டினாராயிற்று.

இங்ஙனே கவியின் விவக்ஷையைக்கொள்ளாவிடில் (ஸஹி) என்றது மிகவும் பயனற்றொழியும். இந்தத் திருத்தங்கள் ஸஹஸா அடியேன் செய்பவையல்ல. வரஊரஸிக ஸஹநணீ நாஊஹிவர்யா கூநஷிஷ்ஜெ கெவவு ।

ஒரு அக்ஷரத்தின் விபர்யாஸத்தினால் ஏற்படுகிற ரஸஹாநம் எவ்வளவென்பதை விவேகிகள் ஆழ்ந்துணரவேணும்.

பாடம் மாறுபடாமலிருக்கு மிடங்களிலும் வ்யாக்யாதாக்களால் விளைவிக்கப்படுகிற கஷ்டவிபர்யாஸங்களுக்கும் இங்கு ஒரு நிதர்ஶநம் காட்டுவோம். ரகுவம்ஶம்இரண்டாவது ஸர்க்கத்தில் — “ஸஞ்சாரபூதாநி ஦ிகந்தராணி க்ருத்வா ஦ிநாந்தெ நிலயாய கந்து । ப்ரசக்ரமெ பல்லவராகதாம்ரா ப்ரபா பதங்கஸ்ய முநெஶ்ச தெநு:॥” என்பது ஒரு ச்லோகம். இதில் “பல்லவராகதாம்ரா” என்பதற்கு [பல்லவத்தினுடைய சிவப்புப் போலே சிவந்த] என்று மல்லிநாதர் அர்த்தம் பண்ணுகிறார். ஒரு தர்மத்திற்கும் மற்றொரு தர்மிக்கும் உபமாநோபமேயபாவம் கல்பிப்பது ஸம்மதமாகுமோ? பல்லவதாம்ரா யெநு: என்னலாமே யொழிய வேறுவகையாகச் சொல்லலாமோ? (ஊநய வக்ஸஜொராஜா) என்னலாமே யல்லது ஊநயஶொஜயவக்ஸஜர: என்னத் தகுதியில்லையன்றோ? ஒரு பிரயோகமும் இங்ஙனே கிடைக்கவும்மாட்டாதன்றோ? மஹாகவியின்வாக்கான ப்ரக்ருத ச்லோகத்தில் பொருள் அதுவன்று, வஜ்ரராகம், வைஷ்ராகம் என்பதுபோலே பல்லவராகம் என்பது ரத்நவர்ணரத்நவிஶேஷம் என்று பஹுஶ்ருதர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பொருளே இங்கு விவக்ஷிதம். இப்போது கஸாமஞ்ஜஸ்யமேயில்லையன்றோ

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர்திருவடிகளே சரணம்.

தத்வநிவேதநம்.

—(0)—

நிகமாந்தஸூரி நிரவத்யஸூக்திஷு தோஷம் ப்ருவத்ஸு தத்வநாஶநஹேதுதாம்।
விதுஷாம் வசாம்ஸ்யபி த்ருஷ்ட்வா ப்ரவதாம் இதி தத்வநிவேதநம் ஸமாஹிதம்॥

அடியேனுடைய ஸதாசார்யஸூக்திரக்ஷா, ஸ்ரீதேசிகஸூக்திஸித்தாஞ்ஜநம் முதலிய க்ரந்தங்களை ஆழ்ந்து அநுபவித்திருக்கின்ற மஹான்கள் ஸந்நிதியில் கைகூப்பிச் செய்யும் விண்ணப்பம்.

ந்யாயவிவரண ப்ரகரணத்தில் ஆச்சான் பிள்ளையருளிச்செய்துள்ள திவ்யஸூக்திகளின் மீது பிறர்கூறிய தூஷணங்கள்யாவும் பயனற்றவை என்பதை ஏற்கனவே நாம் விரிவாக விளக்கியுள்ளோம். “வணங்குந் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ் சமயம் பலபலவாக்கி” என்று ஆழ்வாரருளிச் செய்தபடி பகவத்ஸங்கல்பத்தினாலேயே உலகின்கண் ஏற்பட்டுள்ள பல்வகைச் சமயங்களில் அவரவர்கள் ஸம்ப்ரதாயப்படி சொல்லிப்போரும் அர்த்தங்களில் நாம் பகைபாராட்டுவோமல்லோம். பிராட்டிக்கு மோக்ஷோபாயத்வமுண்டு என்றும் ஜகத்காரணத்வமுண்டு என்றும் சில ஸம்ப்ரதாயஸ்தர்கள் நிர்வஹிக்கில் யாதாஜமாக நிர்வஹிக்கட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆச்சான் பிள்ளையின் அருளிச்செயல் ஶ்ருதப்ரஜ்ஞோபஹாஸ்யமென்றும் ஸஜ்ஜவேதாந்தமென்றும் பிறரால் செய்யப்பட்ட அஜ்ஞாநதூஷணங்கள் அஜ்ஞாநப்ரயுக்தியினால் ஏற்பட்டவை என்கிற விதனை நிரூபிக்கவே நாம் ப்ரவர்த்தித்தோம். இவ்விசாரம் காடுபாயாதபடிக்கு இதனை நாம் ஸம்க்ஷேபித்து ஸ்ரீதேசிகஸூக்திஸித்தாஞ்ஜநத்தில் மிகத் தெளிவாக விவரித்தோம். “ஶூர்ப்பாநுவர்ஷ: கோவிதாராநா அஶேஷ:” என்னுமாபோலே ஒன்றுகிடக்க வொன்றை எழுதிக்கொண்டிருந்த பிரதிபக்ஷிகளின் கௌடில்யமும் அடங்குமாறு ஒரு ப்ரச்நபத்ரிகை வெளியிட்டு அதிற்கண்ட ஐந்நூறு கேள்விகளுக்கு ஸாரவான நெறியில் உத்தரம் வெளிவருமாயின் நாம் ஶ்ருதப்ரஜ்ஞாநவஸம்ஹாரம் செய்து விடுவதாகவும் அதில் திடமாக ப்ரதிஜ்ஞை செய்திருக்கிறோம். பிரதிபக்ஷிகள் உண்மையில் பிராமாணிகர்களாக இருந்தால் அந்த வினாக்களுக்குப் பத்திகட்டுவரியில் அழகாக விடையெழுதி விட்டுப் பிறகு எதையாவது எழுதலாம். உண்மையில் உத்தரமுரைக்க அவர்களுக்கு விஷயலவலேசமுமில்லாமையாலும், வெறுமனேயிருந்துவிட்டால் வெட்கம் பாதிக்கிறபடியாலும் ஏதாவது ஒன்றையெழுதிக் கண்ணைத்துடைத்துக் கொள்வோமென்று தீர்மானித்த ப்ரபல பண்டிதர்களுக்கு ப்ரதிநிதியாக ஸ்ரீமான் உத்தமூர் வீரராகவாசாரியரென்பவர் சென்ற மார்கழி மாதத்து ஸம்ரக்ஷணி

பத்திரிகையில் ஓர் விண்ணப்பம் வெளியிட்டுள்ளார். இது நான்கு பக்கங்கள் கொண்டது.

நம்முடைய ஸித்தாந்தத்திற்கு இவர் உண்மையாக உத்தரம் உரைக்க வல்லவராயிருந்தால் ஸ்வஸித்தாந்தஸமர்த்தநங்களை ஒரே பக்கத்தில் வெகு அழகாக எழுதி முடித்திருக்கலாம். அதற்குச் சரக்கு இல்லாமையாலே திவ்யசாஸ்த்ரஸந்தர்ப்ப வ்யாக்யாநங்களிலே சிலவீண்வம்பளப்புகளை ப்ரஸங்கிக்கப்புகுந்துவிட்டார்.

இவரும் இவரைச்சேர்ந்தவர்களும் இதுவரையில் எழுதி வெளியிட்டுள்ள சுவடிகளால் சில பாமரர்களாவது வஞ்சிதர்களாவதற்கு வழியிருந்தது. இப்போது அதுவுமில்லையாயிற்று. தம்முடைய நிலைமையைத் தாமே நன்கு வெளியிட்டுக்கொண்டாராயிற்று. இவர்தாம் ஸம்பாதித்திருக்கும் ஸ்வாபிப்ராயங்களை எழுதி வெளியிடலாமா வேண்டாமா என்று ஆலோசித்துக்கொண்டிருப்பதாகவும், இப்போது எழுத விருப்பமில்லையென்பதாகவும் தமது விண்ணப்பத்தைத் தலைக்கட்டியுள்ளார். அந்தோ! ஸ்வஸித்தாந்தஸ்வஸித்தாந்தவைலக்ஷண்யமிருந்தபடி மிகவு மழகியதே. இப்படியும் ஒரு விண்ணப்பமெழுதுவாருண்டோ?

ப்ரக்ருதவிஷயத்தில் நாம் எழுதியுள்ள க்ரந்தங்கள் நான்கு. 1. பாதுகாஸஹஸ்ராவதாரதத்வம். 2. ரக்ஷாவிரோதபரிஹாரப்ரகாசிகா. 3. ஸத்ஸம்ப்ரதாயஸம்ரக்ஷா. 4. ஸ்ரீதேசிகஸூக்திஸுதாஞ்ஜநம். இவை தவிர, வேதாந்த தீபிகை, திருவரங்கம் பெரியகோயில் முதலான பத்ரிகைகளில் வெளியிடுவித்த வியாஸங்கள் தனிப்பட்டவை. மேற்குறித்த நான்கு க்ரந்தங்களிலும் விஷய நிரூபணவைஷம்யங்களில் ஏதோ விரோதமிருப்பதாக இந்த உத்தமரார் விஜ்ஞாபிக்கிறார். விரோதலேசமும் கிடையாது. 'விப்ரதேவ' என்கிற சப்தவிஷயத்திலே வைதிகஸார்வபௌமர் தேசிகனுக்கு ஸாஷ்டாங்கஸம்பாவனை பண்ணினார்—என்று நாம் பாதுகாஸஹஸ்ராவதார தத்வத்தில் எழுதியிருப்பதாக இவர் காட்டுகிறார். ஸுந்தராசாரியர் என்கிற ஒருவர் எழுதியிருந்த பங்க்திகளை நாம் அப்படியே அங்கு எடுத்தெழுதியுள்ளோம். "அதில் பக்கம் 19-ல்) "இதி ஸ்வாமிதேசிகஸூக்திஷு ஸாரஜ்ஞாஸ்ஸ்வாமிய:" என்றும் ஸ்பஷ்டமாக எழுதிமுடித்திருக்கிறோம். அந்த பாரா முழுவதும் ஸுந்தராசார்யருடைய வாக்யாநுவாதமே. அதனைத்தெரிந்துகொண்டும் இவர் அந்யதா எழுதியிருப்பது யாரை வஞ்சிக்க? ஸம்பாவனைபண்ணியிருப்பது பொய்யோ?

ரக்ஷாவிரோதபரிஹாரப்ரகாசிகையில் (15-வது பக்கத்தில்) "வைதிக ஸார்வபௌமர் தூஷித்த விஷயம் வேறு, தேசிகன் ஸச்சரித்திரரக்ஷையில் அருளிச்செய்தது வேறு, ஆக தேசிகனை அவர் தூஷித்தபடியல்ல." என்று நாம் எழுதியிருப்பதாக இவர் வரைந்திருப்பது முழுமோசம். அப்படி நாம் எழுதி யேயிருக்கவில்லையென்பதைக் கண்ணுடையார் காணலாம். விப்ரதேவ ப்ரவீ-

விஷ்ணுசித்தீயே ச தத்ராபி ப்ரயோகங்கள் ஸாதாரணங்களே என்றும் இங்கு அஸா-தாரண மென்றும் தேசிகனுடைய திருவுள்ளம். அதை நன்றாகக் கண்டித்தே வைதிகஸார்வபௌமர் எழுதியுள்ளார். அஸாதாரண மென்பது ஸம்ப்ரயோகவிஷய மென்றே அவர் எழுதியிருக்கிறார். இவ்விஷயங்களையெல்லாம் நாம் விளக்கமாகவேயெழுதி, வைதிகஸார்வபௌமருடைய வாக்யங்கள் தேசிகஹ்ருதய வஸ்துவிப்ரதிபத்த்யாவ்ருத்தாநாய்ச்சமே பிறந்தவை என்பதை நன்கு நிலைநாட்டியிருக்க, இவர் மாறுபாடாக எழுதுவது என்னே? இந்த உத்தமூரர்க்கு விப்ரதி மெய்யும் விபரீதஜ்ஞாநமும் தவிர வேறுகிடையாதென்பதை ப்ராமாணிகர்கள் நன்குணர இவ்விஷயமொன்றே போதும். நாம் எழுதாத விஷயத்தை (பக்கலக்கமும் கொடுத்து) இவர் அதியஸ்ஷ்டராய் எழுதத்தொடங்கிவிட்டார். "உஹயோர நயோ: ப்ரவ்ருத்திநிமித்தயோ: ப்ரத்யேகப்ரதிபத்யாவஸ்யாந ஸ்வஹநாவதாநாவஸ்த்ராஸ்ஸம்பந்த:" என்று கல்வெட்டாக அதில் நாம் எழுதியிருக்கிறோம். ஸச்சரித்ரரக்ஷாஸூக்திகள் தோழப்பருடைய வாக்கியங்களால் ப்ரதிபத்த்யாந மடைந்தே தீருகின்றன என்பதை எவ்வளவோ விரிவாக நிரூபித்திருக்கிறோம். அப்படியிருக்க இவர் இப்போது மாறுபாடாக எடுத்துக்காட்டுவது வஸ்துஸ்திதி வைகல்யத்தாலா, ஸம்ப்ரதாயவைஷம்யத்தாலா, விப்ரதிபத்தியாலா என்பதை விவேகிகளே நிஷ்கர்ஷிக்கவேணும்.

ஆச்சான்பிள்ளையின் ஸ்வாபிமதம் எது? என்பது ஒரு விசாரம் ஸ்ரீநாராயண அரணாரு என்பதே என்று நாம்நிரூபித்துவந்தோம். அதுவன்று என்றும், ஸ்ரீஸ்ஹநாராயண அரணாரு என்பதே என்றும் உத்தமூரர் ப்ரஹ்மஸ்ஃகிகள் வலிதாக எழுதத்தொடங்கினார்கள. "ஆச்சான்பிள்ளையின் ஸ்வாபிமதம் ஸ்ரீஸ்ஹநாராயண அரணாரு என்பதுதான் = என்றே கொள்ளுவோம்; அப்போதும் இவர்களுடைய தூஷணங்களுக்கு அவகாசலேசமுமில்லையே" என்பதை நாம் நிஷ்கர்ஷித்துக்கொண்டு ப்ரதிபக்ஷிகளின் வாதங்களுக்கு விராமமிட்டோம். இப்போது இவர்கள் செய்யவேண்டிய கார்யம் என்ன? 'ஸ்ரீஸ்ஹநாராயண அரணாரு என்கிற வ்யபதேசமே அஸாதாரணம்' என்று ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபிக்கவேண்டியதன்றோ கடைசியாக இவர்களுக்குக் கர்த்தவ்யமாய் வந்து விழுந்தது. "இன்ன இன்ன ப்ரமாணங்களின்படி ஸ்ரீஸ்ஹநாராயண அரணாரு என்பது அஸாதாரணப்ரயோகம்" என்று பத்தெட்டுவரியில் நிரூபித்துமுடித்து நம்மை வாய்மூடச் செய்திருக்கவேண்டுமே இவர்கள். அந்தோ! அது செய்யாமல் ஓர் விண்ணப்பமென்று நான்கு பக்கம் எதுக்கு எழுதுகிறார். கேட்ட கேள்விக்கு உத்தரமுரைக்க இயலாவிடில் வாளாகிடப்பதன்றோ அழகு.

விவாதாஸ்பதங்களான காரிகைகள் தேசிகனால் இயற்றப்பட்டவையல்ல என்றும் ப்ரக்ஷிப்தங்களென்றும் ஓர் புதிய கல்பனையை நாம் ஸதாசார்யஸூக்திரக்ஷையில் செய்ததாக இவர் எழுதுவதும் தவறு. மூன்று வருஷங்களுக்கு முன்பு நாம் வெளியிட்ட ரக்ஷாவிலோசநபாவப்ரகாசிகையிலேயே (பக்கம்

13-ல்) அந்த வ்யாஸ்தாவம் செய்திருக்கிறோம். அதுவும் நமது அபிப்ராயமாக எழுகிற்றன்று; வேதாந்த தீபிகாப்ரதாபிரான ஸ்ரீஉவே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஸ்ரீமுக மூலமாக நமக்கு உணர்த்தியிருந்ததை எடுத்துரைத்தோம் மத்தனை. அதில் ஔசித்ய ப்ரதிபத்தி நமக்குண்டு.

ஆரியர்காள்! பண்டிதரென்று பேர்சுமக்கின்ற உத்தமரர் வ்யுத்பாவிஷய விமர்சனத்தில் மாத்திரம் தாம் கண் செலுத்தவேண்டியதை விட்டிட்டு எதுக்கு வீண்வம்பளப்புக்களில் வ்யாவரிக்கிறார்? அடியேனுடைய ஸூக்திகள் எக்கேடாவது கெடட்டும். வஸ்துஸ்வரூபமாக எழுதுவதே அடியேனுடைய தொழிலாக இருக்கட்டும். வ்யாக்யானமாக நோக்கவேண்டிய விஷயம் யாது? ஆச்சான் பிள்ளையின் வ்யாக்யானம் பிசகுதான் என்பதையும், தத்விஷயகமாக தேசிகன் ஸாதித்ததும் தத்வ்யாக்யானமாக ஸாரார்த்தநிஷ்கர்ஷ ஸாதித்ததும் ஸமஞ்ஜஸந்தான் என்பதையும் நிரூபிக்கவேண்டியதொன்றேயன்றோ இவருடைய கடமை. அந்தக்கடமையைச் செலுத்தியருளவேணுமென்றும் வீண்வம்பளப்புகளில் ஸூக்திவிஸ்தாரம் செய்யலாகாதென்றும் நாம் விஜ்ஞாபனத்தில் பன்முறையும் பிரார்த்தித்திருந்தும் இவர் தமது கடமையில் நின்றும் நழுவி ஸ்வைரவாத வ்யவஹாரங்கள் செய்யப்புறப்பட்டதைக்கொண்டே விஷயத்தின்போக்கை ப்ராமாணிகர்கள் நிஷ்கர்ஷித்துக்கொள்ளலாமன்றோ.

*ஸூக்தி ஜைத்ரவஹாஸ்யம் தக உத்தராதிகளான காரிகைகளைச் சில பரமைகாந்திகள் கதவடைத்துக்கொண்டு சில யதாஜாதர்களின் காதிலே ஓதலாமேயன்றிப் பண்டித கோஷ்டிகளில் இனி வாய்திறக்க வழியில்லை என்னும்படி நாம் செவ்வனே செய்து முடித்திருக்க, அந்தோ! இவரது விண்ணப்பம் மண்ணப்பமே.

ஸாராஸ்வாதிநியைப்பற்றிப் பிறகு விசாரிப்போமென்கிறார். வஷ-ஆகதமானாலும் அதில் வாய்திறக்க வழியில்லையென்பது ஸர்வாவிதமே. "ஸாராஸ்வாதிநி எப்படியாவது போகட்டும்; ஸ்ரீஸாரஸாரஸ்ரு காரிகையை மாத்திரம் வைத்துக்கொண்டு பேசுவோமே" என்று வந்தாலும் நமக்கு இஷ்டமே. அப்படியும் வரமாட்டாமல் பாழ்ங்கிணறு துறுவாரப் புகுந்தவர்கட்கு நாம் என் சொல்லுவது?

இந்த ப்ரதிபக்ஷிகளுக்கு ப்ரதிவாதம் பண்ண நம்மால் ஆகாமல் நாம் அன்யர்களை வேண்டிக்கொள்ளுகிறோமாம்; அது இந்த உத்தமரர்க்கு எப்படியோ தெரிந்து விட்டதாம். இதை இவர் பெருங்களிப்பாக எழுதுகிறார். நமக்கு தைதந்யமுண்டான நாள் தொடங்கி ஸுஹ்ருத்துக்களான பலபண்டிதர்களையும் நாம் வேண்டிக்கொள்வது வாஸ்தவம். "ஜ்ஞாயஸ்வெகாவி ஜமயா:" என்னுமாபோலே ஒரு படிப்புமில்லாத ப்ராரப்த பண்டிதப்ரப்ருதிகளுங்கூட க்ரந்தமெழுதப்புறப்பட்டுவிடுகிறார்களே, நல்ல ஸுஜ்ஞர்களாயிருக்கின்ற நீங்கள் தர்சனோப

காரமாகச் சில க்ரந்தங்களை இயற்றலாகாதா என்று ஸஹ்ருதயர் பலரை நாம் வேண்டிக் கொள்வது மெய்யே. ஆனால் அவர்கள் என்ன பதில் அருளுகிறார்களென்றால், "கலையறக்கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்" என்னப்பட்டவற்றுக்குத் தோள்தீண்டிகளான சுவடிகளை நாம்பாரோம்; அவற்றையெல்லாம் நீயே பார்த்துக்கொண்டு நீயே புகழ்ந்து மிகழ்ந்தும் போதுபோக்கிவா" என்றே அருளிச்செய்கிறார்கள்.

நாம் ஸ்வகீயபுத்திபாலன்றிக்கே பரோபஷ்டம்பங்கொண்டே க்ரந்தங்கள் எழுதுவதாகவும் இவர் ப்ரஸித்தப்படுத்துக. இதெல்லாம் நமது க்ரந்தங்களுக்கு உத்கர்ஷாவஹங்களத்தனை போக்கி வேறல்ல.

"இவர் யார்மூலமாக எப்படி இவ்விஷயமறிந்தாரோ அதெல்லாம் நமக்கு முன்னமே தெரியும்" என்றெழுதுகிறார். நாம் ஸர்வஜ்ஞராக ஜனிக்கவில்லை. "நாண்பெரியோமல்லோம் நாம் நன்றுந் தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே" என்று தேசிகன் பணித்த கணக்கிலே பல மஹான்களிடமிருந்து பலவிஷயங்களையும் ஸதாசார்யத்வாரா க்ரஹிப்போமாகில் யாது பிழை? நாம் மயர்வற மதிநலமருளப் பெற்றோமென்று சொல்லிக்கொண்டோமா? நினைத்துக்கொண்டோமா? உத்தமூரர்க்கு மேல்விஷயமொன்றும் தோன்றாமற் போகவே இவையெல்லாம் விஷயமாயினபோலும். நாம் ஸித்தாஞ்ஜநமெழுதி வெளியிட்டபின் மதுரை ஸதஸ்ஸுக்குச் செல்லநேர்ந்தது. அப்போது வழியிடையில் சிதம்பரத்தில், மஹாமஹோபாத்யாய. ப்ரஹ்மஸ்ரீ. [illegible]வாணீதீக்ஷிதரவர்களையும் மற்றும் பலவித்வான்களையும் ஸந்தித்தோம். ஏற்கனவே அவர்களுக்கு ஸித்தாஞ்சனம் கிடைத்திருந்தபடியால் தத்விஷய ஸம்பாஷணைகளும் செய்ய ப்ராப்தமாயிற்று. ஸ்ரீ[illegible] ஸரணாகதி என்கிற ஆபாதநத்தைப் பழிக்க ஸதாசார்யஸம்பந்தவிசக்ஷணர்களாலுமாகாது என்றே பலரும் பேசினர். இப்படி நாம் ஆங்காங்கு அபிஷிக்கிறோமென்பதற்காக இவர் வருந்திப் பயனென்? விஷய ஸ்வாரஸ்யம் கடைசியாக எதிலே வந்து முடிந்ததென்று பாருங்கள்.

*விதண்டைதிஹ்யஸம்ஹாரஸ்தாநகளாஸமும் நமக்குள்ளதாக இவர் எழுதுகிறார். நாம் எழுதியுள்ள க்ரந்தங்களில் [ப்ராஸ்யவஹ்னிதர், ஸ்ரீமத்வஸாரவஸ்து வெதீ, ஸ்ரீமத்வஸாரவஸ்து விதர்த்யாவஸிஷ்டம், ஸாக்ஷேவஸ்யாதோஷணோ: ஸ்ராங்க ஸ்ராங்கிதநந்த வாஷிலஸாஸைந ஸைஷஸீக்ஷாஹாவஸ்யப்ரச!] இத்யாதிகளான வாக்குக்களில் எதைப்பற்றி இவர் விதண்டைதிஹ்ய வணிதந மென்கிறார் என்பது தெரியவந்தால் ப்ராமாணிகர்களைக்கொண்டு ஒவ்வொன்றையும் நிரூபித்துக் காட்டலாம். ஸித்தாஞ்சனத்தில் (பக்கம் 23-ல்) இவரைப்பற்றின வரலாறு ஒன்று எழுதப்பட்டுளது; அதைப் பொய்யென்கிறாரா? *உதந்தம் வதஸவாஸ்ய விஷயம் ஸுப்ரஸித்தமல்லவா?

தௌர்பிக்ஷ்ய ஸத்த்வ ஸக்திவிசேஷங்களுக்குள்ள தாரதம்யம் நாம் செய்திருப்பது
இவர்க்கு தூஷணமாகத் தோன்றினால் தோன்றுக. நம்மைப் பிறர் தூஷிப்பதும்
பிறரைநாம் தூஷிப்பதும் ஸஹஜமேயாயிற்று. ஸதாசார்ய விஷய விஷயங்களினை
வஸ்த்ராபஹாரம் செய்வது வஸ்திதலக்ஷணமன்று. திருப்பதியில் ஸ்வாமி
விஷ்ணுவாஹணியாக எழுந்தருளியிருந்தவரும், உவே. கபிஸ்தலம் ஸ்வாமிக்கு ஆசா
யரும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரியென்று தேசமெங்கும் புகழ் பெற்றிருந்தவருமா
ஸ்ரீமதுபயவே. புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியை அவலீலையாக தூஷித்
எழுதி வெளியிட்டிருக்கின்ற இந்த உத்தமூரர் ஸதாசார்யர்களைப்பற்றிப் பேச
தகுதியுடையவரோ? முன்னே தூஷிக்க ஆரம்பித்தவர்யார் என்றும், யா
டையதூஷணம் அதிகம் என்றும் உதாஹரிப்பதங்களில் சென்று நிஷ்கர்ஷி
பதா நமக்குப்பணி?

எடுத்த விஷயம் என்ன? அதற்கு என்ன உத்தரம்? என்னுமிவ்வளவே நா
பார்ப்பது. இவருடைய விண்ணப்பம் நான்கு பக்கங்களினாலும் தேறின வி
யம் என்னவென்றால், "நம்முடைய ஸித்தாந்தத்தின்மீது உத்தரமுரைக்
இவர்க்கு விஷயமில்லை" என்பதே கல்வெட்டாகத் தேறிநின்றது. அ
(பக்கம் 12-ல்) நாம் வெளியிட்டிருக்கும் ப்ரஸ்தாவத்துக்கு வேறு எந்த மஹா
னாவது ஸூசகத்துடன் மிக்க சுருக்கமாகவே விடையிறுத்தால் போதுமே.

ஸம்ரக்ஷிணீப்ரத்யாயிவர் ஜ்ஞாநவயோவ்ருத்தராயிருந்தும் ஒவ்வொ
விஷயத்திலும் வழியை விட்டுவிலகியே செல்லுகின்றார். மார்கழி மாதத்து ஸ
சிகையின் ரக்ஷாபத்ரத்தில் அவர் எழுதியுள்ள விஜ்ஞாபனத்தைப்பாருங்கள்
"ஸூநீதாம்தாம் நிஜாக்ஷரைஃ" என்ற ஸ்ரீபாஷ்யஸூக்தியில் தகாரங்
வீணென்று நாம் ப்ரமித்திருக்கிறோமாம். நம்முடைய வாக்குஸநி எம்பெரு
னையும் பீடிக்கப்பார்க்கிறதாம். இவ்வளவு ஆக்ரஹங்கொண்டு இவர் எழு
என்ன ப்ரஸக்தியென்று பாருங்கள். ஸுஷ்லோகியில் தகாரங்கள் வீ
விழுந்திருக்கின்றனவென்றும், அதனாலும் அந்த க்ரந்தம் ஹட்டர் ஸாதித்
தன்று என்றும் உத்தமூரர் ப்ரஸ்தாவித்திருந்தார். அதற்கு நாம் பதில் எழு
வருமிடத்து, (ஸித்தாஞ்ஜநம், பக்கம் 32-ல்) "ஸ்ரீபாஷ்யத்தில் ஸூநீதாம்தா
ஜாக்ஷரைஃ என்றதையும் தூஷிப்பவர்களே இவர்கள்" என்று எழுதினோ
இங்கே நமக்கு என்ன ப்ரமம் சொல்ல இடமுளது? தகாரம் வ்யர்த்தமென்
நாமா தூஷித்தோம்?

ப்ரஸ்தாநவிஷயம் எது விசாரத்திற்கொண்டதோ, அது மூலையிலடங்கி
போய் வீணான சில்லரை விஷயங்களைக்கிளப்பி வம்புப்போது கழிக்க நினைப்பவ
கட்கு நாம் அவகாசப்ரதாநம்பண்ணமாட்டோம்.

ஸம்ரக்ஷிணியில் ரக்ஷாவிசேஷமென்றொரு நூல் க்ஷணபஃக்ஷணபஃ வெளிவந்
கொண்டிருப்பதையும் கண்டுவருகிறோம். நம்முடைய க்ரந்தங்களை

அம்ஸம் கடாக்ஷித்த மஹான்கள் அதனால் நிலைகலங்கார்கள். தேசிகனுக்குத் திருவுள்ளமல்லாத விஷயங்களையெல்லாம் அவருடைய திருவுள்ளமாக இவர்கள் ஸாதிக்கப்பெரும்பாடுகள்படுவது வீண் வீண் வீண். அதஶ்ஶ்லோகீபாஷ்யத்தில் நிர்ணயித்தருளினர் என்றும், ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் அநுக்ரஹித்தருளினர் என்,றும் இவர்கள் ஏதோ எழுதிவருவதெல்லாம் ஶரண்யார்த்தி தம் க்ஷதம் ஶவஶீர ஶ்ருதி தம் ஸ்வாத்மவநாஶிதமத்தனையே. "வஞ்சவ்ருத்தேஷு வக்ஷ்யேஷு கல்பிதேஷு ஸ்வதாணவாந்" என்பதே சதுச்ச்லோகீபாஷ்ய நிமநத்தில் நிஷ்கர்ஷித்தது. ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் மூலத்தில் ஸ்வாமிஸாதித்ததும், வியாக்கியானத்தில் ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி நிஷ்கர்ஷித்ததுமெல்லாம் நமது நூல்களில் பரக்க ப்ரவஞ்சிதம். மேல்விஷயங்கள் சொல்லி மகிழ்விக்கவேண்டியிருக்க அதைவிட்டு, நாம் பூர்வபக்ஷகோடியில் எடுத்துக்காட்டின விஷயங்களையே ஸித்தாந்த கோடியில் எழுதி ஸ்வநூமாக்கி வெளியிடுவார்க்கு என்ன ஸூத்ரநஷ்டமோ?

மேலும், இந்த விஷயங்களில் நமக்குக் கண்ணோட்டம் சிறிதுமில்லை. பிராட்டிக்கு உபாயத்வமுண்டு என்று ஸ்தாபித்துப் பதினாயிரம் சுவடிகள் இவர்கள் எழுதிக்கொள்ளட்டும். பிராட்டிக்கு எல்லைகடந்த உத்கர்ஷத்தையே உரைக்கிறார்களென்று நாமும் போர உகந்திடுவோம்.

"ஸவிசேஷஜநதாம் ஸம்ப்ரவ்ருத்தீ: ஸ்வப்ரதிபக்ஷ ஸமஸ்தவ்ருத்திபாவ வஸந்த ஸவ்யாஸவ்ய கர்மநிஹதிர்பி: யஸ்யாவீக்ஷ்ய உவாச தத்தமிதவராயீநோ வியதே விமுஷ" என்றருளிச் செய்த ஆழ்வானுடைய புத்திக்கும் எட்டாதவிஷயங்கள் இவர்களுடைய மேதைக்குப் புலப்பட்டன வென்று கொண்டும் மகிழ்ந்திடுவோம். "எம்பெருமானுக்குக்கூட உபாயத்வமில்லை, பிராட்டிக்கேதான் அது உள்ளது" என்றும் முழுமனமாக இசைந்திடுவோம். இதற்காக ப்ரதிபக்ஷிகள் சிறிதும் முயற்சி கொள்ளவேண்டா.

"பிராட்டிக்கு உபாயத்வத்தை நன்கு ஸ்தாபித்து நாம் வலிதாக எழுதியுள்ள விஷயங்களை மறுப்பதற்கு சக்தியில்லாமல்போகவே அதில் தமக்குக் கண்ணோட்டமில்லையாக இவர் எழுதத்தொடங்கி விட்டார்" என்று ப்ரதிபக்ஷிகள் கோஷிக்கப் புறப்பட்டாலும் நமக்கு ஸந்தோஷமே. "ஆடத்தெரியாத தாஸி கூடம் கோணலென்றாள்" என்ற பழமொழியின்படி, "க்ரந்தஜ்ஞைரபஹாஸ்யம் தத்" என்ற வார்த்தையை ஸ்தாபித்துக்கொள்ள முகமில்லாதவிவர்கள், 'நாம் முன்னே ஒன்று சொன்னதாகவும் பின்னே ஒன்று சொல்வதாகவும்' இந்த அநாவச்யக வார்த்தைகளை விரித்துக்கொண்டு வேறுவழிகளில் நுழைந்தோடுவது தங்களுக்கே தகுதி.

விச்வேதேவ பதவிஷயத்தில் ஸ்வாமிதேசிகனுடைய திருவுள்ளத்தைத் தெரிந்துகொள்ளாமல் தோழப்பர் தூஷித்தது எப்படி பரிஹாஸ்யமோ, அப்படியே ஆச்சான் பிள்ளையின் ஆபாதகவிஷயத்திலும் உண்மையைத்தெரிந்

துகொள்ளாமல் ஸ்தாபித்தது பரிஹாஸ்யமே—என்கிறவிது தான் நமது உபக்ரமமும் உபஸம்ஹாரமும். இதில் அணுமாத்திரமும் விபர்யயம் இல்லை.

நாம் விரும்பும் வாதம் ஒன்றே. ஆச்சான் பிள்ளையின் அருளிச் செயலில் ஸ்ரீநஞ்ஜீயர் வஹாவஸ்யகத்வம் எப்படி? இவ்வொருவிஷயத்திற்கு பதில் தவிர வேறுயாதொன்றும் நாம் எதிர்பார்க்கின்றிலோம். இதற்காகவே நாம் ஸித்தாஞ்ஜனத்தில் வெளியிட்டுள்ள ப்ரச்ந பத்ரிகைக்கு பதில்கூறவே இவர்கள் கடமைப்பட்டவர்கள். *ஸுந்யாவாதொ விஜ்ஞுத*

விவக்ஷிதவஷ்ரமுஜ்ஜம் விஹாய விதயொக்திஸி: ।
வதிநகா: வஸரயத்வ்யாஸ்ரம் நிதகுஸெவ நஸொநஸ:॥

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியருடைய

தத்வநிவேதநம் முற்றிற்று.

வர்த்தமானங்கள்.

உலகளந்த பெருமாள் உத்ஸவம். காஞ்சீபுரத்தில் 'ஊரகம் நீரகம் காரகம் கார்வானம்' என்கிற நான்கு திவ்யதேசங்களடங்கியதும், உலகளந்த பெருமாள் ஸந்நிதி என்று ப்ரஸித்தமாக வழங்கப்படுவதுமான ஸந்நிதியில் உலகளந்த பெருமாளுக்கு ப்ரஹ்மோத்ஸவம் தைமீ 4உ முதல் செவ்வனே நடைபெற்றுப் புநர்வஸு நக்ஷத்திரத்தில் அவப்ருதமும் அழகாக நடந்தேறியது.

தி. வி. சிங்கராசாரியர்.

திருவல்லிக்கேணி. ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதியில் அனேக மாதகாலமாக நடைபெற்றுவருகின்ற விமானத் திருப்பணி விஷயமும், அதற்காக ஒருவருஷ காலமாய் ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி பாலாலயத்தில் எழுந்தருளியிருக்கிற விஷயமும், இதுகாரணமாக அங்கு உத்ஸவங்களெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன வென்பதும் அனைவருமறிந்ததே. திருப்பணிகைங்கரியம் ஸ்ரீமான் தர்மகர்த்தா ராவ்பஹதூர் V. ரங்கநாதம் செட்டியாரவர்களால் வெகு ஊக்கத்துடன் நிர்வஹிக்கப்பட்டுவருகிறது. நாளது பங்குனி மாதத்தில் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறுமென்றும், சென்ற சித்திரை மாதத்தில் நடைபெறாது நின்றிருக்கும் ப்ரஹ்மோத்ஸவமும் உடனே நடைபெறுமென்றும் தெரியவருகிறது.

P. R. ஆராவமுதய்யங்கார்.

பேஜ் நெ. 9 to 16 காமகோடி பிரஸ், காஞ்சிபுரம்.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திவ்யார்த்த தீபிகை.

(மாதந்தோறும் வெளிவரும் ஸ்ரீவைஷ்ணவ ஸமய ப்ரசார பத்திரிகை.)

ஆசிரியர்:—

ஸ்ரீகாஞ்சி. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

[illegible] ।

[illegible] ஜீயாத் திவ்யார்த்ததீபிகா ॥

ஈச்வர ௵] [வைகாசி ௴

பெருமாள் கோயில் என்று வழங்கப்படும் காஞ்சிமாநகரில் பேரருளாளன் [ஸ்ரீவரதராஜன்] ஸந்நிதியிலுள்ள அநந்தபுஷ்கரிணி யென்கிற திருக்குளத்தில் அத்திவரதர் என்கிற எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் விஷயம் பலபேர்களுக்குத் தெரிந்திராது. இவருடைய திருமேனி தாருமயம். வெகுநாளைக்கு முன் இந்த திவ்யமங்கள விக்ரஹமே ஸ்ரீ ஹஸ்திகிரியில் மூலமூர்த்தியாய் எழுந்தருளி யிருந்ததாகவும், ஏதோ காரண விசேஷத்தினால் திருக்குளத்தில் தம்மை எழுந்தருளப் பண்ணிவிட்டு சீவரம் மலையில் எழுந்தருளியிருக்கிற திருமேனியை இவ்விடத்தில் மூலபேரமாக எழுந்தருளப்பண்ணும்படி ஸ்வப்னம் ப்ரஸாதித்ததனால் அப்படியே நடந்தேறியதாகவும பெரியோர் சொல்லக்கேள்வி. அங்ஙனம் அநாதிகாலமாக ஸ்ரீ ஹஸ்திகிரியில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருந்த பெருமாளே அத்திவரதர் என்று சொல்லப்படுகிறவர். அவரே திருக்குளத்தில் எழுந்தருளியிருப்பவர். ஆழ்வார்களும், திருக்கச்சி நம்பிகள் எம்பெருமானார் கூரத்தாழ்வான் முதலான ஆசாரியர்களும் ஸேவித்தகாலத்தில் இந்த அத்திவரதரே மூலமூர்த்தியாக எழுந்தருளியிருந்தவர் என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இவர் திருக்குளத்தில் எழுந்தருளி ஏறக்குறைய 400 அல்லது 500 வருஷமிருக்கலாமென்றும் சில மஹான்கள் ஊஹமாகச் சொல்லுகிறார்கள்.

பரம திவ்ய கம்பீரமான இந்தத் திருமேனியை நித்யமாக ஸேவிக்க ப்ராப்தியில்லாவிடினும் காலவிசேஷத்திலாவது ஸேவித்து ஆத்மாவைப் புனிதமாக்கிக் கொள்ளச் சில தார்மிகர்கள் செய்வதுண்டு. இற்றைக்கு நாற்பத்தைந்து வருஷங்களுக்குமுன் ஒருமுறை இந்த திவ்யமங்கள விக்ரஹத்தைத் திருக்குளத்திலிருந்து எதிரிலுள்ள வஸந்தோத்ஸவ மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி ஒரு மண்டலம் ஆராதித்து தேச தேசாந்தரங்களிலிருந்து வரும் பக்த கோடிகளும் ஸேவித்துக் களிக்குமாறு செய்து மீண்டும் திருக்குளத்திலேயே எழுந்தருளப் பண்ணினார்கள்.

அதுபோன்ற நல்லடிக்காலம் இப்போதும் வாய்த்திருக்கின்றது. திருக்குளத்திலுள்ள தீர்த்தம் முழுவதும் அப்புறப்படுத்தப்பட்டாயிற்று. இப்போது சேறு வாரப்படுகிறது. நிகழும் ஆனிமாதம் முடிவதற்குள்ளேயே எம்பெருமானுடைய ஸேவை கிடைக்குமென்று பக்தவர்க்கங்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

முன்போலவே ஸந்நிதிக்குள்ளேயே வஸந்தோத்ஸவ மண்டபத்தில் இரண்டொரு மாதகாலம் எழுந்தருளியிருந்து பக்த ஜனங்களுக்கு ஸேவை ஸாதிக்கக்கூடும். இப்போதே பலபல தேசங்களிலிருந்து அபரிமிதமான கூட்டம் இங்குவந்து சேர்கின்றது.

ஸமீபத்தில் கனத்தமழை பெய்துவிட்டால் பெருமாள் ஸேவைஸாதிக்கச் சிறிது தாமதமாகும். அப்படி எவ்விதமான இடையூறும் நேரிடாதென்றும் தேவாலய அதிகாரிகளின் உத்தேசப்படி ஆனிமீ 29௳ பெருமாள் வெளியில் ஸேவை ஸாதிப்பரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வணிெத்லெஹா நிவெதநம்।

ஸ்ரீஶஹ-ஏதவாஙராவஸ-ஏரிராஶாநுஜாசாயர்ஸ்வாமிஹிঃ வ்ரகாஶிதவஸ்ய வஏவர்நிவர்ஹவரித்ராணாவ்யஸ்ய ம்நஸ்ய வ்ரத்யாவ்யாநஸஏதঃ தகவ்ரதிஷ்டாவிஜயயஜாவெ்யாஶ்நঃ சுதீதவஸஞ்கிகாயாம் சும்ஶதঃ வ்ரகாஶ்யத. சுவஶிஷ்டாஹாஶவஷ்ட உவஶிதநவஸம்விகாயாஶவஶ்யம் வ்ரகாஶயிஷ்யதெ. விஶெஷ காரணஶிதஶவயெயம். ஶதாதஶாநாம் ஶாஸ்த்ரீய விஷயவ்ரவஙராணாம் வ்ரவந்நாநாம் தூாவிஸஹாஷயா விஶெவநாவெக்ஷயா ஶெவர்ஶெணவ வாண்யா விஶெவநஶஙவிதரிதி நியர்ஶரித வஹிஶவஸாஹிঃ தயெவ ஶெவ்யா வாண்யா * சுதவஶெ வதவாயர் ஶதஶஏஷணீநாஶ விவஙெஶா ஶ்நঃ வ்ரணீதொ ஶெவநாஶராக்ஷரெர ஸம்ஶஙவ்யாணொ நாதிவிராசு வணிதாநாம்ஹஷ்டஶதொ ஹவிஷ்யதி। ‘ஸ்ரீஶஞ்ஶஶாஜஶெஶிகெயர்யா ஶதஶஏஷணீ வ்ரணீதா, தயாவஶ்ஹிநுவிஷயெவி சுநர்நாஶீ ஶதஶஏஷணீ ஹவதா வ்ரணெதவ்யா’ இத்யாவஸஏரிஸ்வாமிஹிঃ ஸ்வகீயவரித்ராண வ்ரவஙஸநிவெஶிதகதிவயவசநஸம்ஶ்யா ஸஏவிதொஶாவஸঃ ‘வஷ்டஙதঃ சுதவஶெஶாகாயர்விஷயெ ஶவம்விய:கொஷி ஶாஶ்திகொ விஜயஷ்டம்ஸঃ சுவிவாஶ்யঃ வ்ரதிஷ்டாவயிதவ்யஶவ:இதி நியர்ஶரயநு ‘ஜயஶெவ யஶாயர்நாஶீ ஶதஶஏஷணீ’ இத்யாவஸஏரி ஸ்வாமிஹிரவ்ய விவாஶஶஹ்யஙவஶஜ்ஞஙஶஹர்ம் தாம் க்ஷதிம் வ்ராணெஷிஷிதி ஸஙயிஹிவிர்ஹாவநீயம்।

யதவ்யயம்ஶ்ந ஜஶாநீம் ஶெவநாஶராக்ஷரெரவதாரதி, சுயாஷிவம்வஷஶாவஸாஹ்யஷெர ஶ்நாக்ஷரெர ரா்நாக்ஷரெஶ்ராயஶவஶ்யம் வ்ரகாஶிதொஹவிஷ்யதி। வஷ்டஙதஜயம்ஶதஶஏஷணீ பஹஙதரஸஷ்ரதயஸம்ஶ்ராவிதவெவரீவிஹஏஷிதா, க்ஷவஸஏரிஸ்வாமிநாஶவி * க்ஷவ்ரணொதி விவ்ரணொதி வீக்ஷதெ * இத்யஙக்தீத்யா நித்யாநஙஹவாஹர், ஸவர்நஙஹாவ்யகவாய ஸாரஶஸாரஸஶீஹிர்ஶ்ரயிதா ஸவெவர்ஶவி ஶெவஹாஷாரஸிகெ ரதிதாரம் ஸ்வஹணீயெதி விஶ்வஸம் விநிவெதயாஶঃ।

இதி ஸவிநயம் விஜ்ஞாவயதி
ஸ்ரீகாஞ்சீ. வ்ர. அண்ணஙராசாயர்ஶாஸঃ.
திவ்யார்ஶதீவிகாவத்ராயிவঃ.

1
56
32
1.6
105